# அலகு – 1

## மதிப்புகளும் தனிமனிதனும்

## VALUES AND THE INDIVIDUAL

# அலகு - 1

## மதிப்புகளும் தனிமனிதனும்
## VALUES AND THE INDIVIDUAL

1. மதிப்புகளின் பொருள், தன்மை மற்றும் முக்கியத்துவத்தை விளக்குக. **(April-2014)**

அல்லது

மதிப்பு என்ற சொல்லின் பொருளை விளக்குக. (மாதிரி வினாத்தாள், **MKU**)

அல்லது

மதிப்புகளின் முக்கியத்துவத்தை எழுதுக. **(April-2013)**

### மதிப்புகள் (Values)

1. விரும்பத்தக்கவை, முயன்று அடைய வேண்டியவை, மதிப்பு மிக்கவை என்று எவற்றை மனிதர்கள் தம் சிந்தனை, உணர்வு, செயல்கள் ஆகியவற்றின் வாயிலாக வெளிப்படுத்துகின்றார்களோ அவையே மதிப்புகள் (Values) என்று கூறுகிறோம்.

2. ஒரு தனி மனிதனுடைய நல்ல குணம் அல்லது ஒரு மனிதனை உருவாக்கக்கூடிய குணம் அல்லது ஒரு மனிதனை மதிக்கக்கூடிய மற்றும் பண்படுத்தக்கூடிய பண்பு இவற்றையே மதிப்பு என்பர். இந்தப் பண்புகள் அகம் சார்ந்ததாகவோ அல்லது புறம் சார்ந்ததாகவோ அல்லது இரண்டும் சார்ந்ததாகவோ இருக்கும்.

3. எந்த ஒரு செயல் ஒரு மனிதனுக்குப் பயன் படுகிறதோ அல்லது உதவியாக உள்ளதோ அதுவே மதிப்பு எனப்படும்.

4. மதிப்பு என்பது கருத்திற்கும், சிந்தனைக்கும் இடையேயுள்ள ஒரு நேரடித் தொடர்பாகும். எனவே ஒரு சமுதாயத்தின் மதிப்புக்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமெனில் நாம் அதன் மதம், தத்துவம், கொள்கை போன்றவற்றைப் பற்றி சிறிதளவாவது அறிந்திருப்பது இன்றியமையாத ஒன்றாகும்.

5. உணவு, செல்வம், பல்வேறு நுகர் பொருள்கள் உள்ளிட்ட பொருள்களையோ, மனதுடன் தொடர்பு கொண்ட உண்மை, நேர்மை, நீதி, நியாயம், மகிழ்ச்சி, மனநிறைவு உள்ளிட்ட கருத்தமைவுகள் அல்லது பண்புகள் ஆகியவற்றையோ சார்ந்ததாக மதிப்புகள் அமைகின்றன.

6. மனிதனின் அன்றாட வாழ்வில் ஏற்படும் ஆசைகள், தேவைகள், கடமைகள் ஆகியவற்றை முறைமையாக நிறைவு செய்யும் வாழ்வியல் நெறிகள் மதிப்புகள் ஆகின்றன.

7. மனிதர்கள் தங்களை நெறிப்படுத்தவும் ஓர் ஒழுங்கை நிர்ணயித்துச் செயல்படுத்தவும் அதன் வழியாக ஆரோக்கியமான சமூக வாழ்வை அமைத்துக் கொள்ளவும் தங்களுக்குத் தாங்களே உருவாக்கி, போற்றி ஏற்றுக் கொள்ளும் வாழ்வியல் நெறிகளை மதிப்புகள் என்று கூறலாம்.

8. **அருட்திரு. தனராசு** : "விரும்பத்தக்கது எல்லாம் நலம் எனலாம். அந்த நலம் மனிதனைக் கவர்ந்து தன்னை நாடச் செய்யும்போது அது மதிப்பு ஆகிறது. மதிப்பு என்பதை மனிதனை நிறைவு செய்வது, மனிதனுக்கு மட்டுமே புலப்படக் கூடியது."

9. **கோல்மேன்** : "ஒரு தனி மனிதன் அல்லது சமுதாயம் ஒரு குறிப்பிட்ட நிலையில் விரும்பித் தேர்வு செய்கிற பொருட்கள் அல்லது செயல்கள் மதிப்புகள் ஆகும்."

## மதிப்புகளின் தன்மை (Nature of Values)

கூடி வாழும் சமூக வாழ்வின் அனுபவத்திலிருந்து எழுந்த வாழ்வியல் கூறாக மதிப்பு அமைகிறது. இது மனித வாழ்வை ஒழுங்குபடுத்தும் ஒரு கருவியாகச் செயல்படுகிறது. கடந்த கால வாழ்விலிருந்து பெறப்பட்ட மதிப்பு எதிர்கால வாழ்வு சிறப்பாக அமைவதற்கு அடிப்படையாகக் கொள்ளப் படுகிறது.

பல்வேறு காலத்திலும் நிலைத்து நிற்கக்கூடிய நீதிமுறைகளுக்கு உட்பட்ட நடவடிக்கைகளையே மதிப்பு என்பர். மதிப்பு என்பது ஒழுக்கம், நடத்தை என்றும் பொருள்படும். ஒழுக்கம் என்பது எண்ணம், சொல், செயல் இவற்றால் தனக்கோ, பிறருக்கோ, உடலுக்கோ, மனதிற்கோ, தற்காலத்திற்கோ, பிற்காலத்திற்கோ எந்த நிலையிலும் துன்பம் தராத செயலினைக் குறிக்கும். ஒருவருக்கு உயிரைவிட மேலானதாக ஒழுக்கம் போற்றப்படுகிறது. ஒவ்வொருவரும் எத்தகைய நோக்கத்திற்காக வாழ்கிறோம், உழைக்கிறோம் என்பதை அறிவுறுத்துபவையாக மதிப்புகள் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு மனிதனின் மதிப்புகளும் பிறரால் உணர்ந்தறியக் கூடியவையாகும். இம்மதிப்புகள் இனம் மற்றும் வாழ்க்கைத் தன்மையைப் பொறுத்தும் நம்பிக்கைகளின் அடிப்படையிலும் மாறுபடுகின்றன.

## மதிப்புகளின் முக்கியத்துவம் (Significance of Values)

1. ஒருவரது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைவதுடன் மகிழ்ச்சி, மனநிறைவு, அமைதி ஆகியவற்றை அடையவும் மதிப்புகள் உதவுகின்றன.
2. மதிப்புகள் மனித வாழ்க்கையில் தண்டவாளங்கள் போன்று செயல்பட்டு வாழ்க்கைப் பாதையில் சரியாகவும் சீராகவும் பயணிப்பதற்குப் பெரிதும் உறுதுணையாக அமைகின்றன.

3. மதிப்புகள் ஒருவரின் வாழ்க்கைத் தரத்தையும், தகுதியையும் வெளிப்படுத்துகின்றன.
4. ஒவ்வொரு தனிமனிதனும் மற்றொரு தனிமனிதனிடம் எவ்வாறு பழக வேண்டும் என்பதை மதிப்புகள் கற்றுக் கொடுக்கின்றன.
5. மதிப்புகள் மற்றவர்களிடமிருந்து மரியாதையைக் கொண்டு வருகின்றன.
6. மனிதனின் சமூக மதிப்புகளைக் கொண்டு ஒருவரின் பலத்தையும் பலமின்மையையும் எளிதில் கண்டு கொள்ள முடியும். மனிதனின் தனது நிலை மற்றும் அவனுக்குக் கொடுத்துள்ள இடம் எவ்வளவு என்பதை மதிப்புகள் தீர்மானிக்கின்றன.
7. மனித நடத்தையின் தரத்தையும் குறிக்கோள்களையும் மதிப்புகள் நிர்ணயிக்கின்றன.

2. தற்கட்டுப்பாடு, பரிவு, மன்னிப்பு மற்றும் நேர்மை போன்ற மதிப்புகளை எவ்வாறு ஆராய்ந்து அறிவீர்கள்?
(மாதிரி வினாத்தாள், **MKU**)

## தன் ஒழுங்கு/தற்கட்டுப்பாடு **(Self-discipline)**

தனிமனித ஒழுக்கம் அவரவர் மன உறுதியைப் பொறுத்தே உயர்ந்தோ அல்லது தாழ்ந்தோ காணப்படும். ஒழுக்கம் உயிரை விட உயர்வாகக் கருதப்படல் வேண்டும். பால் கவர்ச்சிகளும், பண ஆசையும் ஒழுக்கத்தைச் சிதைப்பன என்பதை உணர வேண்டும். ஒழுங்குமுறை உண்மையிலேயே வளர்ச்சிக்கான அடிப்படை விதிகளுள் ஒன்றாகும். அதுதான் உலகின் கோடான கோடி மக்களை ஒன்றாகப் பிணைக்கிறது. உலக மக்கள் அனைவரும் ஏதாவது ஒரு பதவிக்காகத்தான் அலைந்து கொண்டிருக்கிறார்கள். வேறுபட்ட நோக்கங்களுடன் ஒருவரையொருவர் எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களைத் தாம் ஒழுங்குமுறை ஒன்றாகப் பிணைத்து விடுகின்றது என்கிறோம்.

ஒழுங்கு என்னும் சட்டத்தைக் கொண்டே இயந்திரம், தொழில், ஒழுக்கம், இனம், பேரரசு இவையனைத்தும் கட்டுப்படுத்தபட்டிருக்கின்றன. தன் ஒழுங்கு முறைகளைத் தொடர்ந்து விருத்தி செய்து கொண்டிருக்கும் மனிதன் தன் ஆற்றலைக் காட்டுவதில் ஆதாயம் அடைந்து கொண்டிருக்கிறான்.

ஒழுங்கு முறையில் ஆயத்தம், வேறுபாடின்மை, பயன், விரிந்த அறிவு போன்ற நான்கு அம்சங்கள் இருக்கின்றன. ஆயத்தம் என்பது ஊக்கம் ஆகும். வேறுபாடின்மைக்கு ஒழுங்குமுறை மிகவும் அவசியம். பயன் என்பது ஒரு செலவில் ஒரு முறையைப் பின்பற்றுவதால் விளையும் நேரடிப்பலனாகும். பயன் விளைய வேண்டுமென விரும்பினால் சாத்தியமான இலட்சியத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

## பரிவு (Compassion)

பரிவு என்பது ஆழமான, உணர்த்த முடியாத, மௌன மென் உணர்வாகும். அது தன்னலம் மறுத்த மேன்மைப் பண்பில் பொதிந்திருக்கிறது. பரிவுள்ள மக்கள் உரக்கப் பேசிக் கொண்டு அலைய மாட்டார்கள். அவர்கள் எப்பொழுதும் அடக்கத்துடன், அமைதியாய், உறுதியாய் பெருந்தன்மையுடன் இருப்பார்கள். அவர்களின் அமைதியைப் பார்த்து அறிவற்றவர்கள் அவர்களைப் பரிவற்றவர்கள் என்று கருதிக் கொள்வர்.

பரிவு என்னும் சொல்லின் உண்மையான பொருள் பிறர் துன்பங்களுடன், துயரங்களுடன் ஒன்றாகி விடுவது என்பதாகும். பரிவுள்ளவர்கள் பெருமையடித்துக் கொள்ளவும் மாட்டார்கள். எங்கு தற்புகழ்ச்சி நுழைகின்றதோ அங்கிருந்து பரிவு வெளியேறி விடும். பரிவுள்ள ஆணோ, பெண்ணோ பிறர்படும் துன்பத்தைத் தாமே படுவதாய் உணர்வர். அவர் வேதனையைக்களையத் தம்மால் இயன்றதைச் செய்ய முயலுவர்.

இடர்ப்பட்டபின் எஞ்சிய அது விட்டுச் செல்லும் அறிவைத்தான் 'பட்டறிவு' என்கிறோம். அதுதான் பிறரின் துன்பங்களைத் தெரிந்து கொள்ளச் செய்கிறது. அவற்றை அகற்ற தன்னால் இயன்றதைச் செய்ய ஒருவனைத் தூண்டுகிறது. ஒரு தாய் துன்புறும் தன் குழந்தையின் வேதனையை எப்படியும் உணர்ந்து கொள்வது போல் பரிவு உள்ளவன் துன்பப்படும் மக்களின் வேதனையைத் தெரிந்து கொள்வான்.

## மன்னிப்பு (Forgiveness)

அன்பானது இரக்கப்படுதல் என்ற நிலையை அடைந்து அதற்கு மேலே போகும் நிலைதான் மன்னித்தல், பொறுமை, மறத்தல், தியாகம் போன்றவையாகும். எதிரிகளையும் நமக்கு துன்பத்தை அளித்தவர்களையும் நாம் மன்னிக்க வேண்டும். அவர்களை நாம் மன்னிக்கவில்லை என்றால் அங்கு வெறுப்பும், பழிவாங்கும் உணர்வும் பெருகும். ஆகவே மன்னிப்பு என்பது மிகவும் உயரிய செயல்பாடாகக் கருதப்படுகிறது. மனிதனுடைய செயல்களில் மிகுந்த அழகுடையது எது எனில், பிறர் தீங்கு செய்தால் அவரை மன்னித்து விடுவதாகும்.

நம்முடைய தவறுகளை கடவுள் மன்னிப்பதுபோல், பிறருடைய தவறுகளை நாம் மன்னிக்க வேண்டும். இக்கருத்தை நாம் கிறிஸ்தவ மதத்தில் பார்க்கிறோம். 'சகோதரன் தீமை செய்தால் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும், ஏழு தரமா? எழு நூறு ஏழு தரம் மன்னிப்பாய்.''

## நேர்மை (Honesty)

ஒரு மனிதன் முழுமையானவனாகவும் வளமையானவனாகவும் இருக்க வேண்டுமானால் அவனுடைய நடவடிக்கை அனைத்திலும் நேர்மை நிலவ வேண்டும். தீமைக்கு விட்டுக் கொடுக்கும் பலவீனத்தை அவன் பெற்றிருக்கக் கூடாது. எவ்வளவுதான் அவசியமானதாய்த் தோன்றினாலும், அற்பமாய்த் தோன்றினாலும்

தவறுடன் இணங்கிப் போவது என்பது நேர்மை என்னும் கேடயத்தைத் தூக்கி எறிவதுதான். தீமையின் தாக்குதலுக்கு இலக்காக ஆயத்தமாய் நிற்பதுதான்.

நேர்மையின் சிறப்பை அறிந்த ஒருவன், நேர்மையில் ஒரு சிறிதும் சலனமுறாத ஒருவன் எவ்விதச் சூழ்நிலையிலும் பொய் சொல்லவும் மாட்டான். கண்ணியமற்ற செயல்புரியவும் மாட்டான். அவ்விதம் ஒரு போதும் செய்ய வேண்டிய அவசியமில்லை என்பான். அவனைத் தீமை கவரவே முடியாது. மனித சமூகத்தின் முதுகெலும்பே நேர்மைதான். மனித உறவுகளின் ஆதாரமாய் இது இராவிட்டால் நம்பிக்கை இராது, நாணயமிராது, வாணிப உலகமே தலைகீழாகி விடும்.

நேர்மையுள்ள மனிதனிடம் அவனுக்குத் தெரியாமலே ஒரு சிறப்பு இருக்கும். அது அவன் கூடவே செல்லும். அது பார்ப்பவரைப் பயபக்தி கொள்ளச் செய்வதுடன் அவர்களைப் புத்துணர்வு கொள்ளவும் செய்யும். அவன் தன்னை உயர்த்திக் கொண்டு விட்டான். அதனால் தீமைகள் அவனைக் கண்டதும் குழம்பிப் போய் பதுங்கிக் கொள்கின்றன. இந்தச் சிறப்பிற்கு இணையாய் அறிவைக்கூட கூற முடியாது. அறிவாளியைவிட நேர்மையானவன்தான் உலகின் மதிப்பில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருப்பான்.

பத்மாஸ்டர் : 'நேர்மையின் சிறப்பு மனித இயல்பில் மிகவும் சிறந்த ஒன்று'. நேர்மை தவறாதவன் உண்மையிலேயே ஒரு வீரன் தான். நோய், இடர், இறப்பு ஒன்றும் அவனுடைய நிரந்தரத் திருப்தியை அழித்துவிட முடியாது.

நேர்மை தான் கண்ணியம், அச்சமின்மை, நோக்கத்துடனிருப்பது, வெல்லற்கரிய நிலை ஆகிய நான்கு தன்மைகளாலேயே நிற்கிறது. கண்ணியம் வெற்றிக்குச் செல்லும் நிச்சய வழியாகும். அச்சமின்மை

நேர்மையுடன் வருவதாகும். அச்சமின்மை ஒரு மனிதனின் வாழ்வில் வலிமை மிக்கக் கோபுரமாகும். ஒரே நோக்கம் கொண்டிருத்தலை நேர்மை வளர்த்த ஒழுக்கவாற்றலின் நேரடிப் பலன் எனக் கூறலாம். நேர்மையாளன் நேரடியான இலட்சியங்களும் அறிவார்ந்த நோக்கங்களும் அமைந்த மனிதனாவான்.அவன் தடம் மாற மாட்டான். வெல்லற்குரிய நிலையே ஒருவனுக்குச் சிறந்த பாதுகாவலாகும். அது முற்றிலும் தூய்மையும் நேர்மையும் பெற்ற மனிதனுக்கே பாதுகாவல் அளிக்கிறது.

## பரிவு **(Empathy),** இரக்கம் **(Sympathy)** ஆகியவற்றிற்கிடையே உள்ள வேறுபாடு

பரிவு என்பது வேறு. இரக்கம் என்பது வேறு. பரிவு என்பது பிறர் நலனில் உண்மையான அக்கறையும் கவனமும் கொள்வது ஆகும். பிறருக்கு ஏற்பட்ட வலியை, வேதனையை, துக்கத்தை, துன்பத்தை, இன்பத்தை, குழப்பத்தை தனக்கு ஏற்பட்டது போல அனுபவித்து உணர்வதாகும். துன்பப்படுபவர், வேதனைப்படுபவர் யாராக இருந்தாலும், எதிரியாக இருந்தாலும் கூட, துன்பத்திற்கான, வேதனைக்கான உண்மையான காரணத்தை ஆராயாமல் அவரது நலனில் அக்கறை காட்டுவதுடன் அவரது துன்பமும் வேதனையும் குறைவதற்கு இறங்கி வந்து செயல்படுவதாகும்.

இரக்கம் என்று பார்க்கையில் ஒருவர் பிறர் துன்பங்கண்டு வருந்துவாரே அன்றி அவர் மீது அக்கறை கொள்ள மாட்டார். அவரது துன்ப உணர்வுகளை அனுபவித்து உணர மாட்டார். துன்பத்திற்கு உண்மையான காரணம் இருப்பதாக ஒருவர் அறிந்தால் மட்டுமே அவர் மீது இரக்கப்படுவார்.

*எடுத்துக்ககாட்டு*

**இரக்கம் (Sympathy)**

வகுப்பறையில் ஒரு மாணவன் மயக்கமடைந்து விடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். சுற்றிலும் மாணவர்கள் கூடி வேடிக்கை பார்ப்பதுண்டு. மயக்க நிலையின் தன்மையை உணராது, பாவம் அவனுக்கு என்ன ஆயிற்று! என பேசுவதுண்டு. இது இரக்கம்.

**பரிவு (Empathy) :**

மயக்கமடைந்ததைக் கண்டு அவனது நண்பனோ அல்லது சக மாணவனோ தண்ணீர் எடுக்கச் செல்வான் அல்லது ஆசிரியரை அழைத்து அவனுக்கு முதலுதவி செய்ய ஓடுவான் அல்லது அவனை தனது மடியில் வைத்து அவனது மயக்கம் தெளிய ஏற்பாடு செய்வான் அல்லது மருத்துவரை அழைப்பான் இது அக்கறையான பரிவு.

3. மதிப்புகளின் பிரிவுகள் யாவை? பண்பாட்டு மதிப்புகளை விளக்குக. **(April-2011)**

அல்லது

மதிப்புறுக்களின் பிரிவுகள் யாவை? பக்தி சார்ந்த மதிப்புறுக்களை விளக்குக. **(April-2013)**

***மதிப்புகளின் பிரிவுகள் (Classification of Values)***

1. சுய மதிப்புகள் (Personal Values)
2. சமய மதிப்புகள் (Religious Values)
3. சமூக மதிப்புகள் (Social Values)
4. பொருளாதார மதிப்புகள் (Economic Values)
5. அரசியல் மதிப்புகள் (Political Values)

6. அறிவுசார் மதிப்புகள் (Intellectual Values)
7. ஒழுக்க நெறி மதிப்புகள் (Ethical Values)
8. பண்பாட்டு மதிப்புகள் (Cultural Values)
9. பக்தி சார்ந்த மதிப்புகள் (Spiritual Values)

## 1. சுய மதிப்புகள் (Personal Values)

ஒருவன் தன் வாழ்வில் பின்பற்றும் மதிப்புகள் இவை இவை என்று எவற்றை பெருமையடன் கூறுகிறானோ, அவையே அவனது 'சுய மதிப்புகள்' ஆகும். இவ்வகையில் விடாமுயற்சி, தேடிச் செல்லுதல் (pursuits) ஆதிக்கம் செலுத்துதல், எதையும் தனதாக்கிக் கொள்ள முயலுதல், எதிலும் இன்பம் காண முயலுதல் போன்றவை அடங்கும். இவை பிற மனிதர்களை பாதிக்காதவரை உயர் மதிப்புகளே. பிறரை பாதிக்கத் தொடங்கும்போது கீழ்நிலை மதிப்புகளாகக் கருதப்படும்.

## 2. சமய மதிப்புகள் (Religious Values)

இறை நம்பிக்கை, இறைவனை அடையும் வழிமுறைகள், அத்தகைய வழிமுறைகளில் இருந்து விலகி நடப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகள் ஆகியவற்றுடன் தொடர்பு உடையவை சமய மதிப்புகள். இயற்கைவாதிகள் இயற்கையை வணங்குவர். கருத்தியலாளர்கள் யாவற்றையும் கடந்து நிற்கும் கடவுளையும், இறைத்தூதர்களையும் வணங்குவர். பயனளவுக் கொள்கையாளர்கள் கருத்துப்படி, சமய மதிப்புகள் சமூக இடைவினைகளால் தோன்றுகின்றன. எனவே சமூக மாறுதல்களுக்கு ஏற்ப மாற்றமடைபவை. எனவே சமய மதிப்புகள் மனிதருக்கு மனிதர் வேறுபடும் தன்மை கொண்டதாகும்.

### 3. சமூக மதிப்புகள் (Social Values)

எந்த ஒரு சமூகமும் முறையாக, நன்கு இயங்குவதற்கு சில கட்டுப்பாடுகள் தேவை. இத்தகைய இயற்கை நியதிகளைப் பின்பற்றி வாழ்வதே சாலச் சிறந்தது என்பது இயற்கைவாதிகளின் கொள்கை. கருத்தியலாளர்களோ தனி மனித சுதந்திரத்திற்கும் விடுதலை வேட்கைக்கும் மதிப்பளிக்கின்றனர். பயனளவுக் கொள்கையாளர்கள் சமூக மதிப்புகள், சமூகத்தில் ஏற்படும் நிகழ்வுகளால் பெருவாரியான மக்களின் மனப் போக்கால் உருவாகின்றன என்கின்றனர். உதாரணமாக, மதுபானம் அருந்துதல் மேலைநாடுகளின் இயல்பாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் இந்திய மக்கள் அதனை இழி செயலாகக் கருதுகின்றனர்.

### 4. பொருளாதார மதிப்புகள் (Economic Values)

எப்பொருட்கள் அரிதாகக் கிடைக்கின்றனவோ, அதிக மனிநிறைவை அளிக்கின்றனவோ அவையே உயர்மதிப்பு உடையவை. எப்பொருட்கள் மிக அதிக அளவில் கிடைக்கின்றனவோ, அவற்றால் விளையும் பயன்களும் குறைவோ, அவை தாழ்நிலை மதிப்புடையவை. இவையே பொருளாதார மதிப்புகள் என வழங்கப்படுகின்றன.

### 5. அரசியல் மதிப்புகள் (Political Values)

ஆரம்ப காலத்தில் மன்னராட்சி முறை மதிக்கப்பட்டு வந்தது. ஆனால் மக்களின் கல்வியறிவு, சுதந்திர வேட்கை, அதிகாரப் பங்கீடு வேண்டும் என்ற மனப்போக்கு ஆகியவற்றால் ஜனநாயகம், சோஷலிஸம், சமயச் சார்பின்மை போன்றவை செல்வாககுப் பெறத் தொடங்கின. இவையனைத்தையும் அரசியல் மதிப்புகள் என்று அறிஞர்கள் தெளிவுறுத்துகின்றனர்.

6. அறிவுசார் மதிப்புகள் (Intellectual Values)

இவை உண்மையான பல வடிவங்களைப் புரிந்து கொள்வது தொடர்பானவை. வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பது (Unity in Diversity) மோசமானவற்றிலும் நன்மையைத் தேடுவது, இருளிலும் வெளிச்சத்தைக் காண முயல்வது போன்ற அறிவார்ந்த செயல்களே உயர்மதிப்பு உடையவை. இவற்றிற்கு நேர்மாறான செயல்கள் தாழ்நிலை மதிப்பு உடையவை.

7. ஒழுக்க நெறி மதிப்புகள் (Ethical Values)

ஆன்மீக மதிப்புகளும் (Spiritual Values) ஒழுக்க நெறி மதிப்புகளும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை. சுயக்கட்டுப்பாடு, தன்னை உணர்ந்தறிதல் (Self-realization), அஹிம்சை (Non-Violence), உண்மையைப் பேசுதல் (Truthfulness), பரிவு (Compassion), எளிமை (Simplicity), சுய கௌரவம் (Self dignity), தன்னலமற்றத் தொண்டு (Selfless Service) போன்றவை ஆன்மீக உயர் மதிப்புகளாகும். இவற்றிற்கு எதிரானவை தாழ்நிலை மதிப்புகளாகும்.

8. பண்பாட்டு மதிப்புகள் (Cultural Values)

ஒவ்வொரு சமுதாயமும் தனக்கெனத் தனியான பண்பாட்டினைக் கொண்டிருக்கின்றது. தனி மனிதர்களாகத் தீவு போன்று வாழ முடியாத மனிதர்கள் இணைந்து உன்னதமான வாழ்க்கை வாழ்வதற்கு அடிப்படையாக அமையும் வாழ்வியல் நெறிகள் பண்பாட்டு மதிப்புகள் ஆகும். அன்பு, இரக்கம், கருணை, எளிமை, தியாகம், ஒழுக்கம், கல்வி, விட்டுக்கொடுத்தல், விருந்தோம்பல், பொறுமை, வீரம், காதல், மானம், நட்பு, கொடை போன்றவை மனிதர்களிடம் இருக்க வேண்டிய பண்புகள் என்று

இலக்கியங்கள் வாயிலாக உணர்த்தப்படுகின்றது. தனி மனித, சமூக வாழ்விற்கான ஒழுக்க நெறிகளாக அமையும் பண்பாட்டு மதிப்புகள் மிகப் பல உண்டு. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் பண்பாட்டு மதிப்புகள் நீடித்ததாக, நிலைத்ததாக இருக்க வேண்டும் என்று விரும்பப்படுகிறது.

## 9. பக்தி சார்ந்த மதிப்புகள் (Spiritual Values)

இவ்வகையான மதிப்புகளில் அன்பு, இரக்கம், பற்றின்மை, கடவுள் நம்பிக்கை, மன்னித்தல், திருத்தொண்டு, தியாகம் போன்றவை இதில் அடங்கும். முழுமைத்துவம் அடைய விரும்பும் மனிதன் ஆன்மீகத்தை விரும்புகிறான். அப்போது அவன் அமைதி பெற்று பிறர்க்கும் சமுதாயத்திற்கும் தானாகவே தொண்டு செய்வான். தன்னடக்கம், மனச்சுத்தம், நல்லொழுக்கம் போன்றவை இயல்பாகவே அவனுக்கு உண்டாகிறது. சொல், செயல், எண்ணம் ஆகிய மூன்றின் வழியாகவும் உண்மையைக் கடைப்பிடிக்கிறான். அதனால் அறிவு, அமைதி, அகமதிப்பு போன்ற ஆன்மீக முன்னேற்றம் அவனுக்கு உண்டாகிறது. அதிக ஆற்றல் பெற்று மற்றவர்களை வழிநடத்துகிறான். மற்றவர்களுக்காக வாழ்ந்து முக்தியடைகிறான்.

உலகத்திலுள்ள அனைத்துமே இறைவன் மயம் என்று உணர்ந்து, உலகில் அனைத்துமே நேசிக்கக் கற்றுத் தருவதுதான் பக்தியாகும். மனிதனுடைய எந்த உணர்வுமே அவனுள் இருக்கும் இறைத் தன்மையைக் காட்டவல்லது, உயிர்த் தன்மையைக் காட்டவல்லது என்பதால் எந்த உணர்வையும் நமக்கு இறைவனைக் காட்டித்தரும் வழியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பக்திக்கு உதவும் கருவிகள்

1. நல்லறிவு, 4. நாமஜபம்,
2. மன உறுதி, 5. தொண்டு,
3. நல்லோர் உறவு, 6. இறைவனைச் சரண் புகுதல்.

பூரணமாக பக்தியே மனித வாழ்வின் இறுதி இலட்சியம் என்றும், அறம், பொருள், இன்பம், வீட்டைப் போன்றது பக்தி என்று சைதன்ய மகாபிரபு கூறுவார். பக்தியினால் இறைவனை அடையலாம்.

**4. மதிப்புக் கல்வி என்னும் சொல்லுக்குத் தகுந்த வரையறையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**
**(April-2014)**

## கல்வி (Education)

### 1. ரிக் வேதம்

"மனிதனை சுய சார்புடையவனாகவும், சுயநலமற்றவனாகவும் ஆக்கி விடுவதே கல்வி எனப்படும்".

### 2. சுவாமி விவேகானந்தர்

"கல்வி என்பது மனிதனிடம் இயற்கையாக உறைந்துள்ள தெய்வீகமான முழுமைத் தன்மையை வெளிப்படுத்துவதாகும்".

### 3. மகாத்மான காந்தியடிகள்

"கல்வி என்பது குழந்தை மற்றும் மனிதனின் உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றின் சிறப்பானவற்றையெல்லாம் முழுமையாக வெளிக்கொணர்வதாகும்".

4. இரபீந்திரநாத் தாகூர்

"இவ்வுலக மாசுக்களின் பிடியிலிருந்து நம்மை விடுவிக்கக் கூடிய இறுதி உண்மைகளை, மனம் கண்டறிய உதவுவதே கல்வியாகும்".

5. பெஸ்டலாசி

"மனிதரிடம் பிறவியிலேயே அமைந்திருக்கும் ஆற்றல்களை இயல்பாக, இசைவாக படிப்படையாக முன்னேற்றமடையச் செய்தலே கல்வியாகும்".

6. ஜான் லாக்

"செடிகள் வளர நிலத்தைப் பயன்படுத்துவதுபோல, மனிதர்களைப் பண்படுத்தப் பயன்படுவதே கல்வி".

*மதிப்புக் கல்வி* **(Value Education)**

கற்போரிடத்தில் சரியான மனப்பான்மைகள், மதிப்புகள், உணர்வுகள், நடத்தைக் கோலங்கள் ஆகியவற்றை உருவாக்கிடும் அனைத்துக் கல்விச் செயல்களும் மதிப்புக்கல்வி என்பதாக குறிக்கப்படுகிறது. மதிப்புக்கல்வி என்பது, கற்பவரை மேம்பட்ட மனிதனாக்கி அவரது ஆளுமையில் உரிய மாற்றங்களை ஏற்படுத்துவதே ஆகும். எனவே. ஆளுமையின் மூன்று நிலைகளான அறிதல், உணர்தல், செயல்படுதல் ஆகிய அனைத்தும் மதிப்புக் கல்வியில் உள்ளடங்கும். மதிப்புக்கல்வி மூலம் மாணவன் நல்லது / கெட்டது, சரியானது / தவறானது என்பவற்றை பிரித்தறியும் ஆற்றலையும் அவற்றோடு தொடர்புடைய மனவெழுச்சிகளையும்

பெற்று விளங்குவதோடு, மதிப்புகளை சிந்தனையில் உள்வாங்கி செயல்கள் மூலம் வெளிப்படுத்தும் "தன்மயமாக்குதலை" (Assimilate internally) பெற்றுத் திகழ வேண்டும்.

மதிப்புக் கல்வி என்பது மாணவனை ஒழுக்க நெறிப்படுத்தும் செயல்முறை அல்ல. நெறிப்படுத்துதல் மதிப்புக்கல்வியின் ஒரு உட்கூறு மட்டுமே. மதிப்புக் கல்வியும் சமூகப் பொருத்தப்பாடு அடையச் செய்தலும் ஒன்றல்ல. சமூகப் போக்குகளுக்கு ஏற்ப இணக்கமாக நடந்து கொள்வது சமூகப் பொருத்தப்பாடுடைய நடத்தையாகும். ஆனால் மதிப்புக்கல்வி சிறந்த சமூக நடத்தை எவ்வாறு இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறது. மதிப்புக் கல்வியும் சமயக் கல்வியும் ஒன்றல்ல. மதிப்புக் கல்வியை அளிப்பதற்கு சமயம் ஒரு கருவியாக / வழிமுறையாக அமையலாம்.

## மதிப்புக் கல்வியின் வரையறை

"அறநெறிகளை அறிவது, ஒழுக்க உணர்வுகளைப் போற்றி அதன்படி நடக்க முற்படுவது ஆகிய அனைத்தையும் மாணவனிடம் கற்பிக்க முயல்வதே மதிப்புக்கல்வி."

சிறந்த மதிப்புக் கல்வித்திட்டத்தின் மூலம் மாணவனிடம் மதிப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அவற்றை சரியாகப் புரிந்து கொண்டு முக்கிய மதிப்புகளான சமத்துவம், சகோதரத்துவம், சமய சார்பற்று செயல்படுதல், ஜனநாயகம், அறிவியல் மனப்பான்மை, தான் சார்ந்த சமுதாயம் மற்றும் நாட்டின் மேம்பாட்டிற்கு தன்னை அர்ப்பணித்தல், பிறர் உரிமைகளை மதித்தல் போன்றவற்றை வளரச் செய்து, அதன்படி வாழ வகை செய்ய முடியும்.

**5. மதிப்புக் கல்வியின் ஐந்து குறிக்கோள்களை விளக்குக (April-2014)**

## மதிப்புக் கல்வியின் குறிக்கோள்கள்.
## (Aims of Value Education)

### 1. முழுமையான வளர்ச்சி

ஒவ்வொருவரிடமும் உடல் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, சமூக வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி ஆகிய அனைத்திலும் சீரிய மதிப்புகளை முழுமையாக வளர்த்திடல்.

### 2. சமுதாய அக்கறையை வளர்த்தல்

ஒவ்வொருவரிடமும் தன் குடும்பம், சுற்றம், உறவு முறை ஆகியவற்றைத் தாண்டி சமுதாயத்தில் உள்ள அனைத்துப் பிரிவு மக்களிடமும் அக்கறை கொள்ளப் பண்பை வளர்த்தல்.

### 3. சமூக நலன் காக்கும் உணர்வை வளர்த்தல்

ஒவ்வொருவரிடமும் ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்றுதல், பண்பாட்டு மதிப்புகளைப் போற்றுதல், சுற்றுச்சூழலின் தூய்மையைப் பாதுகாத்தல், அரசியல் விழிப்புணர்வைப் பெறுதல் போன்றவற்றில் ஈடுபாட்டினைத் தோற்றுவித்தல்.

### 4. தேசிய நலன்

ஒவ்வொருவரிடமும், தாய்நாட்டுப் பற்று, தேச நலனை முதன்மையாகக் கொண்டு செயற்படுதல், தேசிய ஒருமைப்பாட்டினைப் பாதுகாத்தல் போன்ற தேசிய மதிப்புகளை வளர்த்திடல்.

5. உலகளாவிய பரந்த மனப்பான்மை

ஒவ்வொருவரிடமும் பிறநாட்டு மக்களைப் புரிந்து கொள்ளுதல், அவர்களது நலனில் அக்கறை கொள்ளுதல் போன்ற பரந்த மனப்பான்மையை வளர்த்தல்.

6. விழிப்புணர்வு

மேலே குறிப்பிட்ட ஐந்து தளங்களிலும் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் பற்றிய விழிப்புணர்வையும், அவற்றுக்கேற்றவாறு உயர் நடத்தையையும், ஒவ்வொருவரிடமும் வளர்த்தல்.

6. தற்போதைய சமூகத்தில் மதிப்புக்கல்வியின் அவசியத்தை விவாதி. (மாதிரி வினாத்தாள் **MKU**)

அல்லது

மதிப்புக் கல்வியின் அவசியம் யாது? **(April-2011)**

அல்லது

மதிப்புக் கல்வி ஏன் தேவைப்படுகிறது? மதிப்புக்கல்வியின் முக்கியத்துவத்தை விவாதி. **(April-2012)**

அல்லது

மதிப்புக் கல்வியின் தேவையை விவாதி. **(April-2014)**

*மதிப்புக் கல்வியின் அவசியம்* **(Need for Value Education)**

1. ஒழுக்கச் சிதைவு

சமுதாயத்தின் அனைத்துப் பிரிவு மக்களிடமும் 'மதிப்புச் சிதைவு' அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் சமூகச் சீரழிவு தோன்றியுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்திட இளம் பிராயத்திலேயே குழந்தைகளிடம் மதிப்பு உணர்வுகளை விதைத்திடல் அவசியமாகிறது.

2. ஒழுக்க மேம்பாட்டை வலியுறுத்தாத கல்வி

மாணவர்களிடம் நல்லொழுக்கத்தை வளர்த்தலே முன்பு கல்வியின் தலைசிறந்த நோக்கமாகக் கருதப்பட்டது. ஆனால் தற்போதைய கல்வி முறையில் 'அறிவைத் தேடுவதே கல்வி' என்று கருதப்பட்டு 'ஒழுக்க வளர்ச்சி' குறித்து எவரும் கவலைப்படாத நிலை காணப்படுகிறது. படித்தவர்கள் பழி பாவத்திற்கு அஞ்சுவதில்லை. சமூகத்தில் குற்றங்கள் அதிகரித்து, மக்கள் மிருகங்களாக வாழ்கின்றனர். இக் கொடுமையிலிருந்து சமுதாயத்தைக் காத்திட பள்ளிகளில் மதிப்புக் கல்வியை வழங்குவது உடனடித் தேவையாகிறது.

3. தன்னலப் போக்கு தலைதூக்கியிருத்தல்

நான், எனது சுகம் என்ற தன்னலப் போக்கு அனைத்துப் பிரிவு மக்களிடமும் இன்று தலைவிரித்தாடுகிறது. யார் எக்கேடு கெட்டால் என்ன, தனது தேவைகள் நிறைவு பெற்றால் சரி என்ற போக்கே எங்கும் காணப்படுகிறது. சமுதாய அக்கறையுள்ள மனிதர்களைக் காண்பதே அரிதாக உள்ளது.

4. குறுக்கு வழியில் செயல்படுவதே சாமர்த்தியம் என்ற மனப் போக்கு

'வலியவன் வகுத்ததே வாய்க்கால்' என்பதை நம்பி, வன்முறை மூலம் பிரச்சனைகளைத் தீர்க்க முயலுதல், 'பணம் பாதாளம் வரை பாயும்' என்ற கூற்றுக்கு ஏற்ப, பணம் கொடுத்து எதையும் சாதிக்க முடியும் என்ற மனோபாவத்துடன் செயல்படுதல், சகிப்புத்தன்மை, நேர்மை, பரிவு, பொறுமை ஆகியவை இயலாதவனின் பண்புகள் என்று எண்ணுதல் போன்றவை இன்று நம் சமூகத்தில் புரையோடிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய நிலையில் மாற்றங்களை ஏற்படுத்த, மதிப்புக் கல்வியை அனைத்து மாணவர்களுக்கும் அளிப்பது அவசியமாகிறது.

5. சமுதாய மற்றும் தேசிய நலனில் அக்கறையின்மை

இன்றைய இளைஞர்களிடம் சமுதாய மற்றும் தேசிய நலனில் அக்கறை, தேசிய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை, தன்னலத் தியாகம் ஆகிய நற்பண்புகள் குறையத் தொடங்கியுள்ளன. இவற்றை மீண்டும் துளிர்விடச் செய்வதற்கு மதிப்புக் கல்வி மிகவும் அவசியமாகிறது.

6. நுகர்வு மைய கலாச்சாரத்ததை, அதிரடியாய் விளம்பரப்படுத்தும் ஊடகங்களின் அபரிமித செல்வாக்கு

அன்றாட வாழ்வில் மக்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தி அவர்களை நன்னெறிப்படுத்தும் ‘சமயச் செல்வாக்கு’ குறையத் தொடங்கியுள்ளது. நுகர்வு மையக் கலாச்சாரத்தை அதிரடியாக விளம்பரப்படுத்தும் ஊடகங்களின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. இதனால் எப்பாடுபட்டாவது நுகர் பொருட்களை வாங்கிட வேண்டும் என்ற வெறி மக்களிடம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து எழும் சமூகச் சீரழிவை தடுத்திட பள்ளிகளின் மூலம் சமுதாயக் கல்வியை உட்புகுத்தி இளைய தலைமுறையினரைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

## 7. தற்கட்டுப்பாடு என்றால் என்ன? (April-2011)

### தற்கட்டுப்பாடு (Self-Discipline)

தனிமனித ஒழுக்கம் அவரவர் மன உறுதியைப் பொறுத்தே உயர்ந்தோ அல்லது தாழ்ந்தோ காணப்படும். ஒழுக்கம் உயிரை விட உயர்வாகக் கருதப்படல் வேண்டும். பால் கவர்ச்சிகளும், பண ஆசையும் ஒழுக்கத்தைச் சிதைப்பன என்பதை உணர வேண்டும். ஒழுங்குமுறை உண்மையிலேயே வளர்ச்சிக்கான அடிப்படை விதிகளுள் ஒன்றாகும். அதுதான் உலகின் கோடான கோடி மக்களை ஒன்றாகப் பிணைக்கிறது. உலக மக்கள் அனைவரும் ஏதாவது ஒரு பதவிக்காகத்தான் அழைந்து கொண்டிருக்கிறார்கள். வேறுபட்ட நோக்கங்களுடன் ஒருவரையொருவர் எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களைத் தாம் ஒழுங்குமுறை ஒன்றாகப் பிணைத்து விடுகின்றது என்கிறோம்.

ஒழுங்கு என்னும் சட்டத்தைக் கொண்டே இயந்திரம், தொழில், ஒழுக்கம், இனம், பேரரசு இவையனைத்தும் கட்டுப்படுத்தபட்டிருக்கின்றன. தன் ஒழுங்கு முறைகளைத் தொடர்ந்து விருத்தி செய்து கொண்டிருக்கும் மனிதன் தன் ஆற்றலைக் காட்டுவதில் ஆதாயம் அடைந்து கொண்டிருக்கிறான்.

ஒழுங்கு முறையில் ஆயத்தம், வேறுபாடின்மை, பயன், விரிந்த அறிவு போன்ற நான்கு அம்சங்கள் இருக்கின்றன. ஆயத்தம் என்பது ஊக்கம் ஆகும். வேறுபாடின்மைக்கு ஒழுங்குமுறை மிகவும் அவசியம். பயன் என்பது ஒரு செலவில் ஒரு முறையைப் பின்பற்றுவதால் விளையும் நேரடிப்பலனாகும். பயன் விளைய வேண்டுமென விரும்பினால் சாத்தியமான இலட்சியத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**8. உன்னுடைய தன்னம்பிக்கையை எவ்வாறு வளரச் செய்வாய்? விளக்குக. (April-2011)**

### *தன்னம்பிக்கை (Self-Confidence) :*

கற்பதில் ஒருவித அவமானமும் இல்லை. அவ்விதம் கருதுவதைத் தன்னம்பிக்கையின் அடையாளமாகக் கொள்ளக்கூடாது. அந்த மனநிலையானது ஒரு பலவீனமாகும். அது வீழ்ச்சியின் முன்னோடியாகும். அது வலிமையல்ல. பெரும் சாதனைக்கு அது உத்திரவாதமுமல்ல. இவையெல்லாம் தன்னம்பிக்கையின் தன்மைகளாகும். அதாவது, 'நம்மால் முடியும்' என்ற நம்பிக்கையே தன்னம்பிக்கையாகும். கர்வமும், அகங்காரமும் தன்னம்பிக்கையுடன் உறவு கொண்டிருக்கக்கூடாது. தன்னம்பிக்கை உயர்த்தப்படும் பொழுது இவை தாழ்ந்து போகின்றன. கர்வமானது பணம், உடை, உடைமை, கௌரவம் இவற்றினால்தான் ஏற்படுகிறது. தன்னம்பிக்கையானது தகுதி, நேர்மை, தூய்மை, உண்மை இவற்றின் மீது நிற்கிறது.

தன்னம்பிக்கையும் அடக்கமும் அதிகம் இணக்கமுள்ளவையாகும். மிக மேலான நம்பிக்கை மிக மேலான அடக்கத்துடன் உறவு கொண்டிருக்கும். தன்னம்பிக்கையையானது வீரத்தின் சாரம் எனலாம். பெரியோர்கள் அனைவரும் தன்னம்பிக்கை உள்ளவர்கள்தாம். அவர்களின் பலத்தில் நம் தீமைகளை வளர்த்துக் கொள்வதைவிட, அவர்களின் ஒளிமிக்க விளக்கிலிருந்து நம் ஒழுக்கங்களைப் புதிதாய் ஏற்றிக் கொள்வது நல்லதாகும். பிறரின் ஒளியை நாம் நம்பினால் இருள் நம்மை மூழ்கடித்து விடும். நாம் நம் ஒளியிலேயே நம்பிக்கை கொண்டிருப்போமாயின், நாம் அதனை அணைத்திடாது என்றும் எரிந்து கொண்டிருக்கச் செய்யலாம். நம் உள்ளொளியே என்றும் அணையாத ஒளியாகும்.

**தன்னம்பிக்கைக்கு நான்கு தன்மைகள் உள்ளன. அவை :**

1. தீர்மானம்,
2. உறுதி,
3. கௌரவம்,
4. சுதந்திரம்.

தீர்மானமே ஒருவனைப் பலவானாக்குகிறது. "தயங்கும் மனிதன் அழிந்த மனிதன்" என்பது ஆன்றோர் வாக்காகும். தன்னையே நம்பாதவனை ஒருவரும் நம்ப மாட்டார்கள். நிச்சயமாக தன்னம்பிக்கையானது ஒரு முக்கியமான குணமாகும். தீர்மானமின்மை தளர்வாகும், சலனமாகும். உறுதி, துரிதமாய்த் தீர்மானத்திற்கு வரும் இதயத்தில்தான் பிறக்கிறது. என்னதான் ஏற்பட்டாலும் தன் கொள்கையில் நாம் உறுதியாய் நிற்க வேண்டும். ஒரு மனிதன் உறுதியான, நிலையான தீர்மானம் பெற்றிருத்தல் அவசியம். கௌரவம், உறுதியுள்ள மனத்தை மேலான ஆடை கொண்டு அணிவிக்கிறது. தீமையுடன் சமாதானம் செய்து கொள்வான் என்று எதிர்பார்க்கப்படும் பொழுது இரும்புத் தண்டு போல் இணங்காதிருப்பான்.

கௌரவமுள்ளவன் பிறரின் மதிப்பைப் பெறக் காரணம் அவன் தன் மதிப்பு உள்ளவனாயிருப்பது மட்டுமின்றி, அவன் மற்றவர்களைக் கௌரவத்துடன் மேலான முறையில் நடத்துவதாகும். கர்வம் தன்னை மட்டும் நேசித்துக் கொள்ளும், தன் கீழுள்ளவர்களை அவமதிப்புடன் நடத்தும். உண்மையான கௌரவம் சுய நேசத்தால் பிறப்பதில்லை. சுய தியாகத்திலிருந்து பிறப்பதாகும். அதாவது அது சில நிலையான மையக் கொள்கைகளை விருப்பு, வெறுப்பில்லாமல் பின்பற்றுவதிலிருந்து பிறக்கிறது. ஒரு மனிதன், நிலையான கொள்கை ஒன்றின் அடிப்படையில் செயலாற்றும் அளவுதான் உளவமைதியும், கௌரவமும் பெற்றிருப்பான். சுதந்திரம் என்பது வலிமையும், தன்னடக்கமுள்ள மனிதனின் பிறப்புரிமையாகும். சுதந்திரம், விடுதலை, மீட்சி இவை எல்லாம் உழைப்பின் மூலம் கிடைப்பவை. தன்னைக் காப்பாற்றிக் கொள்பவனே சுதந்திரவான் ஆவான், தன்னம்பிக்கையாளனாவான், விடுதலையுள்ளவனாவான்.

**தன்னம்பிக்கையை வளரச் செய்யும் வழிகள் :**

1. தன்னம்பிக்கை உள்ளோரிடம் பழக வேண்டும்.
2. வெற்றி பெறுவதற்கு முயற்சி தேவை. அதற்கான முயற்சியில் ஈடுபடும்போது தன்னம்பிக்கை வளர்கிறது.
3. ஒரு செயலைச் செய்யும்போது உறுதி மனப்பான்மையுடன் இருக்க வேண்டும். அவ்வுறுதியானது தன்னம்பிக்கையை வளரச் செய்கிறது.
4. தன்னம்பிக்கையை வளரச் செய்வதற்கு மனிதன் எப்பொழுதும் புன்னகையுடன் இருக்க வேண்டும்.
5. வாழ்க்கையில் கொள்கையில் நிலையாக இருக்க வேண்டும். விடாமுயற்சி வெற்றிக்கு அடிப்படை. இது தன்னம்பிக்கையை வளரச் செய்கிறது.

## 9. தனிநலன் முயற்சி தொடங்கும் நிலை என்றால் என்ன?

***தனிநலன் முயற்சி தொடங்கும் நிலை (Self-Initiative) :***

தனித்திறமை உள்ள எந்த மனிதனுக்கும் சமுதாயத்தில் மதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. மதிப்பு அதிகரித்துக் கொண்டே போகிறது. மதிப்பு அதிகரிக்க வேண்டுமானால் தனிநலன் முயற்சியைத் தொடங்கும் நிலையில் அவன் உள்ளவனாக இருக்க வேண்டும். மனிதன் ஒருவன் முன்னேற்றமடைகிறான் என்றால், அவனது உழைப்பும், தனிநலன் முயற்சி தொடங்கும் நிலையே காரணமாகும்.

உடல் ஊனமுற்றோர் பலர் திறமைசாலிகளாக இருக்கிறார்கள். அவர்கள் 'மாற்றுத்திறனாளிகள்' என்று அழைக்கப்படுகின்றனர். எடுத்துக்காட்டாக, சேலத்தைச் சேர்ந்த T. மாரியப்பன் தன்னுடைய திறமையினால் ரியோ பாராஒலிம்பிக் போட்டியில் உயரம் தாண்டுதலில் தங்கம் வென்றான். இது அவனது உழைப்பிற்கும் அவனிடம் உள்ள தனி திறமைக்கும் பலன் என்றே கூறலாம். தங்க மாரியப்பன் மாற்றுத்திறனாளியாக இருந்தாலும் தனி நலன் முயற்சி தொடங்கும் நிலைப் பண்பை வளர்த்துக் கொண்டதால் அவனுக்கு மதிப்பு தானாகவே சென்றடைந்திருக்கிறது. வெகுமதிப் பணம் அவனுக்குக் கொட்டுகிறது.

### தனிநலன் முயற்சி தொடங்கும் நிலையின் நன்மைகள் (Merits of Self-Initiative)

1. தனிநலன் முயற்சி தொடங்கும் நிலையினால் வருமான உயர்வை அதிகரிக்கலாம்.
2. சமுதாயத்திற்கு தன்னை அடையாளம் காட்டி சிறப்பைப் பெறும் தன்மை உள்ளது.
3. மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கிறது.

4. அனைத்து மக்களிடமும் செல்வாக்கு அதிகரிக்கிறது.
5. எங்கு சென்றாலும் சுதந்திரமாகச் செல்லும் வாய்ப்பு இருக்கிறது. பிறரின் கட்டளைக்கு அடிபணிய வேண்டிய அவசியமும் இல்லாத நிலைமை உருவாக்குகிறது.
6. தனிநலன் முயற்சி தொடங்கும் நிலையானது சிறந்த முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்லும் வாய்ப்பு இருக்கிறது.
7. எவ்வித எதிர்பார்ப்புமின்றி, தனிநலன் முயற்சி தொடங்கும் நிலையில் உள்ளவர்கள் தமது பணிகளைத் தாமாகவே செய்வதால் வாழ்வில் முன்னேற்றம் அடைய வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

**10.அடுத்தவரின் உணர்வுகளை மதித்தல், ஒத்துணர்வு ஆகியவற்றை வேறுபடுத்துக. (April-2012)**

### அடுத்தவரின் உணர்வுகளை மதித்தல் (Empathy)

ஒரு சமூகத்தின் உறுப்பாக இருக்கும் ஒவ்வொரு மனிதரும் தனக்கு அடுத்து இருப்பவர்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் மதிக்கக் கற்றுக் கொண்டால் அரசு, சட்டம், நீதி ஆகியவற்றின் பணி குறைந்து விடும். 'குறைவாக ஆட்சி செய்யும் அரசுதான் நல்ல அரசு' என்பது காந்தியத் தத்துவம். இது இராணுவம், காவல்துறை, நீதி மன்றங்கள், சிறை போன்ற துறைகளின் பணிகள் குறைவதன் மூலமே சாத்தியமாகும். அதற்குக் குற்ற நிகழ்வுகள் இல்லாத சமுதாயம் அமைய வேண்டும். உரிமையியல் வழக்குகளையும் குற்றவியல் வழக்குகளையும் அதிகமாகப் பதிவு செய்ய வேண்டிய சூழல் ஏற்படாத சமூகமே மதிப்புகளைப் போற்றுகிற சமுதாயமாக அமையும். அதற்கு ஒவ்வொரு தனிநபரும் அடுத்தவரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும். உரிமைகளை மதிக்க வேண்டும். பிரச்சனைகள் ஏற்பட்டால் சுமூகமாகத் தீர்த்துக் கொள்வதற்கு அது வழி வகுக்கும்.

## ஒத்துணர்வு / இணக்கம் (Sympathy)

மனிதனோடு மனிதன் இணக்கம் கொள்ளுதல் வாழ்க்கையில் மிக முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. புத்தகப் படிப்பு மனிதனுடைய மனதை மாற்றியமைத்து விடாது. ஒருவன் மற்றொருவனோடு இணக்கம் கொள்கின்ற பொழுது ஒருவனுடைய இயல்பு மற்றொருவனுக்கு அறிந்தோ அறியாமலோ மனதில் வந்து அமைகிறது. நல்லவர்களோடு இணக்கம் கொள்ளுகின்றவனுக்கு நல்லியல்பு தானாக வந்து விடுகிறது. அதற்கு மாறாகக் கெட்ட இயல்பு ஓங்குவதற்குக் காரணம் கூடா நட்பேயாகும். நல்லாசிரியர் ஒருவருடைய இயல்புகள் அனைத்தும் மாணவர்களுக்கு அமைந்து விடுகின்ற பொழுதே ஆசிரியருடைய முயற்சி முற்றிலும் வெற்றி பெறுகிறது.

பலதரப்பட்ட தொடர்பு வைக்கிற பொழுது ஆசிரியருக்குத் தொல்லையோ, சலிப்போ உண்டாக முடியாது. ஆசிரியருக்கும் மாணவர்களுக்குமிடையில் இணக்கம் இவ்வளவு தூரம்தான் இருக்கலாம், இதற்குமேல் போகலாகாது என்கின்ற வரையறை கிடையாது. இணக்கத்தில் அவர்கள் ஆழ்ந்து போகுமளவு மாணவர்களுக்கு நலன்கள் அனைத்தும் அமைவது உறுதி.

பல வேலைகளும் பதட்டமான மனநிலையும் இருந்தால் எந்தச் செயலிலும் மன ஒருமையுடன் ஈடுபட முடியாது. மனதை ஒருமைப்படுத்த தியானம் சிறந்த வழி எனப் பரிந்துரைக்கப்படுகிறது. தியானம் பற்றிக் கூறுபவர்கள் 'நாம் செய்யும் அன்றாடச் செயல்கள் ஒவ்வொன்றையும் உணர்ந்து செய்தால் அதுவே தியானம் தான்' என்று கூறுகிறார்கள்.

வீட்டிற்குள்ளும் வெளியிலும் நிகழும் மன ஒருமை இல்லாத செயல்பாடுகள் தனி மனிதர்களை மனச் சிதைவுகளுக்கு ஆளாக்குகின்றன. கோபம், பொறுமையின்மை, நிதானம் இழத்தல்.

வெறுப்பு போன்ற எதிர் மதிப்புகள் தோன்றக் காரணமாகின்றன. அதனால்தான் ஒரு நேரத்தில் ஒன்றை மட்டுமே நினைத்துச் செயல்பட அறிவுரைக்கின்றனர். மனதை ஒருமைப்படுத்தத் தெரிந்தவர்களால் மிகப்பெரிய வெற்றியாளர்களாக ஆக முடியும். இளமைப்பருவத்தில் மனம் சிதறாமல், பதறாமல் காரியம் ஆற்றப் பழக்கப் பட்டால் வாழ்வில் எல்லா நிலையிலும் அமைதியுடன் வாழ முடியும்.

11. நேர்மை என்ற பதத்திலிருந்து நீவிர் அறிந்து கொள்வது யாது? நேர்மையின் முக்கியத்துவத்தை எழுதுக. **(April-2014)**

அல்லது

நேர்மை என்ற பதத்தின் பொருள் எழுதுக. ஒரு உதாரணம் தருக. **(April-2013)**

**நேர்மை (Honesty)**

ஒரு மனிதன் முழுமையானவனாகவும் வளமையானவனாகவும் இருக்க வேண்டுமானால் அவனுடைய நடவடிக்கை அனைத்திலும் நேர்மை நிலவ வேண்டும். தீமைக்கு விட்டுக் கொடுக்கும் பலவீனத்தை அவன் பெற்றிருக்கக் கூடாது. எவ்வளவுதான் அவசியமானதாய்த் தோன்றினாலும், அற்பமாய்த் தோன்றினாலும் தவறுடன் இணங்கிப் போவது என்பது நேர்மை ன்னும் கேடயத்தைத் தூக்கி எறிவதுதான். தீமையின் தாக்குதலுக்கு இலக்காக ஆயத்தமாய் நிற்பதுதான்.

நேர்மையின் சிறப்பை அறிந்த ஒருவன், நேர்மையில் ஒரு சிறிதும் சலனமுறாத ஒருவன் எவ்விதச் சூழ்நிலையிலும் பொய் சொல்லவும் மாட்டான். கண்ணியமற்ற செயல்புரியவும் மாட்டான். அவ்விதம் ஒரு போதும் செய்ய வேண்டிய அவசியமில்லை என்பான். அவனைத் தீமை கவரவே முடியாது. மனித சமூகத்தின்

முதுகெலும்பே நேர்மைதான். மனித உறவுகளின் ஆதாரமாய் இது இராவிட்டால் நம்பிக்கை இராது, நாணயமிராது, வாணிப உலகமே தலைகீழாகி விடும்.

நேர்மையுள்ள மனிதனிடம் அவனுக்குத் தெரியாமலே ஒரு சிறப்பு இருக்கும். அது அவன் கூடவே செல்லும். அது பார்ப்பவரைப் பயபக்தி கொள்ளச் செய்வதுடன் அவர்களைப் புத்துணர்வு கொள்ளவும் செய்யும். அவன் தன்னை உயர்த்திக் கொண்டு விட்டான். அதனால் தீமைகள் அவனைக் கண்டதும் குழம்பிப் போய் பதுங்கிக் கொள்கின்றன. இந்தச் சிறப்பிற்கு இணையாய் அறிவைக்கூடக் கூற முடியாது. அறிவாளியைவிட நேர்மையானவன் தான் உலகின் மதிப்பில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருப்பான்.

பத்மாஸ்டர் : 'நேர்மையின் சிறப்பு மனித இயல்பில் மிகவும் சிறந்த ஒன்று'. நேர்மை தவறாதவன் உண்மையிலேயே ஒரு வீரன் தான். நோய், இடர், இறப்பு ஒன்றுக்கு அவனுடைய நிரந்தரத் திருப்தியை அழித்துவிட முடியாது.

நேர்மை தான் கண்ணியம், அச்சமின்மை, நோக்கத்துடனிருப்பது, வெல்லற்கரிய நிலை ஆகிய நான்கு தன்மைகளாலேயே நிற்கிறது. கண்ணியம் வெற்றிக்குச் செல்லும் நிச்சய வழியாகும். அச்சமின்மை நேர்மையுடன் வருவதாகும். அச்சமின்மை ஒரு மனிதனின் வாழ்வில் வலிமை மிக்கக் கோபுரமாகும். ஒரே நோக்கம் கொண்டிருத்தலை நேர்மை வளர்த்த ஒழுக்கவாற்றலின் நேரடிப் பலன் எனக் கூறலாம். நேர்மையாளன் நேரடியான இலட்சியங்களும் அறிவார்ந்த நோக்கங்களும் அமைந்த மனிதனாவான். அவன் தடம் மாற மாட்டான். வெல்லற்குரிய நிலையே ஒருவனுக்குச் சிறந்த பாதுகாவலாகும். அது முற்றிலும் தூய்மையும் நேர்மையும் பெற்ற மனிதனுக்கே பாதுகாவல் அளிக்கிறது.

### நேர்மையின் முக்கியத்துவம் (Importance of Honesty) :

1. அறிவு என்ற நூலின் முதல் பகுதியின் தொடக்கம் நேர்மையாகும். நேர்மை என்பது மனிதனுடைய பேச்சிலும், செயலிலும் உண்மையாக இருக்கும் நற்பண்பாகும்.
2. கருத்துக்களையும், நிகழ்வுகளையும் கூட்டியோ, குறைத்தோ சொல்லாமல் உள்ளதை உள்ளவாறு எடுத்துரைப்பது நேர்மையாகும்.
3. மனிதன் பிறருக்கு மட்டுமல்லாது தனக்கு உண்மையுள்ளவனாக இருப்பது நேர்மையாகும்.
4. எண்ணங்கள், நோக்கங்கள் நேராக இருப்பதுடன், நம்பி ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு, அதிகாரம், பணம் இவற்றைத் தவறாகப் பயன்படுத்தாமல் இருப்பதும் நேர்மைக்குச் சான்றாகும்.
5. நேரான வழியில் நமது வாழ்க்கைப் பயணத்தை வைத்துக் கொள்வதுதான் நேர்மையாகும்.
6. பகைவர் கூட மதித்துப் போற்றும் பண்பாளராக இருப்பது நேர்மையாகும்.

**12. தைரியம் என்றால் என்ன?அதன் முக்கியத்துவத்தை எழுதுக. (April-2013)**

### *தைரியம் / துணிவு / வீரம் / வலிமை* (Courage) :

சாதனை அனைத்தும் ஆற்றபட உதவுவது வலிமைதான். அதுதான் சாதாரணத் திறமையையும் ஊக்குவித்து உயிர்ப்பித்து மேதையாக மாற்றி விடுகிறது. அதுதான் மூடனின் மனத்தைத் தொட்டு மூண்டெரியும் நெருப்பாக ஆக்கி விடுகிறது. அதுதான் உள்ளத்தில் உறங்கிக் கிடந்த நெருப்பையெல்லாம் கொழுந்துவிடச் செய்கிறது. தைரியத்தை ஓர் ஒழுக்கம் எனவும் கூறலாம். சோம்பல் உள்ளவன் கூட உழைப்பதற்காக உந்தி எழுவதன் மூலம் வலிமையை உண்டுபண்ணிக் கொள்ளலாம்.

முக்கிய ஆற்றல்களுள் ஒன்றாய் வலிமையைக் குறிப்பிடலாம். வலிமையில்லாமல் எதனையும் சாதிக்கவே இயலாது. அதுதான் செயல்கள் அனைத்திற்கும் அடிப்படை அம்சமாகும். உண்மையில் வலிமையே உயிர் ஆகும். அது இல்லாவிட்டால் ஞாலமும் இல்லை, உயிர்களுமில்லை. ஒருவன் செயல்புரிவதை முற்றிலும் நிறுத்தி விட்டால் அவன் உடல், உழைப்பின்றிக் கிடக்கிறது. அவனுடைய எல்லா இயக்கங்களும் நின்று விடுகின்றன.

வலிமையைத் தவறாய்ப பயன்படுத்துவதற்குப் பதிலாக வலிமையே இல்லாதிருந்து விடுவது மேலாகும். புனித ஜான் இதனைத்தான் குறிப்பிடுகிறார் இவ்வாறு : “நான் உன்னை வெப்பமாக்குவேன் அல்லது குளிர்ச்சியாக்குவேன். இளஞ்சூடாயிருந்தாலோ உன்னை நான் என் வாயிலிருந்தும் வாந்தி எடுத்து விடுவேன்”. இளஞ்சூட்டு நிலை வனப்பற்றது: உயிர் அற்றது: பயனற்றது ஆகும். அது நன்மையுமில்லை, தீமையுமில்லை.

வலிமைதான் சுபிட்சக் கோயிலின் முதல் தூணாகும். அதுவே முதல் முக்கியத்தேவையுமாகும். வேலையின்றிப் பலர் அலைவதற்குக் காரணம் அவர்களிடம் இந்த வலிமை இல்லாதிப்பதுதான். வலிமை என்பது பலவும் சேர்ந்த ஒரு கூட்டாற்றல் ஆகும். ஒழுக்கத்தையும் சுபிட்சத்தையும் உண்டு பண்ணும் குணங்கள் அதில் சேர்ந்திருக்கின்றன. அந்தக் குணங்கள பின்வரும் நான்கு தன்மைகளிலும் அடங்கியிருக்கின்றன.

1. ஊக்கம், 2. எச்சரிக்கை, 3. உழைப்பு, 4. தீவிரம்.

வலிமைத் தூண் இந்நான்கு பொருள்களாலும் தான் அமைந்திருக்கிறது. இந்தப் பொருள்கள் நான்கும் உரம் வாய்ந்தவை. நீடித்து உழைக்கும் தன்மையுடையவை. அவை தூணுக்கு மிகப் பெரும் புயலையும் சமாளிக்கும் உறுதி வழங்குகின்றன. ஊக்கத்தை ஓர் உயரிய உடைமை என்று

கூறலாம். அது நம்பிக்கையை வழங்குகிறது. சுறுசுறுப்பும், ஊக்கமும் உள்ளவர்களை, குறித்த காலத்தில், எந்தச் செயலையும் செய்து முடிக்கும் திறன் பெற்ற மக்களை நம்பலாம். அவர்கள் தம் கடமையைச் செய்து முடிக்காது எழ மாட்டார்கள்.

எச்சரிக்கை, எல்லாத் திறன்களுக்கும் ஒரு காவலாகும். எச்சரிக்கையானது அழிவு பண்ணக்கூடிய எதுவும் உள்ளே நுழைந்து விடாமல் தடுத்து நிறுத்துகிறது. அதுவே, வெற்றிக்கும், விடுதலைக்கும், அறிவிற்கும் நெருங்கிய நண்பனும் பாதுகாவலனுமாகும். எச்சரிக்கை இன்மை அறிவின்மையைத் தான் காட்டும். உழைப்பு, உற்சாகத்தையும், வளத்தையும் உண்டு பண்ணுகிறது. ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் உழைக்கும் மக்களே சமுதாயத்திலுள்ள மிகவும் மகிழ்ச்சியுள்ள மக்களாவர்.

உழைப்பு உடல் நலத்தைக்கூட விருத்தி செய்கிறது. உழைப்பு உடலுக்கு வலுவூட்டும் மருந்தைப் போல் உதவுகிறது. ஓவ்வொரு நாள் வேலையும் அவர்களால் ஒளி பெறுகிறது. உலகம் அவர்களால் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவர்களே சமூகத்தின் பொன் போன்றவராவார். தீவிரம் என்பது ஒரு செயலில் மனம் முழுவதையும் ஈடுபடுத்துவதாகும். தீவிர ஊக்கமுள்ள மக்களுக்குப் பல்வேறு பதவிகள் காத்துக் கொண்டே இருக்கும். அவர்கள் அமைதியுள்ளவர்கள், மனச் சான்றுள்ளவர்கள், நன்கு உழைப்பவர்கள். அவர்கள் எடுத்த வேலை எதனையும் சிறப்பாகச் செய்து முடிப்பார்கள். தீவிரத் தன்மையுள்ள மக்கள் தாங்கள் வேலையில், வாழ்வில் விரைவாய் முன்னேறி விடுகிறார்கள். இவ்விதம் உறுதியாக வலிமைத் தூணை நிறுத்துபவனே வாழ்வில் ஆடாது, அசையாது நீடித்து நிற்கக்கூடிய ஆதாரத்தைப் பெறுவான்.

## செயல் - I

## (Activity - I)

## Part - A

1. மதிப்பு என்ற சொல்லின் பொருளை விளக்குக.
2. மதிப்புறுக்களின் முக்கியத்துவத்தை எழுதுக.
3. தற்கட்டுப்பாடு, பரிவு, மன்னிப்பு மற்றும் நேர்மை போன்ற மதிப்புகளை எவ்வாறு ஆராய்ந்து அறிவீர்கள்?
4. மதிப்புக்கல்வி என்னும் சொல்லுக்குத் தகுந்த வரையறையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5. மதிப்புக் கல்வியின் அவசியம் யாது?
6. மதிப்புக்கல்வியின் ஐந்து குறிக்கோள்களை விளக்குக.
7. தற்கட்டுப்பாடு என்றால் என்ன?
8. தனிநலன் முயற்சி தொடங்கும் நிலை என்றால் என்ன?
9. அடுத்தவரின் உணர்வுகளை மதித்தல், ஒத்துணர்வு ஆகியவற்றை வேறுபடுத்துக.
10. நேர்மை என்ற பதத்தின் பொருளை எழுதுக. ஒரு உதாரணம் தருக.
11. நேர்மையின் முக்கியத்துவத்தைக் கூறுக.
12. தைரியம் என்றால் என்ன? அதன் முக்கியத்துவத்தை எழுதுக.

## Part - B

1. மதிப்புகளின் பொருள், தன்மை மற்றும் முக்கியத்துவத்தை விளக்குக.
2. மதிப்புகளின் பிரிவுகள் யாவை? பண்பாட்டு மதிப்புகளை விளக்குக.
3. மதிப்புறுக்களின் பிரிவுகள் யாவை? பக்தி சார்ந்த மதிப்புறுக்களை விளக்குக.
4. தற்போதைய சமூகத்தில் மதிப்புக் கல்வியின் அவசியத்தை விவாதி.
5. உன்னுடைய தன்னம்பிக்கையை எவ்வாறு வளரச் செய்வாய்?

# அலகு - 2

# மதிப்புகளும் சமயமும்

# VALUES AND RELIGION

# அலகு - 2

## மதிப்புகளும் சமயமும்

## VALUES AND RELIGION

**1. கர்மா என்றால் என்ன? ஏதேனும் ஒரு உதாரணம் தருக. (April-2013)**

### கர்மம் (Karma)

1. 'எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்' என்பதுவே கடவுள் விதி. இதை யாரும் மீற முடியாது. கடவுள் கூடத் தலையிட முடியாது. அவரும் விதியை வகுத்துவிட்டு விலகிக் கொண்டிருக்கிறார்.

2. அநேக விஷயங்கள் நம்மை மயக்குகின்றன. நாமும் மயங்கி விடுகிறோம். ஆயினும் அநேக சமயங்களில் கடவுள் நம்மை மயங்காதபடி காத்தருள்கிறார். ஆனால் அது எப்படி நிகழ்கிறது என்பது மர்மமாகவே இருக்கிறது எப்போதும் அப்படியேதான் மர்மமாயிருக்கும்.

### கர்ம விதி (Law of Karma)

ஒவ்வொரு இயக்கத்திற்கும் சந்திக்கும் சமமான எதிர் இயக்கமும், எதிர்சக்தியும், எதிர் விளைவும் இருக்கும் என்பது நியூட்டனின் மூன்றாவது விதி. இதைப்போலவே மனிதனுடைய சிந்தனையும் உணர்வும் இன்ப துன்பமாகிய எல்லாவற்றிலும் மனிதனுடைய ஒவ்வொரு எண்ணமும், செயலும் எதிர்மறையான ஆனால் சம அளவிலான விளைவுகளை உண்டாக்குகின்றன.

இதைக் கூறுகின்ற விதியே கரும விதியாகும். நாம் மற்றவர்களுக்கு நல்லதைச் செய்தால் நமக்கு நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு நாம் துன்பம் செய்தால் நமக்குத் துன்பம் உண்டாகும். இதற்கு இறைவன் பொறுப்பு இல்லை. மனிதனின் இயற்கையே, சுபாவமே இதற்குப் பொறுப்பு.

**பகவத் கீதை**

*"செய்கைத் தலைமை கருமம் தனையும்*
*வினைப் பயன் தன்னை அடைதலையும்*
*இறைவன் உலகில் தரவே இல்லை*
*இயற்கை இவ்வாறியங்கிடுமே".*

**கர்மங்களுக்குப் பலன் கிடைக்குமா?**

மனிதன் செய்யும் கருமங்களில் பலவற்றுக்குப் பெரும்பாலும் பலன் உடனே கிடைத்து விடுகிறது. "மாண்ட உலகில் இப்புவி மீது கர்மப் பலனே விரைவாகும்". ஆனால் சில செயல்களுக்குப் பலன் அல்லது தண்டனை விரைவில் கிடைப்பதில்லை. நாம் புரியும் வினை ஒவ்வொன்றின் சாரமும் விதை வடிவில் நம் அடிமானத்தில் சென்று உறைகிறது. சம்ஸ்காரமாக, வாசனையாக நம்முடைய குணம். ஆசை, வாழ்க்கை, உடற்கூறு, பெற்றோர், பணி, வாழும் சூழ்நிலை, பண்பாடு இவற்றை உருவாக்குகின்றது. இதுவரை பலனைத் தராத கருமங்கள் சமயம் வரும்போது பலனைக் கொடுக்கும். ஆனால் நம் வினைகள் எதுவுமே அழிந்து விடாது. பலன் தராமல் போகாது.

**கருமங்கள் பலன் தருவதற்குள்ளேயே உடல் சரிந்து விட்டால்?**

ஒருவன் இறந்து விட்டாலும் கூட அவனுடைய கருமங்கள் அவனை விடாது. அடுத்த பிறவியில் தன் பலனைச் சுடும். மனிதனுடைய வினைகளையும், வாசனைகளையும்,

சம்ஸ்காரங்களையும் எந்த வாழ்க்கையில் வெளிப்படுத்த முடியுமோ, அந்தக் குடும்பத்தில் அவனுக்குப் பிறவி கிடைக்கும். எந்த உடலால் தன் விதியை நிறைவேற்ற முடியுமோ அந்த உடலில் அவனுக்குப் பிறவி கிடைக்கும். நல்வினைகளைச் செய்து அவற்றிற்கான பலன் முழுவதையும் இன்னும் அனுபவிக்காத ஒருவனை உதாரணமாகக் கொண்டு பகவத் கீதை கூறுகின்றது.

**கொடிய கருமங்கள் பலனைத் தந்தே தீருமா?**

நாம் செய்த கருமங்கள் எல்லாம் அவற்றிற்கான பலனைத் தந்தே தீரும் என்றாலும் அவற்றின் பலன் நமக்கு அதிக துக்கம் தராதவாறு நாம் மூவிதமாக நம்மைக் காத்துக் கொள்ளலாம்.

1. **இறைவனை வேண்டுதல்** : 'இறைவன் பழவினைகள் பாறுப்பான்' என்பது பெரியோர் வாக்கு.

2. **கடுமையான உழைப்பு** : "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது ஞற்றுபவர்" என்பது திருவள்ளுவர் கருத்து.

3. மனிதன் உடல், மூச்சு, மனம், அறிவு, ஆனந்தம் என்று ஒன்றுக்குள் ஒன்றாக இருக்கும் ஐந்து போர்வைகளால் ஆகியவன். இதில் ஏதாவது ஒரு தளத்தில் அவனுடைய கருமங்கள் பயனைத் தர வரும்போது அதைக் காட்டிலும் மென்மையான உள் கோசம் ஒன்றுக்குள் அல்லது போர்வை ஒன்றுக்குள் தன்னைத்தானே இழுத்துக் கொண்டால் அவனுடைய கரும பலன் அவனுக்குத் துன்பத்தைத் தராது.

2. கர்மயோகம் என்றால் என்ன? இந்து மதத்தின்படி ஒரு தனிமனிதனிடம் மதிப்புகளை உருவாக்குவதில் இது எவ்வாறு உதவுகிறது? (மாதிரி வினாத்தாள், MKU)

அல்லது

கர்ம யோகத்தின் முக்கியத்துவத்தைக் கூறுக. (April-2011)

### கர்மயோகம் (Karma Yoga)

கர்மயோக சாஸ்திரத்தை விளக்கும் தலைசிறந்த நூல் பகவத் கீதையாகும். அந்நூலுக்கு லோகமான்ய திலகர், மகாத்மா காந்தி, வினோபா ஆகியவர்கள் கரும யோக விளக்கம் அளித்து இருக்கிறார்கள். விவேகானந்த சுவாமிகள் பகவத் கீதையை அடிப்படையாகக் கொண்டும், உபநிஷதங்களில் கூறியபடி தியாகத்திலிருந்து பலம் கிடைக்கும் என்பதை விளக்கியும் ஆற்றிய கருமயோகச் சொற்பொழிவுகள் கரும யோகத்திற்கான சாஸ்திர நூல் ஆகும்.

**கீதை காட்டும் கர்ம யோகத்தின் சிறப்பு (Importance of Karma Yoga)**

வாழ்க்கையில் மனிதன் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் இரண்டு விதமான பயன்கள் இருக்க வேண்டும்.

1. அச் செயலினால் சமுதாயத்திற்கு லாபம் கிடைக்க வேண்டும்.
2. அச்செயல் அவனுடைய தெய்வ பக்தியை வளர்க்க வேண்டும்.
3. இந்த இரண்டு விதமான பயன்கள் உடையவையாக ஒவ்வொரு செயலையும் ஆக்கும் விதியைக் கர்மயோகம் என்ற பெயரில் கண்ணன் தந்த பகவத் கீதை கற்றுத் தருகின்றது.

4. தொழில், வாழ்க்கை, புற வாழ்க்கை என்ற வெளி வாழ்க்கையையும் குளித்தல், நடத்தல், உண்ணுதல், தானம் கொடுத்தல் போன்ற சொந்த வாழ்க்கையின் செயல்களையும் இரண்டையுமே தனக்கு அக இன்பமும், சமுதாய நலமும் வளரும்படி செய்ய உதவும் கருவிகளாக மாற்ற கீதை உபாயம் சொல்லுகின்றது.

5. ஒரு மனிதன் தன் சொந்த வாழ்க்கையில் செய்கின்ற ஆசனம், பிராணாயாமம், தவம், நன்னூல் ஓதுதல் ஆகிய அனைத்துச் செயல்களும் உலகநன்மைக்கு உதவும்படி எல்லோரும் இன்புற்றிருக்க உதவும்படியாகவும் கீதை வழி சொல்லுகின்றது.

**கீதை தரும் கர்ம யோக விஞ்ஞானத்தின் படிகள் அல்லது வளர்ச்சி நிலைகள்**

1. மனிதன் தெய்வத்தை அடைவதற்கு நற்செயல் புரிதல், எக்காரியமும் செய்யாதிருத்தல் ஆகிய இரு வழிகளும் உதவும் என்றாலும் கூட அவற்றில் உள்ள நற்செயல் புரிதல், ஒரு செயலும் புரியாத ஞான வாழ்க்கையைக் காட்டிலும் சுலபமானது.

2. மனிதன் தன் சுயதர்மம், சுபாவம் இவற்றைப் பின்பற்றிச் சுயகர்மத்தைப் புரிய வேண்டும்.

3. சாஸ்திரங்களின் உதவியைக் கொண்டு செய்யத்தக்க காரியங்கள் எவை, தள்ளத் தகுந்த செயல்கள் எவை என்று மனிதன் அறிந்து கொள்ள வேண்டும்.

4. மனிதன் தனக்குக் கிடைத்த தொழிலைத் திறமையுடன் புரிவது இறைவனை அடையும் வழியாகும்.

5. தான் செய்கின்ற நற்கர்மத்தின் பயனைச் சமூகத்திற்கும், பரம்பொருளுக்கும் அர்ப்பணித்து விட வேண்டும்.

6. பற்றற்றுப் பணி புரிய வேண்டும்.
7. பணி புரிகின்றவன் அன்பு, சமர்ப்பண பாவம், தியாக உணர்வு, மகிழ்ச்சி, இறையன்பு ஆகிய உணர்வுடன், அதாவது நல்ல 'பாவனை'யுடன் பணிபுரிய வேண்டும்.
8. இறுதியில் அத்தனையையும் பரம்பொருள் திருவடியில் சமர்ப்பணம் செய்து அனைத்தையும் நிறைவாக்கிக் கொள்ள வேண்டும். முழுமை பெறச் செய்ய வேண்டும்.

**கர்ம யோகத்திற்கு தலைசிறந்த உதாரணங்கள்**

தோல்வி, வெற்றி, பகைவர், நண்பர் அனைவரையும் சம திருஷ்டியுடன் நோக்கி "போர்க்களத்தே பரஞான மெய்கீதை புகன்ற" கண்ணன் பகவத் கீதை காட்டும் கர்ம யோகத்திற்கு, வாழும் ஓர் உதாரணமாக ஆவான். இராமாயணமும் கர்மயோக விளக்கமே. இராமனின் அனைத்துக் குணங்களையும் கீதையின் அடையாளம் கண்டு கொள்ளலாம். பரதனும், இலக்குவனும், ஹனுமனும் கர்ம யோகத்திற்கு நாடு கண்ட உதாரணங்கள் ஆவர். ஜனகமகாராஜனும், அப்பர் சுவாமிகளும், சமீப காலத்தில் மகாத்மா காந்தியும் தலைசிறந்த கர்மயோகிகள் ஆவர்.

**3. இந்து மதத்தின் அறநெறி மதிப்புகள் யாவை? (April-2012)**

***இந்து சமயத்தின் சிறப்பியல்புகள்***

'இந்து சமயம்' என்னும் தொடர் பல்வகைப்பட்ட உட்சமயங்கள், கோட்பாடுகள், ஒழுக்க விதிகள் ஆகியவற்றைத் தன்னகத்தே அடக்கி நிறுத்துகின்றது. 'இந்து' என்னும் சொல் 'சிந்து' என்னும் ஆற்றின் பெயரின் மருவு ஆகும். முதன் முதலில் இச் சொல்லால் இந்திய மக்களைக் குறித்தோர் பாரசீகர் என்பர். முஸ்லீம்களின் ஆட்சிக்காலத்தில்தான் இத் தொடர் பெருவழக்குப் பெறலாயிற்று.

இந்து சமய நெறிக்கு அச்சமயத்தினை முதன் முதலில் வகுத்துப் பரப்பியவர் 'சனாதன தர்மம்' என்னும் பெயரைச் சூட்டினர். 'சனாதன தர்மம்' என்பது நிலைபேறுடைய நெறி என்பது பொருளாகும்.

இந்நெறி ஒரு வாழ்வியல் முறையைத் தழுவியதாகக் கொள்ளப் பட்டது. சமய-சமுதாய நாட்டங்கள், அக்கறைகள், ஈடுபாடுகள் யாவும் ஒருங்கிணையும் நெறியாக அது கொள்ளப்பட்டது. இந்த நெறியில் பொதுமைச் சிறப்பும், பொறுமை நலமும் அடங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. பல்வகைப்பட்ட சிந்தனையாளர்களின் கருத்துக்களை மதித்துப் பேணுவதும், மக்களின் மனநிலைக்கும் சமுதாயப் பொறுப்புகளுக்கும் தகுந்த அளவில் அவர்களுக்குச் சமய நெறிகளை வகுத்துத் தருவதும் இந்து சமயத்தின் சிறப்புக்கள் என்பர்.

**டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்**

"என்னைப் பொறுத்த வரையில் இந்து சமயம் என்பது இறை வாய்மையை உணர்ந்தறிய நடைபெறும் இடையறாத போராட்டம்; மனிதர்களைப் பிரிக்கும் தடைகளைத் தகர்த்தெறியும் கழிவிரக்க உணர்வின் விரிவு நிலை".

**பேராசிரியர் டி.எஸ். சர்மா**

"விரைவிலேயே இந்து சமயம் ஆன்மீகம் ஊட்டும் ஒரு பெரு நெறியாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும். மனித இனம் எதனை அடைய வேண்டுமோ அதற்கு அதனை வழிப்படுத்தும் பேராற்றலே இந்து சமயம்".

**திருநூல்கள்**

இந்து சமயத்திற்கு அடிப்படைத் திருநூல்களாக உள்ளவை நான்கு மறைகள் ஆகும். 'வேதம்' என்னும் சொல் 'வித்' என்னும் அடிச் சொல்லிலிருந்து பிறக்கிறது. அச்சொல் 'அறிவு' 'ஞானம்'

என்னும் பொருள்தரும். இவை ஆன்மீக ஞானம் படைத்தவர்களுக்கு இறைவனிடமிருந்து நேராகக் கிடைத்த வெளிப்பாடுகள் என்பர். இவற்றை 'சுருதி' என்றும் கூறுவர். உலக வாழ்க்கை, ஆன்மீக வாழ்க்கை இரண்டுக்கும் பயன்தருகின்ற உபதேசங்கள் வேதத்தில் உண்டு. ஒவ்வொரு ஜீவனும் ஒரு ஜன்மத்தில் உண்டாகிறதிலிருந்து சாகிற வரையில் எப்படிச் செய்தால் அவனுடைய ஆத்மா க்ஷேமம் அடையும் என்பதற்கு வேதத்தில் தத்துவ உபதேசங்கள் இருக்கின்றன. தனி மனிதனின் வாழ்க்கை, உய்வு, சமூக வாழ்க்கை எப்படி நடக்க வேண்டும், பொது ஜனங்களின் கடமை என்பதெல்லாம் வேதத்தில் கூறப்பட்டுள்ளன.

## இந்து மத்தின் அறநெறி மதிப்புகள் (Moral Values of Hinduism)

இந்து சமயப் போதனைகள் உயர்வான நன்னெறிகள், நற்குணம் என்ற பண்போடு தொடர்புடையவை. அறிவையும், இயல் தன்மையையும் அடிப்படையாகக் கொண்ட நற்பண்புகளை எடுத்துரைக்கின்றது. எல்லா உயிர்களிடத்தும் அன்பாக இருத்தல் வேண்டும் என்று இம்மதம் வலியுறுத்துகின்றது. நல்லனவற்றையும் தீயனவற்றையும் அறிதல், கடமையைச் செய்தல், பொறுப்புணர்ந்து நடந்து கொள்ளுதல், பிற உயிர்களை நேசித்தல், அவற்றிற்குத் தீங்கு செய்யாதிருத்தல், அனைவரையும் மதித்தல், மனதில் மாசின்றி இருத்தல் உள்ளிட்டவை இந்து சமயம் குறிப்பிடும் சில நன்னெறிகளாகும்.

ஆசை, வெகுளி, பிறர் பொருள் மீது மோகங்கொள்ளல் போன்ற குணங்களை வெளிப்படுத்தக்கூடிய செயல்களைச் செய்யாதிருத்தல் வேண்டும். நன்மை செய்தால் முடிவில் நன்மையும், தீமை செய்தால் தீமையும் நடக்கும் என்று வேதங்கள் தெளிவுறுத்துகின்றன. பிறருக்குச் சிறிதளவுகூடத் தீங்கு விளைவிக்காத செயல்களையே செய்ய முயல வேண்டும். அப்போதுதான் நமது வாழ்க்கையிலும் நல்லன நடக்கும் என்ற பல்வேறு அறநெறி மதிப்புகளை இந்து சமயம் மொழிகிறது.

இந்து சமயம் மதிப்புச் சார்ந்த கருத்துக்களை அன்றாட வாழ்வில் இயல்பாக எடுத்துரைத்து மாந்தர்களை மதிப்புடையவர்களாக உருவாக்குகிறது.

## *இந்து மதம் கூறும் அறநெறி மதிப்புகள்*

1. வாய்மை :

**ரிக் வேதம்** : "கடவுள் உண்மையானவற்றைக் காப்பார், பொய்யானவற்றை அழிப்பார். உலகத்தை தாங்கி நிற்கும் அடிநிலை உண்மையே. உண்மை உரைப்பவனுடைய உயிராற்றல் பெருகும், நாளுக்கு நாள் அவன் நல்லவனாவான்".

**உபநிடதம்** : "கடவுளே உண்மை, கடவுளை அறிவதே மனிதனுக்கு நன்மை தருவதாகும். உலகத்தில் வெற்றி பெறுவது உண்மையே, பொய்யன்று".

2. சாந்தி

**பகவத் *கீதை*** : பகவான் கூறுகிறார் : "என்னிடத்தில் இடைவிடாது பக்தியுடையவனாய், இதயத்தை அடக்கி ஆள்பவன் சாந்தி பெறுவான். மனத்தை அடக்காதவன் பக்தன் ஆக முடியாது. தன்னை ஆண்டு கொள்பவனே ஆக முடியும்".

3. **தன்னலமின்மை**

**பகவத் *கீதை*** : "பிறர்க்குத் தராமல் தாமே உண்பவர் பாவத்தையே உண்பவர். தன்னலத்தை மறந்து சகலத்தையும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்பவனை நீரானது தாமரையைத் தீண்டாதது போல் பாவமானது தீண்டுவதில்லை".

4. தவம் :

மகாபாரதம் : "தீமை செய்யாமை, பொய்யாமை, நன்மை செய்தல், அருளுடைமை - இவற்றையே சான்றோர் தவச் செயல்கள் என்பர்".

5. தூய்மை :

உபநிடதம் : "மனத்தில் அறிவும் தூய்மையும் உடையவனே வாழ்வின் குறிக்கோளை அடைவான்".

பாகவதம் : "மனமானது சடங்குகளாலும் பரிகாரங்களாலும் தூய்மை அடைவதில்லை. அறிவோடு கூடிய பக்தியினாலேயே அடையும்".

6. பொறுமை

மகாபாரதம் : "தீய சொற்களைப் பொறுத்துக் கொள். சினம் கொள்பவனிடம் சினம் கொள்ளாதே. தீமை செய்பவர்க்குத் தீமை செய்யாதே. சினத்தைப் பொறுமையாலும், தீமையை நன்மையாலும் பொய்யை மெய்யாலும் வெல்க. பொறுமையே பொன்றாமையை அளிப்பதாகும்".

> **4. கிறிஸ்தவ சமயத்தின் 'அன்பு' முகம்மதிய சமயத்தில் 'சகோதரத்தத்துவம்' என்னும் மதிப்புகளை விளக்குக.**
> **(மாதிரி வினாத்தாள் MKU)**

**அன்பு (Love)**

எல்லா மதங்களும் அன்பை உபதேசிக்கின்றன. உலகிலுள்ள சிறந்த கவிதைகளின் மையப் பொருள் அன்பாக இருந்திருக்கிறது. தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தம் சொந்த வாழ்க்கையில் அன்பை நாடுகின்றனர். சாகச சாதனைகள், மாபெரும் வீர தீரச் செயல்கள், உலகத்தின் கலைப் படைப்புகள்

எல்லாவற்றிற்கும் அன்புதான் அடிப்படைக் காரணமாக இருந்திருக்கிறது. உண்மையில் மனித குலத்தின் ஒவ்வொரு பெருமுயற்சிக்குப் பின்னாலும் இந்த அன்பைத் தேடுதல்தான் உள்ளது என்று சொல்லலாம். அன்பின் தன்னிகரற்ற, அழகு மிளிரும் மகத்தான பணியானது, திட நம்பிக்கையாக நம் வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும், மிளிர்ந்து, இறுதியாக ஆன்மீக வாழ்க்கையில், அறிவிற்கு எட்டாத பரம்பொருளைத் தேடும் மாமுயற்சியில் அதன் மகோன்னதமான மலர்ச்சியடையும் கீர்த்தியையும் அடைகிறது.

அன்பு தெய்வீகமானது அல்லது இறைத்தன்மை உடையது. அதனால் அதைப் புறக்கணிக்கக் கூடாது. அன்பை, அதன் இயல்பான மற்றும் சரியான இலக்காகிய கடவுளை நோக்கித் திருப்பி விட வேண்டும். இதயத்திலுள்ள அன்பானது அதன் உண்மையான இலட்சியத்தை நோக்கித் திரும்புமாறு மனதை ஒழுங்குபடுத்துவது தான் மனிதன் செய்ய வேண்டியதாகும். நாம் நமது அன்பை வழங்க வழங்க பிறர் அவர்தம் அன்பை நமக்கு வழங்குவர். இதுதான் அருள். இதுதான் பிறவா நிலை. மேலும் இதுவே ஆன்மீகப் பயிற்சியின் இலட்சியத்தை முழுமையாக அடைதலும் ஆகும். தெய்வீகத்தை உணர்ந்தறியும் தன்மையை இந்த அன்பு தன்னுள் கொண்டுள்ளது. இந்தத் தன்மையைத்தான் 'பார்த்தறியும் திறன்' (reading capacity) என்று கூறுகிறோம். அன்புள்ளவன், அன்பில்லாதவனைக் காட்டிலும் அதிகமாகப் பார்க்கிறான்.

நமக்குள் அன்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பிறகு ஏற்படும் முன்னேற்றத்தைப் பார்க்கலாம். அன்பால் எவற்றையும் வெல்ல முடியும். அன்பினால் மட்டுமே இது முடியும். மற்ற எந்த சக்தியும், எந்த ஆற்றலும் நமக்கு அனுகூலமற்ற ஓர் எதிர்

விளைவைத் தான் ஏற்படுத்துகிறது. ஆகையால் அன்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அன்பினால் மட்டுமே பண்டைக்கால ரிஷிகளால் காடுகளில் மிருகங்களுக்கு நடுவே வாழ முடிந்தது. அன்பு மிருகங்களைக் கூட வென்று விடும்.

மனித அன்பு எவ்வளவுதான் உயர்ந்ததாக இருந்தாலும் தன் இலக்கு கண் முன்னிருந்து மறையும்போது அது அழிந்து விடுகிறது. ஆனால் தெய்வீக அன்பு, எப்பொழுதும் எக்காலத்திற்கும் இருக்கின்றது. தெய்வீக அன்பு என்பது முழு ஜீவனிலும், கண்காணா ஆழங்கள் அனைத்திலும் ஊடுருவி, நிரந்தர பிரசன்னத்தைக் கண்டறிவதாகும். அத்தகைய அன்பு அழிவை அறிவது கிடையாது. மேலும் அன்பிற்குரியவரின் இல்லாமையை அங்கீகரிப்பதோ, பிரிவை அனுபவிப்பதோ கிடையாது.

### கிறிஸ்தவ மதம் 'அன்பு'பற்றிக் கூறுவது (Love in Christianity)

1. கண்ணால் காணும் சகோதரனை நேசியாதவன் கண்ணால் காணாத கடவுளை நேசிப்பது எங்ஙனம்? கடவுளை நேசிப்பவன் சகோதரனையும் நேசிக்கக் கடவன் என்பதும் கடவுள் கட்டளை.
2. அன்பு செய்வதை நிறுத்தாதே. அயலாராயினும் விருந்தோம்ப மறக்காதே. தேவதூதர்களைக் கூட இவ்வாறு அறியாமலே உபசரிக்கக் கூடும்.
3. உங்களிடையே அன்பு நிலவட்டும். அன்பு செய்தல் அநேக பாவங்களுக்குப் பரிகாரமாய் விடும்.
4. நான் என் செல்வம் முழுவதையும் கொண்டு ஏழைகளுக்கு அன்னமிட்டாலும், அவர்களுக்காக என் உடலையே அர்ப்பணித்தாலும், அன்பில்லையானால் யாதொரு பயனும் உண்டாகாது.

5. அறங்கள் அனைத்திலும் அன்பே உயர்ந்தது.
6. உலகம் தோன்றிய நாள் முதல் நாம் கேட்டு வரும் உபதேசம் இது! பரஸ்பரம் அன்பு செய்யுங்கள் என்பதே.
7. கடவுளை நேசிப்பவன் சகோதரனையும் நேசிப்பான் என்று கடவுளே அருளியிருக்கிறார்.
8. நான் சுதந்திரம் உடையேன் ஆயினும் அனைவர்க்கும் ஊழியனாக இருந்து வருகிறேன்.
9. எந்த மனிதனையும் இழிந்தவன் என்று கூறலாகாது என்று எனக்குக் கடவுள் காட்டியுள்ளார்.
10. சகோதரரிடம் அன்பு செய்வதால் நாம் மரணத்திலிருந்து வாழ்வுக்குச் சென்று விட்டோம்.

### முகம்மதிய சமயத்தில் சகோதரத்துவம் (Brotherhood in Islam)

இனம், மொழி, மதம், பண்பாடு, செல்வச் செழிப்பு, சாதி போன்றவற்றால் வேறுபட்டாலும் மக்களனைவரையும் வேறுபாடோ, காழ்ப்புணர்ச்சியோ இன்றி உடன்பிறப்புக்களாகவே கருதும் உயர் மனம் கொண்டிருத்தலே சகோதரத்துவத்தைக் கடைப்பிடிப்பதாகும்.

தாய், தந்தை, மனைவியைத் தவிர அனைவரையும் உடன் பிறவா சகோதர, சகோதரிகளாகக் கருதும் வழக்கம் நமது சமூகப் பாரம்பரியத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. வீதியில் அண்ணன், அக்கா, தங்கை என்று உறவு முறை கூறி அழைப்பது இந்தியாவைத்தவிர வேறு எங்கும் காண முடியாது. அனைவரையும் சகோதரர்களாக ஏற்கும் விழாவே "ராக்கி" என்ற பெயரில் வட இந்தியாவில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

## 5. இஸ்லாமிய மதத்தின் அறநெறி மதிப்புகள் யாவை? (April-2011)

### இஸ்லாமிய மதத்தில் அஹிம்சை (Ahimsa in Islam) :

"இஸ்லாம்" என்பதன் பொருள் "அமைதி" என்பதாகும். இச்சமயத்தை நிறுவிய முகம்மது நபி ஒரே கடவுள் கோட்பாட்டைப் பெரிதும் வற்புறுத்தினார். பல தெய்வங்களை வழிபட்டு பிரிந்து சண்டையிட்டு குழுக்களாக வாழ்ந்த அக்கால மக்களை ஒருமைப்படுத்த இது பயன்பட்டது. வீணான சடங்குகளும் நரபலியும் நிராகரிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தமது செல்வத்தை ஏழைகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும், பட்டி முறையை முற்றிலும் நிறுத்த வேண்டும் என்றும், இஸ்லாம் அமைதிப் பொருளாதாரத்திற்கான அடிப்படையை உருவாக்கியது.

சாதி, இன, வர்க்க பேதங்களைக் கடந்து இஸ்லாம் சகோதரத்துவ உறவிற்கு வழிகாட்டுகிறது. அங்கு ஏற்றத்தாழ்வும் ஆதிக்கமும் இல்லை. கடவுள் பார்வையில் அனைவரும் சமம். எனவே ஒடுக்கப்பட்டவரும், தாழ்த்தப்பட்டவரும் இஸ்லாமை தமது சமயமாகக் கொண்டனர். பெண்களை ஒதுக்குவதில் இஸ்லாம் முன்னணி வகிக்கிறது என்றாலும் பெண் சிசுக் கொலை, பெண் கொலையை நிறுத்துவதில் இஸ்லாம் முக்கியப் பங்கு வகிக்கிறது. சண்டையிடாதிருக்கும்படியும் சமாதானம் செய்துவைக்கும் படியும் நியாயமாக நடக்கும் படியும், உதவுதல், மன்னித்தல், பொறுமை, இன்சொல் ஆகியவற்றைக் கடைப்பிடிக்கும் படியும் இஸ்லாமியத் திருமறையான திருக்குர்ரான் வற்புறுத்துகிறது. தனி நபரை கடவுள் எனக் கூறும் தவறை இஸ்லாம் செய்யவில்லை. சிலை வணக்கம்

முழுமையாக நிராகரிக்கப்படுகிறது. இஸ்லாமியர் சிலர் இன்று இனவாதத்தால் பிளவுபட்டு, பூசலிட்டு வருகின்றனர். அடிப்படை வாதப் போக்குகளின் வன்முறை வழி ஆபத்தான நிலையைத் தோற்றுவித்துள்ளது. புனிதப் போர் கோட்பாடும் வன்முறைக்கு வழிதிறப்பதாக உள்ளது.

## இஸ்லாமிய மத்தின் அறநெறி மதிப்புகள் (Moral Values of Islam)

### அறம்

1. அறம் செய்க. அறம் செய்பவரையே அல்லா விரும்புகிறார்.
2. அறத்தில் உயர்ந்தது எது? மக்களிடையே சமாதானம் நிலவுமாறு செய்வதே.
3. அனாதைக் குழந்தைகளைக் காப்பாற்றுகிற வீடே அல்லாவுக்கு மிகவும் பிரியமான வீடு.
4. அறநெறி என்பது இதுவே: கடவுளிடம் உண்மையான பக்தி, தன்னை ஒறுத்தல், எல்லோரிடமும் நீதி செய்தல், பெரியோரைப் பேணுதல், சிறியோரிடம் அன்பு செய்தல், ஏழைகளிடம் இரக்கம் கொள்ளுதல், நண்பர்க்கு நல்லுரை கூறுதல், பகைவனிடம் பொறுமை.

### அன்பு

1. நல்லவனோ, தீயவனோ யாரிடத்தும் அன்பாயிரு. தீய வழியினின்று விலக்குவதே தீயவனுக்குச் செய்யும் அன்பாகும்.
2. கடினமான இதயத்தை உடையவன் கடவுளிடமிருந்து நீண்ட தூரம் அகன்றவனாவான்.

### ஈகை

1. பிறர்க்குக் கொடுப்பவன் கடவுளுக்குக் கடன் தருபவன். அவர் இருமடங்காய்த் தருவார்.
2. கைம்மாறு கருதித் தானம் செய்யற்க.
3. தானே உழைத்துத் தேடியது சிறிதாக இருப்பினும் தன்னாலியன்றதைத் தருபவனே தலைசிறந்த தானம் செய்பவன்.
4. தானம் தரும்போது அது முதலில் கடவுள் கைக்குச் சென்று பின்னரே ஏழையின் கைக்குச் செல்கின்றது.

### நல்ல குணம்

நல்ல குணம், அறவழியில் பொருள் தேடுதல், உண்மை பேசுதல், கடவுளிடம் நம்பிக்கை உடைமை - இந்நான்கும் உடையவன் எந்த நாளிலும் துன்பமடையான்.

### ஆற்றல்

1. எல்லோரினும் அதிக ஆற்றல் பெற விரும்பின் இறைவன் மீது முழு நம்பிக்கை கொள்க.
2. கோபம் உண்டாகும் சமயத்தில் அதை அடக்கவல்லவனாக உள்ளவனே ஆற்றல் மிகுந்தவன்.

### அழுக்காறு

அழுக்காறு கொள்ளாதீர்கள். நெருப்பு விறகை உண்டு விடுவது போல், அழுக்காறு அறச் செயல்களை அழித்து விடும்.

### நன்மை செய்தல்

பிறர் நன்மை செய்தால் நன்மை செய்வேன், தீமை செய்தால் தீமை செய்வேன் என்று கூறற்க. நன்மை செய்தால் நன்மை செய்வேன், தீமை செய்தால் தீமை செய்யேன் என்று உறுதி செய்து கொள்க.

### நன்மை, தீமை

1. கடவுளுக்கு அஞ்சி பாவம் செய்யாதிருத்தல், வாழ்விலும், தாழ்விலும் தவறாதிருத்தல், செல்வத்திலும் வறுமையிலும் நடுநிலையில் நிற்றல், இம் மூன்றும் வீடளிப்பன.
2. உலக சுகத்தில் ஆழ்தல், உலுத்தனாயிருத்தல், தற்பெருமை கொள்ளுதல் இம்மூன்றும் நாசம் தருவன.

### இஸ்லாம் மதம் கூறுவது

"முகம்மதிய மதமானது இந்திய நாகரிகத்துக்குச் செய்துள்ள இரண்டு சேவைகள். கடவுள் ஒருவரே என்ற மாசற்ற நம்பிக்கையும் -மக்கள் அனைவரும் சகோதரரே என்னும் உண்மையை அனுஷ்டித்துக் காட்டி வருவதுமேயாகும். இந்த இரண்டு தத்துவங்களும் இந்து மதத்திலும் காணப்பட்டாலும் இந்து மதமானது இஸ்லாம் மதத்தைப் போல் அவ்வளவு அதிகமாக அவற்றை அனுஷ்டானத்தில் கொண்டு வரவில்லை".

"உண்ணாவிரதம், தானம், ஜபம் ஆகியவற்றைவிட உயர்ந்த காரியமொன்று கூறட்டுமா? ஒருவரோடிருவர் சமாதானமாயிருத்தலே. பகைமையும் துவேஷமும் நன்மையை வேரோடு சாய்த்து விடும்".

"உண்மையான சாந்தமே சர்வ புண்ணியங்களுக்கும் பிறப்பிடமாயுள்ளது. அடியார்களே! சகோதரர்களாயிருங்கள். மூன்று இரவுகளுக்கு மேலாகப் பகைமையைக் காப்பது முஸ்லிமுக்கு ஏற்றதன்று".

6. கிறிஸ்தவ மதத்தின் முக்கியத்துவத்தைக் கூறுக. (April-2012)

## கிறிஸ்தவ மதத்தின் முக்கியத்துவம் (Importance of Christianity)

### தத்துவம்

ஒவ்வொருவரும் தாய் தந்தையரை மதித்துப் போற்றுதல் வேண்டும். எந்த உயிர்களையும் கொல்லக்கூடாது. பிறருடைய பொருள்களுக்கு ஆசைப்படுதல் கூடாது. நம்மைப் போன்றே பிறரையும் நேசித்தல் வேண்டும் என்பன போன்ற பல்வேறு வாழ்க்கை மதிப்புத் தத்துவங்களை கிறிஸ்தவ மதம் எடுத்துரைக்கின்றது.

அறம், அன்பு, அறிவு, மன்னித்தல், பணிவுடைமை, ஈகை, பரிவுடைமை, இன்பம் போன்ற நற்குணங்களை கிறிஸ்தவ மதம் மனித வாழ்க்கைக்கு நற்பண்புகளை எடுத்துரைக்கின்றது.

### அறம்

1. அறத்துக்காகத் துன்புற நேர்ந்தால் நீங்கள் இன்ப வாழ்வு பெற்றவரே.
2. பரஸ்பரம் பளுவைத் தாங்கி உதவி செய்து கொள்ளுங்கள். இதுதான் கட்டளையை நிறைவேற்றுவதாகும்.
3. நேரான வாயில் வழிப்புகுக. அழிவுக்குச் செல்லும் வழியும் அகலமானது. வாயிலும் அகலமானது. அதன் வழிச் செல்வோர் பலராவர். அறத்துக்குச் செல்லும் வழி நேரானது, குறுகியது. அதில் செல்வோர் சிலரே.

அன்பு

1. கண்ணால் காணும் சகோதரனை நேசியாதவன் கண்ணால் காணாத கடவுளை நேசிப்பது எங்ஙனம்? கடவுளை நேசிப்பவன் சகோதரனையும் நேசிக்கக் கடவன் என்பதும் கடவுள் கட்டளை.

2. அன்பு செய்வதை நிறுத்தாதே. அயலாராயினும் விருந்தோம்ப மறக்காதே. தேவதூதர்களைக் கூட இவ்வாறு அறியாமலே உபசரிக்கக் கூடும்.

3. உங்களிடையே அன்பு நிலவட்டும். அன்பு செய்தல் அநேக பாவங்களுக்குப் பரிகாரமாய் விடும்.

4. நான் என் செல்வம் முழுவதையும் கொண்டு ஏழைகளுக்கு அன்னமிட்டாலும், அவர்களுக்காக என் உடலையே அர்ப்பணித்தாலும், அன்பில்லையானால் யாதொரு பயனும் உண்டாகாது.

5. அறங்கள் அனைத்திலும் அன்பே உயர்ந்தது.

6. உலகம் தோன்றிய நாள் முதல் நாம் கேட்டு வரும் உபதேசம் இது! பரஸ்பரம் அன்பு செய்யுங்கள் என்பதே.

7. கடவுளை நேசிப்பவன் சகோதரனையும் நேசிப்பான் என்று கடவுளே அருளியிருக்கிறார்.

8. நான் சுதந்திரம் உடையேன் ஆயினும் அனைவர்க்கும் ஊழியனாக இருந்து வருகிறேன்.

9. எந்த மனிதனையும் இழிந்தவன் என்று கூறலாகாது என்று எனக்குக் கடவுள் காட்டியுள்ளார்.

10. சகோதரரிடம் அன்பு செய்வதால் நாம் மரணத்திலிருந்து வாழ்வுக்குச் சென்று விட்டோம்.

அறிவு

உங்களில் அறிவுடையோர் எவர்? அறிவோடு சேர்ந்து அன்பைக் கொண்டு அறச் செயல்கள் செய்து அறிவுடையோர் என்று காட்டட்டும்.

மன்னித்தல்

சகோதரன் தீமை செய்தால் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும், ஏழு தரமா? எழு நூறு ஏழு தரம் மன்னிப்பாய்.

பணிவுடைமை

எவன் சிறு குழந்தைபோல் பணிவுடையவனோ அவனே தேவலோகத்தில் பெரியவனாக மதிக்கப்படுவான்.

ஈகை

எவ்வளவு கொடுக்க எண்ணினாலும் அதை மனமுவந்து ஈந்தால் போதும். மனமுவந்து ஈவோரே கடவுளுக்கு உகந்தவர்.

பணிவுடைமை

எல்லோரும் பணிவுடையவராயிருங்கள். கடவுள் செருக்குடையோரை விரும்புவதில்லை. பணிவுடையோர்க்கே அருள் செய்வர்.

இன்பம்

பொறுமையோடு உள்ளவரே இன்பமாக வாழ்பவர் என்று கூறுவோம்.

## 7. புத்த மதத்தின் 'பரிவு' பற்றி விளக்குக.

### பரிவு (Compassion)

பரிவு என்பது ஆழமான, உணர்த்த முடியாத, மௌன மென் உணர்வாகும். அது தன்னலம் மறுத்த மேன்மைப் பண்பில் பொதிந்திருக்கிறது. பரிவுள்ள மக்கள் உரக்கப் பேசிக் கொண்டு அலைய மாட்டார்கள். அவர்கள் எப்பொழுதும் அடக்கத்துடன், அமைதியாய், உறுதியாய் பெருந்தன்மையுடன் இருப்பார்கள். அவர்களின் அமைதியைப் பார்த்து அறிவற்றவர்கள் அவர்களைப் பரிவற்றவர்கள் என்று கருதிக் கொள்வர்.

பரிவு என்னும் சொல்லின் உண்மையான பொருள் பிறர் துன்பங்களுடன், துயரங்களுடன் ஒன்றாகி விடுவது என்பதாகும். பரிவுள்ளவர்கள் பெருமையடித்துக் கொள்ளவும் மாட்டார்கள். எங்கு தற்புகழ்ச்சி நுழைகின்றதோ அங்கிருந்து பரிவு வெளியேறி விடும். பரிவுள்ள ஆணோ, பெண்ணோ பிறர்படும் துன்பத்தைத் தாமே படுவதாய் உணர்வர். அவர் வேதனையை களையத் தம்மால் இயன்றதைச் செய்ய முயலுவர்.

இடர்ப்பட்டபின் எஞ்சிய அது விட்டுச் செல்லும் அறிவைத்தான் 'பட்டறிவு' என்கிறோம். அதுதான் பிறரின் துன்பங்களைத் தெரிந்து கொள்ளச் செய்கிறது. அவற்றை அகற்ற தன்னால் இயன்றதைச் செய்ய ஒருவனைத் தூண்டுகிறது. ஒரு தாய் துன்புறும் தன் குழந்தையின் வேதனையை எப்படியும் உணர்ந்து கொள்வது போல் பரிவு உள்ளவன் துன்பப்படும் மக்களின் வேதனையைத் தெரிந்து கொள்வான்.

### புத்த மதத்தின் 'பரிவு' (Compassion in Buddhism) :

1. இனியவை கூறல், நல்லன ஈதல், உதவி செய்தல், நடுநிலை நிற்றல் இவற்றால் தான் உலகம் உள்ளதாகும்.

2. கொடுக்கக் கடினமானதைக் கொடுத்தல், செய்யக் கடினமானதைச் செய்தல், பொறுக்கக் கடினமானதைப் பொறுத்தல் - இம்மூன்றும் உடையவனே நண்பன்.
3. எவன் பிறர்க்கு ஈகின்றானோ அவனே தன்னுடைய செல்வத்தைப் பாதுகாப்பவன்.
4. புத்தர் மனித ஜாதிக்குச் செய்த சேவை கடவுளை அவருடைய பதவியில் வீற்றிருக்க வைத்ததேயாகும். ஆனால் அதனினும் பெரியதாக அவர் செய்த சேவை எத்துணைத் தாழ்ந்த உயிரையும் மதிக்கும்படியாக வற்புறுத்தியதேயாகும்.

8. புத்தமதத்தின் எண் வகை மார்க்கங்களை விவரிக்க.
**(April-2013)**

## புத்த சமயத்தின் தத்துவம் (Principles of Buddhism) :

வேத சமயம் ஆனந்த தத்துவத்தின் அடிப்படையில் எழுந்தது. ஆனால் புத்தமதம் துக்கத்தின் அடிப்படையிலானது ஆகும். புத்தரின் போதனைகள் நான்கு பெரும் உண்மைகளிலும் எண்வகை நன்னெறிகளிலும் மூன்று வகை நடைமுறைகளிலும் அடங்கும். நான்கு பெரும் உண்மைகள் என்பவை.

1. வாழ்க்கை துன்பமயமானது.
2. ஆசையே துன்பங்களுக்குக் காரணம்
3. ஆசையை நீக்கினால் துன்பங்கள் ஒழியும்.
4. ஆசையை நீக்கிட எண்வகை நன்னெறிகளைப் பின் பற்றிட வேண்டும்.

அவையாவன

1. நன்னம்பிக்கை
2. நல்லெண்ணம்
3. நற்பேச்சு
4. நன்னடத்தை
5. நற்சிந்தனை
6. நல்வாழ்க்கை முறை
7. நல்முயற்சி
8. நற்தியானம்

மேற்கூறிய எண்வகை நன்னெறிகளைப் பின்பற்றினால் எவரும் நிர்வாண நிலையினை (வீடுபேற்றை) அடையலாம். இவை தவிர மூவகை நடைமுறைகளும் போதிக்கப்பட்டன. அவை.

1. சீலா நன்னெறி விதிகளை பின்பற்றுதல்
2. சித்தா தியான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.
3. பிரஜ்னா நான்கு வகை பெரும் உண்மைகள் பற்றிய அறிவு பெறுதல்.

9. சமண சமயத்தின் சிறப்பான மதிப்புகள் யாவை?
**(April-2011)**

அல்லது

சமண சமயத்தில் "அஹிம்சை" பற்றி கூறுக.
(மாதிரி வினாத்தாள், **MKU)**

சமண சமயம் **(Jainism)**

*முக்கிய தத்துவ கோட்பாடுகள்*

1. பிரமாண்டத்தை இரு பகுதிகளாகக் காணலாம்.

1. ஜுவன், 2. அஜுவன்,

ஜுவன் என்பது 'ஆன்மா' என்று ஒப்பிடலாம், ஜுவன்களுடைய எண்ணிக்கை கணக்கிலடங்காதவை. அவையாவும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகவும் ஆனால் நிரந்தரமாகவும் இருப்பவை. ஜுவன்கள் செயல் புரிகின்றன. செயல் படுத்தப்படுகின்றன, அவைகளை விரிவாக்கவும் சுருக்கவும் முடியும் ஒரு கைவிளக்கு எவ்வாறு இருந்த இடத்திலிருந்து சிறிய அல்லது பெரிய அறைக்கு ஒளிக்கதிரை வீசுகிறதோ அஃதே போல ஜுவன்களும் செயல்படுகின்றன. அஜுவனை காலம், ஆகாசம், தர்மம், அதர்மம், சடம் என்று பிரித்துக்காணலாம்.

2. மெய்யானது அநேகத்தன்மை உடையது. அது உண்மையாகவும் பன்மையாகவும் இயங்குகிறது. 'சடம்' (புட்கலம்)

என்பதும் 'ஜுவன்' (ஆன்மா) ஒருவனுக்கு ஒரு பொருளின் சகல குணங்களும் தெரிகின்றனவோ அவனுக்கு எல்லாப் பொருளின் எல்லா குணங்களும் தெரிகின்றன. அஃதே எவனுக்கு எல்லாப் பொருள்களின் எல்லா குணங்களும் தெரிந்திருந்தால் அவனுக்கு ஒரு பொருளில் எல்லா குணங்களும் தெரிந்திருக்கும்.

3. அறிவு உண்மையியலில் சமணங்கள் அறிவின் சார்புத் தன்மையைக் கண்டுகொள்கிறார்கள். இதற்கு ஸ்யாத்வாதம் என்று பெயர். 'ஸ்யாத்' என்பதற்கு 'இருக்கலாம்' என்று பொருள் கூறலாம். அண்டத்தை பலவித கோணங்களிலிருந்து பார்க்கலாம். ஆகையால் முழுமையான ஒப்புதலும் முழுமையான எதிர்மறையும் தவறான கருத்தாகும். ஜைனர்கள் இதை குருடர்கள் யானையைப் பார்த்து அதன் உருவத்தை வெவ்வேறு மாதிரி கண்டார்களோ அதே மாதிரி ஒவ்வொருவரும் ஒருசில பகுதிகளைத்தான் பார்க்க முடியும். பல்வேறுத் தன்மையுள்ள உண்மையின் வெவ்வேறுப் பகுதிகளைப் பார்த்துத்தான் நாம் தீர்மானித்தலைச் செய்கிறோம்.

4. மெய்தத்துவம் ஒற்றுமையில் வேற்றுமையையும், வேற்றுமையில் ஒற்றுமையையும் காண்கிறது. பிராம்மணமதம் நிரந்தரமான ஒன்றின் தன்மையை வலியுறுத்துகிறது. புத்தமதம் மாறுதல்களுக்குட்பட்ட பலவற்றை ஆமோதிக்கிறது. சமண மதம் இவை இரண்டு வாதங்களும் ஒரே பொருளின் இருபக்கங்கள் போன்றவை மாறுதலுக்குட்படாத நிரந்தரமானது. மற்றொரு பக்கம் மாறுகின்ற, அழிகின்ற தன்மை உடையது. ஒவ்வொரு அறைகுறை நோக்கலும் ஏற்கப்பட வேண்டியவை தாம், இதைத்தான் 'அநேகாந்தவாதம்' என்று கூறுகிறார்கள்.

5. சமணர்கள் கட்டுப்பாட்டு விதிகளைப் தீவிரமாகக் கொள்ளுகின்றனர். அவர்களுடையே ஐந்து விரதங்களைக் காணுகிறோம். துறவிகளுக்கு அவையாவன.

1. அஹிம்சை
2. உண்மை
3. தியானம்
4. பிரம்மச்சரியம்
5. உலகினைத்துறத்தல், பாமர மக்களுக்கு கடையிரண்டும்
6. தூய்மை
7. திருப்தி என்று மாறுபடும்.

6. தனிமனிதனின் முழுவளர்ச்சிதான் சமணமத்தின் குறிக்கோள் ஆகும். அது சமூகப்பணியை மறக்கவில்லை.

7. சமணமதம் ஈசுவரனில்லாத சமயம், அவர்கள் நாத்திகர்கள் ஆனால் அறவழியிலும் ஆன்மீக வழியிலும் தீவிர ஈடுபாடு உடையவர்கள். கடவுளின் தன்மையை அவர்கள் மறுக்கவில்லை. ஒவ்வொரு விடுதலை பெற்ற ஆன்மாவும் கடவுளே, சுயதேவை தான் சமணர்களின் சமயம் ஆகும்.

8. மனிதனுக்கு பரிபூரண சமய சுதந்திரத்தை சமணமதம் அளிக்கிறது. செய்யும் செயலுக்கும் அதன் பயனுக்கும் இடையே ஒன்றும் செயல்படாது.

## அஹிம்சை (Ahimsa)

ஜைனர்கள் கொண்டாடும் அறங்களில் தலையாய அறம் அஹிம்சை. வேறு எந்த மதத்தினரும் முற்காலத்தில் அஹிம்சையைத் தலையாய அறமாகக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. வேத வேள்வியை ஆதரிக்காத காரணத்திற்காகத்தான், ஜைனர்களைத் திருஞான சம்பந்த சுவாமிகள், தமது தேவாரத்தில் வன்மையாகக் கண்டித்து இருக்கிறார்கள் :

"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி, அமணோடு தேரரை
வாதில் வென்று அழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே"

என்று, ஜைனர்களையும் பௌத்தர்களையும் கடிந்து பாடி இருக்கிறார்கள். அவர்களை வாதில் வென்று அழிக்க விரும்பி இருக்கிறார்கள்.

வேள்வியில் ஆடு, குதிரை போன்றவற்றைப் பலியிடுவது வழக்கமாதலால், ஜைனர்களின் அஹிம்சைக் கோட்பாடு, வைதீக சமய மரபுக்கு மாறுபட்டது என்பது தெரிகிறது.

ஆகவே, அஹிம்சைக் கோட்பாடு என்பது ஜைனர்களிடமிருந்து, இந்துக்கள் பிற்காலத்தில் ஏற்றுக் கொண்ட ஒரு கோட்பாடு என்று கூறலாம்.

நாளாக, நாளாக, வைதீக மதத்தின் காப்பாளர்களான அந்தணர்கள், அஹிம்சையை விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். வேள்வி செய்வதில் விலங்குகளைப் பலியிடுவதற்குப் பதிலாக, தானியங்கள் முதலியவற்றை அக்கினியில் பலியிட்டு, பிற்காலத்தில் வேள்விகள் இயற்றி இருக்கிறார்கள். அதன்பின்னர், அரசர்களின் ஆதரவு இல்லாதபடியால், வேள்விகள் செய்வது நாளடைவில் குறைந்து போயிற்று. இப்பொழுது, வேள்விகள் செய்வதை அந்தணர்கள் அடியோடு விட்டு விட்டார்கள். அதனால் அஹிம்சைக் கோட்பாடு, ஜைன சமயத்தின் மூலம் இந்து சமயத்தார் ஏற்றுக் கொண்ட ஒரு கோட்பாடு என்று சொன்னால், அது மிகையாகாது.

## சமண சமயமும் அஹிம்சையும் (Ahimsa in Jainism)

கொல்லாமை அறத்தை முழுமையாக வற்புறுத்தும் சமயம் சமண சமயமாகும். 2,600 ஆண்டுகளுக்கு முன்பு மகாவீரர் சமண சமயத்தை நிறுவினார். தன்னைத்தானே வென்று உயர்ந்ததால் அவர் மகாவீரர் என அழைக்கப்பட்டார். பிறரைக் கொள்வதோ அல்லது ஆயுதமேந்துவதோ வீரம் அல்ல என்பதும் இதனால் பெறப்படுகிறது.

அனைத்து உயிர்களையும் இயற்கையையும் நேசிக்க வேண்டும் என மகாவீரர் உபதேசித்தார். "கடல்கள் மீன்களுக்குரியது. அதில் மானிடர் பயணம் செய்ய வேண்டியதில்லை" என்ற கண்ணோட்டம் இன்றைக்குத் தான் நமக்கு புரியத் தொடங்குகிறது. பேராசை, வரம்பற்ற நுகர்வு, ஆதிக்கம், சுரண்டல் ஆகியவற்றை சமணம் நிராகரிக்கிறது. எளிய வாழ்வு, சுயக்கட்டுப்பாடு, தியாகம் முதலியவையே அங்கு முக்கிய இடம் பெறுகின்றன. நீர், நிலம், காற்று, வானம் அனைத்து உயிர்கள் ஆகிய அனைத்தையும் சமணம் புனிதமாகப் போற்றி, அவற்றுடன் நல்லுறவு கொள்ள முற்படுகிறது.

2600 ஆண்டுகளாக தொடர்ந்து கொல்லாமை நெறியில் சென்றுள்ள ஒரே சமயம் சமண சமயமே ஆகும். கொல்லாமைக்கு மாறுபாடான சிந்தனைகளுக்கு அங்கு இடமில்லை.

"தனது வழியே ஒரே வழி தானே ஏக உண்மைக்கான அதிபதி" எனச் சமணம் கூறவில்லை. மாறாக அனைத்து நெறிகளிலும் உண்மையை இனங்கண்டு கொள்ள சமணம் முற்படுகிறது. பூரண உண்மைக்கான தேடலும் தொடர்கிறது. மகாவீரரின் அனேகாந்தவாதக் கோட்பாடு சமய மோதல்களிலிருந்து உலகை மீட்கும் மானிடத்தை உயர்த்தும் அற்புத நெறியாகும்.

மானிடர் முயன்று தமது குறைகளை வெற்றி கொண்டு அஹிம்சை நெறியில் தனி நபரும் சமூகமும் முன்னேறலாம் என்பதைச் சமணம் வற்புறுத்துகிறது.

**10.சீக்கிய மதத்தில் 'தைரியம்' என்பதன் முக்கியத்துவத்தை விவரி. (மாதிரி வினாத்தாள் MKU)**

**தைரியம் (Courage) :**

சாதனை அனைத்தும் ஆற்றபட உதவுவது வலிமைதான். அதுதான் சாதாரணத் திறமையையும் ஊக்குவித்து உயிர்ப்பித்து மேதையாக மாற்றி விடுகிறது. அதுதான் மூடனின் மனத்தைத் தொட்டு மூண்டெரியும் நெருப்பாக ஆக்கி விடுகிறது. அதுதான் உள்ளத்தில் உறங்கிக் கிடந்த நெருப்பையெல்லாம் கொழுந்துவிடச் செய்கிறது. தைரியத்தை ஓர் ஒழுக்கம் எனவும் கூறலாம். சோம்பல் உள்ளவன் கூட உழைப்பதற்காக உந்தி எழுவதன் மூலம் வலிமையை உண்டுபண்ணிக் கொள்ளலாம்.

முக்கிய ஆற்றல்களுள் ஒன்றாய் வலிமையைக் குறிப்பிடலாம். வலிமையில்லாமல் எதனையும் சாதிக்கவே இயலாது. அதுதான் செயல்கள் அனைத்திற்கும் அடிப்படை அம்சமாகும். உண்மையில் வலிமையே உயிர் ஆகும். அது இல்லாவிட்டால் ஞாலமும் இல்லை, உயிர்களுமில்லை. ஒருவன் செயல்புரிவதை முற்றிலும் நிறுத்தி விட்டால் அவன் உடல், உழைப்பின்றிக் கிடக்கிறது. அவனுடைய எல்லா இயக்கங்களும் நின்று விடுகின்றன.

வலிமையைத் தவறாய்ப பயன்படுத்துவதற்குப் பதிலாக வலிமையே இல்லாதிருந்து விடுவது மேலாகும். புனித ஜான் இதனைத்தான் குறிப்பிடுகிறார் இவ்வாறு : "நான் உன்னை வெப்பமாக்குவேன் அல்லது குளிர்ச்சியாக்குவேன்.

இளஞ்சூடாயிருந்தாலோ உன்னை நான் என் வாயிலிருந்தும் வாந்தி எடுத்து விடுவேன்". இளஞ்சூட்டு நிலை வனப்பற்றது: உயிர் அற்றது: பயனற்றது ஆகும். அது நன்மையுமில்லை, தீமையுமில்லை.

வலிமைதான் சுபிட்சக் கோயிலின் முதல் தூணாகும். அதுவே முதல் முக்கியத் தேவையுமாகும். வேலையின்றிப் பலர் அலைவதற்குக் காரணம் அவர்களிடம் இந்த வலிமை இல்லாதிப்பதுதான். வுலிமை என்பது பலவும் சேர்ந்த ஒரு கூட்டாற்றல் ஆகும். ஒழுக்கத்தையும் சுபிட்சத்தையும் உண்டு பண்ணும் குணங்கள் அதில் சேர்ந்திருக்கின்றன. அந்தக் குணங்கள் பின்வரும் நான்கு தன்மைகளிலும் அடங்கியிருக்கின்றன.

1. ஊக்கம்,
2. எச்சரிக்கை,
3. உழைப்பு,
4. தீவிரம்.

வலிமைத் தூண் இந்நான்கு பொருள்களாலும் தான் அமைந்திருக்கிறது. இந்தப் பொருள்கள் நான்கும் உரம் வாய்ந்தவை. நீடித்து உழைக்கும் தன்மையுடையவை. அவை தூணுக்கு மிகப் பெரும் புயலையும் சமாளிக்கும் உறுதியும் வழங்குகின்றன. ஊக்கத்தை ஓர் உயரிய உடைமை என்று கூறலாம். அது நம்பிக்கையை வழங்குகிறது. சுறுசுறுப்பும், ஊக்கமும் உள்ளவர்களை, குறித்த காலத்தில், எந்தச் செயலையும் செய்து முடிக்கும் திறன் பெற்ற மக்களை நம்பலாம். அவர்கள் தம் கடமையைச் செய்து முடிக்காது எழ மாட்டார்கள்.

எச்சரிக்கை, எல்லாத் திறன்களுக்கும் ஒரு காவலாகும். எச்சரிக்கையானது அழிவு பண்ணக்கூடிய எதுவும் உள்ளே நுழைந்து விடாமல் தடுத்து நிறுத்துகிறது. அதுவே, வெற்றிக்கும், விடுதலைக்கும், அறிவிற்கும் நெருங்கிய நண்பனும் பாதுகாவலனுமாகும். எச்சரிக்கை இன்மை அறிவின்மையைத் தான்

காட்டும் உழைப்பு, உற்சாகத்தையும், வளத்தையும் உண்டு பண்ணுகிறது. ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் உழைக்கும் மக்களே சமுதாயத்திலுள்ள மிகவும் மகிழ்ச்சியுள்ள மக்களாவர்.

உழைப்பு உடல் நலத்தைக்கூட விருத்தி செய்கிறது. உழைப்பு உடலுக்கு வலுவூட்டும் மருந்தைப் போல் உதவுகிறது. ஒவ்வொரு நாள் வேலையும் அவர்களால் ஒளி பெறுகிறது. உலகம் அவர்களால் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவர்களே சமூகத்தின் பொன் போன்றவராவார். தீவிரம் என்பது ஒரு செயலில் மனம் முழுவதையும் ஈடுபடுத்துவதாகும். தீவிர ஊக்கமுள்ள மக்களுக்குப் பல்வேறு பதவிகள் காத்துக் கொண்டே இருக்கும். அவர்கள் அமைதியுள்ளவர்கள், மனச் சான்றுள்ளவர்கள், நன்கு உழைப்பவர்கள். அவர்கள் எடுத்த வேலை எதனையும் சிறப்பாகச் செய்து முடிப்பார்கள். தீவிரத் தன்மையுள்ள மக்கள் தாங்கள் வேலையில், வாழ்வில் விரைவாய் முன்னேறி விடுகிறார்கள். இவ்விதம் உறுதியாக வலிமைத் தூணை நிறுத்துபவனே வாழ்வில் ஆடாது, அசையாது நீடித்து நிற்கக்கூடிய ஆதாரத்தைப் பெறுவான்.

## சீக்கிய மதத்தில் 'தைரியம்' (Courage in Sikhism)

### அச்சம் / தைரியம்

1. இதயத்தில் தூய்மை உடையவனிடம் எவ்வளவு அச்சமும் நிற்கமாட்டாது. கடவுள் நாமத்தில் நம்பிக்கையுடையவனே அச்சமில்லாதவன்.
2. அச்சமற்ற கடவுளைத் தியானிப்பவரிடமிருந்து அச்சம் அனைத்தும் அகன்று விடும்.
3. அச்சமுள்ள இடத்தில் ஆண்டவன் இருக்க மாட்டான். ஆண்டவன் உள்ள இடத்தில் அச்சம் உண்டாகாது.

11. சீக்கிய மதத்தின் முக்கியத்துவத்தைக் கூறுக. (April-2012)

அல்லது

ஒரு சீக்கியனின் கடமைகள் யாவை? (April-2011)

## சீக்கிய மதம் (Sikhism)

"சீக்கியன்" என்பதற்கு மாணவன் அல்லது சீடன் என்பது பொருளாகும். எங்கும் இறைவன் வியாபித்திருப்பதால் நாம் அனைவரும் சமம். அன்பும் உதவியும் அடிப்படைப் பண்புகளாக இருக்க வேண்டும் என்றும், எப்பொழுதும் கடவுளின் திருநாமத்தை ஜெபிக்க வேண்டும் என்று குருநானக் போதித்தார். சாதிப் பிரிவினைகளையும் சடங்குகளையும் கடுமையாக எதிர்த்தார். குருநானக் தனது சீடர்களுக்கு மூன்று போதனைகளைப் போதித்தார்.

1. கடவுளின் திருநாமங்களைத் தொடர்ந்து ஜெபித்தல்.
2. கடவுள் புகழைப் பாடுதல்.
3. நம்மிடம் உள்ளதை அண்டையில் உள்ளவர்களோடு பகிர்ந்து உண்ண வேண்டும்.

## சீக்கிய சமயமும் அஹிம்சையும்

யாரும் முஸ்லீம் அல்ல யாரும் இந்துவும் அல்ல. அனைவரும் மானிடரே என சீக்கிய சமயத்தைத் தோற்றுவித்த குருநானக் கூறினார். குருட்டு நம்பிக்கை, சாதிப் பிரிவினை, பொருளற்ற சடங்குகள் ஆகியவற்றை அவர் எதிர்த்தார். ஒவ்வொருவரும் உழைத்துப் பாடுபட்டு பொருள் தேட வேண்டும். அவ்வாறு தேடியதைப் பிறருடன் பகிர்ந்து உண்ண வேண்டும் என்பது சீக்கிய சமயத்தின் அடிப்படைக் கொள்கையாகும். சீக்கியர்களின் கோவிலான குருத்துவாரா

ஏழைகளுக்கு உணவளிக்கும் அறக்கோட்டமாக திகழ்கிறது. பல சோதனைகளுக்கு ஆளான சீக்கியர்களுள் சிலர் அடிப்படைவாதிகளாக மாறலாயினர். எல்லோரையும் சத்திரியராக மாறும்படி பத்தாவது குருவான குருகோவிந்த் சிங் அழைக்கிறார்.

## சீக்கிய மதத்தின் முக்கியத்துவம் (Importance of Sikhism)

சீக்கிய மதம் கடவுள், கடவுள் நாமம், கடவுள் தரிசனம், வழிபாடு, துறவு, தூய்மை, பக்தி, அறம், அன்பு, உண்மை, அறிவு, செல்வம், ஈகை, செருக்கு, ஆசை, அச்சம், இன்பம், பிறர்க்கு தீமை செய்யாதிருத்தல் போன்ற வாழ்க்கைக்குத் தேவையான பண்புகளைக் கூறுகிறது. ஒவ்வொரு சீக்கியனும் இம்மதிப்புக்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

### கடவுள்

1. இதயத்தில் தூய்மை செய்து கொண்டால் என்னைக் காண்பாய். என்னைக் கண்டால் இன்பம் பெறுவாய் என்று இறைவன் அருள்கின்றான்.
2. வண்டு தாமரை இல்லாமல் வாழாது. அதுபோல் நாம் கடவுளின்றி வாழ முடியாது.
3. கடவுளை மறந்தவன் உயிருள்ள போதே இறந்தவன்.
4. கடவுளை இதயத்தில் கொண்டவர்களே அறிவும் பொருளும் பெறுவர்.

### கடவுள் நாமம்

1. கடவுள் நாமமே அச்சக் கடலைக் கடக்கும் தோணி, இருளையோட்டும் சூரியன், துன்பத்தை மறக்கச் செய்யம் நகை.
2. கடவுள் நாமத்தைக் கேட்டால் உண்மை, திருப்தி, அறிவு மூன்றும் உள்ளத்தில் உதயமாகும்.

## கடவுள் தரிசனம்

1. கடவுளிடம் பக்தி செய்ய வேண்டும் என்று ஆசை கொள். அந்த பக்தியை அன்பிருந்தால் பெற முடியும். அறிவாலும், ஆராய்ச்சியாலும் பெற முடியாது.
2. உலகத்தை நேசிப்பதை விட்டவரே கடவுளுக்குப் பணி செய்ய முடியும்.
3. கடவுள் இதயத்தில் இருக்கும்போது காட்டில் போய் தேடுவது ஏன்?

## வழிபாடு

1. வீட்டிலேயே, குடும்பத்திலேயே இருந்து கொண்டே கடவுளிடத்தில் ஆழ்ந்து போக முடியும்.
2. அன்பு செய்வதே வழிபாடு. ஆசையை எரிப்பதே ஆராதனை.

## துறவு

1. துறக்க வேண்டியவை அழுக்காறு, அவா, வெகுளி மூன்றுமாகும்.
2. அழுக்காறு உடையவன் ஒரு நாளும் நலம் அடையான்.

## தூய்மை

1. இதய மாசு ஆசை, நாவின் மாசு பொய், கண்ணின் மாசு வெ.ஃ.குதல், காதின் மாசு குறளைக் கேட்டல், கடவுளை அறியும் பக்தரிடம் மாசு எதுவும் கிடையாது.
2. நண்பனே! மனத்தால் கடவுளை வழிபடு, உன் மனம் தூய்மை பெறும்.

## பக்தி

உலக ஆசை உள்ளவரையில் உத்தமனிடம் பக்தி உண்டாகமாட்டாது.

**அறம்**

1. கடவுள் ஒருவனை அழிக்க விரும்பினால் முதற்கண் அவனை அறத்தை இழக்குமாறு செய்கிறார்.
2. சிரித்தே உண், சிரித்தே உறங்கு, பொறுமையையும் கருணையையும் பூண்டு கொள்.

**அன்பு**

1. அன்பில்லாத உடலைச் சுடுகாடு என்றே கொள்க.
2. அன்புதான் தலைசிறந்த கொடை. அதுவே உயிரைக் காப்பதாகும்.
3. மக்களுக்குச் சேவை செய்வதே கடவுளுக்குச் சேவை செய்வதாகும். சேவை மூலம் தான் அன்பு பயன் தரும்.

**உண்மை**

உண்மை என்னும் அரசன் அமைதியாய் உறங்குவான். பொய் என்னும் திருடன் வெளியில் அலைவான். அரசன் விழித்து அவனைப் பிடித்து தண்டிப்பான்.

**அறிவு**

அறிவைத் தாயாகவும் திருப்தியைத் தந்தையாகவும் உண்மையை உடன்பிறந்தானாகவும் கொள்க. அதுவே சிறந்தது.

**செல்வம்**

1. உன்னுடைய செல்வம் உன்னுடன் வராது. அங்ஙனமிருக்க அதில் ஆழ்வானேன்?
2. செல்வம் எல்லாம் அவன் தருவதே. அங்ஙனமிருக்க செல்வம் பெற்றதாக செருக்கு அடைவதேன்?
3. உண்மையான செல்வத்தைப் பெறுபவர் உள்ளத்தில் இறைவனிடம் அன்புடையவரே.

ஈகை

கேளாமலிருக்கும் போதே கொடுப்பவனுடைய பெருமையே பெருமையாகும்.

செருக்கு

1. செருக்கு உடையவன் பக்தி செய்ய முடியாது.
2. கடவுளை அறிந்தவனே உயர்ந்தவன். ஆனால் அவன் தன்னைத் தாழ்த்திக் கொள்ளவே செய்வான்.
3. சாதிச் செருக்கை விட்டு விடத் துணிபவனே ஞானியாவான்.
4. இதயத்திலிருந்து செருக்கை நீக்கு, இறைவன் சன்னதி திறக்கும்.

ஆசை

1. இறைவனிடம் அன்பு செய், இதயம் தூய்மை அடைந்து விடும்.
2. ஆசையுள்ள இடத்தில் அன்பு இருக்க முடியுமா?
3. கடவுளிடம் பக்தி செய்தாலன்றி மனத்திலிருந்து ஆசையை அகற்ற முடியாது.

அச்சம்

இதயத்தில் தூய்மை உடையவனிடம் எள்ளளவு அச்சமும் நிற்க மாட்டாது. கடவுள் நாமத்தில் நம்பிக்கையுடையவனே அச்சமில்லாதவன்.

இன்பம்

1. இறைவனே இன்பத்தின் ஊற்று. உடல் அழியும், இறைவன் அழிய மாட்டான்.
2. கடவுளிடம் பக்தி இல்லாவிட்டால் இன்பம் உண்டாக மாட்டாது.

பிறர் தீமை செய்தால்

நன்மை செய்தால் நன்மை செய்வது உலக வழக்கம். ஆனால் தீமை செய்தால் நன்மை செய்வது உத்தமர் வழக்கம்.


12.அஹிம்சை என்றால் என்ன? காந்தியடிகளின் அஹிம்சை பற்றி எழுதுக. (April-2013)

## அஹிம்சை (Ahimsa)

அஹிம்சை என்ற கருத்து பன்னெடுங்காலமாக வளர்ந்து வந்துள்ளது. "மலைகளைவிட அஹிம்சை பழமையானது" என்கிறார் மகாத்மா காந்தி. "அன்பே மிகவும் பழமையான தெய்வம்" என்கிறார் பிளேட்டோ. இவை இரண்டின் பொருள்களும் ஒன்றே. அஹிம்சை, அன்பு இல்லாமல் உயிர், மானிடர் அரும்பியிருக்க முடியாது. தொடர்ந்திருக்க முடியாது. எனவே, மானிடரை விட அன்பு பழமையானதாகும்.

மகாத்மா காந்தி அஹிம்சைக் கொடியை உயர்த்திப் பிடித்தார். விரிவான, பன்முகமான பொருளினை அஹிம்சைக்காக அவர் தந்தார். மேலும் அவர் அஹிம்சையை மக்கள் இயக்கமாக ஆக்கினார். மகாத்மா காந்திக்குப் பின்னர் மார்ட்டின் லூதர் கிங், அன்னை தெரசா, டெஸ்மாண்ட் டுடு, மைரிட் கொரிகன், ஆங் சக் சுகி, தலாய்லாமா முதலானவர்களும் செஞ்சிலுவை சங்கம், அனைத்துலக மன்னிப்பு மன்றம் முதலான தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், ஐக்கிய நாடு சபை போன்ற சர்வதேச அரசு அமைப்புகளும், பல்வேறு அமைதி இயக்கங்களும், அமைதிக்கல்வி மற்றும் ஆராய்ச்சி மையங்களும் அஹிம்சையின் பொருளை மேலும் மேலும் விரிவாக்கியும் வளப்படுத்தியும் வருகின்றன.

அஹிம்சை என்பதை "வெறும் சைவ உணவுக் கோட்பாடு" அல்லது "செயலற்றுக் கோழைத்தனமாக முடங்கிக் கிடத்தல்" என்று குறுகிய அர்த்தங்களில் வழங்கும் போக்கு இன்றும் மிகுதியாக உள்ளது. அஹிம்சையின் ஏதாவது ஓர் அம்சத்தையே அஹிம்சை என பலர் கருதும் போக்கும் பரவலாக உள்ளது. அஹிம்சையின் விரிந்த, பன்முகப்பட்ட அர்த்தங்களை ஐந்து பரிணாமங்களாகப் பகுத்துக் காணலாம். பின்கண்ட படம் அதனை விளக்கும்.




அஹிம்சையின் இந்த ஐந்து பரிமாணங்களில் ஒவ்வொன்றிலும் பல்வேறு அம்சங்கள் இடம் பெறுகின்றன. இந்த ஐந்து பரிமாணங்கள் ஏன் என்பதை மட்டும் சுருக்கமாக விளக்குவோம்.

கொல்லாமை என்ற அடித்தளத்திலேயே அஹிம்சை அமைந்துள்ளது. ஆனால் 'கொல்லாமை' என்பது எதிர் நிலையாக அமைய 'அன்பு' என்பது உடன்பாட்டு நிலையாக அமைகிறது. கொல்லாமையும் அன்பும் அஹிம்சையின் இரு அடிப்படை ஆதார சுருதிகள். இவை இரண்டும் இணைந்து செயலாக மலர "அஹிம்சைச் செயல்" நிகழ்கிறது. "அஹிம்சை அறவியலும் மதிப்பீடுகளும்" அஹிம்சை செயலுக்கான களமாக, திசையாக

அமைகிறது. "அஹிம்சையும் உண்மையும்" பிரிக்க முடியாதவாறு ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போல அமைந்துள்ளன" என்கிறார் மகாத்மா காந்தி. "உண்மை" என்பதை விரித்து செல்லும் முழுமை அறிவு, ஞானம், விழிப்புணர்வு என விளக்கலாம். அப்படியாயின் விரியும் விழிப்புணர்வுக்கு, அறிவுக்கு ஏற்ப அஹிம்சையும், ஆழாகும் விரியும். எனவே, அஹிம்சையானது என்றும் வளரும், விரிவாகும் திறந்த நிலைக் கோட்பாடாகும்.

## மகாத்மா காந்தியின் அஹிம்சை அமுத மொழிகள்

மகாத்மா காந்தி அஹிம்சையை ஓர் ஒருங்கிணைந்த முழுமையான என்றும் வளரும் கோட்பாடாகும். நடைமுறையில் அதனை செயல் படுத்தியும் காட்டினார். வன்முறையால் பேரழிவுக்கு தள்ளப் படும் உலகிற்கு அஹிம்சை "இரட்சகராக" மகாத்மா காந்தியை அர்னால்டு டாயின்பீ என்னும் உலகப் புகழ்பெற்ற வரலாற்றறாசிரியர் போற்றுகிறார்.

1. அஹிம்சை என்பது உன்னதமான சக்தியாகும். மனிதனிடமுள்ள ஆன்மசக்தி அல்லது கடவுள் சக்தியே அது. மனிதன் பூரணன் அல்லன். அதனால் அதன் ஜோதி முழுவதையும் தாங்க முடியாது. ஆயினும் இதில் அணுவளவேனும் அவனுடைய இதயத்தில் குடி கொள்ளுமானால் அற்புதங்களைச் செய்யக் கூடியதாயிருக்கும்.
2. அஹிம்சையானது ரேடியம் என்னும் பொருளை ஒக்கும். உடம்பில் புற்று வளர்ந்துள்ள இடத்தில் ரேடியத்தை அணுவளவாக எடுத்து வைத்தாலும் போதும். அது ஆரோக்கியமாக்கி விடுகின்றது. அதுபோல் அஹிம்சை அணுவளவாக அனுஷ்டிக்கப் பட்டாலும் போதும், யாரும் காணாத முறையில் சமூகம் முழுவதையும் மாற்றியமைத்து விடும்.

3. அஹிம்சைப் போரின் முடிவில் பகைமையுணர்ச்சி எஞ்சி நிற்கலாகாது. பகைவர்கள் நண்பர்களாக ஆகிவிட வேண்டும். அதுதான் அஹிம்சை சரிவர அனுஷ்டிக்கப்பட்டதற்கு அடையாளம்.

4. அஹிம்சை ஒரு நாளும் பலத்தை இழக்கும்படி செய்து விடாது. அதுவே அவசியம் ஏற்பட்டால் அபாயம் நேரும் பொழுது கட்டுப்பாடாகவும் ஒன்று சேர்ந்தும் அஹிம்சையைக் கையாளக் கூடிய சக்தியையும் அளிக்கும்.

5. அஹிம்சையே மனித ஜாதி உபயோகிக்கக்கூடிய அதிகப் பொருந்திய ஆயுதமாகும். மனிதனுடைய சாமர்த்தியம் கண்டுபிடித்துள்ள அஹிம்சை ஆயதங்கள் எல்லாவற்றையும் விட அதிக வலிமையுடையதாகும்.

6. அஹிம்சை பயன்தர வேண்டுமானால் அதை ஆதரியாத இடத்திலேயே அனுஷ்டித்தல் வேண்டும். எதிர்ப்பின் அளவே பயன் ஏற்படும்.

7. அஹிம்சை என்பது தீமை செய்யாமை மட்டும் அன்று. தீமை செய்பவனுக்கு நன்மை செய்தலும் ஆகும்.

8. அஹிம்சை என்பது அருந்தவ முனிவர் மட்டும் அனுஷ்டிப்பதற்காக ஏற்பட்ட தர்மமன்று. சகல ஜனங்களும் அனுஷ்டிக்க வேண்டியதோர் தர்மமேயாகும்.

9. அஹிம்சை என்பதற்கு எந்த உயிர்ப் பிராணிக்கும் மனத்திலாயினும் தேகத்திலாயினும் யாதொரு துன்பமும் செய்யாதிருத்தல் என்பது பொருள்.

13. சமய ஒற்றுமை தேவை என்பதை விளக்குக.
அல்லது
மத நல்லிணக்கம் தேவை என்பதை விளக்குக.

## சமய ஒற்றுமை / மத நல்லிணக்கம் தேவை (Need for Religious Harmony)

மத நல்லிணக்கம் என்பது "மக்களின் அமைதியான வாழ்க்கைக்காக மக்களுக்கிடையேயுள்ள உறவை குறுகிய மனப்போக்கை விடுத்து பரந்த மனப்பான்மையுடன் உண்மையான ரீதியில் உணர்ந்துகொள்ளுதல்" என்று வரையறுக்கப் படுகிறது.

இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள் மற்றும் பார்சிகள் இந்தியாவின் முக்கிய மத சமூகத்தைச் சார்ந்தவர்களாகும். ஒரு குறிப்பிட்ட வகையான அமைப்பில் மதமானது உருவாக்கப்பட்டு பேணி வளர்க்கப்படுகிறது. அது சட்டப்பூர்வமான செயல்படுத்தலுக்கு உட்பட்டவற்றை ஒரு வகையான சமூக அமைப்பின் மூலம் கற்பிப்பதாகும். இது மக்களுக்கு ஒரு சமூகத்தில், கருத்துக் கணிப்பு ஆய்வு மற்றும் நற்பண்புகளின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட, சமூக அந்தஸ்து நிர்வகிப்பதிலுள்ள பங்கு ஆகியவற்றைப் பெறுவதற்கு வசதி செய்து தருவதாகும்.

தென்னிந்திய மக்களின் வாழ்க்கை எல்லா மதத்தவர்க்கும் எழுத்துப்பூர்வமாகவும் மனப்பூர்வமாகவும் மரியாதை கொடுத்து, சர்வ தர்ம சம்பவமாகிய உயர்ந்த இந்து கொள்கைக்குட்பட்டு வாழ்பவர்களாக விளங்குகின்றனர். தென்னிந்திய இந்துக்களும் முஸ்லீம்களும் பொதுவாக சமயப் பற்றுள்ளவர்களாகவும், மதக்

கோட்பாடுடையவர்களாகவும், அதே சமயம் வட இந்தியாவிலுள்ள தங்கள் சமயத்தைச் சார்ந்தவர்கள் மதவெறியர்களாக இருப்பதைப் போலல்லாமலும் ஒரு சீரிய வாழ்க்கை வாழ்கின்றனர்.

இந்துவும் முஸ்லீமும் உணவு மற்றும் உடை பழக்கங்கள், மொழி மற்றும் நாகரீகம் முதலியவற்றில் வினோதமான முறையில் ஒரே மாதிரியானவர்களாக இருந்தாலும், அவர்களுடைய மனப்பான்மையைப் பார்க்கும் போது, தேசிய அளவிலான பிரச்சனைகள் அவர்களைப் பாதிக்கும் போது, மிகவும் வலிமையாக எதிர்த்து தங்களுடைய மதங்களை மீண்டும் உயிர்ப்பிக்குமளவுக்கு அவர்கள் சமூக, மதவெறி அதிகம் உள்ளவர்களாவார்கள்.

இந்து மதம், மதம் மற்றும் தெய்வீக சம்பந்தப்பட்ட பரம்பரையாக அளிக்கப்படும், இந்திய மண்ணுக்கே உரிய ஒரு தொகுதியைக் குறிக்கிறது. வேதங்கள் அடிக்கடி பைபிளுக்கும், குரானுக்கும், சமமாகவும் இந்து மதத்தைத் தாங்கும் தூண்களாகவும் கருதப்படுகிறது. சீக்கியர்களும் சமணர்களும், பௌத்தர்களும் அவர்களுடைய மதத்தைத் தோற்றுவித்த பெரியவர்களின் வார்த்தைகளை மட்டுமே முதலாகவும் முடிவாகவும் ஏற்றுக் கொள்கின்றனர். இந்து மதத்திற்கு ஒரு குருவோ, ஒரு தனி நம்பிக்கையோ, எண்ணமோ மட்டும் இல்லை. ஆனால், அவர்களின் பிரதானக் கொள்கை இவற்றையெல்லாம் மையமாகக் கொண்டதாகும்.

இஸ்லாமும் கிறிஸ்தவமும் நன்கு வளர்ச்சியடைந்த, நாகரீகமான அமைப்புகளுடன் தொடர்புடையவைகளாக இருந்தன. அவர்கள் மற்றவர்களைப் பின்பற்றுதலைத் தவிர்ப்பவர்களாகவும் அவர்கள் மட்டுமே மீட்பு அடைவதற்கான வழியைப்

போதிப்பவர்களாகவும் செயல்பட்டனர். அது போன்றே யூத மற்றும் பார்சி மதத்தைச் சார்ந்தவர்களும் வெளிப்பார்வைக்குத் தோன்றுவர். ஆனால் அவர்களுக்கிடையே மோதிக் கொள்ளவோ மதம் மாறுபவர்களைச் சேர்த்துக் கொள்ளவோ மாட்டார்கள். இஸ்லாமியர்கள் மதம் மாறி வருபவர்கள் மிகவும் தாழ்த்தப்பட்ட வகுப்பினராக இருந்தாலும் அவர்களை மதிப்புடன் நடத்தினர்.

**மத நல்லிணக்கத்திற்கு நாம் செய்ய வேண்டியவை :**

1. நாம் பிற சமயங்களின் திருமறைகளையும், தீர்க்கதர்சிகளையும், ஞானிகளையும், நூல்களையும், சடங்குகளையும், விழாக்களையும் அறிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் முயற்சிக்க வேண்டும். பிற மதங்களை அறிவதால் நமது ஆணவம் குறைய வாய்ப்பு ஏற்படுகிறது.
2. வழிபாடு, தியானம், வாழ்க்கை முறை, சமூகச் செயல்பாடுகள் ஆகியவற்றை இளம் வயதிலேயே தொடங்க வேண்டும்.
3. ஒரே கடவுளைப் பல வழிகளில் அணுகலாம் என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.
4. அனைத்துச் சமயங்களும் காட்டும் அடிப்படை அறவழி நடக்க வேண்டும்.
5. வேற்றுமையில் ஒற்றுமை காண முயல வேண்டும்.
6. சமயப் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.
7. மத நல்லிணக்கத்தைப் பற்றிய விழிப்புணர்வை இந்தியக் குடிமக்களுக்கு ஊட்ட வேண்டும்.

எல்லா மதங்களும் ஒரே குறிக்கோளை அடைய மக்களை வழி நடத்துகின்றன என்று உணரும் போது மட்டும்தான் மனித நேயமிக்க ஒரு அழகிய சமுதாயம் உருவாக முடியும்.

அச்சமுதாயத்தில் மட்டுமே பக்தி, பாசம், அன்பு, இரக்கம், ஈகை, கருணை போன்ற அனைத்தும் காணப்படும். சமூக வன்முறைகளும், கிளர்ச்சிகளும், மனிதத் தன்மையற்ற செயல்கள் போன்ற தீய சக்திகளை நமது சமுதாயத்திலிருந்து முழுவதுமாக அகற்ற வேண்டும். அப்பொழுது தான் மத நல்லிணக்கம் ஏற்படும். மத ஒற்றுமை நிலவும் என்பதில் ஐயமில்லை.

## சமயமும் சமுதாயமும் (Religion and Society)

1. எல்லாச் சமூகங்களிலும் சமயக் கருத்துக்கள் எனக் கூறப்படுவன ஏதோ ஒரு வடிவத்தில் இருத்தலை ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுள்ளனர். சமய நிலையங்கள் சமூக நிலையங்களில் ஒரு வகை என்னும் அடிப்படையிலேதான் இவற்றைச் சமூகவியலறிஞர்கள் ஆராய்கின்றனர். சமயகருத்துக்கள் உண்மையானவையா அல்லது வெறுங்கற்பனையா என்பது பற்றிச் சமூகவியலறிஞர்களுக்கு அக்கறை கிடையாது.

2. இயற்கையைக் கடந்த சூழ்நிலையோடு மனிதன் பொருத்தப்பாட்டினைப் பெறச் சமயம் உதவுகிறது என்று சம்னர் என்பார் கருதுகிறார். பலவகைப்பட்ட வடிவங்களில் சமயம் காணப்படுவதால் இதனைத் தெளிவாக வரையறை செய்வது கடினமாகும்.

3. எனினும் சமயங்கள் பொதுவாக இயற்கைச் சக்திகளுக்கு அப்பாற்பட்ட சக்திகளில் நம்பிக்கை கொண்டு இயங்குகின்றனவென்பது தெளிவு. சமயம் எவ்வாறு முதன் முதலில் தோன்றியது என்பது பற்றிப் பல கருத்துக்கள் காணப்படுகின்றன. இவற்றை அறிவியல் முறைப்படி நிருபித்தல் கடினமாகும்.

4. சமயத்துக்கு அடிப்படை அச்சமாகும் என்றும், இயற்கை நிகழ்ச்சிகளுக்கு உயிர் இருப்பதாகக் கருதுவதனின்றும் சமயம் எழுந்ததென்றும், மாந்திரிகத்தினின்று சமயம் எழுந்ததென்றும் பல கருத்துக்கள் காணப்படுகின்றன. பல்வேறு சடங்குகளின் விளைவாகச் சமயங்கள் எழுந்தனவென்றும் சமயங்களினின்றும் சடங்குகள் தோன்றினவென்னும் கருத்து தவறானதென்றும் சில சமூக இயலறிஞர்கள் கூறுகின்றனர்.

5. வாழ்க்கையில் எதிர்பாராமல் நிகழும் நல்ல அல்லது தீய விளைவுகளை விளக்கச்சமயம் தோற்றுவிக்கப்பட்ட தென்ற கருத்தும் நிலவுகிறது. பல்வேறு காரணிகளின் இடைவினையின் விளைவாகவே சமயம் காணப்படுகிறதென்றும் இக்காரணிகளை நன்கு பகுத்தாராய்வது கடினமான செயலாகுமென்றும் தற்போது அறிஞர்கள் கருதுகின்றனர்.

6. உயர்நிலைப்பட்ட சமயங்களைப் பொறுத்தவரை இவற்றுக்கும் அறவியலுக்கும் (Ethics) நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. இவை தனித்தனியே தோன்றியவையெனினும் பின்னர் இணைந்து காணப்படுகின்றன.

7. அற மதிப்புகளை வளர்த்தலிலும் அவற்றை மேலும் சீராக்குவதிலும் சமயம் பெரும் பங்கு கொள்கிறது என்பது தெளிவு.

# செயல் - II

# (Activity - II)

## Part - A

1. கர்மா என்றால் என்ன? ஏதேனும் ஒரு உதாரணம் தருக.
2. இந்து மதத்தின் அறநெறி மதிப்புகள் யாவை?
3. இஸ்லாமிய சமயத்தின் அறநெறி மதிப்புகள் யாவை?
4. கிறிஸ்தவ மதத்தின் முக்கியத்துவத்தைக் கூறுக.
5. புத்தமதத்தின் பரிவு பற்றி விளக்குக.
6. சமய சமயத்தில் அஹிம்சை பற்றிக் கூறுக.
7. சமண சமயத்தின் சிறப்பான மதிப்புகள் யாவை?
8. சீக்கிய மதத்தில் 'தைரியம்' என்பதன் முக்கியத்துவத்தை விவரி?
9. சீக்கிய மதத்தின் முக்கியத்துவத்தைக் கூறுக.
10. ஒரு சீக்கியனின் கடமைகள் யாவை?
11. அஹிம்சை என்றால் என்ன? காந்தியடிகளின் அஹிம்சை பற்றி எழுதுக.

## Part - B

1. கர்ம யோகம் என்றால் என்ன? இந்துமதத்தின்படி ஒரு தனிமனிதனிடம் மதிப்புகளை உருவாக்குவதில் இது எவ்வாறு உதவுகிறது?
2. கிறிஸ்தவ சமயத்தின் 'அன்பு', முகம்மதிய சமயத்தில் 'சகோதரத்துவம்' என்னும் மதிப்புகளை விளக்குக.
3. புத்த மதத்தின் எண்வகை மார்க்கங்களை விவரி.
4. மத நல்லிணக்கம் தேவை என்பதை விளக்குக.

# அலகு – III

# மதிப்புகளும் சமுதாயமும்

## VALUES AND SOCIETY

# அலகு - 3

## மதிப்புகளும் சமுதாயமும்
## VALUES AND SOCIETY

1. சமூகம் என்ற பதத்தை வரையறு. சமூகத்தில் மதிப்புகளின் தேவையை விளக்குக. **(April-2014)**

அல்லது

சமூகம் என்பதன் பொருள் யாது? அதன் முக்கியத்துவத்தை எழுதுக. **(April-2013)**

### சமூகம் (Society)

'சமூகம்' என்ற சொல் சாதாரணப் பேச்சு வழக்கில் பல பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. மனிதகுலம் முழுவதையும் குறிக்கும் வகையில் இச்சொல் பயன்படுத்தப்படுவதுண்டு. மற்றும், இதற்கு மாறான வகையில், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அமைக்கப்படும் ஒரு சங்கத்தைக் குறிப்பிடும் வகையில் கூட இச்சொல் பயன்படுத்தப்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக, விலங்குகளுக்கு இழைக்கப்படும் கொடுமையைத் தவிர்ப்பதற்காக அமைக்கப்படும் சங்கம் 'Society for the Prevention of Cruelty to Animals' என்றுதான் அழைக்கப்படுகிறது. இங்கு 'சமூகம்' சங்கம் என்ற பொருளில் அமைகிறது.

ஆனால், சமூகஅறிவியலில் இப்பொருள்களில் 'சமூகம்' பயன்படுத்தப்படுவதில்லை. பொதுவாக 'சமூகம்' சமூக உறவுகளின் தொகுப்பு என்ற பொருளைத் தந்தாலும், நடைமுறையில்

சமூகவியல் அறிஞர்கள் இப்பொருளில் இச்சொல்லைப் பயன்படுத்துவதில்லை. இப்பொருளைக் கொண்டு 'சமூகம்' என்றால் இதுதான் என்று தெளிவாக, குறிப்பாக புரிந்து கொள்ள முடியாது. ஆகவே, சமூகவியல் அறிஞர்கள் நடைமுறையில் சமூகத்தை வேறொரு பொருளில் பயன்படுத்துகிறார்கள்.

கிம்பால் யங் & ரேமாண்ட் மார்க்

"ஒரு நிலப் பகுதியில் நிலையாகக் கூடி வாழும் பெருந்திரளான மக்கள்" என்ற பொருளானது சமூகம் ஆகும்.

ஆக நடைமுறையில் 'சமூகம்' என்பது ஒரு நிலப்பகுதியில் நிலையாகக் கூடி வாழும் பெருந்திரளான மக்களைக் குறிக்கிறது. சமூகம் என்பது தனக்குள்ளே ஒரு சங்கமாய் உள்ளது. அமைப்பு வெளிப்புற உறவுமுறை, தனிநபர் கூட்டு ஆகியவைகள் உள்ளடங்கியதேயாகும்.

சமூகம் என்பது மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு அமைப்பாக வாழும் குழு என்று ஜான் கியூபர் கூறுகிறார்.

*சமூகத்தின் பிரிவுகள் :*

1. பணியின் அடிப்படை.
2. அமைப்பின் அடிப்படை.

**பணியின் அடிப்படை சமூகம் :** இதில் மக்கள் தங்களுக்குள் நல்ல உறவு முறையில் உள்ளவர்கள், தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். உறவுத் தொடர்பு குறையாது நடக்கிறது. உதவி செய்யும் நோக்கத்தில் இருக்கின்றது.

**அமைப்பின் அடிப்படை சமூகம் :** நாட்டவர் வழக்கு, மரபு நிறுவனம் பழக்க வழக்கம், சகுணம், இலட்சியம் போன்றவற்றின் அடிப்படையில் சமூகம் அமைக்கப்பட்டது.

## சமூகத்தின் முக்கியத்துவம் / சிறப்பியல்புகள் (Importance of Society)

1. ஒரு சமூகம் அதிக எண்ணிக்கையிலான மக்களைக் கொண்டிருக்கும்.
2. அந்த மக்கள் ஒரு தொகையாக ஒரு நிலப் பகுதியில் கூடி வாழ்வார்கள்.
3. பரஸ்பரம் ஒருவரையொருவர் தெரிந்து கொண்டு உறவுகள் வைத்து வாழ்வார்கள். பரஸ்பரத் தொடர்பு இல்லாவிட்டாலும் இன்னார் நம்முடைய நிலப்பகுதியில் தான் வாழ்கிறார், நம்மைச் சேர்ந்தவர்தான் என்று தெரிந்து வைத்திருப்பார்கள்.
4. ஒரு பொதுப்பண்பாட்டைக் கொண்டிருப்பார்கள். அவர்களைத் தனியாக இனம் காட்டக்கூடிய அளவில் இப்பண்பாடு அமைந்திருக்கும். அவர்களிடையே எழும் உறவுகளையும், அவர்களுடைய செயல்களையும் இப்பண்பாடே நெறிப்படுத்தும்.
5. அவர்களிடையே ஓர் ஒற்றுமை உணர்வு இருக்கும். ஒரு பொது நிலப்பகுதியில் வாழ்கிறோம் என்ற உணர்வு ஒரு பொதுப் பண்பாட்டைப் பெற்றிருக்கிறோம் என்ற உணர்வும் அவர்களிடையே ஓர் ஒற்றுமையைத் தோற்றுவிக்கின்றன.
6. அவர்களிடையே ஒரு கூட்டுறவு இருக்கும் இயல்பாக ஒருவரையொருவர் சார்ந்து செயல்படுவார்கள். இந்தக் கூட்டுறவின் காரணமாகச் சமூகம் ஒன்றாக ஒருமித்துச் செயல்படும் அலகாகத் தோன்றும்.
7. சமூகத்தில் பல வகையான பணிகள் புரியும் குழுக்கள் அமைந்திருக்கும். பொதுவாக ஒவ்வொரு சமூகத்திலும் ஆறுவகையான குழுக்கள் அமைந்திருக்கும். அவை : குடும்பக் குழுக்கள், கல்விக்குழுக்கள், பொருளாதாரக் குழுக்கள, அரசியல் குழுக்கள், சமயக் குழுக்கள், பொழுதுபோக்குக் குழுக்கள். இவை மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கும். இக்குழுக்கள் ஒன்றாக இணைந்து செயல்படும். இதன் காரணமாகச் சமூகம் ஓர் அமைப்பாக விளங்கும்.

8. ஒவ்வொரு சமூகமும் ஒரு தனி அலகாக இருக்கும். அதனுடைய பண்பாடும், எல்லைகளையுடைய அதன் நிலப்பகுதியும், அதனிடம் அமைந்திருக்கிற ஒற்றுமையுணர்வும், கூட்டு வாழ்க்கையும் அதைப் புற சமூகங்களிலிருந்து பிரித்துக் காட்டும். குறிப்பாக பண்பாடுதான் ஒரு சமூகத்தைத் தனி அலகாகக் காட்டும்.

**2. ஜனநாயகம் என்றால் என்ன? இந்திய ஜனநாயகத்தைப் பற்றி எழுதுக. (April-2013)**

**அல்லது**

**ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தைக் கூறுக. (April-2011)**

**அல்லது**

**ஜனநாயகம் என்ற பதத்தை வரையறுத்துக் கூறு. சர்வாதிகாரத்துடன் ஜனநாயகத்தை ஒப்பிடு. (April-2014)**

## ஜனநாயகம் (Democracy)

'ஜனநாயகம்' என்பதற்கு மக்கள் சக்தி என்று பொருள், மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்துகொள்ளும் சமூக அமைப்பே ஜனநாயகமாகும்.

1. ஜனநாயகம் தனிமனிதனுக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு என உறுதியாக நம்புகிறது. ஒவ்வொரு மனிதனும் தன் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள உரிமை பெற்றுள்ளான். அவனுடைய அடிப்படை உரிமைகளை யாரும் தடுக்க முடியாது.

2. ஜனநாயகம் சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்டுள்ளது. அச்சம், கொடுமைப்படுத்துதல், சுரண்டுதல் ஆகியவற்றிலிருந்து ஜனநாயகம் மக்களைக் காப்பாற்றுகிறது. ஒருவன் தான் வாழ, கல்வி கற்க, பணியாற்ற, மதத்தைப் பின்பற்ற உரிமையளிக்கிறது.

3. ஜனநாயகம் சமத்துவத்தை வலியுறுத்துகிறது. படைக்கப்பட்ட அனைவரும் சமம் என்பதே ஜனநாயகத்தின் உயிர்க்கொள்கை.

4. நோக்கங்கள், தீர்மானங்கள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்வதில் ஜனநாயகம் நம்பிக்கை வைத்திருக்கிறது. இவ்வாறு ஜனநாயகம் வழங்கும் உரிமைகள் பற்றித் தெளிவான கருத்துக்கள் உணர்த்தப்படுகின்றன.

ஜனநாயகம் என்பதன் பொருளைப் பலபடியாகக் கண்ட நாம், ஜனநாயகத்திற்கான கல்வி என்பதற்குரிய விளக்கத்தைத் தெரிந்து கொள்ளலாம். ஜனநாயகக் கருத்துக்கள், கல்வி நோக்கங்களுக்கும் குறிக்கோள்களுக்கும் முன்னோடியாக இருக்க வேண்டும்.

சமுதாயத்தின் அமைப்பே ஜனநாயக மரபுகளையும் மனப்பான்மைகளையும் கல்விக் குறிக்கோளையும் உருவாக்க வேண்டும். மக்கள் தங்களுடைய உரிமைகளைப் புரிந்து கொள்ளவும் கடமைகளை நிறைவேற்றவும் பயிற்றுவிக்கப்பட வேண்டும். எல்லோரும் குறைந்த பட்சக் கல்வியாவது கற்க வேண்டும்.

தொடக்கக்கல்வி, சமூகக்கல்வி, முதியோர் கல்வித் திட்டங்கள் இன்றியமையாதன. கல்வியில் அனைவருக்கும் சமவாய்ப்பு அளிக்க வேண்டும். உழைக்கும் திறன்படைத்த அனைவர்க்கும் உழைக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

இவையனைத்தையும் உடல் தகுதி, அறிவுத்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் பள்ளிக்கூடங்களில் ஜனநாயகப் பயிற்சி, அளிக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

உடல் வலிமையின்மை நாடு வலிமை இழக்க அடிகோலும். நல்ல உடற்கட்டோடு கூடியவர்களிடையே நல்ல மனம் இருக்கும். எனவே ஜனநாயகக் கல்வியில் இதுவே முதற்படியாகும்.

அறிந்து கொள்ளுதல், சிந்தித்தல், பரிசோதித்தல், பகுத்தறிதல், முடிவெடுத்தல் ஆகிய அறிவுத்திறன்களைப் பள்ளிகள்

வளர்க்கவேண்டும். எளிதாகப் பேசும் திறன், நல்ல செய்தி அறிக்கைகளை கேட்டல், அவைகளை தயாரித்தல் ஆகிய திறன்களை வளர்க்கப் பள்ளிகளில் பயிற்சி அளிக்க வேண்டும். தொழில் திறனும், செயல்முறைத் திறனும் வேலை வாய்ப்பிற்குத் துணை செய்வதால் இவற்றை வளர்க்க வேண்டும்.

அறநெறிப் பண்புகள் சுவையுணர்திறன் ஆகியவை ஆன்மீக வளர்ச்சிக்கு உதவும். இதனால் மனவெழுச்சிச் சமநிலை உண்டாகும். நல்ல உறவுடன் சேர்ந்து பழகுவதற்குரிய வகையில் இளைஞர் முகாம்கள், சுற்றுலாக்களுக்கு ஏற்பாடு செய்து, ஜனநாயகத்தில் 'குடிமை' உணர்வுடன் வாழக் கற்றுக் கொடுத்தல் வேண்டும்.

தனிமனிதன் மீது நம்பிக்கையும் மரியாதையும் வைப்பது தான் ஜனநாயகத்தின் உயிர் நாடியாகும், ஜனநாயகக் கல்வி முறை ஒவ்வொருவருடைய திறமையையும், தகுதியையும் வளர்த்து ஆளுமையடையச் செய்கிறது. ஒருவனுடைய உளவியல், சமூக மனவெழுச்சி, நடைமுறைத் தேவைகளை நிறைவேற்றும் நோக்கோடு ஜனநாயகக் கல்வி முறை அமைய வேண்டும்.

விரிந்த உள்ளத்துடன் கூடிய சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்துப் பழகும் பண்பு, மனித மனங்களின் வேறுபாடும் தன்மைகளைப் புரிந்து கொள்ளும் பண்புகளை ஜனநாயகக் கல்வி கற்றுக்கொடுக்க வேண்டும். ஜன நாயகக் கல்விமுறை என்பது பல அறைகூவல்களைச் சந்திக்கும் வாழ்க்கைப் பரிசோதனை எனலாம்.

## ஜனநாயகத்தின் நோக்கங்கள்

ஜனநாயகம் அல்லது மக்களாட்சி என்பது லிங்கன் அளித்த விளக்கத்தின்படி மக்களால், மக்களாலேயே, மக்களுக்கு நடத்தப்படும் ஆட்சி முறையாகும். மேலும் பிரஞ்சுப் புரட்சியின்

விளைவாக எழுந்த சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கருத்துக்களையும் ஜனநாயகம் (அ) மக்களாட்சி உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது எனலாம். சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் என்னும், கொள்கையோடு நான்காவதாக நீதியையும் சேர்த்து நம்முடைய மக்களாட்சித் தத்துவத்தை அமைந்துள்ளனர். எனவே இந்தியாவின் ஜனநாயக நோக்கங்கள் எவை என்பதைப் பற்றியும், அவை அடைய பள்ளிகள் முயலும் முயற்சிகளையும் இக்கட்டுரையில் காண்போம்.

## இந்தியாவில் ஜனநாயக நோக்கங்களாவன

மக்களாட்சி (ஜனநாயகம்) என்பது வெறும் அரசியல் அமைப்பு மட்டுமல்ல. அது ஒரு வாழ்க்கை நெறி, இன, சமய, தொழில், பொருளாதார நிலைக்கு அப்பாற்பட்டு எல்லோருக்கும் சம அளவில் சுதந்திரம், சம அளவில் உரிமைகள் என்ற கொள்கைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது எனலாம்.

மக்களாட்சி (ஜனநாயகம்) பின்வரும் கொள்கைகளில் நம்பிக்கை கொண்டிருக்கிறது எனலாம்.

1. மக்களாட்சி (ஜனநாயகம்) தனி மனிதனுக்கு மதிப்பும், மரியாதையும் உண்டு என நம்புகிறது. ஒரு ஜனநாயக சமுதாயத்தில் ஒவ்வொரு தனி மனிதனும் தனகு வாழ்க்கை, சுதந்திரம், மகிழ்ச்சி ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்ள அடிப்படை உரிமைகளைப் பெற்றிருக்கின்றான். இவ்வுரிமைகளை அவனிடமிருந்து எடுத்துக்கொள்ள எவருக்கும் அதிகாரம் கிடையாது. அடிப்படை உரிமைகளுக்கு அரசியல் சட்டத்தில் தனியானதொரு இடமளிக்கப்பட்டுள்ளன.

2. ஜனநாயகம் சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்டுள்ளது. சுதந்திர என்ற சொல்லுக்கு உடன்பாடான, மற்றும் எதிர்மறையான அர்த்தங்கள் உண்டு. ஜனநாயகம் அச்சம், கொடுமைப்படுத்துதல், சுரண்டுதல், அடிமைப்படுத்துதல் ஆகியவற்றிலிருந்து சுதந்திரம் அளிக்கிறது. மேலும் இது ஒருவன் வாழ்வதற்கு, கல்வி கற்பதற்கு, பணியாற்றுவதற்கு மற்றும் தனது மதத்தைப் பின்பற்றுவதற்குச் சுதந்திரம் அளிக்கிறது. கல்வியில் படிப்புச் சுதந்திரம் அளிக்கப்படுகிறது. இது தலைவர்களும், தொண்டர்களும் உருவாவதற்கு வகை செய்கிறது. ஏனெனில் அனைவருமே தலைவர்களாக இருக்க முடியாது.

3. ஜனநாயகம் சமத்துவத்தை வலியுறுத்துகிறது. 'படைக்கப்பட்ட எல்லா மனிதர்களும் சமம்' என்பதே ஜனநாயகத்தின் குறிக்கோள். சமத்துவம் என்பது ஒரே மாதிரியான தன்மை என்பதை குறிக்காது. தனியாள் வேற்றுமைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. எல்லோருக்கும் ஒரே மாதிரியான கல்வி என்பது பொருத்தமானதாக இருக்க முடியாது. தனிப்பட்ட மனிதர்களுக்கு அவர்களுடைய திறன்கள், தேவைகளுக்கேற்பக் கல்வித்திட்டங்கள் அளிக்கப்படுகின்றன. சமமாகக் கருதப்படக்கூடியவர்களிடையே கூட வேறுபாடுகள் இருப்பது உண்மைதான்.

4. நோக்கங்கள், தீர்மானங்கள் ஆகியவற்றை அனைவரும் பகிர்ந்து கொள்வதில் ஜனநாயகம் நம்பிக்கை வைத்திருக்கிறது. இ∴தொரு வாழ்க்கை முறையாகும். செய்தித் தொடர்புக்கான வழிகளைச் சுதந்திரமாகவும், திறந்திருக்குமாறும் பார்த்துக் கொள்ள வேண்டும். செய்தித் தொடர்புமொழி, சமய வேறுபாடுகளால் பாதிக்கப்படுகிறது. பேராசிரியர் பிரௌடி ஜனநாயகத்தின் நோக்கங்கள் பின்வருவனவாக அமைய விரும்புகிறார்.

ஜனநாயகம் என்பது கொடுங்கோள் ஆட்சி மற்றும் மேல் தட்டு மக்களின் அதிகாரம் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கும் சாதனம் மட்டுமல்ல, சமூக முறையைக் கட்டுப்படுத்தும் சாதனமாகவும் இருக்க வேண்டும். ஆனால் இக்கட்டுப்பாடு மக்கள் கையிலிருக்க வேண்டும். பின்வருவன வலியுறுத்த வேண்டும் என்கிறார்:

(1) மக்களது பொது நன்மைக்காகப் பாடுபடுதல், (2) தீர்மானங்களைக் கட்டுப்படுத்துவதற்காக மக்கள் சில மதிப்புக்களை கைக்கொள்வது அவசியம், (3) சமத்துவம் என்பது 'ஒரு மனிதன் ஒரு வோட்டு' என்பதைக் குறிக்கும். ஆனால் திறமைகள் முழுவதுமாக வளர்க்கப்பட வேண்டும். (4) தன்னைத் தானே அறிந்து கொள்வது ஒரு கடமை (5) சக மனிதர்கள் மீது அன்பும் பரிவும்.

பொறுப்புகள் இல்லாத அதிகாரம் அபாயகரமானதாகும். அதிகாரமே இல்லாமல் பொறுப்புக்கள் இருப்பது மட்டும் அதைவிட மோசமானதாகும் ; நிர்வாகத்தின் துன்புறுத்தல் ஆகும்.

| எண் | ஜனநாயகம் | சர்வாதிகாரம் |
|---|---|---|
| 1. | ஜனநாயகம் உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. | சர்வாதிகாரம் கடமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. |
| 2. | ஜனநாயகம் சமத்துவத்தை நம்புகிறது. | சர்வாதிகாரம் படிநிலை அமைப்பை நம்புகிறது. |
| 3. | ஜனநாயகம் மனிதனைப் பெருமைப் படுத்துகிறது. | சர்வாதிகாரம் நாட்டைப் பெருமைப் படுத்துகிறது. |
| 4. | ஜனநாயகம் கட்டற்ற சிந்தனையைத் தூண்டுகிறது. | சர்வாதிகாரம் கட்டற்ற சிந்தனையைக் கட்டுப்படுத்துகிறது. |
| 5. | ஜனநாயகம் போரொழிப்புக் கோட்பாட்டில் நம்பிக்கை கொள்கிறது. | சர்வாதிகாரம் படைப் பிரிவைப் பயன் படுத்துகிறது. |

3. மதச்சார்பின்மை பற்றி எழுதுக. (மாதிரி வினாத்தாள், MKU)

அல்லது

மதச்சார்பின்மை சமூகத்தின் தனிச்சிறப்புப் பண்புகள் யாவை? (April-2012)

அல்லது

'மதச்சார்பின்மை' வரையறுத்துக் கூறு. மதச்சார்பின்மை நாட்டின் தனிச்சிறப்புப் பண்புகள் யாவை? (April-2014)

## மதச்சார்பின்மை (Secularism)

சமயச்சார்பின்மையை குறிக்கும் "Secularism" என்ற ஆங்கில வார்த்தை 19ம் நூற்றாண்டில் முதன் முதலாக ஜியார்ஜ் என்ற ஆங்கிலச் சொல் "Secularism" என்ற லத்தின் மொழியில் இருந்து பெறப்பட்டதாகும். இதற்கு 'தற்போதைய காலம்' என்று பொருள். அவர் சமூக மற்றும் அறநெறி சார்ந்த செயல்களை குறிப்பதற்காக பயன்படுத்தினார். எனவே "Secularism" என்ற சொல் சமூக மற்றும் அறநெறி அமைப்புகளை சார்ந்தது.

## சமயச்சார்பின்மை

இந்தியா இறையாண்மையுடைய சோசலிச, சமயச்சார்பற்ற ஜனநாயக நாடு சமயச்சார்பின்மையின் கூறுகள்.

1. மக்களும், ஆட்சியாளர்களும் தத்தம் சமயத்தை பின்பற்றியொழுக முழு உரிமை உண்டு.
2. தாம் சார்ந்திருக்கும் சமயம் காரணமாக ஆட்சியாளர்கள் மக்களிடையே வேற்றுமை பாராட்டலாகாது.
3. சமயத்தின் அடிப்படையில் நாட்டின் பொதுச் சட்டங்கள் இயற்றப்படுதல் கூடாது.

4. பெரும்பான்மை, சிறுபான்மை என்ற அடிப்படையில் எந்த ஒரு மதத்தின் மீதும் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ சட்டம் மூலமாகவோ அரசாங்கத்தின் குறுக்கீடு கூடாது.
5. வாய்ப்புகள் அளித்தல், அரசில் பங்களித்தல் ஆகியவற்றில் அரசாங்கத்தினர் எல்லா மதத்தினருக்கும் ஒரே மாதிரியான உரிமைகளை வழங்க வேண்டும்.
6. எந்த மதத்தினரும் தத்தம் மதக் கோட்பாடுகள், வழிபாடுகள், ஒழுக்க நியதிகள் ஆகியவற்றைப் பின்பற்றுவதில் அரசாங்கத்தின் குறுக்கீடு கூடாது. எனினும் நாட்டின் பொதுச்சட்டம், ஒழுங்கு முதலியன மீறப்பட்டால், அவற்றை சரிசெய்ய அரசுக்கு உரிமை உண்டு.

இந்திய அரசியல் சட்டத்தில் பயன்படுத்தப்படும் மதச் சார்பின்மை என்ற வார்த்தை பற்றி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் விளக்கம் குறிப்பிடத்தக்கது. "மதச்சார்பின்மை" என்பது 'மதம் இல்லை' என்பதன்று. நாம் எல்லாக் கோட்பாடுகளையும், மதங்களையும் மதிக்கிறோம். என்பதே இதன் பொருள்" எனக் கூறியுள்ளார். காந்தியடிகளும், இதே கருத்தை வலியுறுத்தும் போது மற்ற மதக் கோட்பாடுகளையும், என்னுடைய மதக் கோட்பாடுகளை போன்றே மதிக்கிறேன் என்று கூறியுள்ளார்.

**மதச்சார்பின்மையின் ஐந்து முக்கிய பண்புகள் (Important Characteristics of Secularism)**

மதச் சார்பின்மை என்பது ஐந்து முக்கிய பண்புகளை வலியுறுத்துகிறது. அவைகள் :

1. அன்பு
2. சகிப்புத்தன்மை
3. உண்மை
4. அமைதி
5. பிறரை மதித்து நடக்கும் பழக்கம்

## மதச்சார்பின்மை கல்வியின் முக்கிய பண்புகள் (Important Characteristics of Secular Education)

1. அறநெறி வெளிப்பாடு
2. பரந்த மனப்பான்மை
3. பல்நோக்கு சிந்தனை
4. ஜனநாயக மதிப்புகள்
5. கலாச்சார முன்னேற்றம்
6. ஆன்மீகம் மற்றும் பொருளறிவின் தொகுப்பு
7. மனித நேயம்

**4. சோஷலிசம் என்றால் என்ன?**

**அல்லது**

**சமதர்மக் கொள்கையின் முக்கியத்துவத்தைக் கூறுக.**

**(April-2011)**

## சோஷலிசம் / சமதர்மக் கொள்கை (Socialism)

இது ஜனநாயகக் கொள்கைக்கும் பொது உடைமைக் கொள்கைக்கும் மத்தியில் காணப்படும். முதலாளித்துவத்திற்கு ஆதரவு தருவது தனிமனிதர் வளர்ச்சிக் கொள்கை என்றால் பொது உடைமைக் கொள்கைக்கு சமூக உயர் அதிகாரம்தான் ஆதாரக் கருத்து எனலாம். மக்களிடையே சமத்துவம் ஏற்படுவது என்பதில் முனைப்புக் காணவேண்டும். வகுப்புகளில் தனி சலுகைகளை ஒழித்துக் கல்வியை சமமாக எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற கருத்துக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும், நாடு முன்னேற பொருளாதார, சமூக ரீதியில் கல்வியானது சிறந்தது எனச் செயல்பட வேண்டும்.

## சமதர்மம் என்பதன் விளக்கம்

சமதர்மம் என்பது ஒரு நாட்டின் நிலம், போக்குவரத்து இயற்கை வளங்கள், முக்கியமான தொழிற்சாலைகள் போன்றவை ஒட்டுமொத்த சமுதாயத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்

என்பதாகும். தனியார் பங்கேற்பு அனுமதிக்கப்பட்டிருந்தாலும், அது சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு தான் இருக்க வேண்டும்.

சமூகக் கட்டுப்பாட்டையும், சமூதாய உடைமைகளையும் தீவிரமாக நடைமுறைப்படுத்திட முனைபவர்கள் பொதுவுடைமை வாதிகள். 'திறமைக்கேற்ற உழைப்பு', 'தேவைக்கேற்ற வசதிகள்' என்பதே இவர்களது குறிக்கோள்களாகும்.

இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் 'சோஷலிசம்' என்ற சொல் 1976-இல் சேர்க்கப்பட்டது. பல இந்திய அரசியல் கட்சிகள் சமதர்மம் என்ற கருத்தின் அடிப்படையில் கொள்கைகளை வகுத்துக் கொண்டுள்ளன.

## சமதர்மக் கொள்கையின் முக்கிய கருத்துகள்

1. சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகளை பெருமளவு குறைத்தல்.
2. தேசிய வளங்களையும், தொழிற்சாலைகளையும், போக்குவரத்து வசதிகளையும், வங்கிகளையும் படிப்படியாக நாட்டுடமையாக்கல்.
3. தொழிலாளர் மற்றும் வறியவர்கள் நிலைமையை உயர்த்துதல்.
4. சமூக சமத்துவத்தை ஏற்படுத்த முனைதல்.
5. சமய சார்பற்ற ஆட்சியமைப்பை ஏற்படுத்துதல்.
6. ஒரே மாதிரியான பணிக்கு ஒரே ஊதிய விகிதம் என்பதை நடைமுறைப்படுத்துதல்.
7. அனைத்து மக்களுக்கும் உணவு, பாதுகாப்பு, கல்வி, சேவை, அடிப்படை சுகாதார வசதிகள் போன்றவற்றை உறுதி செய்தல்.
8. தனி நபர்கள் அல்லது குடும்பங்களிடம் செல்வம் குவிவதைத் தடுத்தல்.
9. எல்லாவிதமான சுரண்டல்களையும் ஒழித்தல்.
10. சமச்சீர் கல்வியை அமல்படுத்திட முயற்சித்தல்.

**5. சமூகத்துக்கும் தனி மனிதனுக்குமிடையே உள்ள தொடர்பை விளக்குக.**

1. மனிதனை உருவாக்குவதில் அவனதுவளர்ச்சிக்கு ஆதாரங்களாக இன்று மரபு நிலை, பயிற்சி, சூழ்நிலை ஆகியனயாவும் குறிப்பிடப்படுகின்றன. இவை யாவற்றிலும் சமூகத் தொடர்புள்ள பகுதிகள் உள்ளன. ஒருவன் பிறப்பு முதல் சமூகத்தின் செல்வாக்குட்படுகின்றான். சமூகத்திலுள்ள பிறருடன் தொடர்பு கொள்கின்றான். சமூகத்தில் பிறர் தன்னிடம் எவ்விதம் நடந்து கொள்கின்றனர். சமூக வாழ்வில் நன் பங்கு (Role) என்ன என்பனவற்றின் அடிப்படையிலேயே அவனுக்குத் தன்னைப்பற்றிய அறிவு எழுகின்றது. ஒருவனது இயல்புகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகச் சமூகம் விளங்குகிறது. மனிதனின் ஆளுமை (Personality), அதன் மையமான தற்கருத்து (Self Concept) ஆகியன சமூக உறவின்றி முழு வளர்ச்சி அடையாமல் தடைப்பட்டு போகும். சமூக வாழ்க்கையின்றும் தனிப்படுத்தப்பட்ட ஒருவன், மனிதப்பண்புகளை அடையாமல் விலங்கு போல் வாழ்வான். இது 'ஓநாய்ச் சிறுவர்கள்' (Wolf Children) எனப்படும் குழந்தைகளது நடத்தையினின்றும் தெளிவாகிறது. பிறப்பிலேயே குழந்தையானது மனிதப்பண்புகளைப் பெற்றுள்ளது என்று நினைப்பது தவறாகும். மனிதப்பண்புகளைப் பெறுவதற்கு இன்றியமையாத சில திறன்கள் மட்டுமே பிறப்பில் குழந்தையிடம் காணப்படுகின்றன. சமூகச் செல்வாக்கினால்தான் இத்திறன்கள் மலர்ந்த மனிதப் பண்புகளாகின்றன. "மனிதப் பண்புகளுடனோ சமூக இயல்புடனோ குழந்தை பிறப்பதில்லை. பிறக்கும்போது அது ஒரு விலங்கினை ஒத்திருக்கிறது. சமூகத்தில் பிறருடன் தொடர்பு கொள்வதனால்தான் மனிதப் பண்புகளையும், தனிப்பட்ட ஆளுமையையும் அதனால் பெற முடிகிறது", என்று கிம்பால் யங் என்பார் கூறுவர். மனிதன் விலங்குகளினின்றும் வேறுபட்டு, உயர்ந்து காணப்படுவதற்கு அவனது மொழி ஆற்றல்,

செய்திறன்கள், வெறும் பயிற்சியுடன் கல்வி பெறக்கூடிய தன்மை, ஆக்கத்திறன் போன்றன குறிப்பிடப்படுகின்றன. இவை யாவற்றின் வளர்ச்சிக்கும் சமூகத் தொடர்பு அடிப்படை என்பது தெளிவு.

2. மனித குலத்தின் முன்னேற்றம் சில மேதைகளின் தனிப்பட்ட ஆற்றலால் (Great men theory of Social Progress) மட்டும் நிகழ்வதன்று. சமூகத்தின் வளம் மரபு அச்சமயத்தில் அதில் நிலவும் சூழ்நிலை சமூகத்தின் அப்போதைய தேவைகள் ஆகியவைகளைச் சார்ந்தே மனிதனின் முன்னேற்றம் ஏற்படுகிறது சமுதாயத்தினரின் கூட்டுதவியின்றிச் சில மனிதர்களால் மட்டும் பெருஞ்சாதனைகளைச் செய்ய முடியாது.

3. ஒரு மனிதனின் முழு வளர்ச்சிக்குச் சமூகம் இன்றியமையாதது. சமுகவூக்கங்களால் (Social Instincts) உந்தப்பட்ட மனிதன் பிறருடன் சேர்ந்து சமுதாயத்தைப் படைக்கிறான். உலகத்தில் மனிதன் தோன்றிய நாள் தொட்டே குழு வாழ்க்கையைக் காணலாம். குழு வாழ்க்கை மனிதனின் சில அடிப்படை உள்ளத் தேவைகளை (Psychological needs) நிறைவு பெறச் செய்கிறது. மனிதனுக்கு உயிர் வாழச் சில அடிப்படையான தேவைகள் உணவு, உடை, இருக்க இடம் முதலியன இன்றியமையாதவை. இவைகளை மனிதனின் உடல் தேவைகள் (Physical needs) எனலாம். இவற்றைப் போலவே, சில உள்ளத் தேவைகளும், சமூகத்தேவைகளும் (Social needs) உள்ளன. இவ்வுளத் தேவைகளின் முக்கியத்துவத்தை மாஸ்லோ (Maslow) போன்ற ஆராய்ச்சியாளர்களும், ஹாவிகர்ஸ்ட் போன்றோரும் வலியுறுத்தியுள்ளனர். இவை நிறைவு பெற்றால் தான் ஒருவானல் முழுவாழ்வுபெற முடியும். சமூகத்தொடர்பினால் தான் இவை நிறைவு பெறும் சமுகம் ஒருவனுக்கு வலிமை உணர்வையும் (Strength) தற்காப்புணர்ச்சியையும் (Security) அளிக்கிறது. சமுகத்தில் பிறருடன் கூடி வாழ்ந்தால்தான் ஒருவனுக்கு அன்பும் (Affection)

மன நிறைவும் (Satisfaction) கிட்டும். சமூகமின்றித் தோழமை (Companionship) இல்லை. தோழமையின்றி நம்மிடம் அன்பு செலுத்துவோர் இல்லை. அன்பு செலுத்தவும், பெற்றுக்கொள்ளவும், வாய்ப்பில்லாத சிறுவர்களே பெரும்பாலும் நெறி பிறழ்வடைகிறார்கள் என்று பிளெமிங் (Fleming) என்னும் பேரறிஞர் கூறுகிறார். மற்றும் ஒருவனை அவனது சமூகத்தினர் தம்முள் ஒருவனாக ஏற்றால் (Acceptance by the group) தான் அவன் மனநிறைவு பெறுவான். 'நம்முடைய சமூகம்' என்னும் உடைமையுணர்ச்சி (Sense of Belonging) ஒவ்வொருவனுக்கும் இன்றியமையாதது. ஒருவன் வெற்றியுடன் செய்து முடித்த செயல்களைச் (Achievements) சமூகத்திலுள்ள பிறர் பாராட்டி ஏற்றால்தான் (Approval of the group) அவனுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஒருவனுடைய நடத்தையும், சமுகம் ஒப்புக்கொண்டுள்ள நடத்தைக் கோலங்களைப் (Behaviour patterns) பின்பற்றியே அமைய வேண்டும். அறநெறிகளும் சமூகவாழ்வின் அடிப்படையில் எழுந்தவையேயாகும்.

சமுதாயத்தில் பரவியுள்ள நியதிகளுக்கும் நடத்தைமுறைகளுக்கும் ஒப்பவே (Conformity to Social Norms) தனிமனிதன் நடக்கிறான். இத்தகைய நடத்தை முறைகளை அச்சமுதாயத்தில் பெரும்பான்மையோர் பின்பற்றுவர், அச்சமுதாயத்தில் அவை வழிவழியாக வந்தவையாம். பொது நெறிகள் (Morals) பாமரர் போக்குகள் (Folkways) பழக்க வழக்கங்கள் (Customs and Manners) காலத்துக்கேற்ற நடைகள் (Fashions) ஆகியன யாவும் இந்நடத்தை முறைகளுள் அடங்குவனவாம். கற்றல், பிறரது எடுத்துக்காட்டுகள் பின்பற்றல் போன்றன வழியே சமுதாய நடத்தை முறைகளைக் குழந்தை அடைகிறது. இவ்வாறு சமூக நடத்தை முறைகளுக்கொப்ப, தனி மனிதன் தனது நடத்தையினை அமைத்துக்கொள்வதனால் அவனுக்குப் பல நற்பயன்கள் விளைகின்றன. இவ்வாறு நடப்பது அவனுக்கு எளிதானதாகவும் சிக்கனமான செயலாகவும் இருக்கும்.

இத்தகைய நடத்தை திறனுள்ளதாயும் சமுதாய அமைதிக்கு உதவுவதாயும் இருக்கும், சமுதாயத்தில் வாழும் பிறர் போல் ஒருவன் நடப்பது அவனது தனி மதிப்பை உயர்த்துகிறது, பிறர் அவனைத் தம்முள் ஒருவனாக ஏற்றுக்கொள்ளலும் இதனால் ஏற்படும் சமூக நடத்தை முறைகளுக்கு மாறுபட்டு நடக்கும் ஒருவனை அச்சமூகம் ஒதுக்கி வைத்துவிடும் அல்லது தண்டிக்கும் மேற்கூறிய காரணங்களின் விளைவாகத் தனிமனிதனது நடத்தை முறைகளிலும் சமூகத்தின் செல்வாக்கு சிறப்பானது என நாம் உணரலாம். இத்தகைய சமூக நடத்தை முறைகள் காலத்துக்குக் காலம் மெதுவாகவோ விரைவாகவோ மாறுபடும் என்பதையும் நாம் மறக்கக்கூடாது.

4. மனிதர்களிடம் சிலபோது காணப்படக்கூடிய அசாதாரணமான நடத்தைக்கும் சமூகத்தின் அமைப்பு, சமூகப் பண்பாட்டின் தன்மை போன்றவற்றக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருத்தல் இன்று உணரப்பட்டுள்ளது. அசாதாரணமான அல்லது நெறி பிறழ் நடத்தைக்கு அடிப்படையாகச் சில மரபு நிலைப்பட்ட அல்லது உடலைச் சார்ந்த காரணிகள் இருத்தலை நாம் மறுக்க முடியாதெனினும் இவற்றோடு இணைந்து சமூகக் காரணிகளும் முக்கிய பங்கினைப் பெறுகின்றன என்பதும் தெளிவு. உளக்கோளாறுகளைச் சமூக நோய்கள் என்றும், எல்லாவகையான நெறி பிறழ் நடத்தைகளுமே சமூகச் சீரழிவின் விளைவுகள் என்றும் கருதுவோரும் உண்டு. எந்த நடத்தை சாதாரணமானது, எது அசாதாரணமானது (Abnormal) என்பதை நிர்ணயிப்பதற்கான தரமும் (Standard) சமுதாயத்துக்குச் சமுதாயம் ஓரளவேனும் மாறுபடும். பல்வேறு வகைப்பட்ட அசாதாரண நடத்தைகளின் விகிதமும் இவ்வாறு மாறுபடும். மற்றும் இவ்வகை நடத்தைகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதிலும் சமூகச் செல்வாக்கின் பங்கு காணப்படுகிறது.

6. பாலின நீதி என்றால் என்ன? (மாதிரி,வினாத்தாள்,MKU)

## பாலின நீதி (Gender Justice)

பாலின நீதி என்பது பல்வேறு வகையான பாகுபாடுகளை நீக்கி ஆண்-பெண் சமத்துவம் என்றும் அவர்கள் இருவருக்கும் சமமான நீதி வழங்குதல் ஆகும். 'பாலினச் சமத்துவம்' என்பது இதுவரை கேள்விக்குறியாகவே உள்ளது. பெண்ணின் பெருமைகளையும் திறமைகளையும் சமூகம் சரியாக மதிப்பிட்டாலும் கூட பெண் பற்றிய மதிப்பு (Value) இன்னும் மாறவில்லை.

### பெண்களுக்கு எதிராகக் காட்டப்படும் பாகுபாடுகள்

1. பிறப்பில் காட்டப்படும் பாகுபாடு.
2. வளரும் போது காட்டப்படும் பாகுபாடு.
3. பொருளாதார ரீதியான பாகுபாடு
4. திருமணம் தொடர்பான பாகுபாடு.

ஒவ்வொரு மனித உயிரும் மதிப்பு மிக்கது. 'மனிதர் அனைவருமே மகத்துவத்தோடும் மனித மாண்போடும் பிறக்கின்றனர். எனவே மக்களை ஆண், பெண் எனப் பிரித்து பாகுபாடு காட்டக் கூடாது என்று பெண்களுக்கு எதிரான அனைத்து வகை பாகுபாடு ஒழிப்புப் பற்றிய ஐக்கிய நாட்டு சபையின் உடன்படிக்கை கூறுகிறது. மனிதர்கள் மாண்புடன் வாழ்வதற்கான உரிமைகளைத்தான் அடிப்படை உரிமைகள் என்கிறோம்.

வாழ்வுரிமை, சுதந்திர உரிமை, சமத்துவ உரிமை ஆகியவை எல்லாம் மாண்புக்கான உரிமைகளுள் அடங்கும். இவற்றிற்கு அப்பால் பெண் என்பதனாலேயே பல்வேறு வகையான சுரண்டல்களுக்கு (exploitation) அவள் ஆளாக்கப்படுவதையும் தடுக்க வேண்டும். பெண்களின் உழைப்பைச் சுரண்டுவது ஆண்களுக்கு மதிப்பான வேலைகளும் பெண்ணுக்கு மதிப்பு

குறைந்த வேலைகளும் என்று பாகுபடுத்துவது, பெண்களை ஆபாசமாக சித்தரிப்பது, கொச்சையாக வர்ணிப்பது, ஈவ் டீசிங், பாலியல் வன்முறை போன்றவை எல்லாம் பெண்களின் மாண்பை சிதைக்கின்ற செயல்களாகும்.

## பெண்களின் வளர்ச்சியைத் தடை செய்யும் சக்திகள்

1. வளர்ச்சியைக் குறைக்கும் சக்திகள்.
2. வளர்ச்சியை எதிர்க்கும் சக்திகள்.
3. சமமற்ற வளர்ச்சி வாய்ப்புகள்.

## பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

1. கருக்கொலை.
2. சிசுக் கொலை.
3. பாலியல் சீண்டல்.
4. பாலியல் வன்முறை.
5. பணி செய்யுமிடத்தில் தொந்தரவு.
6. குடும்ப வன்முறை.

## பெண்களின் முன்னேற்றதிற்கான வழிகள்

1. பர்தா முறையை ஒழித்தல்
2. இளம் வயது திருமணத்தைத் தடுத்தல்
3. ஆண்-பெண் இருவருக்கும் சமத்துவம் அளித்தல்.
4. கல்வி, பொருளாதாரம், அரசியல் போன்றவற்றில் சம வாய்ப்பு அளித்தல்.
5. பெண்களுக்கான சுய உதவிக் குழுக்களை வளர்த்தல்.

## பெண் விடுதலை இயக்கங்கள்

1. மகளிர்க்கு இழைக்கப்படும் கொடுமைகளை நீக்கி சம வாய்ப்பு தரப்பட வேண்டும்.
2. மகளிர் விடுதலை மானிட விடுதலையின் ஓர் அம்சமே..

3. பெண் விடுதலை என்பது மகளிர் ஆடவராக மாறுவதல்ல. மாறாக பெண்ணிய மதிப்பீடுகளை அஹிம்சை (கொல்லாமை, அன்பு, அஹிம்சைச் செயல், அஹிம்சைகளும் மற்றும் உண்மை) சுடர் விடுவதும் பூத்துக் குழுங்குவதுமாகும். மானிடத்தை சாவிலிருந்து வாழ்வுக்கு, வாழ்விலிருந்து பெருவாழ்வுக்கு உயர்த்தும் உத்தி இதுவாகும்.

பெண் விடுதலைக்கான கல்வி, விழிப்புணர்வு, நிறுவன வலிமை, இயக்கம், மறு ஆக்கம் (reconstruction) தற்சார்பு முதலியன நிகழ்ந்தாக வேண்டும். ஜனநாயக நாடுகளில் பெண் முன்னேற்றம் தொடர்ந்து நிகழ்கிறது. மகளிர் மிகவும் முக்கியமான வாக்கு வங்கியாகின்றனர். ஆனால் சர்வாதிகார நாடுகளில், அடிப்படை வாத அமைப்புகளில் மகளிர் கருவிகளாக நன்கு பயன்படுத்தப்படுகின்றனர். சமயம், பாரம்பரியம் மற்றும் இன்ன பிற காரணங்களையும் கொண்டு மகளிரை ஆண் ஆதிக்க சமுதாயம் பயன்படுத்த முற்படுகிறது.

மகளிர் ஒரு புதிய யுக சக்தியாக உதயமாக வேண்டும் எனக் காந்தி கூறினார். இட ஒதுக்கீடு மூலம் மகளிரை அதிகமாக அரசியல், பொருளாதாரம் போன்ற துறைகளில் ஈடுபடுத்த முடியும். பஞ்சாயத்து மற்றும் நகராட்சி தேர்தல்களில் நமது நாட்டில் மகளிர்க்கு இட ஒதுக்கீடு உண்டு. இதனை சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தல்களுக்கும் விரிவாக்கும்படி ஒருங்கிணைந்த மகளிர் இயக்கம் உருவாகியிருக்கிறது.

பெண் சமுதாயம் சம உரிமையுடனும் சம அந்தஸ்த்துடனும் வளமாக வாழ்வதே நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படை ஆதாரமாக அமையும். பெண்ணைக் களங்கமாக நினைக்காமல் பெருமையாகப் போற்றினால் சமூகம் முழுவதுமே பெருமை அடையும். வளம் பெறும். இந்தியாவில் ஆண்களும் பெண்களும் சமுதாயத்தின் இருவிழிகள் இருவரும் சமம் என்பதற்கு "மாதொரு பாகன்" என்ற இந்து மதத் தத்துவம் சான்றாக அமைகிறது.

7. "மனித உரிமைகளின்" முக்கியத்துவத்தையும் ஜனநாயக சமூகத்தில் "சமூக நீதி" பற்றியும் விவரி.
(மாதிரி வினாத்தாள், **MKU**)

அல்லது

மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை விவரி.
(**April-2011**)

அல்லது

மனித உரிமைகள் என்ற பதத்தின் பொருள் எழுதுக.
(**April-2013**)

அல்லது

மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை விவரி. கல்விக்கு உரிமை (**right to education**) என்றால் என்ன? (**April-2014**)

அல்லது

மனித உரிமைகளின் அவசியத்தை விளக்குக.
(**April-2013**)

## மனித உரிமைகள் (Human Rights)

மனித உரிமை என்பது "ஒரு தனிமனிதனுக்கு குறைந்தபட்ச உரிமையை எந்த ஒரு எண்ணத்தையும் கருதாது அவனை ஒரு குடும்ப உறுப்பினர் என்ற அடிப்படையில் வழங்குவது ஆகும்".

"மனித உரிமை என்பது எல்லா சமூகத்தவற்கும் சம உரிமை கொடுப்பது ஆகும்" – ஐ.ந.ா.

பாரம்பரியமாக அழைக்கப்பட்ட இயற்கையான உரிமைகள் தான் இன்று நவீன பெயர்களாக 'அடிப்படை உரிமைகள்' என்று அழைக்கப்படுகின்றன.

## மனித உரிமைகளுக்கான கரு (Concept of Human Rights)

அடிப்படை உரிமைகள்தான் மனித வர்க்கத்தின் மூலாதாரமான உரிமைகள். அவை மனித இனம் தோன்றிய காலம் முதல் இருக்கின்றன. சட்டத்திலுள்ள மற்ற உரிமைகளை விட தனிமனித உரிமையின் புனிதத் தன்மை மேன்மை உள்ளதாக இருப்பது த்ான் ('Natural Rights') இயற்கையான உரிமை ஆகும்.

உலக சமுதாயத்தால் மாக்ன காட்டா (Magna Carta) 1215, மற்றும் உரிமைகள் சட்டம் (1960) போல மனித சட்டத்தை உருவாக்க நிறைய முயற்சிகள் செய்யப்பட்டன.

Magna Carta-வை ஜான் பேரரசர் 1215-ல் அறிமுகப்படுத்தினார். இதில் இருக்கும் சில உரிமைகளை மாற்றவோ அல்லது தனிமைப்படுத்தவோ இயலாது.

17-ம் நூற்றாண்டிலிருந்து சட்டத்தையும், மனித உரிமையும் புதிய அளவில் நோக்கப்படுகிறது. டச்சு நாட்டு தத்துவ ஞானி Grotius (1950) என்பவரை 'உலக நாட்டு சட்டத்தின் தந்தை' என்று அழைத்தனர். அவர் தம் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் நசுக்கப்பட்டதாக இருக்கிறது என்று வலியுறுத்துகிறார்.

உலகப் போர்களின் போது அனுபவித்த துன்பங்களும், மனித உரிமை அறிவிப்பும் தான் (1950) சட்ட சுதந்திரத்தைப் பாதுகாக்க எடுக்கப்பட்ட காரணமாக இருந்தது.

கனடா சட்ட மன்றம் 1960-ல் உரிமைகள் சட்டம் நிறுவியது. இது சில தனிமனித உரிமைகளான, சட்டம் முன் சமத்துவம், மத சுதந்திரம், பேச்சுரிமை, சபை உரிமை, அமைப்புரிமை மற்றும் அச்சு சுதந்திரம் ஆகியவற்றை கூறியது.

மனிதன் வாழ்வதற்காக சுற்றுபுறத்தோடு மட்டும் அல்லாமல் தன்னுடன் வாழும் சக மனிதர்களுடன் சண்டையிட்டுக் கொள்கிறான். சமூக வாழ்வின் தொடக்கத்திலிருந்தே அவர்கள் பிற இனத்தவரின் துன்புறுத்தலுக்கு ஆளாகி, வலிகளையும் தாங்கி அடக்கு முறைகளுக்கு ஆட்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.

நாகரீகம் தோன்றிய காலத்தில் மனித உரிமைகள் அனைத்தும் பின் தள்ளப்பட்டு விட்டன. வேதகால இறுதியில் மத ஒழுக்கம் வர்ண ஒழுக்கத்தைக் கொண்டு வந்தது. ஆயினும் கொடுமைகள் அதிகரித்ததே தவிர முன்னேற வில்லை. இந்து 'வர்ணாஸ்த்ர தர்மா' என்பது சமுதாயத்தை மட்டும் (Varnastra dharma) துன்புறுத்தவில்லை. பெண்களையும் துன்புறுத்தியது. அவர்களுக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டன.

வெவ்வேறு ஆட்சியிலும் மனித உரிமைகள் வன்மையாக மறுக்கப்பட்டன. மிருகங்களை விட கீழ்த்தரமாக மதித்தனர். நாகரீகம் நிறைந்த இன்றைய சமுதாயத்தில் கூட இன்றும் மனித உரிமைகளும், சட்ட சுதந்திரமும் மறுக்கப்பட்டு வருகின்றன. தீவிரவாதம், வன்முறை, இன வேறுபாடு போன்ற பெயர்களில் இன்றும் வெவ்வேறு உலக நாடுகளில் வன்முறையும், துன்புறுத்தலும் தொடருகின்றன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் மனித உரிமையின் நோக்கம் பொது எழுச்சியைக் கொண்டு விளங்குகிறது. மனித உரிமைகளைப் புறக்கணிக்கும், அவமதிக்கும் எனும் காட்டுமிராண்டி செயல்கள் மனித குலத்தின் மனமசாட்சியையே உலுக்கியுள்ளன. அடிமைத்தனம் ஆப்பிரிக்க நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் சாதாரணமான ஒன்றாகக் கருதப்பட்டது. அமெரிக்காவில் 1863-வரை அடிமைத்தனம் சட்டபூர்வமானதாக இருந்தது. பிரேசில் நாட்டில் 1880-வரையும், இன்னும் சில நாடுகளில் 20-ம் நூற்றாண்டு வரையிலும் இருந்தது.

மூன்றாம் உலக நாடுகளில் மனித உரிமைகள் வலிமை இழக்கக் காரணம் அதன் வறுமை தான்.

இரண்டாம் உலகப்போரின் போது உலக சமூகம் நிறைய கற்றுக் கொண்டது. கற்பது மட்டும் முடிவாகாது. அமைதியான கலாசாரத்தையும் அதாவது ஜனநாயகம், வளர்ச்சி, சகிப்பு மற்றும் மனித மதிப்பு இவற்றை அடிப்படையாகக் கொண்டு கட்டுவதே சமூகம் ஆகும்.

## ஐக்கிய நாட்டு சபை (United Nations Organisation)

உலகத்தின் நம்பிக்கையும் மனசாட்சியும் ஐ.நா. ஆகும். இது 1942-ஆம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் என்பவரால் 190 உறுப்பினர்களைக் கொண்டு நிறுவப்பட்டது. அவர்கள் உலக அமைதியும் பாதுகாப்பும், உலக அரசியலை ஒன்றிணைத்து தீர்வு காணவும், பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம், மனிததத்துவம் போன்றவைகளின் பிரச்சனைகளைத் தீர்க்க இவர்கள் தங்களைக் கையளித்தனர்.

## ஐ.நா. மனித உரிமை பிரகடனம் (U.N. Declaration on Human Rights)

ஐ.நா. வின் தோற்றம் உலக மனித உரிமைக்குப் புதிய இயங்கு சக்தியாக இருந்தது. உலக மனித உரிமைகள் என்பது, வாழ்வதற்கான உரிமை, சமத்துவம், சுதந்திர உரிமை போன்றவை. இவை மனிதர்கள் எங்கு வாழ்ந்தாலும் இருந்தாலும் ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கக் கூடியவை. 1929--ல் ஐ.நா. "மனித உரிமை" பிரகடனமாக்கப்பட்டது. அகில உலக சட்ட மையம் இதை அமுல்படுத்தியது. ஆனால் 1945-ல் தான் இது நடைமுறைக்கு வந்தது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஒன்று கூடிய நாடுகள் ஐ.நா. சபையின் முக்கியத்துவத்தைப் பற்றி வெகுவாகப் பேசப்பட்டது. அதன் பேரில் சான் பிரான்ஸிஸ்கோ

(San Francisco) நகரில் இது ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1948 டிசம்பர் 10-ஆம் நாள் மனித உரிமைப் பிரகடனம் ஐ.நா.வின் பொதுச்சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதன் நோக்கம் அனைத்து மக்கள் சமுதாயங்களும், அனைத்து தேசங்களும் முயன்று அடைய வேண்டிய பொது நியதியாகும். தனி மனிதர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமூக அமைப்பும் இப்பிரகடனத்தை எப்போதும் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். அடிப்படை மனித உரிமைகளிலும், மனித மாண்பிலும், நன்மதிப்பிலும், ஆண், பெண் சம உரிமைகளிலும் ஆழமான நம்பிக்கை கொண்டுள்ளன. சமுதாய முன்னேற்றத்துக்கு ஊக்கமளிக்கவும், முழுச் சுதந்திரத்தோடு வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும் முதன்மை நோக்கமாக இது உறுதி பூண்டுள்ளது.

இந்தியா, இந்திய அரசியலமைப்பு சட்டம் **(Indian Constitution)**

இந்திய அரசியலமைப்புச் சட்டம் உலகிலேயே மிக நீண்ட ஒன்று. இது உருவாக்கப்பட்ட போது 395 சரத்துகளும் (Articles) 22 பகுதிகளும் (Parts) 10 அட்டவணைகளும் (Schedules) அடங்கியிருந்தன. 1995-ல் இது 78-ஆம் சட்டத்திருத்தத்திற்குப் பிறகு 447 சரத்துகளும் 26 பகுதிகளும், 12 அட்டவணைகளும் கொண்டுள்ளது. தற்போது மேலும் பல சட்டத் திருத்தங்கள் (Amendments) செய்யப்பட்டுள்ளன.

முகப்புரை (**PREAMBLE**)

“இந்திய மக்களாகிய நாம், இந்தியா ஒரு பேரரசாண்மை வாய்ந்த, சமதர்ம நெறிசார்ந்த, சமய சார்பற்ற, மக்களாட்சி குடியரசாக அமைக்கவும், அதன் குடிமக்கள் அனைவருக்கும் சமுதாய, பொருளாதார மற்றும் அரசியல்-நீதியும் சிந்தனையில்,

சிந்தனை வெளிப்பாட்டில் - சுதந்திரமும், தகுதி நிலையில் மற்றும் வாய்ப்பில் - சமத்துவமும், உறுதியாகக் கிடைக்கச் செய்யவும், தனியொருவரின் மாண்புக்கும், நாட்டின் ஒற்றுமைக்கும் - உறுதியளிக்கவும், உடன் - பிறப்புணர்வை அனைவரிடையே - வளர்க்கவும், உளமார்ந்த உறுதி பூண்டு 1949 நபம்பர் 26-ம் நாளாகிய இன்று நம்முடைய அரசியலமைப்புப் பேரவையில் இதனால், இந்த அரசியலமைப்பை ஏற்று, சட்டமாக இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்".

ஏறக்குறைய இந்திய அரசியலமைப்புச் சட்டம் கொடுக்கும் முக்கியத்துவம் அனைத்தும் முகப்புரையிலேயே சிறப்பாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே தான் உச்ச நீதி மன்றம் "பெருபாரி யூனியன்" வழக்கில் "முகப்புரையானது அரசியலமைப்புச் சட்டத்தை உண்டாக்கியவர்களின் மனதை திறக்கக் கூடிய திறவுகோல்" என்று கூறியது.

உலகளாவிய மனித உரிமைப் பிரகடனம், ஐ.நா. சபையின் மற்ற பிரகடனங்கள் ஆகியவற்றை இந்திய அரசியலமைப்புச் சட்டம் உள்வாங்கி இருப்பதும், அதனால் வடிவமைக்கப் பட்டிருப்பதும் கூர்ந்து படித்தால் புரியவரும்.

## அடிப்படை மனித உரிமைகளும், இந்திய அரசியலமைப்பும் (Human Rights in India and Indian Constitution)

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மூன்றாவது பகுதியில் அடிப்படை உரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை நாம் கீழ்க்கண்ட தலைப்புகளில் வகைப்படுத்தலாம்.

1. சமத்துவ உரிமை (Right to Equality) சரத்துகள் 14-18.
2. சுதந்திர உரிமை (Right to Freedom) சரத்துகள் 19-22.

3. சுரண்டலுக்கு எதிரான உரிமை (Right Against Exploitation) சரத்துகள் 23-24.
4. சமய சுதந்திர உரிமை (Right for Freedom of Religion) சரத்துகள் 25-28.
5. கலாச்சார மற்றும் கல்வியியல் உரிமைகள் (Cultural & Educational Rights) சரத்துகள் 29-30.
6. அரசியலமைப்பு தீர்வழிகள் பெற உரிமை (Rights to Constitutional Remedies) சரத்துகள் 32-35.

இந்த ஆறு வகையான உரிமைகளும் நிச்சயமாக ஒரு மனிதனுக்குத் தேவையான அடிப்படை உரிமைகளே. இந்த அடிப்படை உரிமைகள் முன்பு இயற்கை உரிமைகளாக இருந்தது. ஆனால் தற்போது அடிப்படை உரிமைகளாக ஆகியுள்ளது. மேற்கண்ட அடிப்படை உரிமைகளைத் திருத்த (Amendment) எண்ணினால் பாராளுமன்றம் கடுமையான நடைமுறைகளை பின்பற்ற வேண்டி வரும்.

அடிப்படை உரிமைகளின் நோக்கம் **(Civil Rights)**

1. இந்திய குடிமக்களிடையே சமத்துவம், சகோதரத்துவம், பாதுகாப்பு மற்றும் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும்,
2. ஒரு தனிநபர் தன் அடிப்படை உரிமைகளை செயல்படுத்துவதில் தடை இருக்கக் கூடாது,
3. நீதித்துறை செயல்படும் விதம்,
4. எல்லாச் சமூகத்திற்கும் சமவாய்ப்பு தரப்படுதல்,

போன்றவற்றை விளக்குவது அடிப்படை உரிமைகளின் நோக்கம்.

இதன் அடிப்படை உரிமைகள் எல்லையில்லா (Unlimited) உரிமைகள் அல்ல. இவை சில கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது. மேலும் இந்த அடிப்படை உரிமைகளைப் போலவே அரசியலமைப்புச் சட்டம் "அரசு நெறியுறுத்துக் கொள்கைகள்" (Directive Principles of States Policy) என்ற ஒரு தனிப் பகுதியினையும் கொண்டுள்ளது. பகுதி 4-ல் இவை சரத்து 38 முதல் 51 வரை குறிப்பிடப்பட்டுள்ளன. இ∴து அயர்லாந்து நாட்டின் அரசியல் சட்டத்தின் தாக்கமாகும்.

அரசியல் சுதந்திரம் மட்டும் ஒரு நாட்டிற்குப் போதுமானது அல்ல. சமூக பொருளாதாரத்திலும், மக்கள் சுதந்திரம் பெற்றாக வேண்டும். இல்லையென்றால் குடியாட்சியின் கொள்கைகள், நோக்கங்கள் நிறைவேறாமல் போய் அரசியல் சுதந்திரம் கூட பொருளற்றதாகப் போய்விடும். எனவே அரசு எப்படிச் செயல்பட வேண்டும் என்பது குறித்து விளக்கும் அரசு நெறியுறுத்தும் கொள்கைகளுக்கும் தற்போது நீதிமன்றங்கள் முக்கியத்துவம் கொடுத்து வருவது கூர்ந்து கவனிக்கத் தக்கது.

இந்தியாவில் "மனித உரிமைப் பிரகடனத்தின்" தாக்கம் அரசியலமைப்பில் வெளிப்பட்டு இருப்பது தெரிய வந்தாலும், உலகம் முழுவதும் அடித்தட்டு மக்கள், நசுக்கப்படும் ஏழைமக்கள் பெற்றுவரும் விழிப்புணர்வு அரசியல் உரிமைகளோடு, மனித உரிமைகளையும், முக்கியத்துவம் பெறச்செய்துள்ளது. இவற்றை உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில், பல்வேறு நேரங்களில் நடைபெற்ற, நடைபெற்று வரும் மாநாடுகளும், சர்வதேச கருத்தரங்கங்களும், பிரகடனங்களும் உறுதி செய்கின்றன.

### சுதந்திரம் சமத்துவம் (Right to Equality)

எல்லா மனிதர்களும் உள்ளார்ந்த சுதந்திரத்தோடும் மாண்போடும், உரிமைகளோடும், சமத்துவத்தோடும், பிறக்கிறார்கள். மனிதர்கள் பகுத்தறிவும் மனசாட்சியும் வாய்க்கப் பெற்றவர்கள். எனவே ஒருவரோடு ஒருவர் சகோதரத்துவ உணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இப்பிரகடனத்தில் எடுத்துரைக்கப்படும் உரிமைகள் சுதந்திரங்கள் அனைத்தும் இனம், நிறம், பால், மொழி, சமயம், அரசியல் கொள்கை, தேசம் அல்லது சமுதாயப் பின்னணி, சொத்து. பிறப்பு அல்லது பிறவகைத் தகுநிலை (Status) போன்ற எவ்வித வேற்றுமையின்றி அனைவருக்கும் உரியனவாகும்.

ஒருவர் சார்ந்துள்ள நாட்டின், ஆட்சிப்பரப்பு, அரசியல், அதிகார வரம்பு, சர்வதேசத் தகுநிலை எப்படி இருப்பினும், அவர் சார்ந்த நாடு சுயசார்புடையதாகவோ, இறையான்மை (Souvereign) அற்றதாகவோ இருப்பினும், வேற்றுமை பாராட்டக் கூடாது.

### சமூக உரிமைகள் (Social Rights)

ஒரு மனிதன் தன் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றுகின்ற போதுதான் அவன் சுதந்திரமான ஆளுமை பெற்ற முழு வளர்ச்சியடைந்த மனிதனாக மாற முடியும்.

ஒரு குறிப்பிட்ட நாட்டின் சட்டத்திற்கு உட்பட்டு பிறரது உரிமைகளையும் சுதந்திரங்களையும் அங்கீகரித்தும், மதித்தும், அந்நாட்டு அறநெறிக் கோட்பாடுகளையும் கவனத்தில் கொண்டும் பொது அமைதி, மக்களாட்சி சமூகத்தின் பொது நலன் போன்ற வரம்புகளுக்கு உட்பட்டு, மேற்சொல்லப்பட்ட உரிமைகளும் சுதந்திரங்களும் பயன்படுத்தப்பட வேண்டும்.

இவ்வுரிமைகளையும், சுதந்திரங்களையும் எந்நிலையிலும் ஐக்கிய நாடுகளின் நோக்கங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் புறம்பான விதத்தில் பயன்படுத்தலாகாது.

இப்பிரகடனத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை சுதந்திரங்களைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட ஒரு குழுவிற்கோ, அரசுக்கோ, அல்லது தனிநபருக்கோ உரிமையுண்டு எனப் பொருள் கொள்ளக்கூடாது.

தமிழகத்தில் இன்னும் 635 கிராமங்களில் இரட்டை டம்ளர் முறை கடைபிடிக்கப்படுவதாக அரசு சாரா நிறுவனம் ஒன்று தெரிவிக்கிறது. இந்தியாவில் 1991-ல் எடுக்கப்பட்ட மக்கள் தொகை புள்ளி விவர கணக்குப்படி தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி அறிவைப் பார்த்தாலே இன்றும் அவர்கள் சமமாக மதிக்கப்படவில்லை என்பது புலப்படும்.

மனித உரிமைகள் பட்டியல் :

உணவு, உடை, உறைவிடம் மூன்றும் ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகள், இவை மட்டும் இருந்தால் மனிதன் மனிதனாக வாழ்ந்துவிட முடியாது. அவன் முழு மாண்புள்ள மனிதனாக வாழ இன்னும் சில தேவைப்படுகின்றன. அந்தத் தேவைகளை நிறைவு செய்யும் உரிமைகளைப் பார்ப்போம். இவை நமது கற்பனையில் தோன்றுவதல்ல. மாறாக சர்வதேச பிரகடனங்கள் மற்றும் நாடுகளுக்கிடையே காணப்படும் தனிநபர்கள், குழுக்கள், நாடுகளுக்கான மனித உரிமைகள் பற்றிய பட்டியல்.

## குடிமை உரிமைகள் (Civil Rights)

- வாழ்வு உரிமை.
- சுதந்திரத்திற்கான உரிமை.
- சித்திரவதை செய்யப்படுவதில் இருந்து சுதந்திரத்திற்கான உரிமை.
- சட்டத்திற்கு முன் சமமாக நடத்தப்படும் உரிமை.
- பாகுபாட்டிற்கு எதிரான உரிமை.
- சட்டத்தின் முன் மனிதனாகக் கருதப்படும் உரிமை.
- தேசியத்தைச் சார்ந்து இருக்க உரிமை.
- பெயர் வைத்துக்கொள்ள, வைத்துக்கொண்டிருக்க, பெயர் வைத்து கொள்ளவும் பதிவு செய்யப்படவும் உரிமை.
- சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட வரைமுறைகளுக்கு மட்டுமே உட்படும் உரிமை.
- கோர்ட்டுக்குச் செல்லும் உரிமை.
- பொது விசாரணைக்கான உரிமை.
- சுதந்திரமான, நேர்மையான, தனியான, நீதிபதி முன் விசாரணை செய்யப்படும் உரிமை.
- குற்றங்களை அறிந்து கொள்ளும் உரிமை.
- நிரபராதி என்று கருதப்படும் உரிமை.
- தனக்குத்தானே குற்றவாளியென சாட்சியம் கொடுப்பதிலிருந்து சுதந்திரம் பெறும் உரிமை.
- போதுமான தகவல் பெறும் உரிமை.
- இரட்டைத் தண்டனை (குற்றத்திற்காக) பெறுவதிலிருந்து சுதந்திரம்.
- குற்றத்திற்கு சட்டம் குறிக்கும் தண்டனையை விட அதிகம் கொடுப்பதைத் தடுக்கும் உரிமை.
- மேல் முறையீடு சீராய்வு செய்யும் உரிமை.

- மனிதாபிமானத்தோடு நடத்தப்பட உரிமை
- அதிகார வர்க்கத்திடமிருந்து பாதுகாக்கப்படும் உரிமை.
- கருத்து சுதந்திரம்.
- தனது வீட்டின் தனிமையைப் பாதுகாத்துக் கொள்ள உரிமை.
- தகவல் பெறும் உரிமையில் தனிமையைப் பாதுகாக்கும் உரிமை.
- தன் நற்பெயர், புகழ் இவற்றை பாதுகாத்துக் கொள்ள உரிமை.
- குடியிருப்பு உரிமை.
- அநீதி இழைக்கப்படின் இழப்பீடு பெறும் உரிமை.
- திருமணம் செய்யும் உரிமை.
- அநீதியாக நாடு கடத்தப்படுவதில் இருந்து சுதந்திரம்.
- கடனுக்காக கைது செய்யப்படுவதில் இருந்து சுதந்திரம்.
- அநீதியாக நாடு கடத்தப்படுவதில் இருந்து சுதந்திரம்.
- எந்த நாட்டிற்குள்ளும் நுழைய உரிமை.
- எந்த நாட்டை விட்டும் வெளியேறும் உரிமை.
- வெறுப்பு, வன்முறை, இனப்பாகுபாடு இவற்றை தன்மீது பிரயோகப்படுத்துவதில் இருந்து உரிமை.

அரசியல் உரிமை **(Political Rights)**

1. கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை.
2. சுதந்திரமாக கூட்டம் கூடும் உரிமை.
3. இயக்கங்களைக் கட்டியெழுப்ப உரிமை.
4. வாக்களிக்கும் உரிமை.
5. அரசியலில் ஈடுபடும் உரிமை.

6. சுதந்திரமான, ஒழுங்குபடுத்தப்பட்ட இடைவெளிகளில் தேர்தல் நடைபெற உரிமை.
7. பொதுப் பணிகளில் (அரசுப்பணி) சமமாக கருதப்பட உரிமை.

**பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள்**

1. வேலை பெறும் உரிமை.
2. வேலையைத் தேர்ந்து கொள்ளும் உரிமை.
3. சொத்துக்களைச் சொந்தமாக்கிக் கொள்ள உரிமை.
4. போதுமான ஊதியம் பெறும் உரிமை.
5. கல்வி பெறும் உரிமை.
6. ஒரு குடும்பத்தை உருவாக்கும் உரிமை.
7. சமூகப்பாதுகாப்பு பெற உரிமை.
8. காப்பீடு செய்து கொள்ள உரிமை.
9. சமூக, மருத்துவ உதவிபெற உரிமை.
10. சத்துணவு பெற உரிமை.
11. சமூகப் பாதுகாப்பு நலன்களை பெறும் உரிமை.
12. விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றங்களை அனுபவிக்கும் உரிமை.
13. சுகாதாரத்தைப் பாதுகாத்துக் கொள்ள உரிமை.
14. தனது ஒழுக்கத்தைக் காப்பாற்றவும், மேம்படுத்தவும் உரிமை,

**இவை தவிர**

15. தொழிலாளர்களுக்கான உரிமை.
16. பெண்களுக்கான உரிமை
17. குழந்தைகள், சிறுவர்களுக்கான உரிமைகள்.
18. சிறை கைதிகளுக்கான உரிமைகள்.
19. வயது முதிர்ந்தவர்களுக்கான உரிமைகள்,
20. பழங்குடி மக்களின் உரிமைகள்.
21. அகதிகளின் உரிமைகள்.

என நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். சமூகத்தைப் பற்றி புரிந்து கொள்ள நாம் இவற்றை இன்னும் அழகாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது.

**மனித உரிமைகள் தொடர்பான இந்திய சட்டங்கள், அமைப்புகள்**

மனித உரிமைத் தொடர்பாக நம் நாட்டில் நிலவும் பிற சட்டங்கள், அமைப்புகள் முதலியவற்றைச் சுருக்கமாக இப்பகுதியில் அறிந்து கொள்வோம்.

**1. மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1993**

இச்சட்டம் தொடர்பாகவும், இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தேசிய மனித உரிமை ஆணையம் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்தும் விரிவாக இந்நூலில் ஏற்கனவே விவரங்கள் அளிக்கப் பட்டுள்ளன.

**2. அட்டவணை இனத்தவர், அட்டவணைப் பழங்குடியினருக்கான தேசிய ஆணையம் (National Commission for SC & ST) :**

நமது அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 338-ன் கீழ் இவ்வாணையம் அமைக்கப்படுகிறது. பழங்குடியினர், அட்டவணை இனத்தவர் நலனை பாதுகாக்கவும், அவர்தம் உரிமைகளைப் பேணவும் இவ்வாணையம் கடமையாற்றும். இவ்வாணையம் சிறப்பு அலுவலர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவதாகும். இவ்வாணையத்தின் அறிக்கைகள் நாடாளுமன்ற அவைகளின் முன் வைக்கப்பெறும். இவ்வாணையத் தலைவர் அலுவல் நிலையால் தேசிய மனித உரிமை ஆணைய உறுப்பினராகக் கருதப்படும் நிலையுடையவர்.

3. சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையம் (National Commission of Minorities)

இவ்வாணையம் 1992-ம் ஆண்டுச் சட்டப்படி, சிறுபான்மையினர் நலக்காப்பு மேம்படத் தேசிய அளவில் அமைக்கப்படுவதாகும். இவ்வாணையத் தலைவரும் தேசிய மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினராகக் கருதப்படும் நிலையுடையவராவர்.

4. தேசிய மகளிர் ஆணையம் (National Commission for Women)

மகளிர் நலக்காப்பு சிறக்க, 1990-ம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் இவ்வாணையம் அமைக்கப்படுவதாகும். இவ்வாணையத் தலைவரும் தேசிய மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினராகக் கருதப்படும் நிலையுடையவர் ஆவார்.

5. குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (Protection of Civil Rights Act 1955)

தீண்டாமை ஒழிப்பு சட்டப் பிரிவு 17-ன் படி உறுதிச் செய்யப்பட்டுள்ளது. தீண்டாமை ஒழிப்புச் சட்டம் என முதலில் இருந்த திருத்தங்களோடு இந்தக் குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955-ல் உருவாகியது. தீண்டாமை எவ்வழியிலும் பயிலுவது இச்சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். 'தீண்டாமை' என்பது வரலாற்றுப் பொருளில் அறிந்து கொண்டு தவிர்க்கப்பட வேண்டிய செயலாகும்.

6. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கெதிரான கொடுமைகள் தடுப்புச் சட்டம் SC & ST

சமுதாயத்தின் நலிவநடைந்துள்ள பிரிவினர்களாக விளங்கும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மீது பிற சாதியினர் கட்டவிழ்த்து விடும் வன்முறைகள் பல இடங்களில் நிகழ்வது உண்மை.

அவ்வாறான செயல்கள் நிகழும் நேர்வுகளில், சிறப்பு நீதிமன்றங்களின் மூலம், குற்ற விசாரிப்புகளும் நீதித் தேர்வுகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இச்சட்டத்தின் மூலம் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளன.

**7. மனிதக் கழிவகற்றும் பணியாளர்களை பயன்படுத்துதல் மற்றும் உலர் கழிவறைகள் (தடுப்புச் சட்டம் 1993)**

மனிதக் கழிவை சுகாதாரப் பணியாளர்கள் நேரடியாகச் சுமப்பது பல காலமாக இருந்து வரும் நிலையாகும். இவ்வாறு நேரடியாக மனிதர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்படுவதைத் தடுக்க (Employment of Manual Scavangers and Construction of Dry Latrines (Prohibition) Act, 1993) சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அரசியல் சட்ட முகப்புரையிலும் (Preamble) அ.ச. பிரிவு நாற்பத்தி ஏழிலும் மனிதரின் நல்வாழ்வை மேம்படுத்தும் உறுதிகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தச் (1993) சட்டப்படி, புதிதாக உலர் கழிவறைகள், பழையவற்றைத் தொடர்வது, மனிதப் பணியாளர்களை நேரடியாக இந்தக் கழிவறைகளைச் சுத்தம் செய்வதில் ஈடுபடுத்திக் கழிவினைச் சுமக்கச் செய்வது ஆகியன தடை செய்யப்படுவதாகும்.

**8. மனித வர்த்தகம்**

மனித வர்த்தகம் அரசியல் சட்டப்பிரிவு 23-ன் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது. மனித வர்த்தகம் என்பது மகளிரை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதும்தான் என நீதி மன்றத் தீர்ப்புகள் விளக்கமளித்துள்ளன. 1950-ல் இந்தியா மனித வர்த்தகம் தொடர்பான பன்னாட்டுக் கோட்பாட்டில் (International Covenant for Suppression of Immoral Traffic in Women and Girls) கையெழுத்திட்டுள்ளது. அவற்றின் அடிப்படையில் Immoral Traffic (Prevention) Act 1956 நடைமுறைக்கு வந்துள்ளது.

## 9. மகளிரை இழிவுபடுத்தும் வகையில் விளம்பரம்

மகளிரை இழிவுபடுத்தும் வகையில் விளம்பரம் செய்வதைத் தடை செய்யும் சட்டம் (Indecent Representation & Women (Prohibition) Act 1986), விளம்பரங்கள், வெளியீடுகள், ஓவியங்கள். படங்கள், எழுத்து ஆகிய எவ்வழியிலும் மகளிரை நாகரிகத்திற்கொவ்வாத, இழிவான வகையில் முன்னிறுத்துவதைத் தடை செய்கிறது.

## 10. வரதட்சணை ஒழிப்புச் சட்டம் (Dowry Prohibition Act, 1961)

திருமணம் என்னும் இயல்பான மானிட ஏற்பாட்டில் சமுதாயக் கொடுமைகள் நுழைந்து விட்ட 'வரதட்சணையைச் சட்ட பூர்வமாகத் தடை செய்கிறது இச்சட்டம். வரதட்சணை கொடுப்பதும், வாங்குவதும் குற்றமாகும்.

## 11. உடன்கட்டை ஏறுதல் ஒழிப்புச் சட்டம் (Commission of Sati (Prevention) Act 1987

கணவன் இறந்தால் அத்தோடு மனைவியும் மரணத்தைத் தழுவ வேண்டியது தான் என்ற காட்டுமிராண்டித் தனமானக் கொள்கைக்கும், கணவனை எரியூட்டும் நெருப்பிலேயே மனைவி உடன்கட்டை ஏறும் பழக்கத்தினையும் தடை செய்ய விளைந்தது இச்சட்டமாகும். இந்த அவலம் முன்னரே தடுக்கப்படப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்றாலும் 1987-இல் தான் சட்டபூர்வத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 12. தாய்மைப்பேறு நலச் சட்டம் (Maternity Benefit Act 1961)

தாய்மைப் பேறு காலத்தில் மகளிர்க்கு அளிக்கப்பட வேண்டிய சலுகைகள், சட்டப்பூர்வ உரிமைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. பணியிலுள்ள மகளிர்க்கு மகப்பேறு முன்னரும் பின்னரும் என்னென்ன நலன்கள் அளிக்கப்பட வேண்டும் என இச்சட்டம் வகை செய்கிறது.

## 13. குழந்தைத் திருமண தடைச் சட்டம் (Child Marriage Restraint Act 1929)

அறியாப் பருவத்திலேயே குழந்தைகளுக்குத் திருமணம் செய்விக்கும் மூடப்பழக்கம் நடைமுறையில் இருந்து வந்தது. இச்சட்டத்தின் படி திருமணத்திற்கு குறிப்பிட்ட குறைந்த பட்ச வயது நிர்ணயித்து, அத்தகைய வயது அடையாதவர்களுக்குத் திருமணம் செய்விப்பது குற்றமாக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட போது நிர்ணயித்த வயது வரம்பு உயர்த்தப்பட்டு தற்போது 18 வயது என ஆகியுள்ளது.

## 14. குழந்தைகளை ஈடு வைத்தல் தடைச் சட்டம் (Children (Pledging of Labour) Act 1933)

வேலை செய்வதற்கெனவே குழந்தைகளை ஈடாக வைத்து அதன் மூலம் பெற்றோர் அல்லது காப்பாளர் பணம் பெறுவது, குழந்தைகளை அவ்வாறு ஈடு வைத்த நிலையில் வேலைகளில் ஈடுபடுத்துவது ஆகியவை இச்சட்டப்படி குற்றமாகும்.

15. அனாதை இல்லங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் சட்டம் (Orphanages and Other Charitable Homes (Supervision and Control) Act 1960)

ஆதரவற்ற மகளிர்க்கும், குழந்தைகளுக்கும் தொண்டாற்றும் காப்பகங்கள், அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் குற்றச் செயல்கள் நடைபெறாமல் தடுக்கும் நோக்குடன் இயற்றப்பட்ட சட்டம் இதுவாகும்.

16. குழந்தைகள் சட்டம் (Children Act, 1960) :

குழந்தைகள் நலன், பாதுகாப்பு, அவர்களுக்கான கல்வி, பயிற்சி, சிறார் குற்றவாளிகள் விசாரணை முதலிய பல்வேறு விசயங்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை இச்சட்டம் வகுத்தளித்துள்ளது.

17. சிறார் தண்டனை நீதிச் சட்டம் (Juvenile Justice Act, 1986)

சிறார் குற்றவாளிகள் திருந்திச் சமுதாயத்தோடு இணைந்து வாழ உதவிடும் வகையில் அவர்களுக்கானக் குற்றத் தண்டனை முறைகள் உருவாக, சிறார் குற்றவாளிகளுக்குப் பயிற்சி, கவனிப்பு, அவர்கள் வளர்ச்சியுற வழிகள் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு இயற்றப்பட்ட சட்டமாகும்.

18. இளைஞர்களைத் தவறான வழிகளில் செலுத்தும் வகையான வெளியீடுகளைத் தடை செய்ய (1956) :

இளைஞர்களைத் தவறான வழிகளில் செலுத்தும் வகையான வெளியீடுகளைத் தடைசெய்ய இச்சட்டம் இயற்றப்பட்டது. படங்கள், வெளியீடுகள் மூலமாக, குற்றம், வன்முறை, கொடுஞ்செயல்கள், மனதை மாசுபடுத்தும் வகையான நிகழ்வுகளை

இளைஞர்கள் மத்தியில் பரப்புவது, அவர்களைத் தவறான வழியில் செலுத்துவதாகும். எனவே, அவ்வாறான வெளியீடுகள் தடை செய்யப்படுவதாகும், வெளியிடுபவர்கள் தண்டனைக்குரியவர்கள் எனவும் இச்சட்டம் கூறுகிறது.

19. சாதி இயலாமைகள் நீக்கச் சட்டம்

நீதிமன்றத்தின் முன் எந்த வழக்கிலும் எவருடைய சொத்தும் சட்டப்பூர்வமாக அன்றி, 'மத அல்லது சாதி வழக்கப்படி எனும் காரணங்காட்டி, இழப்புறச் செய்ய முடியாது என்பது' இச்சட்டத்தின் முக்கிய வலியுறுத்தலாகும்.

20. மனநலன் சட்டம் **(Mental Health Act, 1987)**

மனநலன் இழப்பு (Lunacy) என்பதை இச்சட்டம் தெளிவுபடுத்தி விளக்கியுள்ளது. மனநலன் இழந்துள்ளோர்க்கான பாதுகாப்பு, மருத்துவ வசதிகள் முதலியன இச்சட்டம் மூலம் நெறிப்படுத்தப் பட்டுள்ளன.

21. கொத்தடிமை ஒழிப்புச் சட்டம்
**(Bonded Labour (system) Abolition Act, 1976)**

அரசியல் சட்டப்பிரிவு 23 கொத்தடிமை மற்றும் பிற தடைகளைத் தடை செய்கிறது. பொருளாதார நிர்ப்பந்தங்களால் தளையப்பட்டு, நலிவடைந்த பிரிவினர் வற்புறுத்தி வேலை செய்ய ஈடுபடுத்தப்பட்ட கொத்தடிமை முறையை இச்சட்டம் ஒழிக்கிறது.

சமூக நீதி **(Social Justice)**

"மனித சமுதாயம் நியாயத்துடனும் நேர்மையுடனும் செயல்படுவதே நீதியாகும். சட்ட ரீதியாக சமூகப் பண்புகளை மனசாட்சியுடன் கொள்கைப் பிடிப்புடனும் செய்வதே" சமூக நீதியாகும்.

## கல்விக்கு உரிமை (Right to Education)

எல்லாவிதத்திலும் நமது வருங்காலத்தின் திறவு கோல் கல்வியின் கையில் உள்ளது. நமது அரசியல் சாசனத்தின் 45-ஆவது சட்டப் பகுதி குழந்தைகளுக்கு 14 வயது வரை இலவச, கட்டாயக் கல்வி அளிக்க முயற்சி எடுக்க வேண்டும் என்று கூறுகிறது. 1960-இல் இந்திய பாராளுமன்றம் டெல்லி தொடக்கக் கல்வி சட்டத்தை இயற்றியது. இதைத் தொடர்ந்து பல மாநிலங்களிலும் இத்தகைய சட்டங்கள் இயற்றப்பட்டன.

இதன் விளைவாக ஐந்தாண்டுத் திட்டங்களில், தொடக்கக் கல்விக்கான செலவுத் தொகை திடீரென உயர்ந்தது. 1986-தேசிய கல்விக் கொள்கையும், 1992-காரியத் திட்டமும் கல்வி குழந்தைகளின் வளர்ச்சிக்கு அடிப்படை என அறிவித்தன. 14-வயது வரை அளிக்கப்படும் கல்வியின் தரம் திருப்திகரமாக உள்ளது எனவும் அறிக்கை விடுத்தன.

தேசிய பொருளாதாரக் கொள்கை சிறுவயதிலேயே குழந்தை நலப் பாதுகாப்பு, தொடக்கக் கல்வியை முறைசார்ந்த முறைசாரா வழிகள் வழி பொதுவாக்குதல். இவற்றின் வழியாக "அனைவர்க்கும் கல்வி" என்ற தனது கொள்கையை அடைய முயல்கிறது. 1994 மார்ச் வரை 0.32 மில்லியன் முறைசாரா கல்வி மையங்கள் இருந்தன. 5.7 மில்லியன் குழந்தைகள் அவற்றின் வழி கல்வி பெற்று பயனடைந்தனர்.

தொடக்கக் கல்வியை பொதுமயமாக்கி அனைவருக்கும் கல்வி சென்றடையும் வகையில் கல்விக் கொள்கை வகுத்து கல்வித்துறை பல திட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளது.

## 8. சமுதாய, அரசியல் விழிப்புணர்ச்சி பற்றி விளக்குக.

### அரசியல் (Politics)

கல்வியின் மூலம் பிரமிக்கதக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை எவரும் மறுக்க இயலாது. ஆங்கிலக் கல்வி பெற்றதன் பயனாக இந்தியர்களுடைய அறிவுவொளி சுடர்விட ஆரம்பித்தது. ஆங்கிலக் கல்வியின் மூலம் பல நாடுகளின் புரட்சிகள், அரசியலமைப்பு முறைகள், அரசியல் அறிஞர்கள் ஆகியவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

நம் நாட்டு தேசிய உணர்வு தட்டி எழுப்பப்பட்டது. நாட்டுப் பற்று என்னும் நல்ல விதைகள் நம் மக்கள் மனதில் ஊன்றப்பட்டதற்கு கல்வியே காரணம், கல்வியே நம்முடைய விடுதலைப் போராட்டத்திற்குப் பாதை அமைத்தது எனலாம்.

அரசியல் விழிப்பு ஏற்பட கல்வி பெரிதும் பயன்பட்டது. பாராளுமன்றமுறையிலான அரசாங்கத்தை ஏற்படுத்த கல்விபெரிதும் துணை புரிந்தது. அரசியலமைப்பில் பல்வேறு முறைகளைத் தெரிந்து கொள்ள முடிந்தது. ஆட்சி முறையில் ஒரு பயிற்சியும், தல சுய ஆட்சியினை ஏற்று நடத்தும் முறையினையும் தெரிய வாய்ப்பு ஏற்பட்டது.

ஆங்கில ஆட்சியினை ஆட்டம் காணவைப்பதற்கு கல்வியே ஒரு பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தது என்பது 'குன்றின் மீதிட்ட விளக்கு போல்' நன்கு தெரிகிறது என்றால் அது மிகையாகாது. அது மட்டுமல்லாமல் ஆங்கிலேயர்கள் ஆட்சியினை விட்டு இங்கிலாந்து சென்ற பின்னரும் அரசியலில் விழிப்புணர்வு ஏற்பட்டதிற்கு இதுதான் காரணமாகும்.

1947-ஆம் ஆண்டு விடுதலை பெற்றபின் அரசியல் தலையீட்டால் கல்விக் கொள்கைகள் நன்கு ஏற்படுத்தப்பட்டன. இந்திய

அரசாங்கம் டாக்டர் இராதாகிருஷ்ணன் குழு, டாக்டர் A.L. முதலியார் குழு, ஆச்சாரியா நரேந்திர தேவ் குழு, கோத்தாரிக்குழு ஆகிய குழுக்கள் கல்வி வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்டன. அவைகளால் கல்வியில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

## சமுதாயம் (Society)

கல்வியினால் சமுதாயத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சமுதாய அமைப்பானது நன்கு அமைய கல்வி பயன்பட்டது. கல்வி முறை ஏழைக்கும் சமுதாயத்தில் நல்ல நிலை அடையும் வாய்ப்பினை அளித்தது எனலாம்.

சமுதாய அமைப்பில் கல்வி பெற்றவர்களே நன்கு மதிக்கப்பட்டார்கள். உயர் பதவியில் வைக்கப்பட்டார்கள். "திறமைக்கு ஏற்ற வாய்ப்பு" கொடுக்கப்பட்டது. கல்வி சம வாய்ப்பினை நல்கியது ஒரு பெரும் சமூக மாற்றமாகும்.

பெண்கள் ஆண்களுடன் சரிசமமாக பல தொழில்களில் ஈடுபடவும், பல துறைகளில் பணி புரியவும் கல்வி ஒரு பெரும் வாய்ப்பினை நல்கியது சமுதாய மாற்றமாகும். பெண்கள் விடுதலைக்கு இது அடிப்படையாக இருந்தது. கல்வி உடைய பெண்கள் விளை நிலம், கல்வியில்லாத பெண்கள் களர் நிலம், என்று கவிஞர் பாரதிதாசனார் கூறியுள்ளார். 'பெண்கள் நாகரிகத்தின் தொட்டில்' எனப்படுவர் என்பது அனைவரும் அறிந்ததாகும். மனு என்பவர் பெண்கள் நல்ல மதிப்புக்குரிய இடத்தில் வைத்துப்போற்ற வேண்டும் என்று கூறியுள்ளார்.

சமுதாயச் சீர்கேடுகள் பல மலிந்து கிடந்தன. அதைப் போக்கவும், நீக்கவும் கல்வி பயன்பட்டது. இராசாராம் மோகன்ராய் என்பவர் அச்சமுதாயக் கேடுகளை களைவதில் முணைந்து நின்றார், இதுவும் ஒரு மாற்றமாகும்.

பெண்கள் கல்வி அவர்களது விடுதலைக்கும் பெரிதும் உதவியது. அவர்களுக்கு வாக்குரிமை கொடுத்ததும் ஒரு சமுதாய மாற்றமாகும். முகமூடி அணிவது நீக்கப்பட்டதும், தேவதாசி முறை ஒழிக்கப்பட்டதும், சதி நீக்கப்பட்டதும், குழந்தை திருமணம் ஒழிக்கப்பட்டதும், விதவை மறுமணம் வலியுறுத்தப்பட்டதும் சமுதாய மாற்றங்களேயாகும்

கல்வியினால் ஏற்பட்ட மற்றொரு மாபெரும் மாற்றம் தீண்டாமையினை ஒழித்ததாகும். தாழ்த்தப்பட்டோர் தலை நிமிர்ந்து வாழவும், நவநாகரீக வாழ்வினை நல்ல முறையில் அனுபவிக்கவும் பல்வேறு துறைகளில் பணி புரியவும் கல்வியே காரணமாகும் எனலாம்.

இத்தகைய பல மாற்றங்கள் நிகழ கல்விதான் காரணமாக அமைந்தது என்பது திண்ணம்.

## சமுதாய விழிப்புணர்ச்சி (Social Awareness)

அரசு ஒவ்வொரு தனிமனிதனுக்கும் செய்யும் சில அடிப்படைத் தேவைகளை எப்படிச் செய்கின்றது, எவ்வாறு செய்கின்றது என்ற விழிப்புணர்ச்சியானது சமுதாயத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் தேவை. இங்கு அரசு செய்யும் சேவைகளையும் பணிகளையும் கேட்டுப்பெறும் உரிமை மக்களாகிய நமக்கு உண்டு. இவைகளைப் பெறுவது நமது உரிமையாகும். இவற்றைப் பாதுகாப்பது நமது கடமையாகும், இது போன்ற சமுதாய முன்னேற்றம், கலாச்சாரம், அரசின் தலையீடு, பொதுமக்களின் பங்கு போன்ற செயல்பாடுகளைப் பற்றி அறிவதே சமுதாய விழிப்புணர்ச்சி ஆகும்.

## மக்களின் அடிப்படைத் தேவைகள்

1. உணவு மற்றும் உறைவிடம்.
2. கல்வி.
3. மருத்துவம் மற்றும் சுகாதாரம்.
4. போக்குவரத்து.
5. விவசாயிகள் தொழில் முனைவோர்.

## அரசியல் விழிப்புணர்ச்சி (Political Awareness)

குடியரசு நாடாகத் திகழும் நம் இந்திய நாட்டின் ஆட்சியாளர்களை தேர்தல் மூலம் சரியாகத் தேர்ந்தெடுப்பதும், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை செம்மையான முறையில் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டியது மனிதன் விழிப்புணர்வுடன் அறிந்து கொள்வதே அரசியல் விழிப்புணர்ச்சி எனப்படும்.

## அரசியல் விழிப்புணர்ச்சியின் செயல்பாடுகள்

1. வாக்களிக்கும் கடமை.
2. தேர்தலில் போட்டியிடுதல்.
3. தொகுதி பற்றிய விழிப்புணர்வு
4. அரசியல் தலைவர் பற்றிய விழிப்புணர்வு.
5. பணிகளை செய்யத் தூண்டுதல் அல்லது உரிமைகளைக் கேட்டுப் பெறுதல்.

## அரசியல் விழிப்புணர்ச்சியின் படிநிலைகள்

1. கல்வியறிவின்மை.
2. தவறான தகவல்
3. பொதுவான நிலை.
4. கவனத்துடன் உள்ள நிலை
5. அனுபவ நிலை.

**9. சமூக ஒருமைப்பாட்டின் செயல்முறைகள் யாவை? (April-2011)**

## சமூக ஒருமைப்பாடு (Social Integration)

ஒரு நாட்டின் ஒற்றுமை, நேர்மை மற்றும் சக்தி வாய்ந்த அரசாட்சி அந்நாட்டின் மக்களிடையேயுள்ள நட்புணர்வுடன் கூடிய ஒருமைப்பாட்டைப் பொறுத்ததாகும். சமூக நல்லிணக்கமானது வெவ்வேறு பொது மரபில் இணைந்த குழுக்கள் மற்றும் மதங்களின் கருத்தொருமித்த உணர்வுகள் அக்கறை மற்றும் அபிப்பிராயங்களாகும்.

ஒரு சமுதாயம் எப்பொழுதும் ஒரு பிரதேசத்துக்குள்ளே கூட்டமாக வாழ்பவர்கள். மாநிலம் என்பது ஓர் ஒருங்கிணைந்த அமைப்பு. ஆனால், அது ஒரு சமுதாயம் அல்ல. தேசியம் என்பது ஒரு வகையான சமுதாய உணர்வு கொண்டது. நாடானது மிகவும் பெரிய அளவில் செயல்படும் சமுதாயமாகும். அதாவது, நாடு என்பது ஒருமைப்பாட்டுடன் கூடிய பரந்த உணர்வு நிலையுடன் ஊடுருவக் கூடிய ஒரு பெரிய தொகுதி ஆகும்.

பல்வேறுபட்ட சூழல்களில் பல்வேறுபட்ட தன்மையுடைய மக்கள் ஒரு பரந்த சக்தி வாய்ந்த ஆட்சியின் கீழ் அவர்களுடைய தன்னியற்படுத்தும் இயல்புகளுடன் இணைந்து ஓரினமாக வாழ்தலே இந்திய நாட்டின் ஒருமைப் பாட்டிற்கு சிறந்த அத்தாட்சி ஆகும்.

### சமூகப் பற்றின் பொதுக்கருத்து

சமூகப் பற்று என்பது ஒரு கருத்து சம்பந்தமான ஆய்வாகும். அதன் பொருள் என்னவென்றால், ஒரு சமூகமானது வெவ்வேறு செயற்பாடுகளைக் கொண்ட மதங்களாகப் பிரிக்கபட்டுள்ளது. அவர்கள் அவ்வப்போது ஒருவரையொருவர் எதிர்க்கின்றனர். ஒரு சமுதாயத்திற்கும் மற்றொரு சமுதாயத்திற்குமிடையே போட்டி

மனப்பான்மையுடன் செயல்படுகின்றனர். இந்த மாதிரியான போட்டி மனப்பான்மையோடு பார்க்கும் போது பொய்யான குற்றச்சாட்டுக்கள், துன்பங்கள் உருவாக்குதல், வேண்டுமென்றே அவமானப்படுத்துதல், அப்பாவி மக்களின் வீடுகளையும், உடைமைகளையும் எரித்தல், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்களுக்கெதிரான கொடுமைகளும், கொலை குற்றங்களும் உருவாகின்றன.

இவ்வாறு மக்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு உரியவர்களாக சேர்ந்து ஒரு பொது நலனுக்காக, பரந்த மனப்பான்மையுடன், தங்களை முழுவதுமாக ஐக்கியப்படுத்தி ஒரு குறிப்பிட்ட நலனுக்காக மட்டுமல்லாது எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டு வாழ்வதே சமூக ஒருமைப்பாடாகும்.

சமூகப் பற்று உள்ளவர்கள் மதத்தின் வழியாக செயல்களைச் செயல் படுத்துபவர்களாகும். ஒரு சமுதாயத்தைச் சார்ந்தவன் மதச் சார்புடையவன் அல்ல. ஆனால், அவன் மதத்தைத் தொடர்புபடுத்தி அரசியலைப் பயிற்சி செய்பவன். இப்படிப்பட்டவர்கள் தேசியத்திற்கும் மக்களுக்கும் எதிரானவர்கள். அவர்கள் அரசியலில் உயர்ந்த பதவிகளை அடைவதற்காக கடவுளை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள்.

### சமூக ஒற்றுமையின் விளைவுகள்
### (Issues of Social Integration)

1. பொருளாதார வளர்ச்சி.
2. கல்வியறிவு பெறுதல்.
3. ஜாதி வேறுபாடு இன்மை.
4. சமுதாய முன்னேற்றம்.
5. வேலைவாய்ப்பு அதிகரித்தல்.
6. தனிமனித மதிப்பு அதிகரித்தல்.

## ஒருங்கிணைந்த செயல்பாடு

ஒவ்வொரு தனி மனிதரிடமும் அளப்பரிய ஆற்றல்கள் அடங்கியுள்ளன. நிலத்திற்குள் புதைந்துள்ள தங்கத்தை வெட்டி வெளியே எடுப்பது போன்று, தனி மனிதர்களின் ஆற்றலை உணர்ந்து வெளிக் கொணர்வது சமூக ஆக்கத்திற்கு முதற்படியாக அமையும். அடுத்தது தனித்தனியாக இருக்கும் ஆற்றல்களை எல்லாம் ஒன்றாகத் திரட்டி செயல்பாட்டுக்குக் கொண்டு வருவது.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்று சொன்ன பாரதியார் இணைந்த செயல்பாடுகளினால் பலவற்றைச் சாதிக்க முடியும் என வழிகாட்டியுள்ளார். நமது கையிலுள்ள ஐந்து விரல்களில் ஒவ்வொன்றும் தனித்தனியாகச் சிறப்புடையன. அதேபோல் நமது உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்பும் அதனதன் மட்டில் சிறப்புடையன. அவை ஒன்றுடன் ஒன்று இணையாவிட்டால் உடலின் இயக்கம் நடைபெறாது. தனி மனிதர்களும் தம்முள் இணைந்து ஆற்றும் சமூகச் செயல்பாடுகள் சிறப்பாக அமையும்.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்றும் 'தங்கம் செய்யாததைச் சங்கம் செய்யும்' என்றும் கூறப்படுகிற பொன்மொழிகள். இணைந்த செயல்பாடுகளுக்கான தூண்டுதல்கள் ஆகும். ஒரு மனிதன் தனது ஒரு நாள் வாழ்க்கையில் பயன்படுத்துகிற பொருட்களில் எத்தனை மனிதர்களது உழைப்பு அடங்கியிருக்கிறது? இதை ஒரு நிமிடம் சிந்தித்தால் 'கூடித் தொழில் செய்' என்ற பெரியோரின் அறிவுரைக்குப் பொருள் தெரியும். பல்வேறு தொழிலாளர்கள் தங்களது உழைப்பைத் தந்தால்தான் நாம் வாழ்கிற வீடு வடிவம் பெற்றுள்ளது. பல்வேறு தனி மனிதர்களின் ஒன்றிணைந்த செயல்பாட்டால் உருவானவைதான் நம்மை முழு மனிதர்களாக காட்டும் ஆடைகள்.

மனிதன் இந்த வகையான தேவைகள் நிறைவேற மனிதர்கள் கூடித் தொழில் செய்ய வேண்டும். ஒன்றிணைந்த செயல்பாடு வேண்டும். அதற்கு இனிய பண்புகளையும் இணக்கமான உறவுகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**10. சமூக நீதி பற்றி விளக்குக.**

## சமூக நீதி (Social Justice)

"மனித சமுதாயம் நியாயத்துடனும் நேர்மையுடனும் செயல்படுவதே நீதியாகும். சட்ட ரீதியாக சமூகப் பண்புகளை மனசாட்சியுடன் கொள்கைப் பிடிப்புடனும் செய்வதே" சமூக நீதியாகும்.

### நீதியரசர் கிருஷ்ணய்யர்

"சமூக நீதி என்பது மிகவும் பரந்த கொள்கையாகும். இது சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் சமமான நியாயத்தை உறுதி செய்து தருகிறது. மேலும் சமூக நீதி பெற ஒவ்வொரு மனிதனின் அடிப்படை கலாச்சார ஆன்மீக மற்றும் இதர தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

எனவே, சமூக நீதி மனித இனத்தை சமூக மற்றும் பொருளாதார ஏய்ப்புகள் போன்ற பண்டைய கட்டுகளிலிருந்து விடுவித்து முழு மனிதனாக வாழ வழி கோலுகிறது. இன்று சமூக, அரசியல் மற்றும் பொருளாதார ரீதிகளில் ஒதுக்கப்பட்ட மக்கள் சமத்துவம் பெற வழிவகை செய்வதே சமூக நீதியாகும்.

## சமூக நீதியின் தேவை (Need for Social Justice)

சமுதாயத்தில் ஒருவர் உயர்ந்தவர் மற்றவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடுகளைக் களைந்து உலகில் பிறந்த ஒவ்வொருவரும்

சமம். அதன்படி மனித மாண்பு உயரவும், மனித நேயம் மலரவும், சமூகத்தில் உள்ள ஜாதி, மத, இன ரீதியாகப் பிணைக்கப்பட்டுள்ள கொத்தடிமைத்தனத்திலிருந்து விடுபடவும், அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தடை கற்களாக இருக்கும் ஆதிக்க வர்க்கத்தினரிடமிருந்து விடுதலை பெறவும், தாங்கள் அனைத்து துறைகளிலும் சுதந்திரமாக செயல்படவும், நாட்டில் பொது அமைதி ஏற்பட்டு, அதன் வாயிலாக தேசிய ஒருமைப்பாட்டுடன் நாடு வளர்ச்சியடையவும் சமூக நீதி தேவைப்பட்டது.

ரிக் வேத காலத்தில் நான்கு பிரிவினரும் பற்பல சாதிகளைச் சார்ந்தவராக பிளவுபட்டு காணப்பட்டனர். சாதி வேறுபாடுகள் பெருகின. அனைத்து சமூகமும் ஒன்றுபட்டு இருந்தால்தான் நாட்டில் ஒற்றுமை மலரும்.

“வர்ணா” என்பதின் பெயரில், அடிப்படையில் மலரும் சுதந்திரம், சமத்துவம் என்னும் தங்களது அடிப்படை உரிமைகளை இழந்தனர். பல நூற்றாண்டுகளாக அடிமைப்படுத்தப்பட்டனர். இதுவே பழக்கமாகவும் பாரம்பரியமாகவும் மாறியது.

சாதிகளுக்குக் கட்டுப்பட்ட இந்து சமுதாயம் நெடுங்காலம் சமூக நீதியைப் பேண தங்கள் உரிமைகளையும் கடமைகளையும் உணரவில்லை. இதுவே சமூக நீதி மறுக்கப்பட காரணமாயிற்று. எனவே சமூக நீதியின் தேவை இன்றியமையாததாயிற்று.

**காரணங்கள்**

1. சாதிப் பஞ்சாயத்து.
2. சமுதாய அமைப்பு.
3. உண்பதிலும் பிறருடன் பழகுவதிலும் தடைகள்.
4. சமூக சமய நிகழ்வுகளில் பல்வேறு பிரிவினை.

5. தொழிலிலும் வாய்ப்புக்கள் குறைவு.
6. திருமணத்தில் கட்டுப்பாடுகள்.
7. பெண்களுக்கு கட்டுப்பாடுகள்.

## சமூக நீதியின் அளவீடுகள்

1. சமத்துவம் (Equality).
2. விடுதலை (Liberty).
3. பாதுகாப்பு (Security).
4. சுதந்திரம் (Independence).
5. ஒற்றுமை (Unity).
6. பாலினப் பாகுபாடின்மை (Gender Inequality).
7. சமூக நீதி பேணும் இயக்கங்கள் (Reform Movements).
8. கல்வியறிவு (Education).
9. நவீனமயமாக்கல் (Modernization).

## சமூக நீதியில் அம்பேத்காரின் பங்கு (Contributions of Ambedkar in Social Justice)

தீண்டாமையால் இறுதிவரை பாதிக்கப்பட்டு, சமுதாயத்தின் விளிம்பிற்கு விரட்டப்பட்ட தலித் இன மக்களின் மாபெரும் தலைவர் டாக்டர் அம்பேத்கார். தனது அறிவுக் கூர்மையாலும், திறமையாலும் இந்த உபகண்டத்தின் முக்கியப் பிரச்சனையான சாதி-தீண்டாமையின் வேர்களைப் பல்வேறு பரிமாணங்களில் ஆராய்ச்சி செய்து, சமத்துவ சமதர்ம சமூகத்திற்காகப் போராடியவர். இவரது ஆழமான ஆராய்ச்சிகளில் மானுடவியல், சமூகவியல், பண்பாட்டியல் மற்றும் வரலாற்று ரீதியிலான கருத்துக்கள் ஏராளமாகப் பொதிந்து கிடக்கின்றன. இவர் மனித உரிமைகளையும், சமூக நீதியையும் வற்புறுத்திய ஒருவர் ஆவார்.

## சமூக நீதியில் ஈ.வே.ரா. பெரியாரின் பங்கு (Contributions of E.V.R. in Social Justice)

தமிழகத்தில் தோன்றிய முக்கியத் தலைவர்களில் ஒருவர் பெரியார் ஆவார். சமரசமாகாமல் பல வழிகளிலும் சமதர்ம சமூக அமைப்பிற்காகப் போராடிய மாமனிதர் இவர். வைக்கம் போராட்டத்திலிருந்து தொடங்கிய இவரின் போராட்டங்கள் இவரின் இறுதி மூச்சுவரை சென்றன. பொதுவுடைமைச் சித்தாந்தவாதியான இவரின் எண்ணமும் செயல்பாடும் நீதியான, சமத்துவ சமூகத்தை எப்படிப் படைப்பது என்பதே. அந்த சமூக முறையின் அடித்தளமான பிராமணிய வேதங்களையும், உபநிடதங்களையும், தீண்டாமையை நிலைநிறுத்திய மனுதர்மத்தையும் கடுமையாக எதிர்த்தார். தமிழ்ச் சமூகத்தில் ஒரு புரட்சி ஏற்பட திராவிடர் கழகத்தை ஆரம்பித்து, அதைப் பகுத்தறிவுப் பாதையில் இட்டுச் சென்றார்.

இவர் சமூக நீதியின் தந்தை. தென்கிழக்கு ஆசியாவின் சாக்ரட்டீஸ் எனவும், புதுயுகத் தீர்க்கதரிசி எனவும் அழைக்கப்படுபவர். சமூகம், கல்வி போன்றவற்றில் மிகவும் பின்தங்கி உள்ள தாழ்த்தப்பட்டோரை உயர்த்த மிகவும் பாடுபட்டவர். ஈ.வே.ரா. சமூக நீதியை நிலைநிறுத்துவதற்காக சுய மரியாதை திருமணங்களை நடத்துவதை மிகவும் ஆதரித்தார்.

பிறவியில் யாருமே உயர்ந்தவர், தாழ்ந்தவர் இல்லை. எல்லோருமே மனிதகுலம் தான். மக்களின் உரிமை மறுக்கப்படுவதும், அடிப்படை உரிமைகளைப் பறிப்பதும் மனித நேயமற்ற செயல்கள். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் போதனையை நினைவில் கொண்டு சமூக நீதி பேணப்பட வேண்டியது இன்றியமையாதது.

## செயல் - III

## (Activity - III)

## Part - A

1. சமூகம் என்பதன் பொருள் யாது? அதன் முக்கியத்துவத்தை எழுதுக.
2. சமூகம் என்ற பதத்தை வரையறு. சமூகத்தில் மதிப்புகளின் தேவையை விளக்குக.
3. ஜனநாயகம் என்றால் என்ன? இந்திய ஜனநாயகத்தைப் பற்றி எழுதுக.
4. ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தைக் கூறுக.
5. மதச்சார்பின்மை பற்றி எழுதுக.
6. மதச்சார்பின்மை-சமூகத்தின் தனிச்சிறப்புப் பண்புகள் யாவை?
7. சமதர்மக் கொள்கையின் முக்கியத்துவத்தைக் கூறுக.
8. பாலின நீதி என்றால் என்ன?
9. மனித உரிமைகளின் முக்கியத்துவத்தைக் கூறுக.
10. சமூக ஒருமைப்பாட்டின் செயல்முறைகள் யாவை?

## Part - B

1. ஜனநாயகம் என்ற பதத்தை வரையறுத்துக் கூறு. சர்வாதிகாரத்துடன் ஜனநாயகத்தை ஒப்பிடு.
2. சமதர்மக் கொள்கையின் முக்கியத்துவத்தைக் கூறுக.
3. "மனித உரிமைகளின்" முக்கியத்துவத்தையும் ஜனநாயக சமூகத்தில் "சமூக நீதி" பற்றியும் விவரி.
4. சமூக நீதி பற்றி விளக்குக.

# அலகு – 4

# தொழில் சார்ந்த மதிப்புகள்

# PROFESSIONAL VALUES

# அலகு - 4

## தொழில் சார்ந்த மதிப்புகள்
## PROFESSIONAL VALUES

**1. எத்தொழிலுக்கும் பதில் சொல்லும் பொறுப்பு மிகவும் அவசியம் என்று ஏன் கருதப்படுகிறது?**
**(மாதிரி வினாத்தாள், MKU)**

பொறுப்பு **(Responsibility)**

அதிகாரத்தை ஒருவர் மற்றொருவரிடம் ஒப்படைப்பதன் நோக்கம் அவர் தமது கடமைகளை முறையாக நிறைவேற்றுவதே ஆகும். எனவே, பொறுப்புக்கள் முதலில் ஒப்படைக்கப்பட்டு அதன் பின்னர் அதிகாரம் வழங்கப்படுகின்றது என்பதே நியாயமானதாகும். பொறுப்பு என்ற சொல்லை வழக்கத்தில் வெவ்வேறு வகையான ஒன்றுக்கொன்று மாறுபட்ட பொருள்களில் பயன்படுத்துகின்றோம்.

பதில் சொல்லும் பொறுப்பு (Accountability), பொறுப்பு (Responsibility) இரண்டும் வெவ்வேறு பொருள் தரும் சொற்களாகும். ஆனால், பல அறிஞர்கள் இவ்விரண்டு சொற்களையும் ஒன்றுக்கொன்று மாற்றிப் பயன்படுத்தியுள்ளதையும் காண முடிகின்றது. எனினும் கடமை என்ற சொல், இவ்விடத்தில் துணைப் பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணி அல்லது வேலை என்றே பொருள்படும். இது கட்டாயமாக செய்யப்பட வேண்டிய பணி என்பதையும் வலியுறுத்தும் சொல்லாகும். எனவே, இச் சொல்லின் திரண்ட பொருள், துணை அலுவலர்கள் கட்டாயமாகச் செய்ய வேண்டிய வேலை என்பதேயாகும்.

## பதில் சொல்லும் பொறுப்பு (Accountability)

ஒப்படைக்கப்பட்ட கடமையை ஒழுங்காக நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் துணை அலுவலர்களுக்குள்ளது. இதுவும் கட்டாயமான (obligatory) ஒன்றே ஆகும்.

ஒருவரைப் பொறுப்பாளியாக்காமல், அல்லது பதில் சொல்ல வேண்டிய பொறுப்பை உருவாக்காமல், பொறுப்புக்களையும், அதிகாரத்தையும் ஒப்படைப்பதில் பொருளில்லை. ஆயினும் பதில் சொல்லும் பொறுப்பு என்ற இச்சொல் உணர்த்தும் நுட்பமான பொருள் விளக்கங்களை எளிதில் புரிந்து கொள்ளவும், பொறுப்பிற்கும், பதில் சொல்லும் பொறுப்பிற்கும் உள்ள வேறுபாடுகளை அவசியம் உணர்ந்து கொள்ளவும் இதன் சிறப்பியல்புகளை உணர்வது அவசியம்.

## பதில் சொல்லும் பொறுப்பு என்பதன் சிறப்பியல்புகள் (Characteristics of Accountability)

1. நிர்வாகம் மேலாளருக்கு அதிகாரங்களை அளித்து, அவருடைய பொறுப்புக்களையும் தெளிவுபடுத்துகின்றது. மேலாளர் நிர்வாகத்திற்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்புடையவர் ஆவார். மேலாளர் இவ் அதிகாரங்களையும், பொறுப்புக்களையும் தன் கீழ்ப்பணியாற்றும் அலுவலர்களிடம் ஒப்படைக்கின்றார். ஆனாலும், அவர் தமது பதில் சொல்லும் பொறுப்பையும் ஒப்படைத்து விட முடியாது. அவர் தொடர்ந்து நிர்வாகத்திற்குப் ' பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு உடையவராகவே இருக்கிறார். எனவே, பதில் சொல்லும் பொறுப்பை ஒப்படைக்க இயலாது என்பது விளங்கும்.
2. துணை அலுவலர்கள் செய்யும் தவறுகளுக்கும் மேலிடத்துக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு மேலாளருக்கு உண்டு. துணை அலுவலர்கள் மேலாளருக்குப் பதில் சொல்ல வேண்டியவர்களாவர்.

3. அதிகாரம், பொறுப்பு ஆகிய இரண்டும் மேலிருந்து கீழே இறங்கி வரும். பதில் சொல்லும் பொறுப்பு கீழ் இருந்து மேல் நோக்கி வளர்ந்து செல்லும்.

4. எவ்வளவு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அந்த அளவுக்கே பதில் சொல்லும் பொறுப்பும் உண்டு. அதிகாரத்தை விட அதிகமான பதில் சொல்லும் பொறுப்போ, அல்லது பதில் சொல்லும் பொறுப்பைவிடக் கூடுதலான அதிகாரமோ இயலாது.

## 2. கற்றலின் விருப்பம் இருப்பதை விளக்குக.

### கற்றல் (Learning)

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தாலாட்டில் தொடங்கும் கற்றல், ஒப்பாரி வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. குழந்தை வளர வளர சூழ்நிலையின் உதவியால் மற்றவர்கள், மனம் நோகாமல் தன் குறிக்கோளை அடையவும் இடம், பொருள், காலத்திற்கு ஏற்றவாறு தன்னை மாற்றியமைத்துக் கொள்ளவும் கற்றுக்கொள்கிறது. கற்றல் அனைத்து உயிர்களிடத்தும் காணப்படுகிறது. கற்றல் திறனைக் கொண்டு கற்பவை எல்லாம் உயிருள்ளவை என்றும் இல்லாதவை உயரற்றவை என்றும் பிரிக்கலாம். மனிதன் பலவற்றைக் கற்கிறான். ஆனால் மரக்கட்டை ஏதேனும் கற்கிறதா? எனவே

1. கற்றல் என்பது படிப்படியாக அனுபவத்தின் மூலமாக தத்தம் நடத்தையில் பொருத்தபாட்டை அடைவதாகும்.
2. நமது மொழிப்பயிற்சி, திறமைகள், நாட்டங்கள், நோக்கங்கள், அக்கறைகள், மனப்பான்மைகள் ஆகிய அனைத்திலும் செல்வாக்கு பெறுகிறது.
3. கற்றலால் மாற்றம் ஏற்படுகிறது. மாற்றங்களால் கற்றல் நடத்தைகள் உருவாகின்றன. ஆகவே கற்றல் என்பது மாற்றம் (Change), தளர்ச்சி (development), பொறுத்தப்பாட்டை பெறுதல் (adjustment) போன்ற கருத்துகளைக் கொண்டதாகும்.

## கற்றல் பற்றிப் பல்வேறு அறிஞர்களின் கருத்து

1. கேட்ஸ் (Gates) என்பவர் கற்றல் என்ற சொல்லுக்குக் கீழ்க்கண்டவாறு விளக்கம் தருகிறார். 'அனுபவம் பயிற்சி ஆகியவற்றின் மூலம் எழும் நடத்தைக் கோலங்களே கற்றல்' ஆகும்.
2. அனுபவத்தின் மூலமாக நமது செயலை மாற்றும் செயலை முறைக்கு கற்றல் என்று டாக்டர் எஸ்.பி. நாராயன் கூறுகிறார்.
3. வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு நிலைமைகளுக்கு ஏற்றவாறு ஒருவரது நடத்தை மாற்றங்களைக் கற்றல் ஏற்படுத்துகிறது என்று டாக்டர் ஜி.டி. போவாஸ் கூறுகிறார்.
4. அனுபவத்தின் காரணமாக ஒருவனுடைய நடத்தையில் பெரும்பாலும் நிலையான மாறுதல்கள் ஏற்படுகின்றன. இம்மாறுதல்களைக் கற்றல் என்று டாக்டர் தா.எ. சண்முகம் கூறுகிறார்.
5. கற்றலின் வாயிலாக நாம் அறிவு, படிகங்கள், மனப்பான்மைகள் ஆகியவற்றைப் பெறுகிறோம். இவற்றின் காரணமாக நாம் புதிய முறையில் செயல்படவும் நமது செயல் முறையில் ஏற்படுகின்ற இடர்பாடுகளை அகற்றவும் சூழ்நலைக்கேற்ப நல்ல முறையில் நடந்து கொள்ளவும் முடிகிறது. (குரோ அண்ட்குரோ)
6. கற்றல் என்பது படிப்படியாக நடத்தையில் பொருத்தப்பாட்டை அடைவதாகும் என்கிறார் ஸ்கின்னர்.

மேலே கூறிய பல்வேறு அறிஞர்களின் கருத்துகளின்படி அறிவது.

1. கற்றல் என்பது சூழ்நிலைக்கு ஏற்றவாறு பொருத்தப்பாட்டை அடைதல்.
2. கற்றல் என்பது நம் நடத்தையில் நிலையான மாறுதல்களை ஏற்படுத்துவனவாகும்.

3. கற்றல் என்பது பொதுவானது; தொடர்ந்து நடைபெறுகிறது.
4. முதிர்ச்சியும் கற்றலும் நெருங்கிய தொடர்புடையன. முதிர்ச்சியின் அடிப்படையில் கற்றலின் செயல் முறைகள் நடைபெறுகின்றன.
5. கற்றல் எல்லா உயிர்களிடமும் காணப்படுகின்றன.
6. எல்லா வகையான கற்றல் வகைகளும் ஒரு குறிக்கோளை நோக்கி நடைபெறுகின்றன.
7. வகுப்பறையில் நடைபெறுவதுதான் கற்றல் எனக் கருதுதல் என்பது பள்ளிக்கு வெளியேயும் பிறப்பு முதல் இறப்பு வரைநடைபெறும் ஒன்றாகும்.

## கற்றலின் விருப்பம் (Willingness to Learn)

புத்தகங்களைப் படிப்பது ஒரு யோகம். இது எத்தனையாவது யோகம் என்றுதான் கூற முடியவில்லை. நல்ல புத்தகங்களை வாசிப்பதற்கு ஆகிற நேரத்தைவிட, அவற்றைத் தேர்ந்தெடுப்பதற்கு அதிக நேரம் ஆகும். புத்தகம் படிக்கிறவர்களைச் சில போக்கிரிகள் 'புத்தகப் புழுக்கள்' என்று பழிப்பார்கள். படிப்பது சிறந்த புத்தகமான இருந்தால் அது படிக்கிற மனிதனைப் பெரிதாக்குகிறது. ஆழப்படுத்துகிறது. கூர்மையாக்கி விடுகிறது.

லாங்ஃபெல்லோ (Longfellow) சொன்னபடி, "மகத்தான மனிதர்களின் வாழ்க்கை எல்லாம், நமது வாழ்வினையும் மேம்படுத்த இயலும் என்பதையே சுட்டிக் காட்டுகின்றன". நாம் படிக்கிற மனிதர்களின் வாழ்க்கையில் அவர்கள் சந்தித்த சவால்களைத்தான் நாம் வேறு மாதிரி சந்திக்கிறோம். ஆகவே, வாழ்க்கையின் சிக்கல்களுக்கு விடை சொல்லுகிறவைகள் புத்தகங்களே.

நண்பர்கள் கூட சந்தர்ப்பங்களில் ஏமாற்றி விடுவார்கள். நம்மை எப்போதும் கைவிட்டு விடாத நல்ல நண்பர்கள் புத்தகங்களே. "Reading maketh a ready man" என்றார் ஃபிரான்சிஸ் பேக்கன்

(Francis Bacon) என்ற பேரறிவாளர். வாழ்க்கையின் எந்தச் சவாலையும் எதிர்கொள்ளுகிற பேராற்றலை புத்தகப் புரட்டல் ஏற்படுத்தித் தருகிறது.

நோக்கத்தைக் கற்பித்துக் கொண்டு படித்தால் படித்தது மனதில் தங்கும். வாழ்க்கை இருட்டில் நடுங்காத நம்பிக்கை விளக்குகளை ஏற்றி வைப்பதற்குப் புத்தகங்களே போதுமானவை. திரும்பத் திரும்ப நினைவுக்குக் கொண்டுவந்தால் படித்தது நமது ஊனில், உயிரில் கலந்து நிற்கும். எனவே ஒவ்வொருவரும் கற்றலின் விருப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

3. பொதுவான குறிக்கோள் சாதனையில் 'குழு ஆற்றலின்' முக்கியத்துவத்தைப் பற்றி எழுதுக.

(மாதிரி வினாத்தாள், MKU)

அல்லது

'குழு கற்றலின்' பல்வேறு பண்புக் கூறுகளை விவாதி.

**(April-2011)**

அல்லது

**'குழு கற்றல்' என்றால் என்ன? அதன் முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறுக.**

**(April-2014)**

## குழு ஆற்றல் (Team Spirit)

குழு ஆற்றல் என்பது குழுவில் ஏற்கனவே இருக்கின்ற உறுப்பினர்களை மதித்தல், அவர்களின் செயல்பாடுகளை நல்வழிப்படுத்துதல், அவர்களின் மீது அளவற்ற அன்பு கூறுதல் ஆகியவை குழு ஆற்றலின் செயல்பாடாகும். ஒரு குழுவில் பல நபர்கள் இருப்பார்கள். அவர்கள் அனைவரும் வெற்றி, திறமை போன்றவற்றில் ஒரு குழுவாக செயல்பட்டு குறிக்கோள்களை அடைய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

**குறிக்கோள்களை முடிவு செய்வதன் நோக்கம் :**

1. குறிக்கோள் முடிவு செய்வதானது குறிக்கோளை இலட்சியப் பூர்வமாக விவரிப்பதுடன், அதை நோக்கிய பாதையை அமைப்பதும், முடிவை நோக்கிச் செல்வதுமாகும்.
2. இலட்சத்தியத்திற்குப் பின் செல்வதற்கான உந்துதல் கிடைக்கிறது. இலட்சியத்தை அடைவதற்கான ஒவ்வொரு அடியும் புதிய ஆற்றலையும், பரவசத்தையும் உற்சாகத்தையும் தரும்.
3. திட்டமிட்ட மாற்றம் ஏற்பட உதவுகிறது. மொத்த குறிக்கோளை அடைவதற்குத் தேவையான செயல் திட்டத்தைத் தெளிவுபடுத்தி இது உதவக் கூடும்.

**கூட்டு முயற்சி . . . . . கூட்டு உருவாக்கம்**

நல்ல திட்டங்களை யோசிக்கும் திறன் ஒரு புறம் இருந்தாலும், சுதந்திரமாக செயல்படுவது இன்னும் அதற்குச் சாதகமாக இருந்தாலும் ஒன்றை நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். உடன் பணி புரியும் பணியாளர்களிடமிருந்து பல படிப்பினைகளைத் தயக்கமின்றிப் பெற்றுக் கொள்ள வேண்டும். கூட்டு முயற்சியே பெரிய வெற்றியைத் தரும். ஒரு போதும் குறுகிய எண்ணங்களுக்கு இடம் தரக் கூடாது. காழ்ப்புணர்ச்சிகளுக்கு சிறிதும் ஆளாகாமல், பிறருடைய வலுவான அம்சங்களை இன்னும் மெருகேற்ற நம்மால் என்ன முடியுமோ அதை நாமாகவே செய்ய வேண்டும். பணியாளர்கள் சுதந்திரமாகச் செயல்படுவது நிறுவனத்தின் அறிவு சார்ந்த வலிமையைக் காட்டும். அதே சமயம் அவர்கள் ஒருவருக்கொருவர் திடமாகக் கூட்டுறவாகச் செயல்படுவது அந்நிறுவனத்தின் உணர்ச்சி பூர்வமான வலிமையை அதிகரிக்கும். இந்த வலிமை அதிகரிக்க அதிகரிக்க நிறுவனம் பெரிய வெற்றிகளை எளிதில் குவித்து விடும்.

படிப்பினைகள் :

1. பணியாளர்கள் இணைந்து பணிபுரிவதோடு மற்றவரிடமிருந்து பற்பலப் படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

2. பணியாளர்கள் தனியார் நிறுவனங்களின் ஏணிப் படிகளில் ஏற நினைத்தால், அவர்களின் தனித்திறன்களை விட, மற்ற பணியாளர்களோடு ஒத்திசைந்து செயல்படுவதே மிகவும் அவசியம்.

3. நிறுவனங்களும் பணியாளர்களுக்குச் சுதந்திரம் மட்டும் அளிக்காமல், ஒருவர் மற்றொருவருடன் சேர்ந்து நேர்த்தியாகச் செயல்படுவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கித் தர வேண்டும். அப்போதுதான் நிறுவனம் நாளுக்கு நாள் ஏறுமுகமாகத் திகழும்.

4. அடுத்த தலைமுறை நிறுவனங்கள் வெற்றி பெற வேண்டுமானால் பணியாளர்கள் கூட்டுறவாகச் செயல்பட்டால் மட்டும் போதாது. கூட்டாகப் புதிய விஷயங்களைப் படைப்பூக்கத்துடன் செயல்படுத்தவும் வேண்டும்.

குழு கற்றலின் முக்கியத்துவம் **(Importance of Team Spirit)**

1. வெற்றி என்பது குழுவாக செயல்படும்போது மிகவும் எளிது.

2. குழுவில் உள்ள நபர்களின் வேதியியல் திறனை அதிகரிக்கின்றது.

3. ஒருமித்த கருத்து உருவாக வழிவகுக்கிறது.

4. குறிப்பிட்ட இலட்சியத்தை அடைவதற்கு ஒற்றுமை, குழு உழைப்பு, நேர்மையான எண்ணங்கள் போன்றவை குழுவில் மட்டும் ஒரே மாதிரியாக இருக்கும்.
5. குழுவாக செயல்படுவதால் தனிநபர்களின் ஒழுக்கம் அதிகரிக்கின்றது.

## குழு ஆற்றலின் பண்புக் கூறுகள் (Characteristics of Team Spirit)

1. முக்கிய பணி சம்பந்தமாக புரிந்து கொள்ளுதல், பரஸ்பரமான ஒப்பந்தம், அடையாளம் கண்டுணர்தல்.
2. வெளிப்படையான செய்தித் தொடர்புகள்.
3. பரஸ்பரமான நம்பிக்கை.
4. பரஸ்பரமான ஆதரவு.
5. தலைமை.
6. கூட்டுறவு.
7. குழு குறிக்கோள்கள் மற்றும் சூழ்ச்சி முறைகள் போன்றவை தெளிவுபடுத்தப்படுகின்றன.
8. குழு உறுப்பினர்களிடையே உள்ள முரண்பாடுகள் குறைக்கப்படுகின்றன.
9. ஒவ்வொரு தனிநபரின் மதிப்பும் பயனும் விழிப்புணர்வை அதிகரிக்கிறது.
10. குழுவின் பொது நலனுக்காக பிணைப்பும் கட்டுப்பாடும் ஒன்றிணைக்கப்படுகிறது.
11. அங்கத்தினர்களிடையே கூட்டுச் சார்பு எண்ணம் உருவாக்கப்படுகிறது.

4. ஆற்றல் வளர்ச்சி பற்றி விளக்குக.

## தகுதி / ஆற்றல் / திறன் வளர்ச்சி (Competence Development)

உதவி கேட்டு வருபவரின் தேவைகளை முன் வைத்துத் தனது தேவைகளைப் பின் தள்ளும் ஆற்றல் உதவும் வல்லுநருக்கு வேண்டும். இதற்குத் தனிப்பட்ட சிறப்பான பயிற்சியும் அனுபவமும் தேவை. உதவும் வல்லுநர் தனது மொத்தத் திறன்கள், வல்லமை, ஆற்றல்களுக்கு அப்பால் செல்லக் கூடாது. உதவி கேட்டு வருபவர் ஒரு மிகவும் சிச்கலான பிரச்சனையை முன் வைக்கக்கூடும். அதனைக் கையாளும் ஆற்றலோ, வல்லமையோ உதவுபவருக்கு இல்லாத பொழுது, அவர் உதவி கேட்பவரைத் தகுதி வாய்ந்த வேறொரு உதவும் வல்லுநரிடம் அனுப்ப வேண்டும். அல்லது, அப்பிரச்சனை பற்றிய தனது திறன்களைக் கற்றோ, நிபுணர்களிடம் கலந்தாலோசித்தோ பெற வேண்டும்.

### சான்றுகள் (Examples)

1. ஓர் உதவும் வல்லுநர் சமயத்திலோ இறை பற்றிய அக அனுபவத்திலோ சிறிதும் நம்பிக்கையற்று இருக்கக் கூடும். அவரால் உதவி கேட்பவரின் அக, இறை அனுபவம் பற்றிய பிரச்சனைகளைக் கையாள முடியாது.
2. ஓர் உதவும் வல்லுநர் தனது பாலியல் பிரச்சனைகளைப் பற்றியே குழம்பி இருக்கலாம். அவரால் சிக்கலான பாலியல் பிரச்சனையைக் கையாள முடியாது.
3. ஆண் ஆதிக்கச் சமூக மதிப்பீடுகளையே உண்மையென மயங்கி நிற்கும் ஓர் உதவும் வல்லுநரால் ஒரு பெண்ணின் நியாயமான உரிமைக்குரலைக் கேட்க முடியாது.
4. ஓர் உதவும் வல்லுநர் மருத்துவத்துறையின் புதிய ஆராய்ச்சி முடிவுகளைச் சிறிதும் அறியாது இருக்கலாம். அவரால் 'எய்ட்ஸ்' பாதிப்பில் சோர்ந்துள்ள உதவி கேட்பவருக்கு உதவ முடியாது.

5. "கடவுள் சேர்த்ததை யாராலும் பிரிக்க முடியாது" என ஓர் உதவும் வல்லுநர் உறுதிபட நம்பினால், காண்டுமிராண்டிக் கணவனால் சாவின் விளிம்புக்கே தள்ளப்பட்ட இளம் "மனைவிக்கு" உதவ முடியாது.

6. "இள வயதினருக்கு ஒரு பிரச்சனையும் இருக்காது" என நம்பும் உதவும் வல்லுநரிடம் இள வயதினர் உதவி கேட்கச் செய்வதில் பொருளில்லை.

7. "வறட்டுத்தனமான கீழ்ப்படிதல் கோட்பாட்டை" கடவுள் கட்டளையாக நம்பும் ஒரு வயதான ஆசிரியர், இளம் மாணவர்களின் சிரிப்பையும், கவலையையும் புரிந்து கொள்ள முடியாது.

8. பிற சமயத்தவரை, பிற இனத்தவரை, பிற மொழியினரை, பிற சாதியினரை, ஏழைகளை வெறுக்கும் உதவும் வல்லுநரால் பிற சமயத்தைச் சேர்ந்த உதவி கேட்பவருக்கு உதவ முடியாது.

## ஆற்றல் வளர்ச்சிக்குத் தேவையானவை (Competence Development Requirement)

1. அனுபவம் (Experience).
2. கடின உழைப்பு (Hard Work).
3. உற்றுநோக்கல் (Observation).
4. அறிவை காலத்திற்கேற்ப புது நிலைக்குக் கொணர்தல் (Updating Knowledge).
5. ஒப்பந்தம் பேசு [illegible] (N [illegible] tiation).
6. பின்னிய செயல் விளைவு (Interaction)
7. பிரதிபலித்தல் (Reflection).
8. கூட்டுறவு (Co-operation).
9. ஒப்படைப்பு / பொறுப்பு (Commitment).
10. கவனம் (Attention).

5. நேர்மை என்ற பதத்தின் பொருள் எழுதுக. அதற்கு ஒரு உதாரணம் தருக. (April-2013)

(அல்லது)

நேர்மை என்ற பதத்திலிருந்து நீவிர் அறிவது யாது? நேர்மையின் முக்கியத்துவத்தைக் கூறுக. (April 2014)

## நேர்மை (Honesty)

ஒரு மனிதன் முழுமையானவனாகவும் வளமையானவனாகவும் இருக்க வேண்டுமானால் அவனுடைய நடவடிக்கை அனைத்திலும் நேர்மை நிலவ வேண்டும். தீமைக்கு விட்டுக் கொடுக்கும் பலவீனத்தை அவன் பெற்றிருக்கக் கூடாது. எவ்வளவுதான் அவசியமானதாய்த் தோன்றினாலும், அற்பமாய்த் தோன்றினாலும் தவறுடன் இணங்கிப் போவது என்பது நேர்மை எ்னனும் கேடயத்தைத் தூக்கி எறிவதுதான். தீமையின் தாக்குதலுக்கு இலக்காக ஆயத்தமாய் நிற்பதுதான்.

நேர்மையின் சிறப்பை அறிந்த ஒருவன், நேர்மையில் ஒரு சிறிதும் சலனமுறாத ஒருவன் எவ்விதச் சூழ்நிலையிலும் பொய் சொல்லவும் மாட்டான். கண்ணியமற்ற செயல்புரியவும் மாட்டான். அவ்விதம் ஒரு போதும் செய்ய வேண்டிய அவசியமில்லை என்பான். அவனைத் தீமை கவரவே முடியாது. மனித சமூகத்தின் முதுகெலும்பே நேர்மைதான். மனித உறவுகளின் ஆதாரமாய் இது இராவிட்டால் நம்பிக்கை இராது, நாணயமிராது, வாணிப உலகமே தலைகீழாகி விடும்.

நேர்மையுள்ள மனிதனிடம் அவனுக்குத் தெரியாமலே ஒரு சிறப்பு இருக்கும். அது அவன் கூடவே செல்லும். அது பார்ப்பவரைப் பயபக்தி கொள்ளச் செய்வதுடன் அவர்களைப் புத்துணர்வு கொள்ளவும் செய்யும். அவன் தன்னை உயர்த்திக் கொண்டு விட்டான். அதனால் தீமைகள் அவனைக் கண்டதும் குழம்பிப்

போய் பதுங்கிக் கொள்கின்றன. இந்தச் சிறப்பிற்கு இணையாய் அறிவைக்கூடக் கூற முடியாது. அறிவாளியைவிட நேர்மையானவன் தான் உலகின் மதிப்பில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருப்பான்.

பத்மாஸ்டர் : 'நேர்மையின் சிறப்பு மனித இயல்பில் மிகவும் சிறந்த ஒன்று'. நேர்மை தவறாதவன் உண்மையிலேயே ஒரு வீரன் தான். நோய், இடர், இறப்பு ஒன்றுக்கு அவனுடைய நிரந்தரத் திருப்தியை அழித்துவிட முடியாது.

நேர்மை தான் கண்ணியம், அச்சமின்மை, நோக்கத்துடனிருப்பது, வெல்லற்கரிய நிலை ஆகிய நான்கு தன்மைகளாலேயே நிற்கிறது. கண்ணியம் வெற்றிக்குச் செல்லும் நிச்சய வழியாகும். அச்சமின்மை நேர்மையுடன் வருவதாகும். அச்சமின்மை ஒரு மனிதனின் வாழ்வில் வலிமை மிக்கக் கோபுரமாகும். ஒரே நோக்கம் கொண்டிருத்தலை நேர்மை வளர்த்த ஒழுக்கவாற்றலின் நேரடிப் பலன் எனக் கூறலாம். நேர்மையாளன் நேரடியான இலட்சியங்களும் அறிவார்ந்த நோக்கங்களும் அமைந்த மனிதனாவான். அவன் தடம் மாற மாட்டான். வெல்லற்குரிய நிலையே ஒருவனுக்குச் சிறந்த பாதுகாவலாகும். அது முற்றிலும் தூய்மையும் நேர்மையும் பெற்ற மனிதனுக்கே பாதுகாவல் அளிக்கிறது.

**6. ஒளிவின்மை பற்றி விளக்குக.**

**ஒளிவின்மை / தெள்ளத் தெளிந்த தன்மை / திறந்தநிலை செல்பாடு (Transparency)**

வெளிப்படையாக, ஒளிவு மறைவின்றிச் செயல்படுவது உண்மையைத் தேடுவோர் செய்ய வேண்டிய ஒன்றாகும். ஆனால் ஒருவர் வெளிப்படையாகச் செயல்பட மற்றவர் இரகசியமாகச் செயல்பட விளைவது சுரண்டலாகும்: ஆதிக்க முறையாகும். மனைவி வெளிப்படையாக ஒளிவு மறைவின்றிச் செயல்படுகிறாள்.

அவள் மாத சம்பளம் முழுவதையும் கணவனிடம் தந்து வருகிறாள். ஆனால் கணவனோ சர்வாதிகாரமாக தன்னிச்சைப்படி நடக்கிறான். அவன் அவளை நன்கு சுரண்டவும் ஆதிக்கம் செலுத்தவும் முடிகிறது. இருவரும் பரஸ்பரம் திறந்த நிலையில் செயல்பட்டால் இங்ஙனம் சுரண்டல் நிகழாது. வெளிப்படையாகச் செயல்படுவதுடன் தமது செயல்களுக்கு அவரவர் பொறுப்பேற்க வேண்டும். இத்தகைய பொறுப்புணர்வே உண்மையைத் துலங்கச் செய்யும். சுருங்கக் கூறின் வெளிப்படையாக ஒரு செயல்பாட்டை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதாகும்.

ஒரு செயல்பாட்டில் எந்த பிரச்சனை வந்தாலும் மனம் விட்டு இருவரும் கலந்து ஆலோசிக்க வேண்டும். உள்ளத்தில் ஒன்று வைத்து புறமொன்று பேசினால் பிரச்சனைக்கு முடிவு வராது. நேரம் ஒதுக்கி மனதில் உள்ளதை இருவருமே வெளிப்படுத்தி பேசிக் கொள்ள வேண்டும். இதனால் பிரச்சனை பலவீனம் அடையும். மனம் விட்டு பேசினால் கள்ளம் கபடம் ஒழியும்.

**காந்தி கூற்று**

"அந்தரங்க ஸ்தாபனம் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் எவ்வித நன்மையும் செய்து விட முடியாது. அந்தரங்கமாகச் செய்வதெல்லாம், அதன் மூலம் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதாகவே அமையும். அஹிம்சா தர்மமோ அத்தகைய பாதுகாப்பை வெறுக்கவே செய்கிறது. எத்துணைத் துன்பம் வருவதாயிருந்தாலும் அது பகிரங்கமாகவே வேலை செய்யும்".

**7. பிறரை மரியாதையுடன் நடத்துதல் பற்றி விளக்குக.**

**பிறரை மரியாதையுடன் நடத்துதல் (Respecting Others)**

நம்மைப் பிறர் மதிக்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறோம். நாம் பிறரை மதிக்க வேண்டும் என்று நாளும் பொழுதும் பேசுகிறோம். ஆனால் நாம் பிறரை மதிப்பதில்லை. பிறருடைய

எண்ணங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் நாம் மதிப்புக் கொடுக்க வேண்டும். பிறருக்கு மதிப்பளித்தல் என்பது நாம் பணிபுரியும் இடங்களில் பதவி, மூப்பு அடிப்படையில், இளையோர்களாக இருந்தாலும் அவர் தம் தகுதிகளை அறிந்து நாம் அவர்களுக்கு மதிப்பளிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். பிறரின் உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். நம்மிடம் பணிபுரிபவர்களின் பணிக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். பிறரின் கருத்துக்களை நாம் மதிக்க வேண்டும். பிறரின் விருப்பங்கள் மற்றும் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

பிறரின் கருத்துக்களும் மதிப்புக்களும் நம்முடைய கருத்துக்களுக்கு மாறுபட்டு இருந்தாலும் நாம் அவர்களை மதிக்க வேண்டும். மற்றவர்களைப் பற்றி புறம் கூறுவதை நாம் தவிர்க்க வேண்டும். பிறரை ஏளனமும் செய்தல் கூடாது. பிறருடன் பேசும் பொழுது வெளிப்படைத் தன்மையுடன் பேச வேண்டும். பிறரின் பண்பாட்டிற்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்.

கீழ்ப்படிதல் நல்லறிவினின்று வருகிறது. அடிமைத்தனம் மடமையிலிருந்து வருகிறது. படியத் தகாதவனிடத்தில் படிவது ஒரு வித மடமை. நலத்துக்கும் மேன்மைக்கும் படியாதிருத்தல் மற்றொரு வித மடமையாகும். ஒழுங்கு முறைக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் அறிவுடையோர் செயல். எதற்கு, எப்பொழுது, எங்ஙனம் கீழ்ப்படிதல் வேண்டுமென்பதைக் கற்க வேண்டும். பண்பாடு என்பது அதுவே கொடுங்கோலுக்கோ தீமைக்கோ வசமாதல் அடிமையின் போக்கு. நலத்துக்கும் மேன்மைக்கும் படியாதிருத்தல் மடமையாகும். முறையறிந்து கீழ்ப்படிகிறவன் தன்னையும் மேன்மைப்படுத்துகிறான். தனக்கு ஆணையிட்டவரையும் மேன்மைப்படுத்துகிறான். அடங்கி நடப்பது கற்பவைகளுள் மிக முக்கியமானது. அடங்கி நடக்கக் கற்றுக் கொண்டவன் ஆளக் கற்றுக் கொண்டவனாகிறான். படிந்து நடந்தவர்களே பாருலகில் அருளாளரும் பொருளாளரும் ஆனார்கள்.

**ஒவ்வொரு தனிநபரையும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்துதல் (Treating every individual with dignity and Respect) :**

ஒவ்வொரு தனி நபரையும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடத்தும் பண்பு நம்மிடையே இருக்க வேண்டும். வில்லியம் கீல் பாட்ரிக் கூறுவது போன்று "ஜனநாயகம், தனிநபர் கண்ணியம் போற்றப்பட வேண்டும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை உடையது". ஜனநாயகக் கல்வி முறையில் ஒவ்வொருவருக்கும், அதாவது பாலினம், நிறம், இனம், சமூக அந்தஸ்து, என்ற எந்த வேற்றுமையையும் கவனத்தில் கொள்ளாது, கல்வி அளித்து அவர்களது திறன்களையும் ஆற்றல்களையும் மலரச் செய்வதின் மூலமே, தனிநபர் சமுதாயப் பங்களிப்பை அதிகரிக்க முடியும். இதுவே மக்களாட்சிக்கு வலு சேர்க்கும் வழிமுறையாகும்.

8. ஜனநாயகத்தின் நடைமுறை பற்றி விளக்கு.

**1. ஜனநாயக குடிமக்களாவதற்கான பயிற்சி (Training for Democratic Citizenship) :**

உரிமைகளை மட்டும் கோராமல், கடமைகளையும் பொறுப்புகளையும் உணர்ந்து செயல்படும் பண்பினை வளர்த்தல் மூலம் எதிர்காலத்தில் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட சிறந்த குடிமக்களாக விளங்குவதற்கு பயிற்சியளித்தல் வேண்டும். ஜனநாயகக் கல்வி முறையில் பொறுப்புகள் வருங்காலத் தலைவர்களை உருவாக்கிடும் செயல்களங்களாக கல்வி நிறுவனங்கள் விளங்க வேண்டும்.

**2. தொழில் திறமை (Vocational efficiency)**

ஜனநாயகம் உயிர்த்துடிப்புடன் இருத்தலுக்கு, நாட்டு மக்கள் அனைவரும் பொதுக் கல்வி மற்றும் தொழில் கல்வியில் சிறந்து விளங்குதல் மிக அவசியம்.

3. முழுமை ஆளுமை வளர்ச்சி (All round development of personality) :

ஒவ்வொரு தனிநபரும் உடல், மன, சமூக, மனவெழுச்சி மற்றும் நல்லொழுக்க வளர்ச்சியில் முதிர்ச்சி பெற்றிட முனைய வேண்டும்.

4. தலைமைப் பயிற்சி (Training in Leadership) :

நல்லொழுக்கம், கட்டுப்பாடு, தலைமைப் பண்பு ஆகியவற்றை விளையாட்டு, N.C.C., சமூக சேவை, சாரணர் இயக்கம் போன்றவற்றில் பங்கேற்க செய்வதன் மூலம் வளர்ச்சியடைய செய்தல், உரிமைகளைப் பெற, கடமைகளைச் செய்து தகுதியுடையோராதல் அவசியம் என்பதை மாணவர்களும் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். பொறுப்புகள் அற்ற உரிமையும் சுதந்திரமும் அபாயகரமானவை என்பதை மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மக்களாட்சியின் முக்கியக் கோட்பாடுகள் (Principles of Democratic Functioning)

1. ஒவ்வொரு தனிநபரையும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடத்துதல் (Treating every individual with Dignity and Respect).
2. சுதந்திரம் (Freedom).
3. சமத்துவம் (Equality).
4. சகோதரத்துவம் (Fraternity).
5. சகிப்புத் தன்மை (Tolerance).

6. அமைதியான வழியில் விரும்பத்தகு மாற்றங்கள் ஏற்படும் என்ற நம்பிக்கை கொண்டிருத்தல் (Faith in Bringing Changes through Peaceful Means).

7. உழைப்பில் நம்பிக்கை (Faith in Hard Work).

8. குழுவாக இயங்குவதில் நம்பிக்கை (Belief in Group Work).

**9. நேர்மை பற்றி விளக்குக.**

**நேர்மை / வாய்மை (Integrity)**

நேர்மை மிகச் சிறந்த நேர் மதிப்பாகும். குடும்பத்தின் உறுப்பினர் என்ற முறையிலும் நாட்டின் குடிமக்கள் என்ற வகையிலும் ஒவ்வொரு தனி நபரும் நேர்மைப் பண்பைக் கடைப்பிடித்தல் சுமூகமான வாழ்க்கை அமையும். நாடும் வளம் பெறும். 'நேர்மை' என்பது அடுத்தவர்களுக்கு உண்மையாக நடந்து கொள்வதில் இல்லை. அது தனக்குத் தானே உண்மையுணர்வுடன் நடந்து கொள்வதில் இருக்கிறது. அடுத்தவர்களுடைய நேர்மையின்மை நம்முடைய பேராசையால் தான் ஏற்படுகிறது. ஒருவர் நேர்மையற்றவராக இருப்பது பலருடைய நேர்மையின்மைக்குக் காரணமாகிறது. நேர்மை உணர்வு ஒருவரிடம் இருந்தால் அவரை எவரும் பழிதூற்ற வாய்ப்பு இல்லை. இது பற்றி முன்னாள் தமிழக முதல்வர் ஓமந்தூர் இராமசாமி கீழ்வருமாறு கூறுகிறார்.

**ஓமந்தூர் இராமசாமி**

"நெருப்பைக் கரையான் அழிக்க முடியாது. நேர்மையாளரைப் பழியும் பாவமும் நெருங்க முடியாது. ஒவ்வொரு தனி மனிதரும் நேர்மையுடன் நடந்தால் சமூகத்தின் பொது வாழ்வும் தானாகவே தூய்மையுறும்".

"நேர்மை" என்பதன் அடிப்படையில் தனது வாழ்வை அமைத்துக் கொள்ளும் ஒருவர் அடுத்தவர்களுக்குத் துன்பம் செய்ய மாட்டார். அதனால் இன்று நடக்கிற தூய்மையற்ற

செயல்பாடுகள் பல இல்லாமல் போகும். நேர்மை என்பது எல்லா நிலையிலும் மக்களிடம் அமைய் வேண்டும் என்பதைச் சொல்லத்தான் வள்ளுவர் :

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி".

என்று பாடினார். நீதிதேவதை துலாக்கோல் ஏந்திய கையும் கருப்புத் துணியால் கட்டிய கண்ணுமாகக் காட்டப்படுகிறார். வேண்டியவர், வேண்டாதவர் என்று பாராமல் எல்லோருக்கும் ஒரே வகையான நீதியை நீதித்துறை வழங்க வேண்டும் என்று கற்பிப்பதற்காக நமது முன்னோர் காட்டிய குறியீடு.

இளம் உள்ளங்களில் "நேர்மை" என்னும் மதிப்பு ஊன்றப்பட வேண்டும். பெரியவர்களின் நேர்மையின்மையைப் பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தை, வளரும் போது தானும் அதையே பின்பற்றுகிறது. அதன் விளைவு மொத்தச் சமூகத்தையும் பாதிக்கிறது. பேச்சில் நேர்மை, செயலில் நேர்மை என்பது இளம் வயதில் கடைபிடிக்கப்பட வேண்டும். "இப்படித்தான் வாழ வேண்டும்" என்ற உறுதியோடு நேர்மையைக் கடைப்பிடித்து வாழும் தனி மனிதர்கள் சமூகத்திற்கு மிகப் பெரிய சொத்தாக அமைவார்கள்.

**10. பொறுப்பு / ஒப்படைப்பு பற்றி விளக்குக.**

## பொறுப்பு / ஒப்படைப்பு (Commitment)

ஒரு பொறுப்பை உணர முடியும். அது வசதியின் வரம்பை மீறும்போது மட்டும். எது வசதியாக உள்ளதோ, அது பொறுப்பு ஆகாது. நம் வசதியை மட்டுமே பார்த்துக்கொண்டிருந்தால், நம் பொறுப்பு அதிகமான வசதியின்மையை உண்டாக்கி வீழ்ந்து விடும். வசதியாக இல்லை என்ற காரணத்திற்காக நமது பொறுப்பை நழுவ விட்டுக்கொண்டே இருந்தால் நாம் சுகமாக இருக்க

முடியாது. பொதுவாக, எது வசதியாக இருக்கிறதோ, அது சுகத்தைத் தருவதில்லை. ஆனால் சுகம் போன்ற ஒரு மாயத் தோற்றத்தைத் தருகிறது. நாம் பொறுப்பில் மிகவும் அமிழ்ந்தும், அது அடிக்கடி மிகவும் வசதியில்லாததாகவும் இருந்தால், நம்மால் நம்முடைய பொறுப்பினை நிறைவேற்ற இயலாது. மேலும், அது ஏமாற்றத்தையே தோற்றுவிக்கும். பொறுப்பு மற்றும் வசதி ஆகியவைகளுக்கு இடையே ஒரு சமநிலையை ஞானம் பதிக்கிறது. ஏனெனில் அவை இரண்டும் உடல், மனம் மற்றும் ஆன்மாவிற்கு சுகம் தருகின்றன.

ஞானம் தேடுவோர் வசதிகளை மறந்து விட வேண்டும். விவேகிகளுக்கு அவர்களுடைய பொறுப்புதான் அவர்களின் சுகம். எப்பொழுதெல்லாம் அவர்களுடைய பொறுப்பு அசைக்கப்படுகிறதோ, அப்பொழுதெல்லாம் அவர்களின் வசதியும் ஆட்டுவிக்கப்படுகிறது. பொறுப்பு என்பது சிறந்த பரிகாரம் தான். எனினும் சோம்பேறிக்கு அது சித்திரவதை ஆகிவிடுகிறது. நாளடைவில் பொறுப்பு எல்லாக் காலங்களிலும் சுகத்தைத் தரும்.

**கைவிட்டு விடக்கூடிய பொறுப்புகளில் சில :**

1. உள்ளறிவு இல்லாது பொறுப்புடன் நாம் இருக்கும் சமயங்களில், நம் உள்ளறிவு விரிவடையும் போது, நாம் திக்குமுக்காடிப் போகும் நிலை ஏற்படும். குறுகிய நோக்கோடு அமைந்த அத்தகைய பொறுப்புகளை விட்டு விடலாம்.
2. பெரிய பொறுப்பு ஒன்றிற்காக சிறிய, முக்கியத்துவம் குறைந்த பொறுப்பினை விட்டு விடலாம்.
3. இலக்கை நோக்கிய பொறுப்பின் பொருட்டு வழிவகைக்கான பொறுப்பை விட்டு விடலாம்.
4. நாளடைவில் நமது பொறுப்பு பலருக்குத் துயரத்தைத் தருமானால் அதை விட்டு விடலாம்.

ஒத்திசைவதற்கான வழிமுறைகள்

1. உடன் பணிபுரிபவர்களை ஆற்றல் மிக்கவர்களாக மாற்றுவது தான் தலைமையின் தலையாய பொறுப்பு. அதற்கு அவர்களோடு ஒத்துப் போவதற்கு ஆர்வம் கொண்டிருத்தல் அவசியம்.
2. நம்மோடு பணிபுரிபவர்களை மதிப்பு மரியாதையுடன் நடத்த வேண்டும்.
3. பணியாளர்களின் திறமையை, இயல்பை அப்படியே ஏற்றுக் கொள்வதும், அதற்குத் தக்கபடியாக நம்மை மாற்றிக் கொள்வதும், மற்றவர்களோடு இசைந்து பழகுதலும் ஒத்திசைவான வலுவான நட்புறவை உருவாக்கும்.

| 11. சகிப்புத்தன்மை என்றால் என்ன? அதன் பயன்கள் யாவை? (April-2014) |
|---|

## சகிப்புத்தன்மை (Tolerance)

வேறுபட்ட பண்பாடு, பழக்கவழக்கங்களைக் கொண்ட மக்கள் இணைந்து வாழ்வதற்கு 'சகிப்புத்தன்மை' மிகவும் அவசியம். 'சகித்துக் கொள்வது' என்பது ஒன்றை இழிவாக நினைத்தால் 'பொறுத்துக் கொள்ளுவது' அல்ல. ஒருவர் தொடர்பான அனைத்துக் கூறுகளையும் குறை நிறைகளோடு ஏற்றுக் கொள்வது. இது தன்னை, தனது விருப்பு-வெறுப்புக்களை தன்னோடு தொடர்புடையவற்றை எல்லாம் எப்படி உயர்வாக நினைக்கிறோமோ அதைப் போலவே பிறர் தொடர்பானவற்றையும் உயர்வாக நினைப்பது. அதனால் ஏற்றுக் கொள்ளுவது ஆகும்.

சகிப்புத்தன்மையைக் குழந்தையின் மனதில் அது பால் குடிக்கும் பருவத்திலிருந்தே பசுமரத்தாணி போல் பதிய வைக்க வேண்டும். பழக்கம் காரணமாக வளர்ந்த பின் சில மனநிலைகளை

மாற்ற முடிவதில்லை. 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்று சொல்வது இதனால்தான். நாம் ஒன்றை என்னவாகக் காணுகிறோமோ அதுவாகவே அது தெரிகிறது.

மனிதனிலும் பல வகையினர், நிலையினர் என்று அமைவது இயற்கையின் கொடையாகும். எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு வாழ்வதுதான் மனிதனின் சிறப்பு. நமக்குப் பிடிக்கவில்லை என்பதால் எவரையும் ஒதுக்காமல் இருப்பது மனிதப் பண்பு. ஒவ்வொரு மனிதரும் 'மதிப்பிற்குரியவர்' என்று நினைத்து, அவர்களுடைய அசைவுகளை மதிக்கக் கற்றுக்கொண்டால் நம்மிடம் இல்லாத நல்ல பண்புகள் அவர்களிடம் இருப்பதை உணர முடியும். அதற்குத் தேவை எல்லோரையும் எப்போதும் நேசிக்கிற மனமும் சகிப்புத் தன்மையும் ஆகும்.

ஒருவருடைய வாழ்வின் எல்லா அம்சங்களிலும் சகிப்புத்தன்மை இருக்க வேண்டும். சகிப்புத்தன்மை தான் மிகவும் முக்கியமான ஆன்மீகப் பண்பாக இருக்கிறது. ஏனெனில் சகிப்புத்தன்மையானது. பரிவுடன் புரிந்து கொள்ளும் தன்மை, கொடுக்கும் மனது. மேலும் அன்பு உட்பட எல்லா நற்குணங்களையும் தன்னுள் கொண்டு, இவை எல்லாவற்றையும் தன்னிலிருந்து வெளிப்படுத்துவதாகவும் தோன்றுகிறது. அன்பிலிருந்து சகிப்புத்தன்மை பிறக்கிறது என்பார் பலர். ஆனால் உண்மையில் சகிப்புத் தன்மையில் இருந்துதான் அன்பு பிறக்கிறது என்று தோன்றுகிறது.

சகிப்புத் தன்மை என்பது நற்பண்புகளில் ஒன்று. 'கடவுளின் பார்வையில் எல்லா மனிதர்களும் சமமாகவே படைக்கப்பட்டிருக்கிறார்கள்' என்ற உண்மையை உணர்தலே சகிப்புத் தன்மை என்பதாகும். கடவுளின் நோக்கத்திற்கும் திட்டத்திற்கும் ஏற்றாற் போல் இசைந்து இருப்பதே சகிப்புத் தன்மை ஆகும். அந்த ஒத்திசைவான தன்மையானது, நீரோட்டத்தின் திசையிலேயே நாம் நீந்திச் செல்வதை சாத்தியம் ஆக்குகிறது.

இது நமது பயணத்தை சுலபமாக்கி, இரட்டிப்பு வேகம் உடையதாகவும் செய்கிறது. இவ்வாறாக சிறப்புமிக்க இந்த சகிப்புத்தன்மையானது மனிதகுலம் முழுவதிலும், நம் அனைவருள்ளும் வளர்க்கப்பட்டு, அன்றாட வாழ்விலும் கடைப்பிடிக்கப் படுகிறது.

## செயல் - IV

## Activity - IV

## Part - A

1. பொறுப்பு என்றால் என்ன?
2. எத்தொழிலுக்கும் பதில் சொல்லும் பொறுப்பு மிகவும் அவசியம் என்று ஏன் கருதப்படுகிறது?
3. கற்றலின் விருப்பம் என்றால் என்ன?
4. குழு கற்றல் என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் யாது?
5. ஆற்றல் வளர்ச்சி பற்றி விளக்குக.
6. நேர்மை (Honesty) என்ற பதத்தின் பொருள் எழுதுக. அதற்கு ஒரு உதாரணம் தருக.
7. நேர்மையின் முக்கியத்துவத்தைக் கூறுக.
8. ஒளிவின்மை பற்றி விளக்குக.
9. பிறரை மரியாதையுடன் நடத்துதல் பற்றி விளக்குக.
10. ஜனநாயகத்தின் நடைமுறை பற்றி விளக்குக.

## Part - B

1. 'குழு ஆற்றலின்' பல்வேறு பண்புக் கூறுகளை விவாதி.
2. நேர்மை (Integrity) மற்றும் பொறுப்பு / ஒப்படைப்பு (Commitment) பற்றி விளக்கி எழுதுக.

# அலகு – 5

## மதிப்பு உருவாக்குவதில் சமூக நிலையங்களின் பங்கு

## ROLE OF SOCIAL INSTITUTIONS IN VALUE FORMATION

# அலகு - 5

## மதிப்பு உருவாக்குவதில் சமூக நிலையங்களின் பங்கு

## ROLE OF SOCIAL INSTITUTIONS IN VALUE FORMATION

**1. வளரும் குழந்தைகளுக்கு அதன் குடும்பம் ஆற்றும் பணிகள் யாவை?**

### குடும்பம் (Family)

"குடும்பமெனப்படுவது, காட்டுமிராண்டிகளது கூட்டம், நாகரிகமற்றோர்களது சமுதாயம் பண்பாட்டு ஏணியில் உயர்நிலையில் இருப்போரது சமுதாயம் போன்ற எல்லாச் சமுதாயங்களிலும் காணப்படும் ஒரு நிலையாகும். இப்பல்வேறு வகைச் சமுதாயங்கள் யாவற்றிலுமே குடும்பமானது முக்கியமான செல்வாக்கினைப் பெற்று இச்சமுதாயங்களின் அமைப்பினையும் பண்பாட்டுக் கூறுகளையும் பாதிக்கின்றது" என்று மாலினோஸ்கி (Malinouski) என்பார் குறிப்பிட்டுள்ளார்.

திருமணம் என்னும் தொடர்பிலிருந்து எழும் சமூக அமைப்பே குடும்பமாகும். பழமையிலும், முக்கியத்துவத்திலும் குடும்பம் முதன்மையானது. இது நெருங்கிய தொடர்புடைய உறுப்பினர்களைக் கொண்டது. சாதாரணமாக குடும்பம் என்பது ஒரு தகப்பன், தாய் மற்றும் ஒன்றோ ஒன்றுக்கு மேம்பட்ட குழந்தைகளையோ கொண்ட இரத்தத் தொடர்புள்ள ஒரு குழுவாகும்.

இக் குழுவின் உறுப்பினர்களுக்குக் குடும்ப வாழ்க்கையில் திட்டமான வேலைகள் உள்ளன. பால் ஊக்கம் (Sex instinct) மகவூக்கம் (Parental instinct) முதலிய சமூக ஊக்கங்களே குடும்ப வாழ்க்கையின் அடிப்படைகளாகும்.

விட்டுக் கொடுக்கும் தியாக உணர்ச்சி (Sacrifice) பொறுப்புகளைப் பங்கிட்டு ஏற்றல் (Sharing of Responsibility), ஒத்துழைப்பு மனப்பான்மை ஆகிய பண்புகள் குடும்ப வாழ்க்கைக்கு இன்றியமையாதவை.

ஒரு குடும்பத்தினருள் நிலவும் குழுவுணர்ச்சிக்கும், அதிலிருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கும் அதிகம் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை பெருங்குடும்பங்களுள் குழுவுணர்ச்சியும் அதிகமாகவே இருக்கலாம்.

இன்று நம் சமுதாயத்தில் காணப்படும் குடும்ப நிலையம் தந்தையை முதன்மையாகக் கொண்ட குடும்பம் (Patriarchal family) தாயை முதன்மையாகக் கொண்ட குடும்பம் (Matriarchal family) போன்ற பல இடைநிலைகளைக் கடந்து, குடும்ப உறுப்பினரெல்லாரும் சரிசமப் பங்கு கொண்டு ஒத்துழைக்கும் குழுவாகப் பரிணமித்திருக்கிறது.

ஒருவன் பிறந்து தனது இளம் பருவத்தைக் கழிக்கும் குடும்பத்தினை 'உருவாக்கும் அல்லது திசைப்படுத்தும் குடும்பம்' (Family of orientation) என்றும் பின்னர்த் திருமணத் தொடர்புகொண்டு அமைக்கும் குடும்பத்தை 'இனப்பெருக்கத்துக்கான குடும்பம்' (Family of Procreation) என்றும் சில சமூகவியலறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

சமூக முக்கியத்துவத்தில் முதனிற்பது குடும்பமேயாகும் குடும்பத்தின் அமைப்பில் தோன்றும் மாறுதல்கள் சமூகம் முழுவதையுமே பாதிக்கின்றன. சமூகத்தின் எல்லா நிலைகளிலும் இவை எதிரொலிக்கின்றன என்று சமூகவியலறிஞர் கூறுவர்.

## கூட்டுக் குடும்பம் **(Joint family)**

கூட்டுக்குடும்பம் என்பது விரிந்த குடும்பத்தின் (Wider family) ஒரு வகையாகும். கூட்டுக்குடும்பம் நம் நாட்டில் பரவலாகக் காணப்படுகிறது. இதில் மரபுத்தொடர்புடைய இரண்டு அல்லது மூன்று சந்ததி உறுப்பினர்கள் ஒன்றாக வாழ்வர். கூட்டுக்குடும்பங்களில் உறுப்பினர்களிடையே பிணைப்பு மிக்க வலுவானதாகவே பொதுவாகக் காணப்படும்.

குடும்பத்தலைவரிடம் குடும்ப அதிகாரங்கள் யாவும் குவிந்திருக்கும். குடும்ப உறுப்பினர்களிடையே சிக்கலான சமூகத் தொடர்புகாணப்படும். கூட்டுக் குடும்பங்களில் வளரும் குழந்தைகள் பெறும் அனுபவங்கள் அவர்களது சமூக வளர்ச்சிக்கான சிறந்த பயிற்சியாக அமையும்.

இன்று நம் நாட்டிலும் இத்தகைய கூட்டுக்குடும்பங்கள் சிதைந்து வருகின்றன. இதற்குக் காரணங்கள் பலவாம். குடும்ப உறுப்பினர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வேலை தேடிப்போதல், சுதந்திர வாழ்க்கையை விரும்பி தனிக்குடும்பம் நடத்த நம்புதல் தொழிலாளர் குடும்பங்கள் வேலை தேடிக் கிராமங்களை விட்டு நகரங்களுக்குச் செல்லுதல். காதல் திருமணங்கள், மேல் நாட்டு நாகரிகத்தின் செல்வாக்கு போன்றன இவற்றுள் சிலவாம். கூட்டுக்குடும்பங்களின் தலைவர்கள் ஆதிக்கப்போக்கு மிகுந்தவர்களாகவிருப்பின் பிற உறுப்பினர்கள் பொறுப்புகளை ஏற்றுச்செயலாற்றும் திறன் குன்றிவிடக்கூடும் என்பதை நாம் மறக்கக்கூடாது.

இன்று கூட்டுக் குடும்பங்களின் எண்ணிக்கை நாட்டில் குறைந்து காணப்பட்டாலும் கூட்டுக் குடும்ப மனப்பான்மை இன்னமும் பரவலாகவே காணப்படுகிறது.

வளரும் குழந்தைக்கு அதன் குடும்பம் பணிகள் பலவாகும். குடும்பத்தின மூலம் இனப்பெருக்கம் நிகழ்கிறது.

அன்பு காட்டல், பாதுகாத்தல், பொருளாதாரக் காப்புணர்ச்சி பெற வழி செய்தல், பொழுது போக்குக்கு வகை செய்தல், கல்வி கற்பித்தல் சமய அறநெறிப் போதனை போன்றவற்றையெல்லாம் குழந்தைகளுக்காக அவற்றின் குடும்பங்கள் செய்யும் பணிகளாகும். ஒருவனது வளர்ச்சியை அவன் குடும்பம் அவனது இளமையில் மட்டுமின்றி, வாழ்க்கை இறுதி வரை பாதிக்கிறது.

குழந்தையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு அதன் குடம்பத்தினுடையதுதான்.

1. ஒரு குழந்தையின் புறத்தோற்றம் (Physical appearance) நுண்ணறிவுத் திறன் (Intelligence) முதலியவை பெருமளவு அதன் தாய், தந்தைவழி மரபு நிலையில் வந்தவையாகும்.

2. குடும்பம் குழந்தையின் முதல் உலகமாகும். குடும்பத்தில் நிலவும் நெருக்கமான, வலுவுள்ள, பலதிறப்பட்ட தொடர்புகள், குழந்தையின் நடத்தை, அறிவு ஆகியவற்றின் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் சாதனங்களாகும். ஆளுமை வளர்ச்சியில் ஒருவனது இளமைப் பருவத்தில் ஏற்படும் மனப்பதிவுகளின் (Early Mental Impressions) முக்கியத்துவத்தை உளவியல் அறிஞர்கள் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளனர்.

இப்பதிவுகள் பெரும்பாலும் குடும்பத் தொடர்பினால் உண்டானவையே. இக்கருத்தை மனத்தில்கொண்டு தான் பெஸ்டலாஸி என்னும் தலைசிறந்த கல்வியாளர், குழந்தையின் முதல் ஆறு ஆண்டுகளின் வாழ்க்கையை என்னிடம் ஒப்படையுங்கள். அதற்குப் பிறகு, அதன் வாழ்க்கை அமைப்பை எப்படிப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை" என்றார்.

3. ஒரு குழந்தையினது கல்வியின் தொடக்கக்கட்டமும் அதன் குடும்பமாகும். பண்டைக்காலத்தில் குடும்பங்களே கல்வி நிலையங்களாகப் பணியாற்றி வந்தன. வீடு பள்ளியாகவும், பெற்றோர்கள் ஆசிரியர்களாகவும் இருந்தனர்.

பள்ளிகள் என்னும் தனிப்பட்ட கல்வி நிலையங்கள் பிற்காலத்தில்தான் எழுந்தன. இன்று குழந்தைகளின் கல்விப் பொறுப்பை பள்ளிகளும் ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டிருந்தாலும், குடும்பத்துக்கும் அதில் பெரும் பங்கு உண்டு.

இளமையில், நிகழும் அறிவுப்பயிற்சி (Early intellectual training) இன்றும் குடும்பத்தில்தான் நடக்கிறது. ஒருவனது மன வளர்ச்சியின் பொது அமைப்பு குடும்பத்தில் குழந்தையாக அவன் வாழ்ந்த முதல் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளிலே நிர்ணயிக்கப்படுவதாக ஜான்டுயி என்பார் உறுதியுடன் கூறுகிறார்.

மேலும், முதல் மூன்று ஆண்டுகளில் ஒருவன் கற்கும் அளவு அவனது வாழ்க்கையில் வேறு எந்த மூன்று ஆண்டுகளிலும் கற்பதில்லை என்றும் அவர் கூறுகிறார். கல்வியறிவும், கல்வியின் பயனறிவுமுள்ள பெற்றோர்களைக் கொண்ட குடும்பத்திலிருந்து வரும் பள்ளிச் சிறுவர்கள் பொருளறிவும், கல்வி கற்பதில் மிக்க ஆர்வமும் உள்ளவர்களாக இருப்பதை நாம் காண்கிறோம்.

பள்ளியில் ஒரு மாணவனின் முன்னேற்றத்தை அவன் குடும்பத்தின் சமூக பொருளாதார நிலை (Socio-Economic Level) பாதிக்கிறது. கீழ்ப்பட்ட நிலையிலுள்ள குடும்பங்களிலிருந்து வரும் நுண்ணறிவு மிகுந்துள்ள மாணாக்கர்களும், தாழ்வு மனப்பான்மை (Feeling of Inferiority) கொண்டு கல்வியில் பின்தங்குவதை நாம் சில போது பாக்கிறோம்.

ஆகவே, மாணாக்கர்கள் பள்ளியில் முன்னேறும் வேகம் அவர்களின் குடும்ப நிலையைப் பெருமளவு பொறுத்திருக்கிறது. சுருங்கக்கூறின் குழந்தை ஏற்கனவே பெற்றிராத புது அறிவைத் தோற்றுவிப்பது பள்ளியில் ஆசிரியரின் வேலை அன்று, முன்னரே குடும்பத்தில் அது பெற்ற அறிவைப் பெருக்கி, அதைத் திருத்தமாக மாற்றி அமைத்தலே அவரது முக்கிய பணியாக அமையும்.

தன் குடும்பத்தின் கலாச்சாரத்தையும், நாட்டு சமூகக் கலாச்சாரங்களையும் பண்புகளையும் குழந்தைக்கு அறிவிப்பதும், தெரியப்படுத்துவதும் அதன் குடும்பமேயாகும்.

இத்தகைய அறிவு குடும்பத்தில் நேரிடையாகப் பெற்றோர்களால் புகட்டப்படுவதாலும் பெற்றோர்களின் எடுத்துக்காட்டுகளாலும், பாராட்டு (Praise), தண்டனைகள் (Punishments) போன்றவை மூலமாகவும், கதைகள், சடங்கு முறைகள் (Ceremonies) விழாக்கள் (Celebrations) மூலமாகவும் குழந்தைகளிடம் எழுகிறது. குடும்பச் சடங்குகளும் விழாக்களும் குழந்தையின் சமூகவியல்பின் வளர்ச்சிக்கும் உதவுகின்றன.

4. மொழி அறிவு தொடங்குவதும் குடும்பத்தின் செல்வாக்கினால்தான். தாய்மொழியறிவைக் குழந்தைகளுக்குப் புகட்டுவது அதன் குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர்களும் சுற்றமுமே திருத்தமாகத் தாய்மொழியினைப் பேசும் பயிற்சியினையும் குழந்தை தனது குடும்பச்சூழ்நிலையில்தான் பெறுகின்றது. சொற்களஞ்சியத்தின் (Vocabulary) அளவும் குடும்ப நிலையோடு தொடர்புடையதாகும்.

5. குடும்பத் தொடர்பினால்தான் ஒரு குழந்தைக்கு, 'தான்' என்னும உணர்வும் (I-feeling) 'நாம்' என்னும் உணர்வும், (We-feeling) ஏற்படுகின்றன. ஒருவனைச்சமூகவியல் பின்னாக்குவதில் குடும்பத்துக்குப் பெரும் பங்கு உண்டு. ஒத்துழைப்பும், பரந்த மனப்பான்மையும் கொண்ட பெற்றோர்களுள் குடும்பத்தில் வளரும் குழந்தைகள், பல சமூக நற்பண்புகளைத் தாமாகவே அடைவர்.

ஒத்துணர்வு, உழைப்பு, தாராள மனப்பான்மை, அழகுணர்திறன், கட்டுப்பாடு, கீழ்ப்படிதல் போன்ற பல பண்புகளின் பிறப்பிடம் குடும்பமேயாகும். "கீழ்ப்படிதல், ஒழுங்கும், கட்டுப்பாடும் கொண்ட நடத்தை, சமூகப்பண்புகள் போன்றவற்றைக் குழந்தையானது கற்க, அதன் குடும்பத்தை விட வேறு சிறந்த இடமில்லை" என்கிறார் பொகார்டஸ் (Bogardus) என்னும் அறிஞர்.

சமூகத்தில் பிறரைப்பற்றி ஒருவன் கொண்டுள்ள மனப்பான்மைகள் (Social Attitudes) ஒருவன் அடைய விழையும் குறிக்கோள்கள், ஒருவனுடைய வாழ்க்கை நடை (Style of Life) ஆகியவற்றையும் அவனது குடும்பம் உருவாக்குகிறது. சிறுவர்களின் நடத்தையை மதிப்பிடத்தொடங்குகையில் அவர்களது குடும்ப நிலையை நாம் மனத்தில் கொண்டு மதிப்பிடுவது அவசியம். அப்பொழுதுதான் அவர்களது நடத்தைபற்றி நாம் உண்மையான ஒரு முடிவுக்கு வர இயலும்,

6. தமது சூழ்நிலையுடன் பொருத்தப்பாட்டைச் சிறுவர்கள் அடைவது அவர்களின் குடும்பச் செல்வாக்கையே பெரிதும் சார்ந்திருக்கிறது. பொருத்தப்பாடின்மை நெறிபிறழ்வுக்கு அடிப்படை என்று நமக்குத் தெரியும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவாமல் தாய் தந்தையருக்குள் பூசல் நிலை இருக்குமாயின்

அக்குடும்பத்தில் வளரும் குழந்தை உளப்போராட்டங்களுக்கு உட்பட்டுப் பொருத்தப்பாடின்மையை அடையும். நெறிபிறழ் சிறுவர்களைச் சீர்திருத்த, அவர்களது குடும்ப நிலையில் மாறுதல் செய்வது அவசியம் என்னும் உண்மை இப்போது எல்லோராலும் உணரப்பட்டுவருகிறது.

சுருங்கச் சொல்லின் ஆளுமை வளர்ச்சி (Development of Personality) யின் போக்கை நிர்ணயிக்கும் கருவிகளில் மிக முக்கியமானது ஒருவனது குடும்பநிலையும் அதன் செல்வாக்குமாகும். குடும்பத்தில் பெற்றோருக்கும் குழந்தைகளுக்குமிடையேயுள்ள தொடர்பின் தன்மையானது குழந்தைகளது ஆளுமை வளர்ச்சிப் போக்கினையும் அவர்களது சமூக மனப்பான்மைகளையும் நிர்ணயித்தலில் முக்கிய பங்கு பெறுகிறது என்னும் உண்மையைப் பெற்றோர்கள் குழந்தைகள் ஆகியோரிடையே காணப்படும் பலவகைத் தொடர்புகளுக்கும் குழந்தைகளது ஆளுமை இயல்புக்குமிடையேயுள்ள இணைப்பு (Correlation) தெளிவுப்படுத்துகிறது.

இத்தொடர்பு ஐந்துவகைப்பட்டதாகும். இவை புறக்கணித்தல் ஏற்றுக்கொள்ளல், அசட்டை செய்தல், அளவுக்கதிகமாகப் பாதுகாத்தல், முழு உரிமையளித்தல், கட்டுப்படுத்தல், பணிந்து போதல் அதிகாரம் செய்தல், ஒன்றிப்போதல, ஒதுங்கிச் செயல்படல் ஆகியனவாம். இவை ஒவ்வொன்றும் ஒரு வகைப்பட்ட தொடர்பு நிலையின் இரு தீவிர முனைகளைக் குறிக்கின்றது. இத்தொடர்பு நிலைகளுக்கேற்பக் குழந்தைகளது ஆளுமை இயல்புகளும் அமைந்துள்ளன என்று சமூக உளவியலறிஞர்கள் ஆராய்ந்து கூறுகின்றனர்.

குடும்பங்கள், ஒற்றுமை நிலவும் குடும்பங்களாகவோ (Accord Homes), பூசல் நிரம்பிய குடும்பங்களாகவோ

(Discorded Homes). பிளவுபட்ட குடும்பங்களாகவோ (Broken Homes) இருக்கக்கூடும். ஒற்றுமை நிலவும் குடும்பங்களே குழந்தைகள் சிறப்பாக வளரத்தகுந்த சூழ்நிலையைத் தோற்றுவிக்க இயலும் என்பது தெளிவு. ஒரு நல்ல குடும்பச் சூழ்நிலைக்கு ஈடாக எத்தகைய பள்ளியும் செயற்பட முடியாது.

2. மதிப்பு உருவாக்குவதில் குடும்பத்தின் பங்கை விவரி. (மாதிரி வினாத்தாள், MKU)

அல்லது

குழந்தைகளுக்கு சமூக மதிப்புகளைப் பயிற்றுவிப்பதில் குடும்பம் உதவி செய்வது எவ்வாறு என்பதை விளக்குக. **(April-2012, April-2014)**

**கல்வியின் பிரதிநிதியாக வீடு அல்லது குடும்பம்**

1. சமுதாயத்தின் முக்கிய அலகு வீடு ஆகும். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையை வீட்டில் தான் தொடங்குகிறான். ஒவ்வொருவரும் தன்னுடைய வாழ்க்கையை தாயின் மடியிலே தான் ஆரம்பிக்கிறான்.
2. எனவே ஒரு குழந்தைக்கு அதன் வீடே சமுதாயம் ஆகும். எல்லா வேதாந்திகளும், கல்வியாளர்களும் இன்னும் புகழ்பெற்ற மகான்கள் யாவரும் கல்வியின் முக்கிய பிரதிநிதியான வீடு அல்லது குடும்பத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தியுள்ளனர்.
3. ஜான்லாக், ரூஸோ, பெஸ்டலாசி, மகாத்மாகாந்தி போன்றோர் ஒரு குழந்தைக்கு கல்வி அமைப்பில் பெற்றுள்ள முக்கியமான பங்கு பற்றி குறிப்பிடுகின்றனர்.

சில முக்கியமானவர்களின் கருத்துக்கள் (Doctrines)

1. ஹென்டர்சன், 'ஒரு குழந்தையின் கல்வியானது அதனுடைய வீட்டில் ஆரம்பமாகிறது' எனக் குறிப்பிடுகிறார்.
2. டாக்டர் மாண்டிச்சோரி, 'இளைய குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பதில் வீட்டுச்சூழல் மற்றும் சுற்றுப்புறம் ஆகியன முக்கிய காரணிகளாகக் கருதுகிறார்.
3. ரூஸோ, 'தாயானவள் உண்மையான நர்ஸ்' என்றும் தந்தையானவர் 'உண்மையான ஆசிரியர்' என்றும் கருதினார்.

முக்கிய பணிகள் (Important functions)

1. அன்பைப் பொழிதல்

அன்பும் அதன்மீது கொள்ளுகின்ற அக்கறையும் குழந்தையின் உடனடித்தேவைகள் ஆகும். குழந்தையிடத்தில் அன்பு காட்டி அதன் வளர்ச்சியில் பெற்றோர்கள் எடுத்துக் கொள்கின்ற அக்கறையின் மூலம் மற்ற குடும்ப அங்கத்தினர்களான சகோதர்கள், சகோதரிகள் ஆகியவர்களின் மீது குழந்தை நடந்து கொள்ளும் முறையைப் பாதிக்கின்றது.

2. சமுதாய பழக்க வழக்கங்களில் செல்வாக்கு

குழந்யையானது குடும்பத்திலேயே ஒரு சிறிய சமூகத்தின் அனுபவத்தை பெறுகிறது. குழந்தையானது தனது குடும்ப அங்கத்தினர்களுடன் பரஸ்பர உணர்வுடன் பழக ஏராளமான வாய்ப்புக்களை பெற்றிருக்கிறது.

Crow and Crow : ஒரு வீடே ஒரு சமூகமாக உள்ளதால் இந்த வளர்ச்சிக் காலத்தின் போது நல்ல சமூக நடத்தையை வளர்க்க வேண்டியது பெற்றோர்களின் முக்கியமான கடமையாகும், என்று குறிப்பிடுகிறார்.

3. பொருளாதாரச் செல்வாக்கு

ஒரு குழந்தையானது அதனுடைய பெற்றோரையே சார்ந்திருப்பதால் உணவு, உடை, கல்வி, பொழுதுபோக்கு போன்ற பொருளாதார தேவைகளை நிறைவு செய்ய வேண்டியது பெற்றோர்களின் கடமையாகும்.

பல சமயங்களில் அவர்களின் குழந்தைகளுக்கான பொருத்தமான தொழிலை தேர்ந்தெடுக்க பெற்றோர்கள் முக்கியமான பங்கை வகிக்கின்றார்கள். குழந்தைகள் அவர்கள் பெற்றோர்கள் செய்யும் தொழிலினால் கவரப்படுகிறார்கள் என்பதனை அனுபவங்கள் காட்டுகின்றன.

4. கல்விச் செல்வாக்கு

வீடானது குழந்தையின் முதல் கல்வி நிலையம். தாயானவள் குழந்தையின் முதல் ஆசிரியர். இவைகள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகும், குழந்தையானது தன்னுடைய தாயின் தாலாட்டு பாடல்களிலிருந்து பேசக் கற்றுக்கொள்ளுகின்றது.

வீடானது பல்வேறு வகைப்பட்ட குழந்தையின் கல்வி அனுபவங்களில் அதன் எதிர்கால நடத்தை மனப்பான்மைகளுக்கான அடிப்படையை வீடு வழங்குகிறது. குழந்தைகளுக்கு உடல் நலம் பாதுகாத்தல், பேச்சுமுறை, சில அடிப்படைகருத்துக்கள் தன்னைச் சேர்ந்தவரிடத்தில் காட்டுகிற பழக்க வழக்கங்கள், மனப்பான்மைகள் ஆகியவைகளை குடும்பமானது குழந்தைக்கு கற்றுக்கொடுக்கிறது. இதுவே குழந்தையின் எதிர்கால கல்வி அடிப்படையாகும்.

5. அறநெறி

குழந்தையின் அறநெறி பற்றி நடத்தையானது குழந்தைப்பருவத்திலிருந்தே உருவாக்கப்படுகிறது. பெற்றோர்கள் விரும்பதக்க அறநெறி நடத்தைகளை உருவாக்குவதில் தாங்கள் முன்மாதிரிகளாக திகழ்வதின் மூலம் முக்கியப் பங்கினை வகிக்கிறார்கள்.

குழந்தையின் கற்றலானது பெற்றோர்களை பார்த்துக்கற்றலில் தொடங்குகிறது. நேர்மையானவனாகவும் உண்மையானவனாகவும் மதிக்கத்தக்க அளவிலும் ஒழுங்குடனும் இருக்க குழந்தையானது தன்னுடைய குடும்பத்தின் மூலமே கற்றுக்கொள்கிறது.

3. 'ஒப்பார் குழு' என்பதை விளக்குக.

ஒப்பார் குழு **(Peer Group)**

ஒத்த வயதுடையவர்கள் கூடிவிளையாடுவதும் பொதுவான விருப்பங்கள், நாட்டங்கள் குறித்துப் பேசுவதும் இயல்பானதாகும். இதை உலகெங்கும் காணலாம். இது பெரும்பாலும் தற்காலிகமானதாக உள்ள ஆதாரக் குழுவாகும். எட்டு வயது முதல் சிறுவர் சிறுமியருக்கு இத்தகைய கூட்டாளிக் குழுவினரிடம் நேரத்தைச் செலவிடுவது மகிழ்ச்சி தருவதாக இருக்கும். குழு உறுப்பினரிடையே உயர்வு, தாழ்வு காணப்படாது. குழுவாக விளையாடுவதாலும், செயல்களில் ஈடுபடுவதாலும் தைரியம், துணிவு, பற்றுறுதி, பிறருக்குதவுதல் போன்ற நற்பண்புகள் வளர்கின்றன.

விளையாட்டு, குழந்தைகளது மிகவும் இயல்பான வெளிப்பாடாகும். இது உடல் நலத்திற்கும் மனநலத்திற்கும் இன்றியமையாததாகும். விளையாட்டின் வழியே கற்பிக்கும் முறைகள் தொடக்க வகுப்புகளுக்கு ஏற்றதாகும். பள்ளிகளிலும்

பல்வேறு விளையாட்டுக் குழுக்களில் உறுப்பினராக இருக்கவும், விளையாட்டுப் போட்டிகள், பந்தயங்களில் பங்கு பெறச் செய்வதாலும் அணி உணர்வு (Team Spirit) மற்றும் பல்வேறு சமூகப் பொருளாதாரப் பிரிவினர்களை அறிந்து கொள்ளல், வெற்றி தோல்விகள் இயல்பானவை. அவற்றைப் பெரிதுபடுத்தக்கூடாது என்ற மனப்பான்மையும், அணித்தலைவனுக்குக் கீழ்ப்படிதல், தலைமைப் பொறுப்பேற்றல், விட்டுக் கொடுத்தல், சுதந்திரமான கருத்துப் பரிமாற்றம் போன்ற பண்புகளும் வளரும்.

ஒதுங்கிப் போதல், தாழ்வு மனப்பான்மை போன்றவை அகலும். எனவே, பெற்றோரும் கல்வி நிலையங்களும் இயல்பான முறையில் நண்பர் குழுவோடு பழகுதலை ஊக்குவிக்க வேண்டும். அதே சமயம், விரும்பத்தகாத பண்புகளையுடையவரது நட்பைத் தவிர்க்கவும் கற்பிக்க வேண்டும்.

4. மதிப்பு உருவாக்குவதில் சமுதாயத்தின் பங்கு பற்றி விளக்குக.

மதிப்பு உருவாக்குவதில் சமுதாயத்தின் பங்கு
**(Role of Society in Value Formation)**

சென்ற பல நூற்றாண்டுகளாகப் பள்ளிக்கூடங்கள் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டன. சமுதாய மாற்றங்கள் கல்விக் கூடங்களையும் பாதித்தனவென்று காண்கிறோம். ஆசிரியர்கள் இதனைப் புரிந்து கொள்ளவேண்டும்.

சமுதாயத்தில் ஏற்படும் முக்கிய தேவை அல்லது பிரச்சினையைத் தீர்க்க விழையும் போது மாறுதல் தேவையாகிறது. எடுத்துக்காட்டாக, இரண்டாம் உலகப்போருக்கு முன்னும், பின்னும் கல்வியறிவில்லாத பலர் படைகளில் சேர்க்கப்பட்டார்கள். இதனால் வாசித்தல், எழுதுதல் ஆகிய திறமைகளை வளர்க்க வேண்டிய அவசியம் பள்ளிகளுக்கு ஏற்பட்டது.

சமுதாயத்தில் ஒத்துழைக்க மறுத்த பலரைக் கண்டவிடத்து 'உள நலம்' (Mental health) என்னும் துறை, பள்ளிகளில் புகுத்தப்பட்டது. பள்ளி மாணவருக்கு நற்பண்புகள் கற்றுக்கொடுக்காததனால், சமூகத்தில் இளைஞர் பலர் குற்றவாளிகளாக (Juvenile delinquents) மாறினர் என்பர். சமுதாயத்தின் தேவைகளுக்கேற்ப பள்ளிகளில் மாறுதல் ஏற்றுக்கொண்டமைக்கு மேற்குறிப்பிட்டவை சில உதாரணங்களாகும்.

மாணவருக்குக் கல்வி புகட்டுவதோடு சமுதாயத்தோடு இணைந்து செயலாற்ற வேண்டிய பொறுப்பும் ஆசிரியர்களுக்கு இருப்பதால் மாற்றங்களை அவர்கள் ஏற்று அமுல்படுத்த வேண்டியதாகிறது.

இரண்டாவதாக, சமுதாய மதிப்புகள் (Value) பள்ளிகளின் செயல்களைப்பாதிக்கக் காண்கிறோம். சமுதாயத்தின் மதிப்புகள் சீர்கோடடையும் போது, பள்ளிகள் அம்மதிப்புகளைத் தகுந்த முறையில் மாணவர்களுக்குப் போதிக்குமேயானால், அதற்கேற்ப நாடு பாழடையாமல் தடுக்கப்படுகிறது.

மதிப்புகள், அழிந்து போகாமல் காப்பாற்றப்படுகின்றன. ஜனநாயகத்தில், சிறந்த குடிமக்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு பள்ளிகளுக்கு உண்டு. மார்க்குகளுக்கும், மதிப்பீடுகளுக்கும் பள்ளி அதிக மதிப்புக் கொடுத்தால் போட்டியும் பொறாமையும் மாணவரிடையே வளரலாகும். சிறந்தவற்றையடைய வேண்டும் என்ற ஊக்கம் (Achievement motivation) இருந்தால், தனிநபரும் சமுதாயமும் சிறப்படைய முடியும். இதற்கேற்ப மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியது பள்ளிகளின் பொறுப்பாகும்.

## சமுதாயச் சூழலில் கல்வி (Education in Society)

சமுதாயத்தின் சிறிய அங்கமாகிய பள்ளி, சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் முக்கிய அம்சமாகும். பள்ளியின் நோக்கங்கள், செயல்கள் ஆகியவை சமுதாயத்தைப் பிரதிபலிக்க வேண்டும். அதே போல் சமுதாயச் சூழல் பள்ளிக் கல்வியைச் சிறக்கச் செய்வதாக அமையவேண்டும். கற்றல் நோக்கங்கள், சமுதாய நோக்கங்களோடு இணைந்து இருப்பது இன்றியமையாதவொன்றாகும்.

சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்படும் போதெல்லாம் பள்ளியும் அவற்றிற்கேற்றவாறு தன் பணியிலும் மாற்றங்களை செய்து கொள்வது இன்றியமையாதது. இவ்வாறு, சமூகத்தின் வளர்ச்சியோடு இணைந்து காலப்போக்கில் உருவாவதே பள்ளி.

கல்வி என்பதே, ஒருவரின் வாழ்க்கை முழுவதும் தொடரும் ஒரு நடைமுறை. இங்குக் கல்வி என்பதற்கு நாம் கொள்ளும் பொருள் 'பள்ளி உள்ளடங்கிய எல்லா ஆதாரங்களினின்றும் நாம் பெறும் அறிவு மற்றும் தகவல்' என்பதே, இவ்வகையான கல்வி முறையில், பாரம்பரியங்களைத் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொள்ளல், புதிய சமுதாய அமைப்புக்களை உருவாக்குதல் மற்றும் நிர்மாணப் பணி, புதுமைகள் படைத்தல் ஆகியவை அடங்கும்.

மனித வாழ்வின் உடலியல் கூறுகளும் இதில் அடங்கும். எல்லாவற்றிற்கும் மேலாக, சமூகத்தில் உள்ள குறைபாடுகளைக் களைந்து, விரும்பத்தக்க அமைப்புக்களை நிலை நிறுத்த உதவுவதே இத்தகைய கல்வியின் பணியாகும்.

பள்ளியின் பாடத்திட்டம் சமூகநோக்கங்களை எய்துவதற்கேற்றவாறு அமைய வேண்டும். சமுதாய மாற்றத்திற்குக் கல்வி ஒரு சக்தி படைத்த சாதனம். ஆகவே நாளைய சமூகம் எதிர்பார்க்கும் அறிவையும், திறன்களையும் இன்றையச்

சிறுவர்களிடம் வளர்க்க முற்பட வேண்டும். இந்தக் கோணத்தில் ஆராய முற்படும்போது கல்வியின் பங்குப் பணிகளாகக் கீழ்வருவன அமைகின்றன.

1. பள்ளி, சமுதாயத்தின் அடிப்படை கலாசாரப் பண்புகளைப் பிரதிபலித்தல்.
2. சமுதாயத்தின் தேவைகளையொட்டியே பள்ளியின் வளர்ச்சித் திட்டங்கள் அமைதல்.
3. சமுதாயப் பணிகளில் நேர்த்தியாகப் பங்கேற்று, மாணவர்கள் பணிபுரியும் வகையில் அவர்களின் கல்வி அமைதல்.
4. 'புவியுலகனைத்துமே தன் சமூகம்' என்றும் கருதும் வகையில் குழந்தைகட்குச் சர்வதேச மனப்பான்மையை ஊட்டுதல்.
5. சமூதாயம் அவ்வப்போது உருவாக்கிக் கொள்ளும் குறிக்கோள்களை அடையும் வகையில், தனி பணி மரபுகளில் தேவையான வளைந்து கொடுக்கும் தன்மை பெற்றிருத்தல்.

## கல்வியின் சமூக நோக்கங்கள் (Social Aims of Education)

கல்வியின் பல்வேறு நோக்கங்களில் ஒன்று நன்னடத்தை உருவாக்கல் சமுதாயத்திற்கும் நீதி நெறிகளுக்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. மனித உறவுகளின் பின்னணியிலேயே நீதி நெறிகள் தோன்றுகின்றன.

மனிதச் சூழ்நிலையின்றி தனித்தீவில் இருந்த ராபின்ஸன் குருஸோ, தான் செய்யும் எந்த செயலிலும் அநீதியாளனாக இருக்க முடியாது. காரணம் அவனது மயானத் தனிமை, தான் ஏமாற்றுவதற்கோ, பொய்யுரை பகர்வதற்கோ, தன்னைச் சுற்றியாருமே இல்லையல்லவா? நம் யதார்த்த உலகம் அப்படியல்ல.

மனித சமுதாயத்தில் நம் ஒவ்வொருவரும் ஒரு அங்கத்தினர். ஆகவே கல்வியின் சமூக நோக்கத்தில் நீதிநெறி நோக்கமும் அடங்கும் கல்வியின் சமூக நோக்கம் வலியுறுத்துவது.

1. ஒவ்வொரு தனிமனிதனும், பொருளாதார ரீதியில் மற்றவர்களுக்குச் சுமையாய் இராமல், தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளும் திறன் பெற வேண்டும்.
2. தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தைப் புரிந்துகொள்ளும் அளவிற்கு அறிவும் திறனும் பெற்றிருக்க வேண்டும்.
3. சமூகத்திலுள்ள சம குடிமக்களோடு பழகுவதில் நீதி முறைகளைக் கடைபிடிக்க வேண்டும்.

கல்வியின் இறுதியான நோக்கமே, மனிதனை மனிதாபிமானம் உடையவனாக, அதாவது சமுதாய வாழ்விற்கு ஏற்றவனாகச் செய்வதாகும். இவ்வகையில் பார்த்தால், கல்வி ஒரு சமுதாய அவசியமே. நடத்தை மாற்றமே கல்வி, நடத்தை மாற்றம் சமூகச் சூழலில் தானே நிகழ முடியும்.

ஆகவே, தான் வாழும் சமுதாயச் சூழல் அன்றி. வேறு எவ்வகையிலும் கல்வி என்பதற்குப் பொருள் ஏதும் இல்லை; பிரவுன் என்னும் அறிஞர் சொன்னார்; ‘கல்வி என்பது நாம் அறிந்து வேண்டுமென்றே, கட்டுப்பாட்டுடன் செயல்படுத்தும் ஒரு நடவடிக்கை; அதன்மூலம் தனிமனித ‘நடத்தையிலே மாற்றங்களும் தனிநபர்கள் வாயிலாக சமூகத்தில் மாற்றங்களும் தோற்றுவிக்கப்படுகின்றன’.

மனிதன் ஒரு சமூகப் பிராணி, கூடி வாழும் மனப்பான்மையும் தனிமையைத் தவிர்ப்பதும் இம்மண்ணில் மனித இனம் அனைத்திற்குமே உரித்தான தன்மையாகும்.

அறிவியல் மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றங்கள் மனிதனின் வாழ்க்கைத் தரத்தையும் தொழில் அணுகுமுறைகளையும்

வெகுவாக மாற்றி வருகின்றன. புதிய சமூதாயத்திற்குத் தேவையான திறன்களையும், தகுதிகளையும், இளைஞர்களிடையே ஏற்படுத்த கல்விமுறை முயல வேண்டும். எளிதில் விவரிக்க முடியாத திறன்கள் பெற்ற சிந்தனையாளர்கள். திட்ட வல்லுநர்கள் ஆகியோர் நாளைய சமுதாயத்திற்குத் தேவைப்படுகின்றனர். தேவையான புதுமைகளையும் மாற்றங்களையும் படைத்து ஏற்றுக்கொள்ளும் வகையில் கல்விமுறை தன் நடைமுறைகளை வகுத்துக்கொள்ள வேண்டும்.

பின் தங்கியமற்றும் குறைபாடுகள் கொண்ட குழந்தைகட்கும் மீத்திறன் கொண்ட நுண்ணறிவு மிக்க சிறார்களுக்கும் தேவையான சிறப்பு கல்வி அவசியமாகிறது. அப்போதுதான் 'கல்வியில் வாய்ப்புக்களை அனைவர்க்கும் சமமான அளித்தல்' என்ற சீரிய கொள்கை சாத்தியமாகிறது.

ஜனநாயகப் பொதுவுடைமைத் தத்துவத்தை ஏற்றுக்கொண்டுள்ள நம் நாட்டில் சமூக நலன்கள் தனிநபரின் நலன்களுக்கு மேலாக ஓங்கியிருக்க வேண்டும். சமுதாய வாழ்க்கையை வெற்றியோடு எதிர்கொண்டு செயல்படத் தேவையான பழக்கங்கள், உடல் மற்றும் உள்ளத்திறன்கள், அறிவு பூர்வ ஈடுபாடுகள், நீதி வழிமுறைகள் ஆகியவற்றைக் கல்வி மட்டுமே வழங்க முடியும். சமுதாயத்தால் தான் பாதிக்கப்படுவது மட்டுமின்றி, தானும் சமுதாயத்தை மாற்ற ஒவ்வொரு தனிமனிதனும் திறமை பெற்றிருக்க வேண்டும்.

## சமுதாயத்தில் இடமாற்றமும் கல்வியும் (Social Change and Education)

தொழில்களை அறிவியல், தொழில் நுட்பம் ஆகியவற்றின் முன்னேற்றத்துக்கேற்ப, அறிவியல், தொழில்நுட்ப வல்லுநர்களைக் கண்டுபிடித்து சமுதாயத்திற்கு அளிக்கவேண்டிய பொறுப்பு

கல்விக்கூடங்களுக்கு உண்டு. சமுதாயத்தில் கல்வி, செய்யும் தொழில், தொழில்திறன் ஆகியவற்றுக்கேற்ப பிரிவுகள் (Social classes) ஏற்படக் காண்கிறோம்.

திறன்களை அடிப்படையாகக் கொண்ட, இன்ஜினியர்கள், டாக்டர்கள் ஆகியோர் சமுதாயத்தின் மேல் மட்டத்திலிருக்கக் காண்கிறோம். இவர்களுக்கு அடுத்தபடியாக குறைவான திறன்களைப் பயன்படுத்தும் (ஆனால் கடினமாக உழைக்கும் தொழிலாளர்கள் வைக்கப்படுகின்றனர்)

கடின உழைப்பு மட்டுமே தேவைப்படும் தொழில்களில் ஈடுபடுவோர் இதற்கு அடுத்த 'பிரிவில்' வைக்கப்படுகின்றனர். செல்வச் செழிப்பினாலோ, குறைவினாலோ ஏற்படும் சமுதாயப் பரிவுகள் ஒரு பக்கம் இருக்க, தொழில் திறமையின்பால் ஏற்படும் சமூகப் பிரிவுகளையும் நாம் காண்கிறோம்.

ஒரு சமூகப்பிரிவைச் சேர்ந்தவர், தமது திறன்களின் வளர்ச்சியால் உயர்ந்த பிரிவைச் சென்றடையலாகும். இதனை சமுதாயத்தில் மேல்நோக்கிய (Upward Mobility) இடமாற்றம் அல்லது இடப்பெயர்ச்சி என்கிறோம். இதற்குக் கல்வி ஒரு முக்கிய காரணமாகும். தரமான கல்வியின் மூலம் தன் குழந்தைகளின் சிறப்புத்திறன்களை வளர்க்கப் பெற்றோர் தற்காலத்தில் பெரிதும் முயல்கின்றனர்.

ஹெர்பர்ட் ஸ்பென்சர் (Heybert Spencer) என்னும் அறிவியல் அறிஞர் சமுதாய வளர்ச்சியும் (Evolution of Society) சமுதாய மாற்றமும் (Social mobility) ஒன்றே என்கிறார். கார்ல் மார்க்ஸ் போன்ற சமூகவியல் அறிஞர்கள், வேறு கருத்துத் தெரிவிக்கின்றார்கள். கொள்கைகளைப் பின்பற்ற விழையும் அறிவு சார் மக்கள், சமூக மாற்றங்களை உருவாக்குகிறார்கள் என்பது இவர்களது கருத்து.

சமுதாய மாற்றம், பண்பாட்டில் (Culture) மாற்றங்களைத் தோற்றுவிக்கிறது என்கிறார் 'ஆக்பர்ன்' (Oqburn). கலாச்சாரம் அல்லது பண்பாட்டின், பொருள் சார்ந்த (Material based) மாற்றங்கள் நிகழலாம். அல்லது பொருள் சாரா (Non material based) மாற்றங்கள் நிகழலாம் ; கலாச்சாரமும், சமுதாய மாற்றமும் ஒன்றையொன்று பாதிப்பது உண்மையே.

மேலும் அரசியல், பொருளாதாரம், சமயம் ஆகிய பலதுறைகளிலும் இச்சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்கள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இம்மாற்றங்களுக்கு மிக முக்கியமான ஒரு காரணமாகக் கல்வியைக் குறிப்பிடலாம்.

### சமுதாய மாற்றங்களுக்கேற்ப கல்வி
### (Education for social change)

நம் அரசியலில் சட்டப்படி, 14வயதிற்கு உட்பட்ட அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டிய கட்டாயம் பணிகட்கு ஏற்பட்டடுள்ள மகத்தான பணி. பள்ளியினின்று இடையே மாணாக்கர்கள் விடுபட்டுப் போதல், தேவைகட்குப் பொருந்தாத பாடங்கள், கல்வியின் ஒவ்வொரு இறுதிநிலையைத் தொடர்ந்தும் அலுவலகப் பணி, நாடு கூறும் தீராத பிரச்சனைகளாக தொடருகின்றன.

இவ்வாறு கல்விக்கான சமுதாய தேவை பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு தீர்வுகாண கல்வியாளர்கள் தங்களின் மதியூகத் திறனைப் பயன்படுத்த வேண்டும்.

உயர்கல்விக்கான, தேவைகளை நம் பல்கலைக்கழகங்கள் நிறைவேற்றி வருகின்றன. வழக்கமான பாடவகைகள் தவிர பல வகையான தொழில் மற்றும் மேலாண்மைப் பாடப் பிரிவுகள்

வழங்கப்படுகிறது. வயது மற்றும் பிற தகுதிகளைப் பாராமல் விரும்பிக்கோரும் அனைவருக்கும் கல்வி வழங்கும் தொலைதூரக்கல்வித்திட்டங்கள் பெருகியுள்ளன. இவற்றில், தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்ற நவீன சாதனங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

சமுதாயத் தேவைகட்கு ஏற்ப, நம் உயர்க்கல்வி முறைக்கு புத்துணர்ச்சியூட்டிச் சீரமைக்க கீழே வரும் சில வழிமுறைகள் நம் அரசின் 1986ஆம் ஆண்ட தேசியக் கல்விக் கொள்கையில் கூறப்பட்டுள்ளன.

1. உயர்க்கல்வி நிறுவனங்கள் நிலைப்படுத்திப் பெருக்குதல்.
2. சுயாட்சிக் கல்லூரிகள் மற்றும் துறைகளைத் துவக்கிப் பேணுதல்.
3. பாடமுறைகளை மாற்றியமைத்தல்,
4. ஆசிரியர்கட்குப் பயிற்சியளித்தல்,
5. ஆராய்ச்சிப் பணியை ஊக்குவித்தல்,
6. பணித்திறனைப் பெருக்குதல்,
7. நிறுவனங்கட்கிடையே ஒருமித்த முயற்சிகளுக்கான அமைப்புகளை உருவாக்குதல்.
8. இட (நிறுவன) மாற்றம்.

பள்ளிக் கல்வியைப் பொறுத்தமட்டில், இடைநிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கைத் தொடர்ந்து பெருகி வருகிறது. பள்ளிகளின் எண்ணிக்கை தொடர்ந்து கூடிவந்தாலும், இடையில் நின்றுவிடுகிறது. பள்ளியில் சேராமலேயிருந்துவிடுவது போன்ற பிரச்சினைகள் நமக்குச் சவாலாகத் தொடருகின்றன.

**5. மதிப்பு உருவாக்குவதில் கல்வி நிலையங்களின் பங்கினை விவரி. (மாதிரி வினாத்தாள், MKU)**

## கல்விநிலையங்கள் (Educational Institutions)

கல்வி நிலையங்கள் அல்லது பள்ளிக்கூடங்கள் முக்கிய சமூக நிலையங்களாகும். இந்நிலையங்கள் சமூகத்திலுள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் திட்டமான முறைப்படியமைந்த கல்வியை (Formal Education) அளிப்பதாகச் சமூகத்தினால் ஏற்படுத்தப்பட்டு, தொடர்ந்து அதனால் ஆதரிக்கப்பட்டுவரும் நிலையங்களே பள்ளிகளாகும்.

நமது முன்னோர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முயன்று தோற்றுவித்த அறிவாற்றல்களையம், செய்திறன்களையும் இன்றைய சமூகத்தில் வாழும் இத்தலைமுறைக் குழந்தைகள் எளிதில் பெற உதவுதலே பள்ளிகளின் நோக்கமாகும். நமது தொடக்கப்பள்ளிகளின் முதல் வகுப்பு. இராண்டாம் வகுப்புக் குழந்தைகள் கற்றுள்ள மொழியின் நெடுங்கணக்கினையும் எண்களையும் உருவாக்க மனித இனத்துக்கு எவ்வளவு காலம் பிடித்திருக்கும் என்று சிறிது நாம் எண்ணிப் பார்த்தால் பள்ளிகளெனப்படும் கல்வி நிலையங்களின் சிறப்புப் பணி நமக்குத் தெளிவுபடும்.

குழந்தை வளர்ப்புப் பள்ளி (Nursery Stage) தொடங்கி, பல்கலைக்கழக நிலை (University Stage) வரையுள்ள யாவும் கல்வி நிலையத்துக்குள் அடங்கியுள்ளன. சமூகச் செயல்களில் கல்வி கற்பித்தல் முக்கியமானதாகும். சமூக மரபுரிமை (Social Heritage) சமூகத்திலுள்ள சிறுவர் சிறமியரிடையே பரப்பப்பட்டால்தான் சமூகம் தொடர்ந்து நிலைத்து இயங்கும் ஆகவே, கல்வியானது சமூக வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு கூறாகும். தொடக்கத்தில் சமூகத்தினர் யாவருமே கல்விப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

ஆனால், சமூக வாழ்க்கை சிக்கலடைந்து எல்லாச் சமூக உறுப்பினர்களுமே பொதுவாகத் தம் குழந்தைகளது கல்விப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றியபோது, கல்விக்கூடங்கள் தனிப்பட்ட நிலையங்களாக எழுந்தன.

இவற்றில் சிறப்புப் பணியாற்றும் ஆசிரியச் சமூகம் இந்நிலையில் தோன்றிய உயர்தொழிற் குழுவேயாம். முன்னர் நம் நாட்டில் சில பள்ளிகளே இருந்தன. ஒழுங்காகக் கல்வி கற்போரும் குறைந்த எண்ணிக்கையிலேயே இருந்தனர். ஆனால் இன்று கல்வி நிலையங்கள் எங்கும் பரவியுள்ளன. அவற்றின் செல்வாக்கும் மிகுந்து காணப்படுகின்றது.

கட்டாயக் கல்வி முறையினால் கல்வி கற்போரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. மேலும், இன்று நம் நாட்டின் எல்லாப்பிரிவினரும் கல்வி வசதிகளை நன்கு பயன்படுத்திக்கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர். இதன் விளைவாக, முன்பு சமுதாயத்தில் காணப்பட்ட ஏற்றத் தாழ்வுகள் மறையத் தொடங்கியுள்ளன.

சமூகத்தின் பல்வேறு பிரிவினரிடையே இன்று காணப்படும் இயங்கும் தன்மையும் (Social Mobility) இதனின்றே எழுவதாகும். அதாவது சமூகத்தில் கீழ்நிலையிலுள்ளோர் பலர் உயர் நிலைக்கு உயரவும், ஒரே பிரிவிலும் முன்பு தாழ்ந்து காணப்பட்டோர் உயர்நிலையினை எய்தவும் கல்வி துணை செய்கிறது. இவ்வகை இயங்குதல்கள் (Horizontal and vertical mobility) அடுத்தடுத்த சந்ததிகளிலோ அல்லது ஒரே சந்ததியிலோ நிகழக்கூடும்.

பள்ளிக்கூடங்கள் மாணாக்கரின் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் சமூக வளர்ச்சிக்கும் ஏற்ற சூழ்நிலையை உருவாக்குபவை. பள்ளியில் நிலவும் இத்தகைய சூழ்நிலையில் மாணாக்கரின் முழு வளர்ச்சி சாத்தியமாகிறது. மாணாக்கரின் சிறப்புமிக்க வாழ்க்கைக்கு

இன்றியமையாத அறிவு, கைத்திறன், பழக்கங்கள் ஆகியவற்றைக் கற்பிப்பதும் பள்ளி வாழ்வேயாகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பள்ளிக்கல்வி பல்வேறு விதங்களில் உதவுகிறது.

நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாப்பதன் வழியே பொருளாதார வளர்ச்சி பெருகக் கல்வி துணை செய்கிறது. பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத காரணியான சமூக அரசியல் நிலைத்த தன்மை உருவாக்குவதற்குக் கல்வி உதவுகிறது.

புதிய அறிவினை மக்களிடையே பரப்பி பொருளாதார வளர்ச்சிக்கு ஆக்கமளிக்கிறது (எடுத்துக்காட்டு சிறுசேமிப்பு பற்றிய அறிவு). நாட்டின் வளர்ச்சிக்கு மக்கள் சக்தியை (Man Power) நன்கு பயன்படுத்தல், தொழிற்துறை வல்லுநர்களை உருவாக்கல், தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான விஞ்ஞான மனப்பான்மையை மக்களிடையே உருவாக்கல், பொருளாதார வளர்ச்சிக்குத் தடைகளாக எழும் காரணிகளை அகற்றல் போன்றவற்றிலும் கல்வி துணை செய்கிறது.

பள்ளிக்கூடங்களின் பணிகளில் ஒன்று, மாணாக்கர்களைச் சமூக இயல்பினர் ஆக்குதல் ஆகும்.

சமூகவியலின் தந்தையெனப்படும் காம்டே என்ற அறிஞர் மனித முன்னேற்றத்துக்குக் கல்வி அடிப்படை எனக் கருதுகிறார். பிறர்பால் பரிவு உணர்ச்சியையும், பிறர் உள்ளத்தைப் புரிந்துகொள்ளும் திறனையும் உண்மைக் கல்வி மாணாக்கர்க்கு அளிக்க வேண்டும். பள்ளியின் அமைப்பு அதற்கு வெளியேயுள்ள சமூக வாழ்க்கையைப் பின்பற்றி அமைந்திருந்தால்தான் இது சாத்தியமாகும்.

ஜான்டூயி என்னும் அறிஞர் கருத்துப்படி, பள்ளி ஒரு 'மாதிரிச் சமுதாயமாக' (Model Community) அமைய வேண்டும்.

பள்ளிவாழ்க்கை அமைதியும், இன்பமும் நிறைந்ததாய் இருத்தல்வேண்டும். பள்ளியில் நடைபெறும் செயல்கள் சமூகப் பொது வாழ்க்கையின் அடிச்சுவட்டிலேயே அமைய வேண்டும். பள்ளியில் ஒற்றுமையுடனும், ஆர்வத்துடனும் தங்களது கவர்ச்சிக்குப் பொருத்தமான செயல்களில் ஈடுபடச் சிறுவர் சிறுமியருக்கு வாய்ப்புக்கள் அளிக்கப்படல் அவசியம்.

இத்தகைய பள்ளிப் படிப்பே மாணாக்கரைப் பயன்படுத்தி அவரைச் சமூகத்தின் சிறந்த உறுப்பினராகச் செய்யவல்லது.

சமூகத்தின் பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் மாணாக்கர் உணர்ந்து அவற்றின்படி நடைபயிலவும் பள்ளிக் கல்வி பயிற்சியளிக்கிறது. ஒரு சமூகத்தின் முன்னேற்றம் அந்தச் சமூகத்தில் பரவியுள்ள கல்வி முறையைப் பொறுத்தது.

சமூகத்தில் பலவித வேற்றுமைகளை நாம் காண்கிறோம். இவற்றால் சமூகத்தின் நல்வாழ்வு ஓரளவு சேதமுறுகிறது. கல்வியின் மூலம் இவற்றைக் களைந்தெறிய ஆசிரியர்கள் முற்பட வேண்டும். மாறுபடும் சூழ்நிலைகளுக்குத் தகுந்தவாறு தமது நடத்தை முறைகளை மாற்றியமைத்துக் கொள்ளும் திறனும் கல்வியின் வழியே மாணாக்கரிடையே வளரச் செய்தல் அவசியம்.

பள்ளிப் படிப்பு இந்நோக்கங்களையெல்லாம். நிறைவேற்ற வேண்டுமாயின், அது வெறும் ஏட்டுப் படிப்பாக மட்டுமல்லாமல் "வாழ்க்கைப் படியாக" (Education for life) விளங்க வேண்டும். பள்ளிப் படிப்பில் 'பாடப் புறச் செயல்கள் (Extracurricular Activities) எனக் கூறப்படுபவைகளுக்குச் சிறந்த இடம் அளித்தல் அவசியம்.

இச்செயல் வகைகளே மாணாக்கரை மக்களாட்சியில் முழுப்பங்கு கொள்ளும் திறன் படைத்த குடிகளாக்கவல்லன. கற்பிக்கும் முறைகளிலும் செயல் முறைகளுக்கு (Activity Methods) முக்கியமான பங்கு அளித்தல் இன்றியமையாதது. சமூக அறிவும்

சமூக நற்பண்புகளும், ஒத்துழைத்தல், பொறுப்பேற்றுக் கட்டுப்பாட்டுடன் நடத்தல் போன்ற சமூக வாழ்க்கைத் திறன்களும் மாணாக்கர்கள் பெறக்குடிமைப் பயிற்சி பெரிதும் உதவுகின்றது.

இன்று பள்ளிகள் ஆற்றவேண்டிய பணிகளின் எண்ணிக்கை பெருகிவருகின்றது. குடும்பத்தில் பெற்றோரால் முன்பு கவனிக்கப்பட்டு வந்த பல பணிகள் இப்போது பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களின் பொறுப்புகளாயுள்ளன. மாணாக்கனின் உடல்நலம் பேணல், மதிய உணவு அளித்தல், விளையாட்டுகளுக்கு ஏற்பாடு செய்தல், தொழில் தேர்வுக்கு மாணாக்கனுக்கு வழிகாட்டல் போன்றனயாவும் இன்று ஆசிரியர்களின் முக்கியப் பணிகளாயுள்ளன.

இவற்றை ஆசிரியர்கள் திறம்படச் செய்வது பள்ளியின் செல்வாக்கைப் பொறுத்திருக்கிறது. பள்ளியின் செல்வாக்கு அதில் பணிபுரியம் ஆசிரியர்களின் பண்புகளைச் சார்ந்தே நிற்கிறது. பள்ளிக்கல்வியின் முழுப்பயன்களை மாணாக்கர் அடைய திறமையும், நற்பண்புகளும் கொண்டஆசிரியர்கள் பள்ளிகளில் இருப்பது இன்றியமையாத ஒரு நியதியாகும்.

குழந்தைகளைச் சமூகவியல்பினராக்குதலில் (Socialization) பள்ளிகளது முக்கிய பங்கு குறிப்பிடப்பட்டது. இங்கு 'சமூகவியல் பினைப்பெறுதல்' எனப்படுவதன் தன்மை பற்றிச் சிறிது ஆராய்வோம். சமூகவியல்பினைப் பெறுதல் என்பதற்குப் பல விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. நடத்தைக் கோட்பாட்டினரைப் (Behaviourists) போன்றோர் சமூகவியல்பினைப் பெறுதலினின்றும் தோன்றும் புறநடத்தையினை வலியுறுத்துகின்றனர்.

இக்கருத்து சமூகவியல்பு பெறுதல் எவ்வாறு நிகழ்கிறது என்பது பற்றியோ இதற்கும் கல்விச்செயல் முறைக்குமிடையேயுள்ள தொடர்பு எத்தகையது என்பது பற்றியோ விளக்குவதாக

அமையவில்லை. வேறு சிலர் தனி மனிதன் சில மதிப்புகளைத் தன்னுள் அமைத்துக்கொள்வதன் விளைவாகவே (Value Internalization) சமூகவியல்பு எழுகின்றது என்று குறிப்பிடுகின்றனர். இக்கருத்து சமூகச் சூழ்நிலையின் முக்கியத்துவத்தையும் அச்சூழ்நிலைக்கும் தனிமனிதர்களுக்குமிடையே எழும் இடைவினையின் முக்கியத்துவத்தையும் பெருமளவு புறக்கணிப்பதாக அமைகிறது.

உண்மையில் தனிமனிதனுக்கும் சமூகச்சூழ்நிலைக்கும் இடையே நிகழும் இடைவினையே சமூகவியல்பினைப் பெறுதல் என்பதன் அடிப்படையாகும். இதன் விளைவாகத்தான். தனிமனிதனது ஆளுமை அமைப்பில் சில புதிய சமூக மதிப்புகள் இடம்பெறுகின்றன; சமூகத்தில் சிறப்பாக வாழத் தேவைப்படும் திறன்களை அவனால் கற்க இயலுகிறது.

சமூகவியல்பினைப் பெறுதலில் ஆதார சமூக நிலையங்களின் செல்வாக்கு மிகுந்து காணப்படுகிறது. பள்ளி இதற்குத் தற்செயலாக உதவுவதுடன் திட்டமிட்ட முறையிலும் இச்செயல் முறைக்கு ஆக்கமளிக்கிறது.

சமூக அமைப்பு காலப்போக்கில் சிக்கலுற்றதன் விளைவாக குழந்தைகளது சமூகவியல்பின் வளர்ச்சிக்கான பள்ளிக்கல்வியின் பங்கிலும் சில மாற்றங்கள் எழுந்துள்ளன.

1. குழந்தைகள் சமூக வியல்பினைப் பெறுதலில் பள்ளிகள் ஆற்ற வேண்டிய பொறுப்புகள் இன்று அதிகரித்துள்ளன.
2. இச்செயல் முறை முழுமையும் நிறைவுப்பெறத் துணை செய்வது பள்ளிகளின் பொறுப்பாக இன்று கருதப்படுகிறது.

3. முற்காலத்தில் குடும்பம் ஆற்றிய பணிகளில் பல இன்று பள்ளி போன்ற பிற சமூக நிலையங்களின் பொறுப்புகளாக மாறியுள்ளன. சமூகவியல்பினைப் பெறுதல் என்னும் செயல் முறையும் இன்று சிக்கல் மிகுந்த ஒன்றாக மாறி இருத்தலின் விளைவாக இதற்கு உதவத் திட்டமிடப்பட்ட கல்வி தேவைப்படுகிறது.

4. முறைப்பட்ட கல்விக்கான காலம் இன்று நீடிக்கப்பட்டிருத்தலின் விளைவாக, குழந்தைக்குத் தன் குடும்பத் தொடர்புகளைவிடப் பள்ளியின் செல்வாக்கு வலுவுள்ளதாகியுள்ளது சமூகத்திறன்களையும், சமூக மனப்பான்மைகளையும் குழந்தைகள் பெற உதவுதல் பள்ளிக் கல்வியின் முக்கிய நோக்கங்களாக இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

6. மதிப்புறுக்களின் வளர்ச்சியில் கல்வியின் பங்களிப்பினை விவரி. **(April-2013)**

## மதிப்புறுக்களின் வளர்ச்சியில் கல்வியின் பங்களிப்பு (Role of Education in Development of Values)

### *1. கல்வி மனிதனின் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. (Biological Necessity)*

கல்வி மனித வாழ்விற்கு முக்கியமானதொரு தேவையாகும். மற்ற உயிரினங்கள் அனைத்தும் தங்கள் எதிர்கால வாழ்விற்கு உடல் தேவைகளை உள்ளுணர்வின் மூலமாகப் பிறந்த பொழுதிருந்தே அறிந்து கொள்கின்றன. அவைகளுக்கு தனிப்பயிற்சி முறைகள் அவசியமில்லை.

எடுத்துக்காட்டாக இளங்கன்று பிறந்த சில நிமிடங்களில் ஓடவும் குதிக்கவும் கற்றுக்கொள்கிறது. ஒரு குட்டிக்குரங்கு தனது பெற்றோரைப் பார்த்து அனைத்துக் காரியங்களையும் செய்ய விரைவில் கற்றுக்கொள்கிறது. ஆனால் மனிதனது குழந்தைப் பருவம் வித்தியாசமானது.

பிறந்த பொழுது சரிவரக் கவனிக்காவிட்டால் இறக்கும் நிலையினைக் குழந்தை அடைய நேரிடுகிறது. தன்னைக் காத்துக்கொள்ள மற்றவர் உதவியை வெகுகாலம் வரை நாடி நிற்கிறது. வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபடுவதற்குரிய அறிவும், பயிற்சியும் அதற்கு அவசியமாகின்றன. எனவே குழந்தைகளுக்குக் கல்வி அறிவும், போதனா முறைகளும் அவர் தம் வாழ்வின் முன்னேற்றத்திற்கு முக்கியமானவைகளாக அமைகின்றன.

## கல்வி ஒரு சமூகத் தேவை (Social necessity)

மிருகங்கள் தங்கள் பெற்றோரிடமிருந்து சில குறிப்பிட்ட செயல்பாடுகளைக் கற்றுக்கொண்டு, பின் தாமே தம்மைக் கவனித்துக் கொள்கின்றன. மனிதக் குழந்தை பாரம்பரிய பண்பாடுகளையும் சேர்த்தே கற்றுக்கொள்ள வேண்டிருக்கிறது. இந்தக் கலாச்சார பாரம்பரியம் குழந்தைகளுக்குப் பரிணாமங்களின் மூலம் கொண்டு செலுத்தப்படுவதில்லை, ஒரு தலைமுறையினைப் பாதித்து மனித இனமே பின் நோக்கிச் செல்வதற்குக் காரணமாக அமையலாம்.

ஒரு தலைமுறையில் கற்ற கல்வியினால் அத்தலைமுறை வளர்த்துக்கொண்ட பண்புகள், குணநலன்கள், திறமைகள் முதலியவை அடுத்த தலைமுறைக்குத் தொடர்ந்து கொண்டு செல்லப்படுவதில்லை. ஆதலால் கல்வி ஒவ்வொரு தலைமுறைக்கும் இன்றியமையாத ஒன்றாக அமைகிறது.

இக்கல்வியே தலைமுறைகளைப் பாதுகாத்து பண்பாடு வளர்ச்சியுற வழி வகுக்கிறது. கல்வி வளர்ச்சிக்கும், நாகரீக முன்னேற்றத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு, தற்போதைய

நாகரீகத்தின் முக்கிய அம்சங்களாகக் கருதப்படுவன நீதி, அமைதி, முன்னேற்றம் ஆகியவையாகும். இவை அனைத்தையும் பெறுவதற்கு கல்வி ஒரு முக்கிய கருவியாக செயலாற்றிட வேண்டும்.

## கற்றல் ஒரு தனித்திறமை (Unique Capacity for Learning)

அனைத்து உயிர்களிலும், மேலான மனித இனம் கல்வி கற்றலுக்குரிய தனித்தன்மையைப் பெற்றிருக்கிறது. பேசும்திறன், நினைவாற்றல், அறிவியல் ஆராய்ச்சி போன்ற பல உள்ளார்ந்த திறமைகளைத் தனக்குள் கொண்டுள்ளது, மனித இனம் இத்தகைய திறமைகள் அனைத்தையும் கல்வியாலும். தொடர்ந்து பயிற்சி பெறுதலாலும் மட்டுமே வளர்த்துக் கொள்ள முடியும்.

பிற்காலத்தில் தான் செய்யவேண்டிய செயற்பாடுகளைத் தன் விளையாட்டின் மூலம் குழந்தை கற்றுக்கொள்கிறது. குழந்தைப் பருவமே விளையாட்டுப் பருவம்தான். கல்வி அப்பருவத்தில் குழந்தைகள் எதிர்கால வாழ்விற்கு பக்குவப்படுத்தலுக்கு உதவுகிறது.

## குழந்தைகளின் நுண் உணர்வுப் பருவம் (Child's Period)

அனுபவ ரீதியான கல்வி ஒருவனுடைய வயதான காலம் வரையிலும் கிடைக்கக் கூடிய ஒன்றாகும். ஆனால் கல்வி அறிவினைப்பெறுவதற்கு ஏற்ற பருவம் குழந்தைப் பருவம். குழந்தையின் மனம் எளிதில் எதையும் ஈர்த்துக்கொள்ளக்கூடிய நுண்உணர்வும் நெகிழ்வுத் தன்மையும் கொண்டது.

குழந்தைப்பருவத்தில் சரியான முறையில் கல்வி போதிக்கப்படாவிட்டால் முறையான பயிற்சி அளிக்கப்படாவிட்டால் குழந்தை பெரிதாகும் பொழுது சிறந்த பழக்க வழக்கங்கள்

உருவாவதில் சிக்கல் ஏற்படுகிறது. ஆகவே நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுத் தருவதற்குரிய சிறந்த பருவம் குழந்தைப்பருவம்.

உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்தலுக்கும் பாரம்பரிய பண்பாட்டை ஒவ்வொரு தலைமுறைக்கும் கொண்டு செல்லுவதற்கும் கல்வி இன்றியமையாதது. கல்வி ஒரு நாட்டின் கலாச்சாரத்தைப் பாதுகாத்து முன்னேற்றி சிறந்ததொரு முன்னேற்றமும், நாகரீக வளர்ச்சியும் ஏற்படக்காரணமாயிற்று. மாறிவரும் இவ்வுலகில் உண்மையான கல்வியின் மூலம் மட்டும் ஒரு பயனுள்ள அர்த்தமுள்ள வாழ்வை ஏற்படுத்த முடியும்.

**கல்வியினால் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் (Changes due to Politics, Economics and Social Education)**

அரசியல் **(Politics)**

கல்வியின் மூலம் பிரமிக்கதக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை எவரும் மறுக்க இயலாது. ஆங்கிலக் கல்வி பெற்றதன் பயனாக இந்தியர்களுடைய அறிவுவொளி சுடர் விட ஆரம்பித்தது, ஆங்கிலக் கல்வியின் மூலம் பல நாடுகளின் புரட்சிகள், அரசியலமைப்பு முறைகள், அரசியல் அறிஞர்கள் ஆகியவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

நம் நாட்டு தேசிய உணர்வு தட்டி எழுப்பப்பட்டது. நாட்டுப் பற்று என்னும் நல்ல விதைகள் நம் மக்கள் மனதில் ஊன்றப்பட்டதற்கு கல்வியே காரணம். கல்வியே நம்முடைய விடுதலைப்போராட்டத்திற்குப் பாதை அமைத்தது எனலாம்.

அரசியல் விழிப்பு ஏற்பட கல்வி பெரிதும் பயன்பட்டது. பாராளுமன்றமுறையிலான அரசாங்கத்தை ஏற்படுத்த கல்விபெரிதும் துணை புரிந்தது. அரசியலமைப்பில் பல்வேறு முறைகளைத்

தெரிந்து கொள்ள முடிந்தது. ஆட்சி முறையில் ஒரு பயிற்சியும், தல சுயஆட்சியினை ஏற்று நடத்தும் முறையினையும் தெரிய வாய்ப்பு ஏற்பட்டது.

ஆங்கில ஆட்சியினை ஆட்டம் காணவைப்பதற்கு கல்வியே ஒரு பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தது என்பது 'குன்றின்மீதிட்ட விளக்கு போல்' நன்கு தெரிகிறது என்றால் அது மிகையாகாது. அது மட்டுமல்லாமல் ஆங்கிலேயர்கள் ஆட்சியினை விட்டு இங்கிலாந்து சென்ற பின்னரும் அரசியலில் விழிப்புணர்வு ஏற்பட்டதிற்கு இதுதான் காரணமாகும்.

1947-ஆம் ஆண்டு விடுதலை பெற்றபின் அரசியல் தலையீட்டால் கல்விக் கொள்கைகள் நன்கு ஏற்படுத்தப்பட்டன. இந்திய அரசாங்கம் டாக்டர் இராதாகிருஷ்ணன் குழு, டாக்டர் A.L. முதலியார் குழு, ஆச்சாரியா நரேந்திர தேவ் குழு, கோத்தாரிக் குழு ஆகிய குழுக்கள் கல்வி வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்டன, அவைகளால் கல்வியில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன்.

## பெருளாதாரம் (Ecoomics)

கல்வியினால் பொருளாதார வளர்ச்சி பொலிவு பெற்று விளங்கியது, மேலை நாட்டுக் கல்வியினால் மேலை நாட்டு மாயமாதல் என்ற கொள்கை பின்பற்றப்பட்டது. அவர்களுடைய முறைகள் பல்வேறு துறைகளில் நாடு முன்னேற பின்பற்றப்பட்டன குறிப்பாகவும் சிறப்பாகவும் 1925-ஆம் ஆண்டுக்குப் பின்னரே அது பின்பற்றப்பட்டது.

பொருளாதாரப் போட்டியில் நாட்டம் கொண்டிருந்தது நம் நாடு. மகாத்மா காந்தி அவர்கள் அன்னியப் பொருள்களை

வாங்கக்கூடாதென்றும், நம் நாட்டுப் பொருள்களையே வாங்க வேண்டும் என்றும் பிரச்சாரம் செய்தது நம் பொருளாதாரம் வளர வாய்ப்பாக அமைந்தது. அத்துடன் விவசாயம் நன்கு வளர்ச்சி அடைய ஊக்கம் செலுத்தப்பட்டது. தொழிற்சாலைகள் பல ஏற்பட்டன தொழில்மயமாதல் கொண்டு வரப்பட்டது.

பல்வேறு நாடுகளின் பொருளாதார நிலைகளை கல்வி மூலம் அறிந்து நம் நாட்டின் பொருளாதாரம் வளர அறிஞர்கள் ஆக்கப்பூர்வமான திட்டங்களைக் கொணர்ந்தனர். இதில் ஐந்தாண்டு திட்டங்கள் மிக முக்கியமானவையாகும்.

தொழிற்கல்வி, வேளாண்மைக் கல்வி, பிற பொருளாதாரம் சார்பான அறிவுரைகள் எல்லாம் இதற்கு வலிவும் பொலிவும் தந்தன. கிராமப் பொருளாதாரம் சிறப்புற விளங்கவும் கல்வி பயன்பட்டது.

தொழில், வாணிபம், போக்குவரத்து, பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்துள்ளன, எனவே அவைகள், சார்பான கல்வி அளிப்பதன் அவசியம் உணரலாயிற்று.

## சமுதாயம் (Society)

கல்வியினால் சமுதாயத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சமுதாய அமைப்பானது நன்கு அமைய கல்வி பயன்பட்டது. கல்வி முறை ஏழைக்கும் சமுதாயத்தில் நல்ல நிலை அடையும் வாய்ப்பினை அளித்தது எனலாம்.

சமுதாய அமைப்பில் கல்வி பெற்றவர்களே நன்கு மதிக்கப்பட்டார்கள். உயர் பதவியில் வைக்கப்பட்டார்கள். "திறமைக்கு ஏற்ற வாய்ப்பு" கொடுக்கப்பட்டது. கல்வி சம வாய்ப்பினை நல்கியது ஒரு பெரும் சமூக மாற்றமாகும்.

பெண்கள் ஆண்களுடன் சரிசமமாக பல தொழில்களில் ஈடுபடவும், பல துறைகளில் பணிபுரியவும் கல்வி ஒரு பெரும்வாய்ப்பினை நல்கியது சமுதாய மாற்றமாகும். பெண்கள் விடுதலைக்கு இது அடிப்படையாக இருந்தது. கல்வி உடைய பெண்கள் விளை நிலம், கல்வியில்லாத பெண்கள் களர் நிலம் என்று கவிஞர் பாரதிதாசனார் கூறியுள்ளார். பெண்கள் நாகரீகத்தின் தொட்டில் எனப்படுவர் என்பது அனைவரும் அறிந்ததாகும். மனுஎன்பவர் பெண்கள் நல்ல மதிப்புக்குரிய இடத்தில் வைத்துப் போற்ற வேண்டும் என்று கூறியுள்ளார்.

சமுதாயச் சீர்கேடுகள் பல மலிந்து கிடந்தன. அதைப் போக்கவும், நீக்கவும் கல்வி பயன்பட்டது. இராசாராம் மோகன்ராய் என்பவர் அச்சமுதாயக் -கேடுகளைக் களைவதில் முனைந்து நின்றார் இதுவும் ஒரு மாற்றமாகும்.

பெண்கள் கல்வி அவர்களது விடுதலைக்கும் பெரிதும் உதவியது அவர்களுக்கு வாக்குரிமை கொடுத்ததும் ஒரு சமுதாய மாற்றமாகும். முகமூடி அணிவது நீக்கப்பட்டதும், தேவதாசி முறை ஒழிக்கப்பட்டதும், விதவை மறுமணம் வலியுறுத்தப்பட்டதும் சமுதாய மாற்றங்களேயாகும்.

கல்வியினால் ஏற்பட்ட மற்றொரு மாபெரும் மாற்றம் தீண்டாமையை ஒழித்ததாகும். தாழ்த்தப்பட்டோர் தலை நிமிர்ந்து வாழவும், நவநாகரிக வாழ்வினை நல்ல முறையில் அனுபவிக்கவும் பல்வேறு துறைகளில் பணி புரியவும் கல்வியே காரணமாகும் எனலாம்.

இத்தகைய பல மாற்றங்கள் நிகழ கல்விதான் காரணமாக அமைந்தது என்பது திண்ணம்.

7. சமுதாயத்தில் ஊழலைத் தடுப்பதற்கான வழிமுறைகள் யாவை? (April-2012, April-2014)

## ஊழல் (Corruption)

ஊழல் என்பது ஓர் அரசு அலுவலரோ அல்லது முக்கிய பொறுப்பிலுள்ளோரோ தன் சுயலாபத்திற்காக விதிகளுக்குப் புறம்பாகச் செயல்பட்டு, தனி நபர்களோ அல்லது நிறுவனமோ பயன்பெறும் வகையில் பொருளாகவோ அல்லது வேறு வகை ஆதாயங்களாகவோ கையூட்டாகப் பெறுவதைக் குறிப்பதாகும். இது தனி நபர்களுக்கு இடையில் சிறிய அளவிலோ அல்லது அரசின் பொருளாதாரத்தையே பாதிக்கும் அளவிற்குப் பெரியதாகவோ அல்லது சமுதாயத்தில் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் தீங்கான நடத்தை முறையாகவோ இருக்கலாம். ஊழல் என்பதன் நடைமுறைச் சொற்கள் இலஞ்சம், கையூட்டு என்பவையாகும்.

நம் நாட்டில் கடமையுணர்வு, நேர்மை, திறமை ஆகியவை குறைந்து வருவதாக ஊடகங்கள் பறைசாற்றுகின்றன. நாடு நலம் பெற வகுக்கப்பட்ட திட்டப் பணிகள் ஓட்டைக் குடத்தில், நீர் நிரப்ப முயற்சி செய்வதுபோல ஆகிவிடுகின்றன. 'எங்கும் ஊழல்' 'எதிலும் ஊழல்' என்பது மக்களது அதிருப்தியைப் பெருக்கியுள்ளது. மதிப்பிற்குரிய தலைவர்களும் பெரும் நிறுவனங்களும் ஊழலுக்குத் துணை நிற்பது வேதனைக்குரியதாகும்.

ஊழல் என்பது உலகம் முழுவதும் காணப்படுகிறது என்பதும், செல்வம் நிறைந்த நாடுகளிலும் இது ஆதிக்கம் செலுத்துகிறது என்பதும் கசப்பான உண்மைகளாகும். ஊழல் மிக்க 176

நாடுகளின் பட்டியலில் இந்தியா 94வது இடத்தில் இருப்பதாக 2012இல் வெளியான கணிப்புகள் கூறுவது நம்மைத் தலைகுனிய வைத்துள்ளது.

### ஊழலுக்கான காரணங்கள் (Reasons for Corruption)

1. அலுவலக நடைமுறைகள் சிக்கலானவையாகவும் பல கட்டங்களைத் தாண்டி வர வேண்டிய நிலையிலும் உள்ளன. கால தாமதத்தைத் தவிர்க்க தரப்படும். கையூட்டு (Speed Money) தவிர்க்க இயலாததாகி விட்டது.
2. அரசின் தேவையற்ற கட்டுப்பாடுகளையும், நடைமுறைகளையும், சட்ட திட்டங்களையும் பண பலத்தால் உடைத்தெறிய சில உயர் பதவியிலுள்ளோரும் அரசியல் செல்வாக்குடையோரும் உதவத் தயாராக உள்ளனர்.

### ஊழலைத் தடுப்பதற்கான வழிமுறைகள் (Ways to end Corruption)

1. நமது நாட்டின் வரிச் சட்டங்கள் எளிமையாக்கப்பட்டு குறைவான வரிச்சுமைகள் உள்ளதாகவும், வெளிப்படையான நடைமுறைகள் கொண்டதாகவும் மாற்றியமைக்கப்படல் வேண்டும்.
2. தற்போது நடைமுறையில் உள்ள ஊழல் தடுப்புச் சட்டங்களை தயவு தாட்சண்யமின்றி கடுமையான முறையில் நடைமுறைப் படுத்த வேண்டும்.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், குடியரசுத் தலைவர் நீங்கலாக அனைத்துப் பதவிகளிலுமுள்ள தலைவர்களையும் கட்டுப்படுத்த 'லோக்பால்' சட்டம் விரைவில் நிறைவேற்றப்படல் வேண்டும்.

4. கணக்கில் காட்டப்படாத பணம் மற்றும் அளவுக்கு மீறிய சொத்துக்களை அரசு பறிமுதல் செய்ய வேண்டும்.

5. இலஞ்சம் தருவதும் பெறுவதும் குற்றவியல் சட்டத்திற்குட்படுத்தப்பட்டு தண்டிக்கப் பெறல் வேண்டும்.

6. இலஞ்சம் தருவோர்-பெறுவோர் , ஆகியோரிடையே இடைத்தரகர்களாக செயல்படுபவர்களையும் தண்டிக்க வேண்டும்.

7. அரசாங்க நடைமுறைகள் எளிதாக்கப்பட்டு, விரைவில் ஆணைகள் பிறப்பிக்கும் வழிமுறைக்கு வித்திட வேண்டும்.

8. கணிப்பொறியையும், நவீன தொழில்நுட்பத்தையும் பயன்படுத்த ஒவ்வொரு மனுவிற்கும் தரப்படும் எண்ணை மனுதாரர் பயன்படுத்த, தமது மனு எந்த நிலையில் உள்ளது என அறிய உதவும் வெளிப்படை முறை செயல்பாட்டிற்கு வர வேண்டும்.

9. இலஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் பாவச் செயல் என்ற உணர்வினை பள்ளிப் பருவத்திலேயே மாணவர்கள் மனதில் விதைக்க வேண்டும். இலஞ்ச ஊழல் தவிர்க்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வை மக்களிடையே பரப்ப பொது நல ஊழியர்கள் பாடுபட வேண்டும்.

**8. உன்னுடைய வாழ்க்கைப் பங்கு முன் மாதிரி எடுத்துக்காட்டு (Role Model) யார்? நீவிர் ஏன் அதைத்தேர்ந்தெடுத்தீர்கள்? (April-2012)**

**வாழ்க்கைப்பங்கு முன்மாதிரி எடுத்துக்காட்டு (Role Model)**

என்னுடைய வாழ்க்கைப் பங்கு முன்மாதிரி எடுத்துக்காட்டு கண்ணியமான நடத்தை கொண்ட பெருந்தலைவர் காமராஜர் மற்றும் பேரறிஞர் அண்ணா.

**நான் ஏன் காமராஜரைத் தேர்ந்தெடுத்தேன்?**

தனி மனிதர்கள் ஒவ்வொருவரும் சமூக மனிதர்களாகும்போது கண்ணியம் குறையாமல் நடப்பது மிகச் சிறந்த மதிப்பாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒன்றிற்கு மேற்பட்ட முகங்கள் உண்டு. ஒருவர் தனிப்பட்ட முறையில் எத்தனை குறைபாடுகள் உடையவராக இருந்தாலும் பொது இடங்களில், பலரோடு பழகுகிற நேரங்களில் 'கண்ணியத்துடன்' நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஒருவரது பேச்சும் நடத்தையும் பிறரைப் பாதிக்காத வண்ணம், பிறரது மனதில் நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் வகையில் அமைவது சிறப்பு. எதிர்க்கட்சியினரை எடுத்தெறிந்து பேசாது 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று அமைதியாகப் பதிலளித்து, முடிந்தவரை முன்னேற்றப் பாதையில் மக்களை அழைத்துச் சென்றார் பெருந்தலைவர் காமராஜர். அனைவரையும் அணைத்துக் கொள்கிற பண்பால் அவர் ஏழைகளின் நம்பிக்கை நட்சத்திரமாக மதிக்கப்பட்டார்.

மாற்றுக் கட்சியினரையும் மதித்த பேரறிஞர் அண்ணாவின் பண்பு அவரை உலக அரங்கில் உயர்த்திக் காட்டியது. 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று சொன்ன அவரது பண்பு இன்று வரை பேசப்படுகிறது.

தந்தை பெரியார், மூதறிஞர் இராஜாஜி போன்ற தலைவர்கள் எல்லாம் கொள்கையளவில் தனித்தனியாக இருந்தாலும் ஒருவரிடம் மற்றவர் கண்ணியம் தவறாமல் நடந்து கொண்டதை வரலாறு காட்டுகிறது. இன்று பெரிய தலைவர்கள் என்பவர்களே கூட கண்ணியம் என்ற பண்பை மறந்து போனது சமூகத்திற்குப் பெரிய இழப்பாகும். மெதுவாகப் பேசுவது, மென்மையாகத் திருத்துவது, சினந்தாலும் பின் மறந்து சிரிப்பது, மன்னித்து மகிழுவது, அரவணைத்துக் காப்பது, பிறர் துயர் கண்டு துடிப்பது எல்லாம் ஒருவரின் கண்ணியத்தைக் கூட்டிக் காட்டும்.

விமர்சனங்களுக்கு உரியவர்களாக எப்போதும் இருந்தால் நமது சொல்லும் செயலும் அங்கீகாரம் பெறாமல் போகும். எல்லா இடங்களிலும் நமது 'இருப்பு' விரும்பப்படுவதாக அமைவது நமக்கு மதிப்பு சேர்க்கும். அது கண்ணியம் தவறாத பண்பால் அமைவது.

**நல்லதையே நாட வேண்டும்**

1. மற்றவர்களின் முழு ஆற்றலை வெளிக் கொண்டு வர எளிய சிறந்த வழி, அவர்களிடம் இருக்கும் நல்ல விஷயங்களை மட்டும் பார்ப்பதுதான்.
2. தன்னை நல்லவனாகக் காண்பவனே மற்றவர்களிடம் உள்ள நல்ல குணங்களைக் காண முடியும்.
3. எல்லோரிடமும் நல்ல குணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. முக்கியமாகக் குற்றங்களைக் கண்டு, அவற்றைக் களைந்து வளர்ச்சியைக் கொண்டுவர அதிக ஆர்வம் காட்டுவதால், ஒருவரிடம் உள்ள நல்ல குணங்கள் நம் கண்ணில் படாமல் போகின்றன.
4. ஒருவரிடம் பல குறைகள் தென்பட்டாலும் அவர்களின் சுய மரியாதையை நாம் மதித்து நடந்து கொண்டால் அவர்கள் நம்மை மரியாதையுடன் நடத்துவார்கள்.

5. தகவல் பரிமாற்றங்கள் அதிரடியாக இல்லாமல் உறுதியாக பக்குவமாக இருக்க வேண்டும். இதுவே பண்பட்ட தலைவர் ஆவதற்கான முதல்படி.
6. மற்றவரைத் திருத்தி மேம்படுத்துவதுதான் நம் நோக்கம் என்றாலும் நம் பேச்சில் மரியாதையும் பணிவும் இருந்தால்தான் நாம் சொல்வதை நிதானமாகக் கேட்பார்கள். நம்மை மதித்து நாம் சொல்வதை வாழ்க்கையில் கடைப்பிடிப்பார்கள்.

"நல்ல தலைவராக வேண்டுமென்றால் நல்லதையே கண்டு சொல்ல வேண்டும்".

**9. பொது ஜன ஊடகங்கள் யாது? (April-2013)**

**பொது ஜன ஊடகங்கள் (Mass Media)**

பொது ஜன ஊடகங்களை பொதுத் தகவல் பரப்ப ஊடகங்கள் என்றும் கூறலாம். ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் செய்திகளையும், தகவல் அறிவையும் பெருமளவில் தயார் செய்து அவற்றை ஏராளமானோர், காலத்தையும் தூரத்தையும் கடந்து பெறும் வண்ணம் அமைவதே பொதுத் தகவல் பரப்பு (Mass Communication) ஆகும். பொதுத்தகவல் பரப்பிற்கு பயன்படுத்தப்படும் மக்கள் தொடர்பு சாதனங்களில் (Mass Media) முக்கியமானவை செய்தித்தாள்கள், வார, மாத, பருவ இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள், பதிவு செய்யப்பட்ட ஒலி, ஒளி நாடாக்கள், வலைப்பின்னல் (Internet) ஆகியவையாகும். இவை பொழுது போக்கு அம்சங்களை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல் கல்விப் பயன் தருபவையாகவும் அமைந்து வகுப்பறைக் கற்பித்தலுக்கும், முறைசாராக் கல்வி வழங்கும் திட்டங்களுக்கும் பெருமளவில் பயன்படுகின்றன.

10. சமூக மதிப்புகளைப் பரப்பவதில் ஊடகங்களின் பங்கினை விளக்குக. (April-2011)

அல்லது

மதிப்பு உருவாக்கத்தில் பொது ஜன ஊடகங்களின் பங்கினை விவரி. (மாதிரி வினாத்தாள், MKU)

அல்லது

மதிப்புகளைப் பரப்புவதில் ஊடகங்களின் பங்கு யாது? (April-2014)

**பொது ஜன ஊடகங்களின் பொது நோக்கங்கள் (Aims of Mass Media)**

1. அறிவித்தல் (To inform).
2. கல்வி கற்பித்தல் (To educate).
3. கேளிக்கை வழங்கிப் பொழுது போக்குக்கு உதவுதல் (To entertain).
4. நாட்டு முன்னேற்றத்திற்கு உதவவல்ல. ஆனால், வெளிப்படாமலிருக்கும் கூறுகளைப் பற்றி மக்களுக்கு அறிவுறுத்துதல்.
5. அவர்களுடைய அறிவை வளர்த்தல்.
6. பொருளாதார சமூக வளர்ச்சி பற்றிய கொள்கைகள், திட்டங்கள் இவற்றை முன்னேற்றுவதில் மக்கள் பங்கெடுக்க வேண்டும்.
7. சுருங்கக் கூறினால் மக்கள் தொடர்புச் சாதனங்கள் மக்களுக்கும் அரசுக்கும் செய்தித்துறை அமைச்சரகம் அமைத்துதவும் உயிர்ச்சக்தி ஊட்டவல்ல ஒரு நேரடித்தொடர்பு (a direct link) எனலாம்.

## தகவல் சாதனங்கள் (Mass Media)

ஒரு சமுதாயத்தில் மக்களின் பொதுவான எழுத்தறிவினைப் பொறுத்தே அச்சுச்சாதனங்களில் வளர்ச்சி அமைகின்றது. ஏனெனில் எழுத்தறிவு பெற்றவர்கள் தானே அவற்றைப் பெற ஆசைப் படுகின்றனர். செய்தித்தாள்களை அச்சிட்டு வெளியிடுவதில் இந்தியா, உலகிலேயே இரண்டாவது இடம் வகிக்கிறது. சுமார் 200 ஆண்டுகளில் இத்துறை எளிய துவக்கத்தினின்று, மகத்தான முன்னேற்றம் அடைந்துள்ளது. அளவிலும், வாசகர் பரவலிலும் (Circulation) சிறப்பு அம்ச வளர்ச்சியிலும் அச்சுத்துறை சிறந்த உற்பத்தி உத்திகளைக் கண்டுள்ளது. ஆயினும் இன்னும் பெருவாரியாக மேலைத் தொழில் நோக்குகள் இருப்பதால் இந்திய சமூக மாற்றங்களையும், அமைதிப் புரட்சியையும் சிரத்தையோடும் மக்களுக்கு எடுத்துச்செல்வதில் மந்த நிலை காணப்படுகிறது.

இரண்டாவதாக, சில செய்திப் பத்திரிக்கைகள், சமுதாயத்தில் தம் பங்குப் பணியை இன்னும் சரியாக உணரவில்லை என்றே தோன்றுகிறது. வாசகர்களின் தகவல், கல்வி, பொழுதுபோக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அவற்றிற்கும் பங்கு உண்டு. இந்த உண்மையை அவை உணர வேண்டும். இதில் பல்கலைக்கழகங்களும், கல்வி நிறுவனங்களும் அவற்றிற்கு வெகுவாக உதவலாம்.

புத்தகம் மற்றும் வாசிப்புப் பொருட்களின் மதிப்பீடு இந்தியாவில் சுதந்திரம் பெற்ற பின்னரே புத்துணர்ச்சி பெற்றதெனலாம். கல்வி வளர்ச்சி, அதனால் விளைந்த எழுத்தறிவு வளர்ச்சியைத் தொடர்ந்து நூல்கள் மற்றும் பிற சாதனங்களின் தேவை பெருகியது.

பள்ளிக் குழந்தைகளுக்கான பாடநூல் வெளியீடு தேவையான அளவிற்கு இன்னும் வளர்ச்சியடையவில்லை. இத்துறையில்

திரும்பத்தக்கது. வெளியிடப்படும் நூல்கள், படிப்போரை வாழ்நாள் முழுவதும் படித்து வரத் தூண்டுபவையாக அமைய வேண்டுமென்பதே. எல்லா மொழிகளிலும், அழகாகவும் படவிளக்கங்களோடும் கூடிய ஆர்வ மூட்டக்கூடிய குழந்தைகளுக்கான நூல்கள் ஏராளமாகவும் மலிவான விலையிலும் வெளியிட வேண்டியது இன்றையத் தேவை.

அரசு சார்புடைய, சுயேச்சையான பாடநூல் நிறுவனங்கள் நூல் தயாரிப்பு மற்றும் வெளியீட்டுப் பணிகளை மேற்கொண்டுள்ளன. அவை, இவ் உண்மையை உணர்வது அவசியம். அப்பொழுது தான் இந்த அடிப்படைத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்படக்கூடும்.

### கல்வியைப் பரப்பும் தொலைக்காட்சிப்பெட்டி (Television : Spreading Education)

சில ஆசிரியர்கள், மாணவர்கள் தொலைக்காட்சியைப் பார்ப்பது அவர்களுடைய படிப்பிற்கு தடங்கலாக உள்ளதென எண்ணுகின்றனர். பெருபான்மையான ஆசிரியர்கள் தொலைக்காட்சியினை ஒரு சவாலாகப் பார்க்கின்றனர். இவை எவ்வாறு திறமையாகவும், தொடர்புடையதாகவும் முறையான தகவல்களுடன் பயன்படுத்தலாம் என்று திட்டம் போடுகின்றனர், அவர்கள் மாணவர்களின் பகுத்தறியும் திறனையும், போடக்கூடிய நிகழ்ச்சிகளில் எவை சிறப்பானவை என்பதையும் ஆராய்வர். அவர்கள் வீட்டில் என்ன கண்டறிந்தார்களோ அவை அவர்களிடம் மதிப்பு உயர்வையும் நடத்தைமுறையிலும் பள்ளியில் மாறுபடுகிறது. இத்தகைய செல்வாக்கு அலட்சியம் செய்யத்தகாதது. மாணவர்கள் பள்ளிக்கு வெளியில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதம் செய்யும் போது வகுப்பறைத் தலைப்புகளை அறிமுகப்படுத்துவர்.

ஒரு நல்ல ஆசிரியர் மாணவர்களை பள்ளி இல்லாத நேரங்களில் நல்ல நிகழ்ச்சிகளை பார்க்கும்படி உற்சாகப் படுத்தவேண்டும். ஆசிரியரும் பல்வேறு நிகழ்ச்சிகளை காண்பதில் சிரத்தை கொள்ள வேண்டும். ஆசிரியர் மாணவர்களின் விருப்பு, வெறுப்புகளை அறிந்து அவர்கள் வெவ்வேறு நிகழ்ச்சிகளை மதித்து தெரிந்து கொள்ள உதவவேண்டும். இது ஒரு சவாலாகும். ஒவ்வொரு ஆசிரியரும், மாணவர்களின் தொலைக்காட்சி பார்க்கும் விருப்பத்திற்கும், அவர்களுடைய வகுப்பு வேலைகளுக்கும் இடையில் பாலமாக இருத்தல் வேண்டும்.

தொலைக்காட்சிப் பெட்டி பயனுள்ள, உணர்ச்சி மிக்க செய்திகளை ஒளிபரப்ப பயன்படுவதாகக் கருதப்படுகிறது. விளையாட்டு போன்ற நேரடி நிகழ்ச்சிகள், மற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்றவற்றை இந்த முறையில் ஒளிபரப்பலாம். இத்தகைய நிகழ்ச்சிகள் மாணவர்களின் ஆர்வத்தை தூண்டி வழிகாட்டவும், தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பாத கல்வி நிகழ்ச்சிகளை தெரிந்துகொள்ளவும் உதவுகிறது. தொலைக்காட்சிகள் பொழுது போக்கு நிகழ்ச்சிகளை விட கல்வி நிகழ்ச்சிகளையே பெரும்பாலும் கொண்டிருக்கிறது. தகவல் தரும் தொலைக்காட்சி மற்றும் வர்த்தக சம்பந்தமில்லாத நிகழ்ச்சிகளைக் கொண்டதாக பொதுவாக கல்வி நிகழ்ச்சி விளங்குகிறது. பள்ளிகளில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்ப்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்தி தொலைக்காட்சியினுடைய அதிகபட்ச பயன்களை மாணவர்களுக்கு அடைய வைப்பதன் மூலம் அதைப் பார்க்கும் மாணவர்களின் நடத்தை அந்நிகழ்ச்சிகளைப் பின்பற்றி இருக்க உதவும்.

## போதிக்கும் தொலைக்காட்சிப்பெட்டி (Teaching Television)

போதிக்கும் தொலைக்காட்சிப் பெட்டியில் நேரடித்தொடர்புகளை ஏற்பாடு செய்து, முறையான தகவல்களும் மேலும் தனிப்பட்ட பார்வையாளர்களுக்கும், அதாவது முறை சாராக் கல்வித் திட்டத்தில் இருப்பவர்களுக்கும் தொடர்புடையதாக இருக்கும். கவனமாக திட்டமிடுதலும் தொலைக்காட்சி மூலம் பெறும் கல்வியின் வெற்றியில் அடங்கியிருக்கும் தகவல்களை ஒளிபரப்பவும் சாதனத்தைப் பயன்படுத்தவும் இதன் ஆசிரியர்கள் முக்கியமாக பயிற்சி பெற்றிருக்க வேண்டும். NCERT என்ற தொழில் நுட்பக் கல்வி மையம், திறமை வாய்ந்த நபர்களின் மூலம் ஆரம்பக் கல்வியிலிருந்து நடுத்தரக் கல்வி தகுதி வரை மேற்கண்ட பயிற்சியளிக்கும் நிகழ்ச்சிகளை ஆரம்பித்து உள்ளது. இது சம்பந்தப்பட்ட புத்தகங்கள் வளர்ச்சியடைந்தும் மொழி மாற்றம் செய்யப்பட்டும் இருக்கின்றன. கல்வியைப் போதிக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கும் மாணவர்கள் மற்றவர்களை விட நன்கு வெற்றிகரமாக நிறைவேற்றுகிறார்கள். ஆனாலும் தொலைக்காட்சிப் பாடத்திட்டங்களை வகுப்பறைக்கு தொடர்புடையதாக கவனமாகத்திட்டமிடுதலும், ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் தேவை. NCERT தற்பொழுது கல்வியை போதிக்கும் நிகழ்ச்சிகளை தயாரித்து ஒளிபரப்புகிறது. உதாரணமாக விண்வெளிக்கோள் (INSAT-B) ஆனது சில குறிப்பிட்ட மாநிலங்களில் உள்ள கிராம ஆரம்ப கல்விக் கூடங்களுக்கு மேற்கண்ட நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் நோக்கத்துடன்தான் முக்கியமாக ஏவப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிகள் காலை நேரங்களில் ஒளிபரப்பட இருக்கின்றன.

# செயல் - V

# (Activity - V)

## Part - A

1. மதிப்பு உருவாக்குதில் குடும்பத்தின் பங்கினை விவரி.
2. ஒப்பார் குழு என்பதை விளக்குக.
3. மதிப்பு உருவாக்குவதில் கல்வி நிலையங்களின் பங்கினை விவரி.
4. பொது ஜன ஊடகங்கள் யாது?
5. மதிப்புகளைப் பரப்புவதில் ஊடகங்களின் பங்கு யாது?

## Part - B

1. வளரும் குழந்தைகளுக்கு அதன் குடும்பம் ஆற்றும் பணிகள் யாவை?
2. மதிப்பு உருவாக்குவதில் சமுதாயத்தின் பங்கு பற்றி விளக்குக.
3. சமுதாயத்தில் ஊழலைத் தடுப்பதற்கான வழிமுறைகள் யாவை?
4. உன்னுடைய வாழ்க்கைப் பங்கு முன்மாதிரி எடுத்துக்காட்டு யார்? நீவிர் ஏன் அதைத் தேர்ந்தெடுத்தீர்கள்?
5. சமூக மதிப்புகளைப் பரப்புவதில் ஊடகங்களின் பங்கினை விளக்குக.

# மதிப்பீட்டுக்கல்வி

## (அனைத்து இளநிலை பட்டப்படிப்புகளுக்கும்)

## மாதிரி வினாத்தாள்

காலம் : 3 மணி

மதிப்பெண்கள் : 75

### பகுதி - அ

I. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. (அ) மதிப்பு என்ற சொல்லின் பொருளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தற்கட்டுப்பாடு, பரிவு, மன்னிப்பு மற்றும் நேர்மை போன்ற மதிப்புகளை எவ்வாறு ஆராய்ந்து அறிவீர்கள்?

2. (அ) சீக்கிய மதத்தில் 'தைரியம்' என்பதன் முக்கியத்துவத்தை விவரி?

(அல்லது)

(ஆ) சமய சமயத்தில் அஹிம்சை பற்றிக் கூறுக.

3. (அ) பாலின நீதி என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) மதச்சார்பின்மை பற்றி எழுதுக.

4. (அ) எத்தொழிலுக்கும் பதில் சொல்லும் பொறுப்பு மிகவும் அவசியம் என்று ஏன் கருதப்படுகிறது?

(அல்லது)

(ஆ) பொதுவான குறிக்கோள் சாதனையில் 'குழு ஆற்றலின்' முக்கியத்துவத்தைப் பற்றி எழுதுக.

5. (அ) மதிப்பு உருவாக்குதில் குடும்பத்தின் பங்கினை விவரி.

(அல்லது)

(ஆ) மதிப்புகளைப் பரப்புவதில் ஊடகங்களின் பங்கு யாது?

## பகுதி - ஆ

II. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.

6. தற்போதைய சமூகத்தில் மதிப்புக் கல்வியின் அவசியத்தை விவாதி.

7. கர்ம யோகம் என்றால் என்ன? இந்துமதத்தின்படி ஒரு தனிமனிதனிடம் மதிப்புகளை உருவாக்குவதில் இது எவ்வாறு உதவுகிறது?

8. கிறிஸ்தவ சமயத்தின் 'அன்பு' முகம்மதிய சமயத்தில் 'சகோதரத்துவம்' என்னும் மதிப்புகளை விளக்குக.

9. "மனித உரிமைகளின்" முக்கியத்துவத்தையும் ஜனநாயக சமூகத்தில் "சமூக நீதி" பற்றியும் விவரி.

10. மதிப்பு உருவாக்குவதில் கல்வி நிலையங்களின் பங்கினை விவரி.